# மந்திரங்கள் என்றால் என்ன?

அ.ச.ஞானசம்பந்தன்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# மந்திரங்கள் என்றால் என்ன?

பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன்

கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு,
தி. நகர், சென்னை – 600 0017.

முதற் பதிப்பு : ஜூலை, 1994
இரண்டாம் பதிப்பு : மே, 2001
மூன்றாம் பதிப்பு : ஆகஸ்ட், 2005

© ஆசிரியற்கு

விலை ரூ. **40.00**

Laser Typeset at : LKM Computers Prints, Chennai - 17
Printed at : பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794

# முன்னுரை

இன்றைய உலகில் எந்தப் பகுதியில் வசிப்பவர்களாக இருப்பினும் நம் அனைவருக்கும் பொதுவாக ஒன்று இருப்பதை அறிய முடியும். வறியவர், செல்வர், இளையவர், முதியவர், செல்வம் மிகுந்த நாட்டில் வசிப்பவர், வறுமை மிகுந்த நாட்டில் வசிப்பவர், நாகரிகம் மிகுந்த நாட்டில் வசிப்பவர், அல்லாத பகுதிகளில் வசிப்பவர், கற்றவர், கல்லாதவர் ஆகிய அனைவரையும் பிடித்து, இன்றைய உலகில் ஆட்கொண்டிருக்கும் ஒன்றுதான் மன இறுக்கம் (Mental Tension) என்பதாகும். பெரியவர்கள் வாழ்க்கையைப் பிடித்து ஆட்டும் இந்த இறுக்கம் துரதிருஷ்டவசமாக இற்றை நாள் குழந்தைகளையும் பற்றிக் கொண்டுள்ளது. அமெரிக்கா போன்ற நாடுகளில் ஏழு வயது நிறைந்த பாலகனொருவன் கைத் துப்பாக்கி எடுத்து தன் தந்தையைப் பலமுறை சுட்டுக் கொன்று விடுகிறான். அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் அந்த மன இறுக்கம் நாகரிகம் வளர வளர தானும் வளர்ந்து கொண்டு வருகிறது.

புத்தர், மகாவீரர், திருவள்ளுவர், நம்மாழ்வார், திருநாவுக்கரசர், தாயுமானார், இராமகிருஷ்ணர், இராமலிங்கர் போன்ற மாமனிதர்கள் தோன்றி

மக்களை நல்வழிப் படுத்த முயன்ற பெருநாடுதான் நம் இந்திய நாடு. இவர்கள் செய்த உபதேசங்களும் அவற்றை எழுத்து வடிவில் தாங்கிய நூல்களும் நம் நாட்டில் நிறைந்து உள்ளன. கல்வி வேண்டும்; கல்லாதவர் கண்ணிரண்டும் இல்லாதவர் ஆவார் என்ற கருத்துகள் வள்ளுவர் காலம் தொடங்கி இன்று அறிவொளி இயக்கமாகப் பரிமளித்துள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததைவிட மக்கள் தொகையில் அதிக சதவிகிதத்தினர் இன்று கல்வி அறிவுடன் விளங்குகின்றனர். இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞான வளர்ச்சிக்கு அளவே இல்லை. சந்திர மண்டலத்தில் சென்று இறங்கவும், அணுவைப் பிளந்து அதனுள் அடங்கியிருக்கும் பேராற்றலை வெளிக் கொணரவும் இன்றைய மனிதன் வளர்ச்சியடைந்து இவற்றைச் செய்யும் ஆற்றலையும் பெற்று விட்டான். இவ்வளர்ச்சிகள் அனைத்தும் இவ்வெற்றிகள் அனைத்தும் கல்வியின் துணை கொண்டு புறத்தே நிகழும் செயல்கள் ஆகும்.

இந்த நிலையில் சற்று நின்று நிதானித்துப் பார்க்க சில மணித் துளிகளை எடுத்துக் கொள்வது பொருத்தமுடையதாகும். சிறந்த கல்வியைப் பெற்று சந்திர மண்டலத்தில் இறங்கும் மனிதன், "தான் யார்? இந்த உலகம் எத்தகையது? பஞ்ச பூதங்களின் தன்மை என்ன? தனக்கும் இந்த உலகிற்கும் உள்ள தொடர்பு யாது? தன்னைப் போன்ற சக மனிதர்களிடமும் பிற உயிர்களிடமும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், எத்தகைய உறவு வைத்துக் கொள்ள வேண்டும்" என்பவை பற்றி ஒரு கண நேரம் சிந்தித்தானா என்ற வினாவை எழுப்பினால் விடை கிடைப்பது கடினம். இது ஏன்? இவன் கற்ற கல்வி இவ்வினாக்களுக்கு விடை காண உதவாமல் போனது ஏன்?

வள்ளுவன் குறளை வாரி இறைத்து விட்டோம். பரிதியார், பரிமேலழகரில் தொடங்கி குறளுக்கு உரை வகுத்து விட்டோம். ஆயிரத்து முந்நூற்று முப்பது குறளுக்கு, 1800 பக்கங்களில் உரை எழுதி வெளியிட்டு விட்டோம். புத்த பகவானுடைய 'தம்மபதத்தை' உலகெங்கிலும் பரப்பி விட்டோம். இது ஒரு புறம் நிற்க, திருமுறை பாராயணம் செய்து மணிக் கணக்கில் பூசனை புரிபவர்கள் எத்துணை பேர். ஆறாயிரப்படி, பன்னீராயிரப்படியில் தொடங்கி முப்பத்தாறாயிரப்படி வரை நாலாயிரப் பிரபந்தத் திற்கு விளக்கவுரை கண்டு விட்டோம். அறிவின் வழி உதவி பெற்று குறள், தம்மபதம் என்பவற்றைப் பயின்று பரப்புபவர்களும் பக்திநெறியில் நின்று பூசனை புரிபவர்களும் இந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக மக்கட் சமுதாய முன்னேற்றத்திற்கு என்ன செய்தார்கள். தமிழகத்திலுள்ள மக்களை மட்டும் எடுத்துக் கொண்டால் கூட இவ் அறிவுவாதிகளும் பக்தர்களும் சமுதாயத்திற்கு என்ன பயனை விளைவித்தார்கள்? விடை கூறுவது கடினம்.

இந்த வினாக்களை எல்லாம் நாம் இன்றுதான் கேட்கின்றோம் என்றில்லை. இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்னர் வள்ளுவப் பேராசான் 'கற்றதனால் ஆய பயன் என்?' (திருக்குறள் - 2) என்றும் 'ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தான் அடங்காப் பேதை' (திருக்குறள் 834) என்றும் கூறி நொந்து போனார். ஆறாம் நூற்றாண்டில் நாவுக்கரசர் பெருமான் 'வேதம் ஓதில் என்? வேள்விகள் செய்தும் என்? நீதிநூல் பல நித்தம் பயிற்றில் என்?' (5-999) என்று வருந்தினார். எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மணிவாசகப் பெருந்தகை 'கற்றாரை யான் வேண்டேன். கற்பனவும் இனி அமையும்' (தி. 556) என்று கூறுகிறார். பதினேழாம்

நூற்றாண்டில் வாழ்ந்த தாயுமானவர் 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் கற்றும் அறிவில்லாத என் கன்மத்தை என் சொல்லுவேன்' (சித். 100) என்று நொந்து கொள்ளுகிறார். நம் காலத்தில் கவிச்சக்கரவர்த்தி பாரதி 'பல கற்றும் பல கேட்டும் - முத்து மாரியம்மா பயனொன்றும் இல்லையடி முத்து மாரியம்மா' என்பதோடு நிறுத்தாமல் 'தோல் வெளுக்க சாம்பல் உண்டு முத்து மாரியம்மா, துணி வெளுக்க மண்ணுண்டு முத்துமாரியம்மா, மணி வெளுக்கச் சாணையுண்டு முத்துமாரியம்மா, மனம் வெளுக்க வழியில்லையே முத்துமாரியம்மா' என்று நொந்து கொள்கிறார். இவையெல்லாம் எதைக் குறிக்கின்றன? புற வளர்ச்சி பெற்றுள்ள மனித சமுதாயம் அகவளர்ச்சி பெறவில்லை. நாம் பெறும் ஏட்டுக்கல்வி மனத்தையோ, பண்பாட்டையோ வளர்க்கவில்லை என்பதையே அறிவுறுத்துகிறது. இவற்றையெல்லாம் சிந்தித்த நம் முன்னோர் பலர் இதற்கொரு வழியைக் காண முனைந்தனர்.

பிளேட்டோ, சாக்ரடீஸ் போன்ற சமுதாய நல்வழி காட்டிகள். தனிமனிதனைப் பற்றி அதிகம் கவலைப்படாமல் சமுதாயத்தைத் திருத்துவதையே நோக்கமாகக் கொண்டனர். ஆனால் அவர்கள் வாழ்ந்த கிரேக்க சமுதாயம் என்ன நிலை அடைந்தது என்பதை வரலாறு காட்டுகிறது. இதன் மறுதலையாக தனி மனிதனை எடுத்துக்கொண்டு அவனைத் திருத்தினால் சமுதாயம் தானே திருந்தும் என்று அன்றே கண்டு அதற்குரிய வழி கோலினார் வள்ளுவப் பெருந்தகை. அறவாழ்க்கை என்ற பெயரில் பலவற்றைக் கூறும் பிறரைப் போலன்றி 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்' என்று கூறுவதோடு அமையாது 'ஆகுல நீர பிற' (தி.34) என்றும்

ஆணித்தரமாகக் கூறிச் சென்றார். இன்று நம்மைப் பிடித்து ஆட்டும் மன இறுக்கம் மனத்துக்கண் தோன்றிய மாசு காரணமாகத் தோன்றியதாகும். இதனைப் போக்க வழி யாது? அதற்கும் வழி கண்டனர் நம் முன்னோர். போட்டியும் வேகமும் நிறைந்த வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள நாம் நம் முன்னோர் கூறிய இவ்வழியைச் சிந்திக்க மறந்து விட்டோம். ஒருசிலர் சிந்திக்க மறுத்தும் விட்டனர். அந்த வழி யாது என்பதைக் காண முற்படலாம்.

நம் முன்னோர் பலர் மெய்ஞ்ஞானிகளாகத் திகழ்ந்ததோடு அல்லாமல் விஞ்ஞானிகளாகவும் இருந்தனர் என்பதை ஆழ்ந்து நோக்குவோர் எளிதில் அறிய முடியும். ஒலியின் (Sound) பெருமையை, சிறப்பை, ஆற்றலை இன்றைய விஞ்ஞான உலகம் காண்பதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளின் முன்னரே நம் முன்னோர் அறிந்திருந்தனர். ஒலி (Sound) அலைகளாகச் சென்று பரவுகிறது. ஒவ்வொரு எழுத்திற்கும் உச்சரிக்கும் பொழுது ஒரு குறிப்பிட்ட அதிர்வு (Frequency) உள்ளது. இந்த அதிர்வுகளை அடிப்படையாகக் கொண்டு எழும் ஒலியை (Hertz) என்ற அளவு கொண்டு கணக்கிடுவர். ஐயாயிரம் ஹெர்ட்ஸ்க்கு குறைந்த ஒலிகளையும், இருபத்தி யிரண்டாயிர ஹெர்ட்ஸ்க்கு மேற்பட்ட ஒலிகளையும் நம் செவிகள் கேட்கமுடியாது. ஆனால் அக்குறைந்த ஒலியை எலிகள் முதலியன கேட்கும். அம் மிகுந்த ஒலியை வேட்டை நாய்கள் கேட்கும். நம் செவி முதலிய பொறிகளின் சிறப்பு இவ்வளவுதான். ஆனால் ஒலி மாபெரும் வலிமையுடையது என்பதை இற்றை நாள் விஞ்ஞானம் நமக்கு விளக்கிக் காட்டுகிறது. மிகு அதிர்வு ஒலி (Ultrosound) என்னென்ன புதுமைகளைச்

செய்கிறது என்பதை இன்று நாம் காண முடிகின்றது. மசகு எண்ணெயில் (Lubricant) நனைத்து நன்றாக ஊற வைத்த ஒரு துணியை வேறு வகையில் சலவை செய்ய முடியாது. ஆனால் நீர் நிறைந்த கண்ணாடித் தொட்டிக்குள் அதனைத் தொங்கவிட்டு வெளியே மிகு அதிர்வு ஒலியை உண்டாக்கி அத்தொட்டியின் பக்கம் செலுத்தினால் துணியிலுள்ள அழுக்கு நீக்கப்பட்டு துணி தூய்மை அடைகிறது. துணியைப் பற்றிய நீக்க முடியாத எண்ணெய்ப் பசையுடன் கூடிய அழுக்கையே புறத்தில் உண்டாக்குகிற மிகு அதிர்வு ஒலி போக்குகிறது என்றால், மனித மனத்திலுள்ள அழுக்கை மனமாசை ஏன் அந்த ஒலி போக்க முடியாது? ஒலியின் சிறப்பை அறிந்த நம் முன்னோர் மனமாசைப் போக்க இவ்வொலிகளைப் பயன் படுத்தினர். ஒலி, கேட்கும் ஒலி, கேளா ஒலி என இரு வகைப்படும். கேட்கும் ஒலியும் கேளா ஒலியும் அதிர்வுகளின் அடிப்படையில் தோன்றுபவைதாம். அதிர்வுகளின் எண்களைக் கொண்டு கேட்கும், கேளா என்று பிரிக்கிறோம். இவ்விரண்டைத்தான் இவ் விஞ்ஞானம் கூறுகிறது. விஞ்ஞானத்தோடு மெய்ஞ் ஞானத்தையும் அறிந்த நம் முன்னோர் கேளா ஒலிக்கும் அப்பாற்பட்டதென்று ஓர் ஒலியை அறிந்து அதற்கு ஆதிநாதம் (Pri-Mordial Sound) எனப் பெயரிட்டனர்.

ஒலியுண்டாக்காத பொருளே உலகில் இல்லை. எல்லா அசைவுகளும் ஒலி உண்டாக்கும். அணு தொடங்கி அண்டம் ஈறாக உள்ள அனைத்துப் பொருள்களும் சலித்துக் கொண்டே இருக்கின்றன. அந்த சலிப்பில் ஒலி தோன்றத்தானே செய்யும். எல்லா வற்றுக்கும் மூலமாக உள்ளது அணு என்று சொல்லுகிறது விஞ்ஞானம். அந்த அணு, பரமாணு

(Proton) என்ற கருவையும் அதனைச் சுற்றி ஓயாது வட்டமிட்டுக் கொண்டிருக்கும் மின்னணுக்களையும் (Electron) கொண்டதாகும். இந்த மின்அணு பரமாணுவைச் சுற்றி ஓயாது ஓடிக் கொண்டிருந்தால் அதனால் ஒலி உண்டாகத் தானே செய்யும். இவ்வோட்டத்தில் ஒலி உண்டாகிறதா, உண்டானால் அது எப்படி வெளிப்படுகிறது என்பது பற்றி இன்றுவரை விஞ்ஞானிகள் கவலைப்படவில்லை; அது பற்றி ஆராயவும் இல்லை. ஒரு வேளை இந்த ஒலியைத் தான் ஆதிநாதம் என்று நம் முன்னோர்கள் கூறினார்களோ தெரியவில்லை.

எந்த ஒலியும் அதிர்வுகள் வடிவில் வெளிப் படுகிறது என்று கண்டோம். எழுத்துகளுக்குள்ள இந்த ஒலி ஆற்றலைக் கண்ட நம் முன்னோர் இவற்றை ஒழுங்குபடுத்தி பல அதிர்வெண்களை உடைய எழுத்துகளை ஒன்று சேர்ப்பதன் மூலம் பல புதிய அதிர்வெண்களை உடைய சொற்களைத் தோற்று வித்தனர். இங்ஙனம் ஒன்று சேர்க்கப்பட்ட ஒலிகள் மனமாசைக் கழுவும் ஆற்றலுடையவை என்றும் கண்டனர். அந்த ஒலிக் கூட்டங்களுக்கு மந்திரங்கள் என்று பெயரிட்டனர்.

மந்திர ஒலிகள் நாம் நம் காதால் கேட்கக் கூடிய அதிர்வெண்களைக் கொண்ட ஒலிக் கூட்டமே யாகும். என்றாலும் சில எழுத்துகளை ஒன்று சேர்ப்பதன் மூலம் அதிர்வெண்களின் அளவுகளைக் கணக்கிட்டு அவ்வெழுத்துகளை ஒன்று சேர்ப்பதன் மூலம் மந்திரங்கள் புதிய வடிவு பெறுகின்றன; மாபெரும் ஆற்றலைப் பெறுகின்றன.

நாம் காதால் கேட்கும் சாதாரண அதிர் வெண்களை உடைய ஒலிக் கூட்டங்களுக்கு

(மந்திரங்களுக்கு) எப்படி இவ்வளவு பெரிய ஆற்றல் வரும் என்ற சந்தேகமும் பலர் மனத்தில் தோன்றுவது இயல்புதான். ஓர் உதாரணத்தால் விளக்கலாம். சாதாரண மின்சார பல்பிலிருந்து வெளிப்படும் ஒளி (Light) நாம் பொருள்களைக் காண்பதற்கு உதவுகிறது. அதற்கு மேல் அந்த ஒளிக்கு வேறு ஆற்றல் இல்லை. ஏன் என்றால், அந்த ஒளி ஒரு முகப்படுத்தப்படாமல் சிதறிச் செல்கின்ற (Dissipation) காரணத்தால் இந்நிலை ஏற்படுகிறது. அதே ஒளியைச் சிதறிச் செல்லாமல் ஒருமுகப்படுத்தி ஒரு குறிப்பிட்ட இரசாயனப் பொருள் அல்லது சிகப்புக்கல், வைரம் போன்றவற்றில் செலுத்தி அந்தச் சிதறலை முழுவதுமாகத் தடுத்து ஒரே முகமாக வெளியேற்றினால் அப்படி வெளியேற்றப்பட்ட ஒளி சந்திரமண்டலம் வரை எந்தவித தங்கு தடையும் இல்லாமல் செல்கிறது என்பதையும் அதே ஒளிக் கற்றை கனத்த இரும்புப் பாளங்களில் துளைபோட வல்லது என்பதையும் இன்றைய விஞ்ஞானம் நிரூபித்துக் காட்டியுள்ளது. இப்பணிகளைச் செய்யும் ஒளிக்கற்றையை லேசர் (Laser) என்று விஞ்ஞானம் கூறுகிறது. விஞ்ஞானம் ஒளியைப் பயன்படுத்திச் செய்யும் இதே செயலை நம் முன்னோராகிய விஞ்ஞானம் அறிந்த மெய்ஞ்ஞானிகள் ஒலியைப் பயன்படுத்திச் செய்யுமாறு பணித்துள்ளனர்.

ஓம், கம், சௌம், ஹ்ரீம், க்ரீம், க்லீம் என்பன போன்ற மந்திரங்களுக்கு எவ்விதப் பொருளும் இல்லை. இவற்றை மூல எழுத்துகள் (பீஜாட்சரங்கள்) என்று நம் முன்னோர் கூறினர். வேறு பொருள் இல்லா விட்டாலும் இம் மந்திரங்கள் ஒருமுகப்படுத்தப் பெற்ற அதிர்வெண்களைக் கொண்ட எழுத்துகளின் சேர்க்கை ஆதலால் மிகு அதிர்வு ஒலியின் (Ultrasonic) பயனை விளைவிக்கின்றன.

தனி மனிதன் மனம் அடங்கக் கற்க வேண்டும். அதற்கு ஒரே வழி இத்தகைய மந்திரங்களைப் பயன்படுத்துவதே ஆகும். இந்த மந்திரங்கள் மோட்சம் அடைய வழி வகுக்கின்றன என்பதை நம்பாதவர் களும், கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் கூட இதனைப் பயன்படுத்தலாம். கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும், கடவுளைப் பற்றிக் கவலைப்படாத வர்களும்கூட மன இறுக்கம் இல்லாமல் வாழ வேண்டும் என்று விரும்புகின்றனர். எனவே இவற்றைப் பயன்படுத்துவது இன்றைய சமுதாயத்தில் அனைவருக் கும் மிக மிக இன்றியமையாத ஒன்றாகும்.

அவசர வாழ்க்கை உடைய இந்நாட்களில் கூட காலை, மாலை இரு வேளைகளிலும் குறைந்தது பத்து நிமிடங்களாவது ஓரிடத்தில் அமர்ந்து மேலே காட்டிய மந்திரங்களோடு ஓம் நமச்சிவாய, ஓம் நமோ நாராயணாய, ஓம் சரவணபவ, புத்தம் சரணம் கச்சாமி, தன்மம் சரணம் கச்சாமி என்பன போன்ற பல மந்திரங்களில் தங்கள் மனத்தில் எது அமைதியை உண்டாக்குகிறதோ அம் மந்திரத்தை ஜெபிக்கத் தொடங்கினால், வெகு விரைவில் மன இறுக்கம் தளர்வதைக் காணமுடியும். மன இறுக்கம் தளர்ந்தால் இரத்த அழுத்தம் குறையும், சர்க்கரை குறையும், இருதயத் துடிப்பில் சமநிலை ஏற்படும்.

மனிதர்களுள் பல மனநிலை உடையவர்கள், பல்வேறு வகைப்பட்ட வளர்ச்சி நிலை பெற்றவர்கள் உண்டு. எனவே ஒருவருக்குப் பொருத்தமான மந்திரம் மற்றவர்க்குப் பொருந்தும் என்று சொல்ல முடியாது. ஆகவே தான், நூற்றுக்கணக்கான மந்திரங்களை நம் முன்னோர் நிறுவியுள்ளனர். அவரவர்க்குப் பொருத்த மானதை அவரவர் தேர்ந்து கொள்ளலாம்.

எப்படித் தேர்வு செய்வது என்பது அடுத்து நிற்கும் வினா. இதில் அதிசயம் ஒன்றும் இல்லை. ஒவ்வொரு மந்திரத்தையும் மூன்று நாட்கள் வீதம் ஜெபம் செய்து பார்க்கலாம். எந்த ஒன்றைச் செய்யும் போது ஒரு அசாதாரணமான அமைதி ஏற்படுகிறதோ அந்த மந்திரமே (அதிர்வெண்களே (Frequency) அவர் களுக்குப் பொருத்தமானது ஆகும்.

இம் மந்திரங்கள் பற்றிய விரிவான கட்டுரையே மந்திரங்கள் என்றால் என்ன? என்ற தலைப்பில் இந்நூலின் முதலில் இடம் பெற்றுள்ளது. ஏதோவொரு தூண்டுதலினால் வாழ்க்கையின் அந்திம காலத்தில் இது பற்றி எழுத வேண்டும் என்ற உள்ளுணர்வு தூண்ட அதன் பயனாக இக்கட்டுரைகள் எழுதப்பெற்று உள்ளன. மந்திரங்கள் என்றால் என்ன? என்பதை ஓரளவு உணர்ந்த பின்பு இம்மந்திரங்களை உண்டாக்கும் சித்தர்கள் பற்றிய கட்டுரை அடுத்துள்ளது.

அடுத்து அமையும் இரு கட்டுரைகளும் .கீழை நாடுகள் எத்துணை அளவிற்கு மேலை நாடுகளை விட ஆன்மீகத்தில் மேல் நிலை எய்தி உள்ளன என்று விளக்குவன. விநாயகர் குறித்த கட்டுரை அடுத்து அமைவது.

ஈற்றில் அமைந்தது ஈறிலாச் சிறப்பின் வள்ளலார் குறித்த கட்டுரை - **மகாமந்திரம். மந்திரத்தில் தொடங்கி மந்திரத்தில் முடியும்** இக் கட்டுரைத் தொகுப்பு நூலைத் தமிழர்கள் வரவேற்பார்கள் என்ற நம்பிக்கை உடையேன்.

**சென்னை – 83**
**3.6.94**

**அ.ச. ஞானசம்பந்தன்**

## பொருளடக்கம்


1. மந்திரங்கள் என்றால் என்ன? . . . . . 1
2. சித்தர்கள் . . . . . . . . . . 11
3. கிழக்கும் மேற்கும் . . . . . . . . 51
4. ஆன்மிகமும் உலகாயதமும் . . . . . 95
5. என்று தோன்றினார்? . . . . . . . 140
6. மகா மந்திரம் . . . . . . . . . . 146

1

# மந்திரங்கள் என்றால் என்ன?

மந்திரங்கள் என்று சொல்லப்படுபவை ஒலிக் கூட்டங்களாகும். ஒலிக் கூட்டங்கள் எப்படி மந்திரங்கள் என்ற சிறப்பைப் பெறுகின்றன என்று சிந்திக்க வேண்டும். உதாரணமாக 'நமச்சிவாய' என்ற ஒரு சக்திவாய்ந்த மந்திரத்தை எடுத்துக் கொள்வோமே யானால் அந்தச் சொல்லின் பொருளைச் சிந்திக்க வேண்டும். 'சிவனை வணங்குகிறேன்' என்ற பொருளையுடையது நமச்சிவாய என்ற சொல். சாதாரண குழந்தைகூடப் புரிந்து கொள்ளக்கூடிய 'சிவனை வணங்குகிறேன்' என்ற இரண்டு சொற்கள் எப்படி சக்தி வாய்ந்த மந்திரமாக மாறின என்பதை ஆழ்ந்து பார்க்க வேண்டும்.

நம்மைப் போன்ற மக்கள் பேசும்போது, நாம் பேசுகின்ற மொழி 'குறைமொழி' என்று சொல்லப் பெறும். ஏன் குறைமொழி என்று சொல்லப்படுகின்றது என்றால் நம்முடைய மனத்திலுள்ள கருத்தை முழுவதுமாக வெளியிடுகின்ற ஆற்றல் பெற்ற சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேச நம்மால் முடிவதில்லை. மிக சிரமப்பட்டு நல்ல சொற்களை எடுத்துக் கோத்து நம்முடைய கருத்தைத் தெரிவித்தால்

கூட எதிரே இருக்கின்றவர்கள் அவற்றைப் புரிந்து கொள்கின்றனரா என்பது ஆராய்ச்சிக்குரியது. பல சமயங்களில் நாம் சொல்லிய கருத்தை எதிரே இருந்து கேட்பவர்கள் புரிந்து கொள்வதாகத் தெரிவதில்லை. இன்னும் சில சமயங்களில் நாமேகூட பேசி முடித்த பிறகு, 'இதை இப்படிச் சொல்லியிருக்கலாமே; அதை அப்படிச் சொல்லியிருக்கலாமே' என்று நினைக்கின்றோம். இதற்குக் காரணம் என்னவென்றால் நாம் பயன் படுத்திய சொற்கள் முழுவதுமாக ஆற்றல் பெற்ற சொற்களாக இல்லாமல் நம்முடைய கருத்தை வெளியிடுகின்ற சக்தி வாய்ந்தவையாக இல்லாமல் குறைமொழியாக இருப்பதுதான். இப்படிக் குறை மொழியாக இருக்கின்ற சொற்களைப் பேசுகின்ற நாம் மந்திரங்களைக் காண்பது இயலாத காரியம்.

ஆயினும் நம்முடைய முன்னோர்கள், பெரியவர்கள், ஞானிகள், தபசிகள், ரிஷிகள் முதலானவர்கள் நிறைமொழி பேசுபவர்களாக இருந்தார்கள். தொல்காப்பியனார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மந்திரங்களைப் பற்றி ஆராய்ந்து மிகச் சிறந்த கருத்து ஒன்றை வெளியிடுகின்றார். "நிறைமொழி மாந்தர்" என்று இந்தப் பெரியவர்களுக்குப் பெயர் வைக்கிறார்.

நிறைமொழி மாந்தர்கள் என்றால் என்ன? நாம் பேசுகின்ற குறைமொழிகளையே எடுத்துக் கொண்டு, அந்தக் குறைமொழிகளை நிறை மொழிகளாக மாற்றுகின்ற பேராற்றல் வாய்ந்தவர்கள் அவர்கள். அப்படியானால் இந்த ஆற்றல் எங்கே இருக்கிறது? இந்தச் சொற்களிலா? இல்லை.

சாதாரண சொற்களைத்தான் அவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் அந்தச்

சொற்களை எடுத்துக்கொண்டு அவர்கள் அவற்றைத் தம்முடைய ஆற்றல் காரணமாக, தம்முடைய சக்தி முழுவதையும் அந்தச் சொற்களில் ஏற்றி, 'இவை மந்திரங்களாக ஆகக் கடவன' என்று ஆணையிடுவதன் மூலம் அவற்றை மந்திரங்களாக மாற்றுகிறார்கள். இதனைத்தான் தொல்காப்பியனார்

**நிறைமொழி மாந்தர் ஆணையின் கிளந்த
மறைமொழி**

என்று சொல்கிறார். இந்த ஆணையிடுதல் என்பது, குறைமொழியாக உள்ள எழுத்துக் கோவைகளை, சொற்கோவைகளை, சக்திபெற்ற மந்திரங்களாக மாற்றுவதுதான்.

அப்படியானால் இந்தச் சொற்கள் எப்படி இந்த ஆற்றலைப் பெறுகின்றன என்று சிந்திக்க வேண்டும். எல்லாச் சொற்களுக்கும் எழுத்துகளுக்கும் Frequencies என்று சொல்லப்படுகிற அதிர்வுகள் உண்டு. இந்த அதிர்வுகள் ஒலி சக்திகளாகும். இந்த அதிர்வுகளை எல்லா எழுத்துகளும், சொற்களும் பெற்றிருந்தாலும் எந்த அதிர்வுகளோடு எந்த அதிர்வுகளைச் சேர்த்தால் அவை பயன்படும் என்பதை ஆராய்ந்து அவர்கள் அறிந்திருந்தார்கள். அப்படி அறிந்திருந்த காரணத்தினாலேதான் இந்தப் பல்வேறு எழுத்துகளை ஒன்று சேர்ப்பதன் மூலம் பல்வேறு அதிர்வுகளை ஒன்று சேர்த்து புதியதொரு ஆற்றலை அவை பெறுமாறு செய்கின்றார்கள். அப்படி ஆற்றலைப் பெறுமாறு அவற்றைச் செய்து விட்ட பிறகு அவை மந்திரங்களாக மாறி விடுகின்றன.

பல சமயங்களில் அக்ஷரங்கள் என்று சொல்லப்படுகின்ற மந்திரங்களுக்குப் பொருளே

இருப்பதில்லை. ஐம், ஹ்ரீம், க்லீம் என்ற பீஜ அக்ஷரங்கள் எவ்விதமான பொருளையும் தருவ தில்லை. பொருளில்லாமல் சொற்கள் உண்டா என்று சிந்திக்க வேண்டும். பொருளில்லாமலும் சொற்கள் இருக்கலாம். ஆனால் அவை குறைமொழி மாந்தர் களால் பேசப்படும்போது அர்த்தமற்ற ஒலிக் கூட்டங்களாக மாறிவிடுகின்றன. ஆனால் நிறைமொழி மாந்தர்கள் வேண்டுமென்றே குறிப்பிட்ட அதிர்வு களை ஒன்று சேர்க்க வேண்டுமென்று நினைக்கும் பொழுது அந்த அதிர்வுகளையுடைய எழுத்துகளை ஒன்று சேர்க்கின்றார்கள். அப்படி ஒன்று சேர்த்த பிறகு – ஹ்ரீம் என்ற மந்திரத்தை உண்டாக்கிவிட்ட பிறகு அது அன்னையின் பூரண சக்தியைப் பெற்ற மந்திரமாக இருக்கிறதே தவிர அதற்குமேல் பொருள் ஒன்றும் அதற்குத் தேவையில்லை.

இந்த ஆற்றலைப் பெற்ற அந்த மந்திரங்களை ஓயாமல் திருப்பித் திருப்பிச் சொல்கின்றவர்கள், ஜபிக்கின்றவர்கள் இந்த ஆற்றலைத் தம்முள் பெற்று விடுகின்றார்கள். ஆகவே பரம கருணையுடையவர் களாகிய நம் முன்னோர்கள் தம்முடைய பேராற்றலை இந்த ஒலிக் கூட்டங்களில் செலுத்தி, செல்லுமாறு ஆணையிட்டு பிறகு அவற்றை நமக்குத் தந்திருக் கிறார்கள். அவற்றைத்தான் மந்திரங்கள் என்று சொல்லுகிறோம்.

இந்த மந்திரங்களை தொல்காப்பியனார் 'மறைமொழி' என்று சொல்லுகிறார். ஏன் மறைமொழி என்று சொல்ல வேண்டும்? சாதாரணமாகப் பார்க்கும்போது அவற்றிலுள்ள ஆற்றல் நமக்குத் தெரிவதேயில்லை. 'ஹ்ரீம்' என்ற சொல்லை யாரும் உச்சரிக்கலாம். ஆனால் அதன் உள்ளே இருக்கின்ற

ஆற்றலை நாம் புரிந்து கொள்வதேயில்லை. ஆகையினால் தான் அது மறைமொழி. அப்படியானால் மறைமொழி என்றால் அதனைப் புரிந்து கொள்ளக் கூடிய தகுதியை நாம் பெற வேண்டும். புரிந்து கொள்ளக் கூடிய சக்தியைப் பெற வேண்டும். அப்பொழுது அந்த மந்திரங்கள் பேராற்றலைப் பெற்றவையாக நமக்குத் தெரியும். இப்படிப்பட்ட சொற்களை ஒன்று சேர்ப்பதன் மூலம் மந்திரங்களைக் காண்கிறார்கள். இப்படிக் கண்ட மந்திரங்களை அவர்கள் சொற்கோவைகளாக, அதிர்வுகளின் கோவைகளாக வெளிப்படுத்தி எங்கே எங்கே எப்போது எப்போது தேவையோ அங்கே அங்கே அவ்வப்போது பயன்படுத்திக் கொள்ளுமாறு நமக்கு வழங்கியிருக்கிறார்கள்.

திருக்கோயில்களின் அடிப்படைத் தத்துவமும் இதுதான். கோயில்கள் அடிப்படையில் பார்ப்போமேயானால் கருங்கல்லினாலே செய்யப் பெற்ற விக்கிரகங்கள் கருவறையில் பதிக்கப் பெறுகின்றன. அவை சாதாரணக் கல்லினாலே செய்யப்பட்டவையே என்பதை மறந்துவிடக்கூடாது. ஆகவே அந்த விக்கிரகங்களைப் பதிப்பதற்கு முன்னால் அவற்றுக்குரிய சக்கரங்கள் எழுதி அவற்றின் அடியிலே வைத்து மேலே விக்கிரகங்களைப் பதித்து விடுகிறார்கள்.

நம் முன்னோர்கள் ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒவ்வொரு சக்கரத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது செப்புத் தகடுதான். அதில் அந்த அந்த மூர்த்திக்குரிய கோணங்களை எழுதி, கோணங்களுக்குள் அவ்வவற்றுக்குரிய சில எழுத்துகளை எழுதியபின் அவை சக்தி வாய்ந்த சக்கரங்களாக மாறிவிடுகின்றன.

இந்தச் சக்கரங்களை அடியில் வைத்து மேலே விக்கிரகங்கள் பதிக்கப்படும்போது அந்த விக்கிரகங்கள் சக்தி பெறுகின்றன. அந்தச் சக்தி முழுமைபெற்று விளங்குவதற்காகத்தான் குடமுழுக்கு — கும்பாபிஷேகம் என்று செய்கிறார்கள். குடமுழுக்கு செய்யும் போது யாகசாலை அமைத்து, அதில் ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒரு கடம் அதாவது குடம் வைத்து பூஜிக்கிறார்கள். கடம் என்பது சாதாரணமாக உலோகத்திலே செய்யப்பட்ட பாத்திரம்தான். அதன் புறத்தே முப்புரி நூலினால் சுற்றி, உள்ளே நீரை நிரப்பி மேலே மாவிலை, தர்ப்பை, தேங்காய் வைத்து மூர்த்தியை ஆவாஹனம் செய்து ஜபம் செய்வார்கள்.

குறிப்பிட்ட மூர்த்திக்குரிய மந்திரங்களை, ஆச்சார்யனாக இருக்கிறவன் எதிரே இருந்து ஐந்து நாள் அல்லது ஏழு நாள் அல்லது மூன்று நாள் என்ற முறையில் குறிப்பிட்ட ஆவர்த்திகள் மந்திர ஜபம் செய்வார்கள். இதனால் கடத்திலுள்ள நீர் சக்தி வாய்ந்த அந்த மூர்த்திக்குரிய எல்லா ஆற்றலையும் பெற்றதாக ஆகிவிடுகிறது. அந்த கடத்திலுள்ள நீரை குடமுழுக்கு அன்று கர்ப்பகிருஹத்திலுள்ள மூல மூர்த்திக்கும், அந்த மூல மூர்த்தி அமர்ந்திருக்கும் கோபுர கலசத்திற்கும் அபிஷேகம் செய்வார்கள். அதன்பிறகு அந்த மூர்த்தியை யார் சென்று வணங்கினாலும் தன் அருள் சக்தியை அவர்களுக்கும் வழங்குகின்ற ஆற்றலை அந்த விக்கிரகம் பெற்று விடுகிறது.

இதுபோல இருக்கின்ற ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டுமேயானால் - கார்களிலுள்ள பாட்டரி என்று சொல்கிறார்களே அவற்றை கொஞ்சம் மனத்தில் வாங்கிக் கொண்டு பார்க்க

வேண்டும். உலோகத் தகடுகள், ஆசிட், தண்ணீர் இரண்டும் கலந்த கலவையிலே அமுக்கி வைக்கப் பட்டிருக்கின்றன. அப்படி அமுக்கி வைத்துவிட்டால் ஆற்றலைப் பெற்றுவிடுகிறதா? நிச்சயமாக இல்லை. இந்த பாட்டரியை டெட் பாட்டரி என்று சொல்லு வார்கள். எவ்விதமான ஆற்றலும் இல்லாத பாட்டரி யாக இருக்கிறது. அதை மின்சாரத்தில் வைத்து 40 மணி நேரம் மின்சாரத்தை அதில் ஏற்றிய பிறகு இந்த பாட்டரி முழு சக்தி வாய்ந்ததாக ஆகிவிடுகிறது. பிறகு அதன்மீது கையை வைத்தால் நிச்சயமாக மின்சாரம் பாய்ந்து ஊறு விளைவிக்கும்.

அது போலத்தான் கருங்கல்லினாலான சாதாரண விக்கிரகங்களாக இருந்த உருவங்கள், குடமுழுக்கு செய்யப்படும்போது, கடங்களில் இருந்த தண்ணீரை அவற்றின் மீது ஊற்றிய பிறகு முழு சக்தி வாய்ந்த தெய்வப் படிமங்களாக மாறிவிடுகின்றன.

இன்னும் சில கோயில்களைப் பொறுத்த மட்டில் இந்த ஆற்றல் நாளுக்குநாள் வளரவேண்டு மென்ற பரம கருணையினாலே புலிப்பாணி, போகர் போன்ற சித்தர்கள் அந்தத் திருக்கோயில்களிலேயே இருந்து தங்களுடைய ஆற்றலை அந்த விக்கிரகங் களுக்கு ஏற்றிக்கொண்டே இருக்கிறார்கள். அப்படி இருக்கின்ற காரணத்தினால்தான் ஆயிரக்கணக்கான வருஷங்களானாலும், கோடிக்கணக்கான பக்தர்கள் சென்று வழிபட்டாலும் அந்த ஆற்றல் குறையாமல் இருந்து கொண்டிருப்பதைக் காண்கிறோம். ஆக கும்பாபிஷேகம் செய்வது என்பது சாதாரணமாக கருங்கல்லிலே செய்யப்பட்ட படிமத்திற்கு ஆற்றலை

வழங்கி அந்த ஆற்றலை மக்களுக்குப் பயன்படுமாறு செய்வதுதான் அடிப்படை நோக்கமாகும்.

கோபுரங்கள் இருக்கின்றன. கோபுரத்தின் மீது கலசங்கள் இருக்கின்றன. இந்தக் கலசங்களுக்குள்ளும் பலவகையான பொருள்களையிட்டு நிரப்பி, கலசங்களை கோபுரத்தின் மீது பதித்துவிடுகிறார்கள். இந்தக் கலசங்களோடு கூடிய கோபுரம் ஸ்தூல வடிவமாக இறைவனைக் குறிக்கிற ஒன்று என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

ஆக ஸ்தூல வடிவமாக இருக்கிற கோபுரங்களுக்கும், உள்ளே சூக்ஷ்ம வடிவமாக இருக்கின்ற விக்கிரகங்களுக்கும் ஒருசேர ஆற்றலைத் தருவதுதான் குடமுழுக்கு விழாவின் அடிப்படை நோக்கமாகும்.

இந்தக் கோவில்களிலுள்ள படிமங்கள் நாளா வட்டத்தில் தங்களுடைய ஆற்றலை இழக்க முடியுமா என்றால் ஓரளவு இழக்கவும் கூடும். அது எப்படி என்றால் இந்தக் கோயிலுக்கு வருகிற ஆயிரக்கணக்கானவர்கள், பதினாயிரக்கணக்கானவர்கள் எத்தனையோ வகையான மாறுபாடுகள், கருத்து வேறுபாடுகள், எண்ணப் போராட்டங்கள் முதலிய பாபங்கள் நிறைந்து உள்ளே செல்வதால் நாளா வட்டத்தில் விக்கிரகங்களின் ஆற்றல் ஓரளவு குறையவும் கூடும். அதற்காகத்தான் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு செய்வது என்பது ஸ்தூல, சூக்ஷ்ம வடிங்களுக்கு ஆற்றலை மறுபடியும் வழங்கவேண்டும் என்பதற்காகத்தான் என அறிந்து கொள்ளல் வேண்டும். ஆக திருக்கோயில்கள் குடமுழுக்கு அன்று முழு ஆற்றலைப் பெற்று

விடுகின்றன. ஸ்தூலமாக இருக்கிற கோபுரமும், சூக்குமமாக இருக்கிற விக்கிரகங்களும் ஆற்றலைப் பெறுவதற்குரிய நாள்தான் குடமுழுக்கு நாளாகும். பலமுறைகள் ஜபிக்கப்பட்ட மந்திரங்கள் தங்கள் ஆற்றலை நீரின்மூலம் விக்கிரகங்களுக்கு ஏற்றுகின்றன என அறிந்துகொள்ள வேண்டும்.

நிறைமொழி மாந்தர்களால் உண்டு பண்ணப் பட்ட மந்திரங்களை தனியே வீட்டில் இருந்து ஜபித்தாலும், கோயில்களுக்குச் சென்று ஜபித்தாலும் அதன் ஆற்றலைப் பெற முடியும். சாதாரணமாக மக்கள் இந்த மந்திரங்களை ஒருமுகப்பட்ட மனத்துடன் ஜபிக்க வேண்டுமென்று சொல்லு வார்கள். இது எல்லோருக்கும் இயலாத காரியம். ஒரு முகப்பட்ட மனத்துடன் ஜபிக்கும்போது அவை நிறைந்த ஆற்றலைத் தருகின்றன. பல சமயங்களில் ஒருமுகப்பட்ட மனத்துடன் ஜபிக்காவிட்டாலும் அவை பலன் தராமல் போவதில்லை. காரணம் ஒலி அதிர்வுகள் மந்திரங்களை ஜபிக்கிறபோது உண்டாவ தால், வேண்டினாலும், வேண்டாவிட்டாலும் அந்த அதிர்வுகளின் பலன் இருந்தே தீரும்.

மந்திரங்களை ஓயாமல் சொல்வதன்மூலம் இந்த ஒலி அதிர்வுகளினால் ஏற்படுகின்ற பயனைப் பெறுகின்றோம். சில சமயங்களில் மந்திரங்களை முழுவதுமாக உச்சரிக்கின்ற நிலைமாறி நம்மையும் அறியாமல் குறைவு, நிறைகள் ஏற்படத்தான் செய்யும். அப்படி ஏற்பட்டாலும் பலன் குறைவதில்லை என அறிந்துகொள்ள வேண்டும். அறிந்தோ அறியாமலோ மின்சாரத்தில் கைவைத்தால் எப்படி நமக்கு

அதிர்ச்சியைத் தருகின்றதோ அதுபோல இந்த மந்திரங்களை அறிந்து கூறினாலும், அறியாமல் கூறினாலும் அந்த ஒலி அதிர்வுகள் நமக்கு ஆற்றலைத் தரத்தான் செய்கின்றன.

செப்புத் தகட்டிலே சக்தி வாய்ந்த சக்கரங் களாக அமைவதும், கடத்திலே உள்ள நீரை சக்தி வாய்ந்ததாக மாற்றுவதும் ஓயாமல் தன்னை ஜபிக்கின்றவர்களுக்குத் தன் முழுசக்தியைத் தருவதும் ஆக விளங்குவது மந்திரங்களாகும்.

இவை நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும் மறைமொழியாம் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

இங்கு கூறப்பெற்றுள்ள கருத்துகள் சைவம வைணவம் ஆகிய இரண்டனுக்கு மட்டுமே உரியவை போலும் என்று எவ்ரும் நினைத்துவிட வேண்டா. இக்கட்டுரையில் சான்றாகக் காட்டியன சைவத்திற் குரியன என்பது தவிர இக்கருத்துகள் அனைத்தும் மந்திரங்களைப் போற்றும், எல்லாச் சமயங்கட்கும் உரியன.

கடவுள் கொள்கை இல்லாத பௌத்த சமண சமயங்கட்கும் மந்திரங்கள் உள்ளன. ஆதலால் இக்கட்டுரையில் கூறப்பெறுவன எச்சமயங்கட்கும் பொருந்துவனவே.

**2**

## சித்தர்கள்

முதன்முதலாக எனது சிந்தனையைத் தூண்டியவனே ராஜராஜன். அதற்காக நன்றி பாராட்டுகிறேன் அவனுக்கு.

ராஜராஜனுடைய கல்வெட்டுகளைப் படித்து தேவாரத் திருப்பதிகம் பாடிய 48 பேர்களுக்கும் அதில் பேர் கொடுத்துள்ளதைப் படித்தபோதுதான் எனக்கு முதன்முதலாக ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது.

காரணம் சமய அடிப்படையில் பழகியவன் நான். ஆகவே பேரோடு ஒரு பெயரைச் சேர்ப்பதற்கு தீட்சாநாமம் என்று பெயர். அதை நம்மில் பலர் நினைக்காத காரணத்தினால் ராஜராஜன் கல்வெட்டு களைப் படித்து தேவாரம் பாடியவர்களை எல்லாம் ராஜராஜன் நியமித்தான் என்று பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். திருநாவுக்கரசன், ஞான சம்பந்தன் என்ற பெயரை சும்மாவிடவில்லை அவன். 'திருநாவுக்கரையனான அகோரசிவன்', ஞானசம்பந்த னான 'வாமதேவசிவன்' என்று கல்வெட்டில் அவன் ஏன் போடவேண்டும்? பின்னால் வருகிற நாமங்கள் எல்லாம் தீட்சா நாமம். தேவாரப் பதிகம் பாடுவதற்கு தீட்சா நாமம் எதற்கு? ஆகவே, இங்கே இருக்கிறவர்கள்

தேவாரத் திருப்பதிகம் பாடத் தகுதியில்லையென்று கருதி, அவர்களுக்கெல்லாம் தீட்சை பண்ணி வைத்த பிறகுதான் தேவாரம் பாடவேண்டும் என்ற கருத்திலே அது வந்திருக்கிறது என்று புரிந்து கொண்டேன்.

இப்படி கல்வெட்டுகளை எல்லாம் படித்து - ஒன்பதாம் திருமுறையைப் பற்றி, சென்னை பல்கலைக் கழகத்தில் பேசுவதற்கு சிந்திக்கிறபோது எத்தனை கல்வெட்டுகள் ராஜராஜனுக்கு முன்னாலே தேவாரப் பதிகம் பாடுவதற்கு ஏற்பட்டன என்பதைக் காண முடிந்தது.

ராஜராஜனுக்கு நூற்றிச் சொச்சம் வருஷங் களுக்கு முன்னாலே - திருவல்லம் கல்வெட்டு - நந்திவர்மனது. 'தேவாரப் பதிகம் பாடுவார் உள்ளிட்ட' என்றே தொடங்கி அவன் ஒரு நாற்பது பேருக்குப் பட்டியல் கொடுக்கிறான். இது கி. பி. 750ல்.

கி.பி. 873 இல் முதலாம் ஆதித்தனின் திருவெறும்பூர்க் கல்வெட்டு. கி.பி. 910 இல் முதலாம் பராந்தகனுடைய திருவாவடுதுறைக் கல்வெட்டு. கி.பி. 941இல் எங்கள் ஊராகிய லால்குடி - திருத்தவத்துறைக் கல்வெட்டு. கி.பி. 977 இல் உத்தமசோழன் கோனேரி ராஜபுரம் என்று இன்று வழங்குகிறதே திருவல்லம் - அந்தக் கல்வெட்டு.

ஆக ராஜராஜன் வருவதற்கு முன்னாலே ஐந்து பேர் தேவாரப் பதிகம் பாடுகிறவர்கள் பட்டியல் கொடுத்து, அவர்களுக்கு நிபந்தம் விட்டிருக்கிறார்கள். இதில் என்ன வேடிக்கை, அந்த ஐந்துபேருக்கும் தீட்சா நாமம் கொடுக்கவில்லை.

முதன் முதலாக ராஜராஜன்தான் தீட்சா நாமம் கொடுத்தான். இது ஏன் என்ற யோசனை தோன்றியது எனக்கு. இவனுடைய குரு சதுரானன

பண்டிதன் என்பவர். இவனுடைய மகனாகிய ராஜேந்திரனுடைய குரு லகுலீச பண்டிதன் என்பவர். இந்த லகுலீச பண்டிதனோ, சதுரானன பண்டிதனோ நம் ஊர்க்காரனோ சைவனோ அல்லன். இவர்கள் அங்கேயிருந்து வந்த காளாமுகச் சைவர்கள். இந்தக் காளமுகச் சைவர்களைக் குருவாகக் கொண்டிருக்கிற ஒருவன் எப்படி இங்கிருக்கிற தேவாரங்களுக்கு மதிப்புக் கொடுக்க முடியுமென்ற சிந்தனை தோன்ற ஆரம்பித்தது.

'உண்மை என்னவென்றால் இவர்களுக்கு முன்னாலே இத்தனைபேர் தேவாரப் பதிகம் பாடியவர்களுக்குக் கல்வெட்டுப் போட்டிருந்தார்கள் என்றால் தேவாரத்தை யாரும் புதிதாகக் கண்டுபிடிக்க வில்லை. அது என்றைக்கும் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

அப்படியிருக்க திருமுறை கண்ட புராணம் என்ற ஒன்றே ஒன்று தொங்குகிறது. எனது தந்தையார் பெரியபுராணம் பல பிரதிகள் சேர்ப்பதில் சூரர். ஆறுமுக நாவலர் பதிப்பித்த பெரியபுராணத்திலே திருமுறைகண்ட புராணம் என்று எழுதி, ஒரு நட்சத்திரக் குறிபோட்டு அடியில் இதை இயற்றியவர் இன்னார் என்று தெரியவில்லை, உமாபதி சிவம் என்று சிலர் கூறுவர் என்று இருக்கிறது. அடுத்த பதிப்பு போடும்போது ஆறுமுகநாவலர் காலமாகிவிட்டார். இங்கே இருக்கிற உமாபதி சிவத்தை மேலேபோட்டு, நட்சத்திரக் குறியீட்டை எடுத்துவிட்டார்கள். அதையே நம்பிக் கொண்டு 'கொற்றவன்குடி உமாபதி சிவம்' எழுதியது, அதை எப்படி ஐயா மறுக்க முடியும்?' என இவர்கள் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். உமாபதி

சிவத்திற்கும், இந்தத் திருமுறை கண்ட புராணத்திற்கும் ஸ்நானப் ப்ராப்தி கூடக் கிடையாது. அந்த திருமுறை கண்ட புராணத்தில்தான் - இந்த - அதுவும் இந்த ராஜராஜன் என்று சொல்வதற்கும் வழி கிடையாது. பண்டாரத்தாரும், வெள்ளைவாரணனாரும், மாறு பட்டுக் கொண்டிருக்கிறார்கள். — அந்த திருமுறை கண்ட புராணத்தில்தான் சிதம்பரத்திலே மூடி வைத்திருந்தது, கை வைத்தது எல்லாம் இருக்கிறது. இதைத்தவிர வேறு எங்கேயும் கிடையாது. எனக்கு ஒரு சந்தேகம்.

தேவாரம் பாடிய இவர்களுக்கு இவ்வளவு சிறப்புக் கொடுத்து பட்டயம் எழுதிய ராஜராஜன் தான் தேவாரத்தையே கண்டிருப்பானேயானால் அதைக் கல்வெட்டிலே காட்டியிருக்கமாட்டானா? இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்தவன் - பரசூரி - சின்னச்சின்ன சமாசாரங்களுக்கெல்லாம் கல்வெட்டிலே இடம் குறிக்கின்றவர்கள் அவன் திருமுறைகளைக் கண்டு பிடித்திருந்தான் என்றால் ஏன் கல்வெட்டிலே சொல்லவில்லை. தன் அகம்பாவம் கூடாது என்றால் அவன் மகன் ராஜேந்திரன் சொல்லியிருக்கலாம் அல்லவா? இரண்டு பேருமே சொல்லவில்லையே என்றவுடன் சந்தேகம் தோன்றியது.

'நெகேஷன் இஸ் நாட் எ கன்பர்மேஷன்' — இல்லையென்றதனாலே ஒன்றைச் சாதிக்க முடியாது. ஆகையினாலே இந்த ஆர்க்யுமெண்டை நான் பெரிதுபடுத்தவில்லை. இவர்கள் சொல்லவில்லை. அதனால் எங்கோ, ஏதோ கோளாறு இருக்கிறது. என்ன

கோளாறு என்றால் திருமுறை ஏற்கெனவே இருந்தது. அவ்வுளவுதான் சமாசாரம். இவனுக்கு முன்னாலே ஐந்துபேர்கள் திருமுறை பாடுகிறவர்களை வரிசைப் படுத்தி அவர்களுக்கு நிபந்தம் விட்டுள்ளதுபோல இவனும் விட்டிருக்கிறான். அதிலே ஒன்றும் அதிசயம் இல்லை. ஆனால் ஒரு வித்யாசம். அவர்கள் எல்லாம் தமிழர்கள். இங்கே இருக்கிற தமிழர்களை எல்லாம் தேவாரம் பாட வைத்து நிபந்தம் கொடுத்தார்கள். இவன் அதுவும் இல்லாமல் - இவனுக்கு அந்த உரிமை இல்லையென்று, எங்கோ இருந்து இறக்குமதி செய்யப்பட்ட காளாமுகர்கள் - தீட்சிதர்கள் - குருமார்களுடைய உபதேசத்தைப் பெற்று எல்லோருக்கும் தீட்சை பண்ணிவைத்து அப்பறம்தான் பாடவேண்டுமென்று பண்ணிவைத்த காரியம்தான் இவன் செய்த புண்ணியம். ஆக இதை நன்றாக மனத்தில் வாங்கிக் கொண்டோமேயானால் 'திருமுறை கண்ட புராணம்' கதை எப்படி வந்தது என்கிற ஆராய்ச்சிக்குப் போவோம்.

இனி 9ஆம் திருமுறையைச் சிந்திக்கவேண்டும். திருவிசைப்பா, திருப்பல்லாண்டு. இதிலே கருவூர்த்தேவர், திருமாளிகைத்தேவர், சேந்தனார் இந்த மூவரும் சித்தர்கள். ஒன்பதாந் திருமுறை பாடிய ஒன்பது பேர்களுமே இந்த மூவர் உட்பட - ராஜராஜன் காலத்திலிருந்து 2 ஆம் குலோத்துங்கன் காலத்திற்குள் முடிந்தனர். ஒரு 250 ஆண்டுகளுக்குள்ளே ஒன்பது பேர்களும் வந்து பாடியிருக்கிறார்கள். இந்தப் பாட்டு ஏன் வந்தது? திருமுறைகள் இருக்கும்போது இந்தப் பாடல்கள் ஏன் வந்தன என்று சிந்திக்கத் தொடங்கிய போது ஒரு புதுமையைக் கண்டேன் பெரிய புராணத்திலே.

இரண்டாம் நரசிம்மன் கைலாசநாதர் கோயிலைக் கட்டினவன். அவன் காலத்தில்தான் சுந்தரர் இருக்கிறார் – காஞ்சீபுரம் போனவர்களுக்குத் தெரியும். நேரே எதிர்த்தாற்போல கைலாசநாதர் கோவில். இன்றைக்கும் அந்தக் கோயில் மிக அழகாக இருக்கிறது என்றால், புதிதாகக் கட்டின காலத்தில் எப்படி இருந்திருக்கும்? இரண்டாம் நரசிம்மன் என்ன பண்ணினான்? கைலாசநாதர் கோவிலுக்குள் நுழையும்போது இரண்டு தூண்கள் இருக்குமே அதிலே கல்வெட்டுப் போட்டான். 'ஏன் இதை நான் கட்டினேன் என்றால் கயிலயங்கிரி வாழ்வு சலிப்பேற்படின் உமாதேவியோடு வந்து கைலாசநாதர் தங்குவதற்காக' – எவ்வளவு திமிர் இருக்கும்? சிவபெருமானுக்குச் சலிப்பு ஏற்படின் வந்து தங்குவதற்காக இவர் கோவில் கட்டினாராம், அதனால்தான் 'உன் கோயில் வேண்டாமடா' என்று பூசலார் கோவிலுக்குப் போய்விட்டார், விஷயம் அவ்வளவுதான்.

அந்தக் கோவில் சுந்தரருக்கு முன்னாலே இருக்கிறது. இந்தக் கோயில் வண்ணப்பூச்சு இன்றைக்கும் போகவில்லையென்றால் அன்றைக்கு எப்படி இருந்திருக்கும்? ஆனால் சுந்தரர் அந்தக் கோவிலுக்கும் போகவில்லை. பாடவில்லை. பெரிய அதிர்ச்சி எனக்கு.

அப்படியானால் பல்லவர்கள் சுந்தரருக்கு விரோதிகளா? அல்லர்.

> **உரிமையால் பல்லவர்க்குத் திறைகொடா**
> **மன்னவரை மறுக்கஞ் செய்யும்**
> **பெருமையார் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்**
> **பெருமான்...**

என்று பாடுகிறவர்,

**கடல்கடந்த உலகெல்லாம் காக்கின்ற**
**பெருமான் காடவர்கோன்**

என்று பாடுகிறவர் சுந்தரர். பல்லவர்மேல் எல்லையில்லாத அன்பு வைத்திருக்கிறார். அப்படியிருக்க தன் காலத்திலிருந்த பல்லவனாகிய ராஜசிம்மன் கட்டிய கைலாசநாதர் கோயிலைத் திரும்பிப் பார்க்காமல் அதற்கு ஒரு நூறு, நூற்றைம்பது அடி தள்ளி உள்ள ஒரு பிள்ளையார் கோயிலுக்கு – பிள்ளையார் கோயில் என்று சொல்வதற்குக் காரணம் – மிகச்சிறிது – 12' × 11' அளவினது திருக்கச்சி அனேகதங்காவதம் என்ற கோவிலுக்குப் போய்ப் பாடியிருக்கிறார் என்றால் வேண்டுமென்றே கைலாசநாதர் கோவிலுக்குள்ளே சுந்தரர் போகவில்லை என்ற முடிவுக்கு வந்தேன் – மன்னித்துக்கொள்ளுங்கள். தப்பாக இருந்தால் விட்டுவிடுங்கள்.

கைலாசநாதர் கோவிலுக்கு ஏன் போகவில்லை. அகம்பாவத்திலே கட்டப்பட்ட கோவில் என்பது ஒன்று. இரண்டு – புதியதாக வந்தவற்றை இவர்கள் வரவேற்பது இல்லை. மூன்றாவதாக தமிழ் மக்களே கூட பழமைக்குக் கொடுத்த மரியாதையை புதுமைக்குக் கொடுக்கவில்லை.

ஆகையினாலே சோழர்கள் இத்தகைய கோயில்களைக் கட்டியும் அவை இன்றைக்கு இருப்பது போலத்தான் அன்றைக்கும் இருந்தன. பாடல் பெற்ற கோயில்களுக்குப் போனார்கள் தமிழர்கள். அதற்குக் காரணம் இலக்கணத்திலோ, இலக்கியத்திலோ இல்லை. ஆன்மிகத்தில் பார்க்கலாம். பாடல்பெற்ற கோவில் என்று ஏன் பெயர் என்றால் விஞ்ஞான முறையிலே சொல்ல வேண்டுமானால் 'மெல் அதிர்வுகள்' உள்ள இடங்கள்.

பழனி இருக்கிறது. திருப்பதி இருக்கிறது. எங்கள் ஊரிலே மாங்காடு இருக்கிறது.

இங்கெல்லாம் சித்தர்கள் தங்கி வாழ்ந்து அங்குள்ள மூர்த்தங்களுக்கு ஆற்றல் கொடுக்கிறார்கள். விக்கிரகம் இருக்கிறதே அது மின்விளக்கு போல. அது எரிவதனாலே ஆற்றல் எங்கே இருக்கிறது என்று யாரும் கவனிக்கிறது இல்லை. சித்தர்கள் அங்கே தங்கி ஆற்றல் கொடுக்கிறார்கள்.

ஆக இந்தக் கோயில்கள் எப்படித் தோன்று கின்றன என்றால் யாராவது ஒருத்தர் அதற்குச் சக்தி ஏற்ற வேண்டும். அந்தச் சக்தி மெல் அதிர்வுகளாக நின்றுவிடும். இப்படி சக்தி கூடி பாடல்பெற்ற கோயில்களுக்குப் போனார்களே தவிர சோழர்கள் கட்டிய மாபெரும் கோவில்களுக்கு யாரும் போகத் தயாராயில்லை.

அந்த நிலைமையிலே கருவூர்த்தேவர், சேந்தனார் முதலிய சித்தர்கள், இந்தச் சோழர் களுடைய சைவப்பற்றை வைத்துக்கொண்டு மக்களை வழி திருப்ப வேண்டுமென்றால் ஒரேவழி – இனிமேல் த்ரைலோக்கிய சுந்தரத்துக்கும், ராஜராஜேச்வரத் துக்கும் ஞானசம்பந்தரைக் கூட்டி வந்து பாடல் பெற முடியாது. காலம் கடந்து போனது – எனவே இவர்களே பாடினார்கள். அதுதான் சமாசாரம்.

திருவிசைப்பா என்பது சோழர் காலத்திலே தோற்றுவிக்கப்பட்ட கோவில்களுக்கு ஒரு ப்ராதான்யம் கொடுப்பதற்காக கருவூர்த் தேவர், சேந்தனார், அமுதனார் முதலியவர்கள் பாடினார்கள். அப்படிப் பாடும்போது இந்தக் கோயிலை மட்டும் பாடினால் பயனில்லை. சிதம்பரம் எல்லாவற்றுக்கும் மூல ஸ்தானம். அதையும் பாடினார்கள். பெரும்

பாலான சோழர்கள் கட்டிய கோயிலை வைத்துப் பாடின சிறப்பு இவர்களுடையது. இவர்கள் சித்தர்கள். இவர்கள் பாடலுக்கு ஆற்றல் உண்டு. இந்தப் பாடல் பெற்றதனாலே இந்தக் கோயில்களுக்கும் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் போக ஆரம்பித்தார்கள். இது இத்தனையும் நிகழ்ச்சி முறை. இதன் அடிப்படையைச் சிந்திக்கும்போது ஒரு பெரிய போராட்டம். ராஜராஜன் ஒன்றும் செய்துவிடவில்லை பக்தி இலக்கிய காலத்திலே என்ன போராட்டம் என்பதைச் சுருக்கமாகச் சொன்னேன்.

'வேதம்' பற்றய பேச்சு வருகிறது. ஆனால் வேதத்திலே சிவனுக்கு ஒன்றும் இடம் கிடையாது. அப்படியிருக்க எப்படி இந்த வளர்ச்சி ஏற்பட்டது என்பது.

களப்பிரர்கள் கொலைக்கஞ்சாப் பாதகர்கள் என்பதிலே சந்தேகம் இல்லை. ஆனால் என்ன உபகாரம் செய்தார்கள்? இந்தத் தமிழர்களைத் தட்டி எழுப்பினார்கள். அதுதான். 'ஷாக் ட்ரீட்மெண்டு' என்று சொல்கிறோமே அதிர்ச்சி தருகின்ற வைத்தியம் – அந்த வைத்தியத்தின் பயனாகத்தான் பக்தி இலக்கியம் தோன்றிற்று. பக்தி இலக்கியத்தைத் தோற்று வித்தவர்கள் என்ன செய்தார்கள்? மக்களை மனம் திருப்புவதற்கு ஒரு வழி வகுத்தார்கள்.

தமிழகத்தை களப்பிரர்கள் விட்டுவிட்டுப் போகிற காலத்தில் வடமொழி இங்கு சிறப்புப் பெற்றிருந்ததே தவிர தமிழுக்கு இடம் கிடையாது. ஆகவே 4196 பாடல்கள் பாடிய ஞானசம்பந்தர் 147 இடத்திலே தன்னை 'தமிழ்ஞான சம்பந்தன்,' 'முத்தமிழ் விரகன்,' என்று சொல்லிக்கொள்ளும்படியாக ஆயிற்று. அடித்துப் பேசி தன்னைத் தமிழோடு சேர்த்துச்

சொல்லிய காரணத்தினாலே தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்ததோடு மட்டுமல்ல. சில அடிப்படைப் பழக்க வழக்கங்களும் நுழைய ஆரம்பித்தன. வேதத்திலே விக்கிரக வழிபாட்டுக்கு இடமேயில்லை. தீ வளர்த்தனர் - தீக் கடவுள் ஒருத்தன்தான் தெய்வம். அதற்குமேலே இந்திரன், வருணன் முதலானவர்கள். எதாக இருந்தாலும் 'ஸ்வாஹா' என்று அக்னியிலே போடுவது அந்த மரபு. அங்கே விக்கிரகத்துக்கு வழியில்லை.

இங்கே விக்கிரகத்தை வைத்தார்கள். அதற்கு மேலே அபிஷேகம் செய்தார்கள். வேதம் ஒத்துக் கொள்ளாத ஒன்று - 'விக்கிரகம் வைப்பதும், அபிஷேகம் செய்வதும்'. அதனால்தான் வேத வழியிலே வருகிற வைதிகர்கள் 'கல்லைக் கழுவு கிறவன்' என இவனைக் கேலி செய்ய ஆரம்பித்தார்கள்.

இந்த அபிஷகத்தை மூவர் அற்புதமாகப் பாடினார்கள். யார் யார் அபிஷேகம் செய்தார்கள். அர்ச்சனை செய்தார்கள் என்பதை வரிசைப்படுத்திச் சொல்லியிருக்கிறார். இப்போது நாம் கோவிலுக்குப் போனால் குருக்கள்கிட்டே கொடுத்துவிட்டு வெளியே நிற்க வேண்டியதாக உள்ளது. ஞானசம்பந்தர் சொல்கிறார்.

**செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு நற்கலை**
**தெரிந்த அவரோ**
**டந்தமில்கு ணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய**
**அமர்கின்ற அரனூர்**

**(திருமுறை 3 பதிகம் 80 - 4)**

*செந்தமிழர் உள்ளே போய் அர்ச்சனை செய்தார்கள் என்பதுதானே அர்த்தம். இவன் போய் நேரடியாக அர்ச்சனை பண்ணுகிற பழக்கம் இந்த நாட்டிலே இருந்தது. இதற்குமேலே சுந்தரர் வருகிறார்.*

**இயக்கர் கின்னரர் யமனொடு வருணர்**
**இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்**
**மயக்கம் இல்புலி வானரம் நாகம்**
**வசுக்கள் வானவர் தானவர் எல்லாம்**
**அயிர்ப்பொன் றின்றிநின் திருவடி யதனை**
**அர்ச்சித் தார்**

*இந்த பட்டியலில் புலி, சிங்கம் நாகத்தோடு எல்லாவற்றையும் கூட்டிக்கொண்டு வந்துவிட்டார்கள்.*

*இனி சிவவாக்கியர் மட்டுமல்ல, பாம்பாட்டிச் சித்தர் பாடுவார்.*

**"சமயபேதம் பலவான சாதி பேதங்கள்**
**சகத்தோர்க்கே... " என்பார்.**
**"சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்"**

*என்று. அதனால் இவற்றையெல்லாம் தனித்தனியாகப் பேசப் போகிறாயா என்று பேசுவார் கொங்கணச் சித்தர்.*

**"சாதி பேதங்கள் சொல்லுகி றீர்தெய்வம்**
**தானென் றொருவுடல் பேதமுண்டோ ?**
**ஓதிய பாலதி லொன்றாகி யதிலே**
**உற்பத்தி நெய்தயிர் மோராச்சு"**

*ஆக சாதிகளை அடித்து நொறுக்க வேண்டுமென்பது இவர்களுடைய முதலாவது கொள்கை.*

அடுத்தபடியாக மிக முக்கியமான ஒரு நல்ல காரியத்தைச் செய்தார். எந்த நல்ல காரியத்திலும் நாளாவட்டத்தில் குழப்பம் தோன்றத் துவங்கும்.

மிகப் பழைய காலத்திலே தத்துவங்களை வைத்து, க்ரியைகள், சடங்குகளை வைத்தார்கள். நாளாவட்டத்தில் தத்துவங்கள் மறைய க்ரியைகளும், சடங்குகளும் மிஞ்சிவிட்டன. "ஏம்பா இதைச் செய்கிறே?". 'என்னமோ பெரியவங்க செஞ்சுவந்தாங்க. நான் செய்கிறேன்' என்பதாக அறியாமையினாலே நொந்து போகின்ற அளவுக்கு சடங்குகள் வளர்ந்து விட்டன.

சிவபூஜை முக்கியம். சிவபூஜை பண்ணுவதற்கு விளக்கம் சொல்ல ஆரம்பித்தான். 'தங்கத்திலே லிங்கம் பண்ணி வச்சா இன்ன பலன் கிடைக்கும். வெள்ளி யிலே பண்ணி வச்சா இன்ன பலன் கிடைக்கும். சிவப்புப் பூவைப் போட்டுப் பண்ணினா இன்ன பலன் கிடைக்கும்.' – இப்படியெல்லாம் மக்களை நம்ப வைத்துவிட்டார்கள். ஆக சிவபூஜை எங்கேயோ போய் பொன்பூஜை, வெள்ளி பூஜையாகிவிட்டது.

இந்த நிலையிலே நால்வர்கள் கூட இதைத் திட்டுகிறார்கள். இல்லையென்று சொல்வதற்கில்லை. திருநாவுக்கரசர் வயது முதிர்ந்தவர். நொந்துபோய்ப் பாடுகிறார்.

'மனத்திலே இறைவனை நினைந்து உருகிப் பாடினால் அவன் தானாகவே வந்து நிற்பான்.'

**நெக்குநெக்கு நினைபவர் நெஞ்சுளே**
**புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்**

நெக்கு நெக்கு நினைக்கின்றான் என்றால் அப்படி இறைவன் பெயரைச் சொல்லும்போதே

உருகுகிறானாம். அப்படி சிவபூஜை பண்ணுகிறவர் இறைவனைத் தேடிப் போகவேண்டியதில்லை. இறைவன் அவன் மனத்தைத் தேடிப் போகிறான். புக்கு நிற்கும் — தானே புகுந்து இருப்பான் என்று சொன்னவர் அடுத்த இரண்டு அடியிலே ஒரு போடு போட்டார்.

**பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு**
**நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே**

வஞ்சகன், திருட்டுப் பையனுடைய பூவையும் நீரையும் பார்த்து

**நக்கு நிற்பன்**

என்றார். 'தோலைக் கடிச்சு, துருத்தியைக் கடிச்சு வேட்டை நாயாயிற்று' என்று சொல்வார்களே அதுபோல பலரையும் ஏமாற்றி, என்னையும் ஏமாற்ற ஆரம்பித்துவிட்டாயே மகனே, என்று ஆண்டவன் சிரிக்கிறானாம். அதுமட்டுமல்ல. 'அவர் தம்மை நாணியே' நிற்பன் என்றார். 'உன்னைப் படைச்சேனே நான்' என ஆண்டவனுக்கே வெட்கம் பிடுங்கித் தின்கிறது. 'வஞ்சகத்தனுடைய பூவையும், மலரையும் பார்த்து ஆண்டவன் வெட்கப்பட்டுப் போகிறான் என்று நாவரசர் பெருமான் சொல்லுவார்.

ஆக வெறும் சடங்கு சம்பிரதாயம் என்பது அதிகப்பட்ட காலத்திலே நால்வர்களும் சாடியிருக்கிறார்கள். இல்லையென்று சொல்வதற்கில்லை. ஆனால் திருநாவுக்கரசர் போன்றவர்கள் கொள்கை வேறு; வந்த காரியம் வேறு. ஆக போகிற போக்கில் சாடிவிட்டுப் போனார்கள்.

**கங்கை யாடிலென் காவிரி யாடிலென்**
**கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்**
**ஓங்கு மாகடல் ஓதநீ ராடிலென்**
**எங்கும் ஈசனெ னாதவர்க் கில்லையே**

'ஈசன் எங்கும் இருக்கிறான் என்ற நினைவு வந்தாலொழிய கங்கையிலும், காவேரியிலும் குளித்ததனாலே என்ன பிரயோசனம்? ஒவ்வொரு புண்ணிய தீர்த்தமாகக் குளித்து வருவதனாலே பயன் இல்லை' என நாவுக்கரசர் அவருக்கேயுரிய கௌரவமான முறையில் பேசுவார்.

சித்தர்கள் அப்படிப் பேசமாட்டார்கள். ஒவ்வொரு குளமாய்ப் போய் காலை, மாலை, நண்பகல் என குளித்தாயே மகனே. என்ன ஆயிற்று? இப்படித் தீர்த்தாடனம் ஆடிவிட்டு வந்ததனாலே ரொம்ப புண்ணியமா? அந்தத் தவளை என்ன ஆயிற்று? அந்தத் தண்ணீரிலேயே இருக்கிறது பார், இருபத்துநாலுமணி நேரமும் இந்தத் தேரை. அவை போயினவா மோட்சத்துக்கு?' என்று கேட்கிறார்.

அதனாலே தண்ணீரிலே குளித்தால் மோட்சம் என்றால் தவளையும், மீனும் மோட்சம் போயிருக்கும். இது சித்தருடைய வாதம். ஆக ஒவ்வொரு ஊராகப் போவதனாலேதான் நீ வீடு பேற்றை அடைய முடியுமென்றால் பறவை, விலங்குகள் இரையைத் தேடிப் போகின்றனவே. அவை எல்லாம் மோட்சம் போயிருக்க வேண்டுமே. கோவிலுக்குப் போய்த்தான் கும்பிட வேண்டு மென்றால் அங்கிருக்கிற வௌவால் எல்லாம் மோட்சம் போயிருக்கும்.

ஆக இப்படிச் சொல்வதனாலே ஏதோ இவர்கள் இறை என்பதையோ, இறை பக்தியையோ,

இறை எண்ணத்தையோ தவிர்த்தார்கள் என்று நினைப்பது பெருந் தவறு. அதனுடைய அடிப்படையில் இருக்கின்ற தவற்றை எடுத்துக் காட்டினார்கள்.

சமுதாயத்திலே நாலு பேரோடு பழகுகிற போது அங்கே நீ குளிக்காமல் போனால் அது நன்மை இல்லை. கெடுதல். 'ஆகவே நீராடு என்றால், குளிக்கிறதையே ஒரு சாத்திரமாக்கி, ஒரு சம்பிரதாய மாக ஆக்கி, அதற்கு ஏதோ சடங்குகளை வைத்துக் கொண்டு முங்கி முங்கி எழுந்திருக்கிறதுதான் – தண்ணீரிலே குளிக்கிறதுதான் புண்ணியம் என்றால் திட்டுகிறார்கள் சித்தர்கள். திட்டாமல் என்ன செய்ய முடியும்?

அதற்குமேலே எதனாலே லிங்கம் பண்ணுவது, அதற்கு எந்தப் பூவைப் போட்டுப் பூசை பண்ணுவது? இந்த சாஸ்திரம் ஜாஸ்தியாகி சிவபூஜையே மறக்கப் பட்ட காலத்திலே சித்தர் பாடுகிறார். எல்லோருக்கும் தெரிந்த பாட்டுதான்.

**நட்ட கல்லைத் தெய்வமென்று**
**நாலு புட்பஞ் சாத்தியே**
**சுற்றி வந்து முணமுணென்று**
**சொல்லு மந்த்ர மேதடா ?**

'ஓகோ, இவர் பிற்காலத்திலே வந்த கடவுள் இல்லை என்கிறவர் கட்சி போல இருக்கிறது' என்று தயவு செய்து நினைத்திட வேண்டா.

**நட்ட கல்லும் பேசுமோ**

என்பது வரை இவர்களும் கேட்கிற கேள்விதான்.

**ஆத்தம் ஆனார் அயலவர் கூடி**
**நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினார்**

என்பார் மாணிக்கவாசகர்.

இல்லையென்று சொல்பவன் எப்பொழுதுமே சிறந்த பேச்சாளனாக இருப்பான். ஏனென்றால் ஒரு ரெக்கார்டுதான் அவனுடம் இருப்பது. அதைப் போட்டுப் போட்டு சிறந்த பேச்சாளனாக இருப்பான். சித்தர்களும் அப்படியோ என்று தயவு செய்து நினைத்திட வேண்டாம்.

**நட்ட கல்லும் பேசுமோ ?**

என ஒரு கேள்வி கேட்டார்.

**நாதன் உள்ளிருக் கையில்**

'இறைவன் உள்ளே இருக்கிறான் என்கிற நினைவு இல்லாமல் நீ இந்தக் கல்லுக்குப் பண்ணினேன்னா இது என்ன பயனைத்தரும்' என்று கேள்வி கேட்கிறார்.

இன்னும் ஒரு படி மேலே போகிறார்.

**பரமிலாத தெவ்விடம்**
**பரமிருப்ப தெவ்விடம் ?**

ஏதோ ஒரு குறிப்பிட்ட இடத்திலே போய் ஏதோ அங்கேதான் இருக்கிறான் இறைவன், அங்கேதான் சாந்நித்யம் இருக்கிறது என்று சொல்கிறாயே மகனே

**பரமிலாதது எவ்விடம் ? பரம் இருப்பது எவ்விடம் ?**

பரம் என்றால் பரம்பொருள். பரம்பொருள் இல்லாத இடம் ஒன்று சொல்லு. இருக்கிற இடம் ஒன்று சொல்லு.

**அறமிலாத பாவிகட்குப் பரமிலை அது உண்மையே**

அறம் அடிப்படை வாழ்க்கையில் இல்லையென்றால் நீ எங்கே போனாலும் உனக்குப் பரம் இல்லை.

"ஏதோ ஒரு பெரிய அபிஷேகம் பண்ணி விட்டதாலே பழனியிலே போய் எல்லாவற்றையும் – ஒரு வருஷக் கணக்கையும் கழித்துவிடலாம் என்று நினைக்கலாம். பாசவதைப் பரணிக்காரர் என்ற ஒரு பெரியவர் பாடுகிறார். 'நூறு குடம் பால் அபிஷேகம் பண்ணிட்டா 365 நாளும் பண்ணின பாவத்தைப் போக்கிவிடலாம் என்று நினைக்காதே, 'என்பாவம்' என்று கேட்கிறார்.

**ஆறு, கடல் ஏழு இருந்தும்**

சப்த கடலில் இருந்தும் தீர்த்தத்தைக் கொண்டு வந்து வைத்திருக்கிறான். சங்கல்ப ஸ்தோத்திரத்தில் சொன்ன அத்தனை ஆறுகளில் இருந்தும் தீர்த்தத்தைக் கொண்டு வந்து வைத்திருக்கிறான். அவர் கேட்கிறார்.

**என்பாவம் ஆறு,கடல் ஏழிருந்தும்**

அம்பாள் இதனை விரும்பவில்லை.

**என் அன்னை அன்பாளர் கண்ணருவி ஆடுவது திருவுள்ளம்**

அம்பாள் சொல்கிறாள் 'மகனே நான் படைத்த தண்ணியடா இது. இதையே எடுத்து எனக்கு அபிஷேகம் பண்ணாதே. நீயாகப் படைத்தது எதாக இருந்தாலும் அதை எடுத்து அபிஷேகம் பண்ணு. கேவலம் மனிதன் எதைப் படைக்க முடியும்? அம்பாள் சொல்கிறாள்.

**அன்பாளர் கண்ணருவி**

அவர்களது கண்களில் இருந்து வருகிறதே உப்புத் தண்ணீர் – இரண்டு சொட்டு அதற்குத்தான் அம்மை

அங்காந்து இருக்கிறான், எனப் பாசவதைப் பரணிக் காரர் சொல்லுவார்.

அதைத்தான் இங்கே சித்தர் கொஞ்சம் வேகத்தோடு பேசுவார்.

**சருகருந்தி நீர்குடித்துச் சாரல்வாழ் தவசிகாள்**

இலைகளைத் தின்றுகொண்டு தண்ணீர் குடிப்பவர்களே!

**சருகருந்தில் தேகங்குன்றிச் சஞ்சலமுண் டாகுமே**

ஆண்டவன் படைத்த உணவு இருக்கும்போது இந்த இலைகளையே தின்று கொண்டு இருந்தீர்களானால் உடம்புதாண்டாப்பா குறையும்.

**சிட்டரோது வேதமும் சிறந்தஆக மங்களும்**
**நட்டகார ணங்களும் நவின்றமெய்ம்மை நூல்களும்**
**கட்டிவைத்த போதகம் கதைக்குகந்த பித்தெலாம்**
**பெட்டதாய் முடிந்ததே பிரானையான் அறிந்தபின்**

ஆக வேதத்திலிருந்து, ஆகமங்களிலிருந்து, உபநிஷத்து களிலிருந்து என்ன ஆகிவிட்டன? ஏதோ ஒரு கருத்தை, சிறந்த தத்துவத்தை சொல்ல வந்திருக்கிற கருவிகள் அவை என்பதை மறந்துவிட்டு அவற்றையே வழிபடத் தொடங்கினார்கள்.

சாலையிலே வருகிறான். சென்னைப் பட்டினம் 60 கிலோ மீட்டர் என கைகாட்டி மரம் போட்டிருக்கிறது. அது இவனுடைய அறிவை வழிப்படுத்தி, இதன் வழியாகப் போ என்று சொல்வதற்கு. அதற்கடியில் உட்கார்ந்துகொண்டு 'இதுதான் சென்னைப் பட்டினம்' என்று ஒருவன் சொல்வானேயானால் அதற்கு என்ன செய்வது?

**சிட்டரோது வேதமும் சிறந்தஆக மங்களும்**

*வழிகாட்டுவதற்காக வந்த கைகாட்டிகள். இவன் என்ன பண்ண ஆரம்பித்து விட்டான்?*

*திருமுறை பூஜை என்பான், ஞானசம்பந்தர் தேவாரம் ஆகிய முதலாம் திருமுறையிலிருந்து சேக்கிழாருடைய பன்னிரண்டாந் திருமுறை வரையிலே - சத்தியமா ஒருமுறை கூடத் திறந்து பார்த்திருக்கமாட்டான் - அழகாக அடுக்கி வைத்து - நம் போல்வார் திறந்து பார்த்து விடுவாரோ என்பதற்காகக் கண்ணாடி போட்டுப் பூட்டி சீல்வைத்து பூஜை செய்வான், ஊதுவத்தியைக் கொளுத்தி வச்சு.*

*பாரதி காலத்திலேயும் நடந்திருக்கிறது.*

**மந்திரத்தை முணுமுணுத்து ஏட்டை**
**வரிசையாக அடுக்கி அதன்மேல்**
**சந்தனத்தை மலரை இடுவோர்**
**சாத்திரம்இவள் பூசனை யன்றாம்**

*என மனம் நொந்து பாடுவார் அந்தக் கவிஞர் பிரான்.*

*ஆக திருமுறை பூஜை செய்வது - திருமுறை களைப் படித்துப் பயன்கொள்வது என அர்த்தம். தினமும் அதைப் படிக்கவேண்டும் என்று அர்த்தம். இதை உணராது தவறு நடந்தபோது சித்தர்கள் கண்டிக்கிறார்கள்.*

*'வாழ்க்கை வழிகாட்டியாக வந்த நூல்களை அதுவே வழியென்று நினைத்துவிட்டாயே, மகனே*

**கட்டிவைத்த போதகம் கதைக்குகந்த பித்தெலாம்**
**பெட்டதாய் முடிந்ததே பிரானையான் அறிந்தபின்**

'பரம்பொருள் யார் என்று தெரிந்த பின்னாலே, இதெல்லாம் படு பைத்தியக்காரத்தனமாகப்பட்டது. ஏன்?'

ஒரே வேதத்திலே பலவிதமான வழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. சைவர்களுக்கு ஒரு ஆகமம். வைஷ்ணவர்களுக்கு ஒரு ஆகமம். அவர்கள் அதுதான் பரம்பொருள் என்பார்கள். இவர்கள் இதுதான் பரம் பொருள் என்பார்கள். எந்த வழியில் போகிறது? அவரவர்களுடைய மனப்பக்குவத்திற்கு ஏற்றபடி அமைக்கப்பட்டது. மனம் வளரவளர இவை யெல்லாம் புளியம்பழம் போல விட்டுவிட்டுப் போய்க் கொண்டே இருக்க வேண்டும்.

இவன் நாலு வயதிலே பள்ளிக்கூடம் போகும் போது மாம்பழத்திலே சொல்லி கணக்கு கற்றுக் கொண்டான். எம்.ஏ. படிக்கிற காலத்திலும் மாம்பழத் தோடே படித்தான் எனில் இவன் என்ன பண்ண முடியும்?

குழந்தைப் பருவமாக இருக்கும்போது இந்த சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள், அனுஷ்டானங்கள் வைத்து அவனது மனத்தை ஒருமுகப்படுத்த வழி சொல்லிக் கொடுத்தார்கள். இவன் எல்லாம் தாண்டின நிலைமையிலும் அதையே சொல்லிக் கொண்டிருந்தான் என்றால் - சாகிற வரையில் அனுஷ்டானம் பண்ணிக்கொண்டிருந்தால் என்ன பண்ண முடியும்? அதைத்தான் நினைக்கின்றார், இங்கே சித்தர்.

**சாவதான தத்துவச் சடங்கு செய்யும் ஊமைகாள்**
**தேவர் கல்லும் ஆவரோ ? சிரிப்பதன்றி என்செய்வேன்.**

ஆக 'கல்' என்பது அடையாளம் - குறியீடு. இங்கு எப்படி நிழற்படம் நம் நினைவை அவர்களிடம் கொண்டு செல்வதற்கு உதவுகிறதோ அதுபோல.

**குறிக ளும்அடை யாளமுங் கோயிலும்**
**நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்**
**அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்**
**பொறியி லீர்மன மென்சொல் புகாததே**

என்று சொல்லுவார் திருநாவுக்கரசர். இது குறிகள், அடையாளங்கள் என்று தெரிந்துகொண்ட பிற்பாடும் இவற்றை வழிபடுவதில் தவறில்லை. அதை வலுவாக இந்தச் சமுதாயத்திற்கு இடித்துச் சொல்வதற்காகத் தான் சித்தர் பெருமக்கள் தோன்றினார்கள். அதுமட்டு மல்ல. இடைக்காலத்திலே சாதி சமயத்தைச் சாடி, விக்ரக வழிபாட்டையும் ஓரளவு சாடி பழக்க வழக்கங் களையும் சாடினார்கள். அதற்குமேலே சமுதாயத்திற்கு மாபெரும் நன்மையைச் செய்யத் தொடங்கினார்கள். அதனையும் சற்று விரிவாக நாம் காணவேண்டும்.

திருக்கோயிலுக்குப் போகிறவர்கள் தனியாகப் போக முடியாது. ஊரிலுள்ள பலரும் வருவார்கள். சமுதாயம் முழுவதும் ஒன்றாகக் கூடுவதற்குரிய இடம். பழைய காலத்திலே திருக்கோயில்கள் இறைவனை வழிபடுவதற்குரிய இடமாக மட்டுமே இல்லையே. அதுவே ஆதுலர்சாலையாக இருந்தது. அதுவே மருத்துவமனையாக இருந்தது. அதுவே பள்ளிக்கூட மாக இருந்தது. அதுவே சொற்பொழிவு மேடையாக இருந்தது. அந்த கிராம சமுதாய மக்கள் கூடி பஞ்சாயத்துப் பேசுகின்ற இடமாகவும் இருந்தது. ஆன்மா மட்டும் லயிக்கின்ற இடமாக இல்லாமல் சமுதாய மக்கள் அனைவரும் கூடும் இடமாக

அமைந்ததுதான் பழைய திருக்கோயில்களுக்குள்ள தனிச் சிறப்பு.

திருவொற்றியூர் கல்வெட்டு முதலானவற்றைப் பார்த்தோமானால் தமிழ்நாட்டுக் கோயில் எந்த அளவுக்கு தமிழர்களுடைய வாழ்க்கையில் ஊடாடி இருந்தது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். தனிப்பட்ட மனிதன் எவ்வளவு சிறந்தவனாக இருந்தாலும் அவன் வீட்டில் கூடுவது என்பது ஒரு சிலருக்குப் பிடிக்கும். ஒரு சிலருக்குப் பிடிக்காமல் போய்விடும். ஆகவே சமுதாயத்தார் என்ன செய்தார்கள்? விருப்பு வெறுப்பு இல்லாமல் எல்லோரும் ஒன்றாகக் கூடுவதற்கு கோயில் வாயிற் படிதான் சிறந்த இடம். ஆகவே அதற்கு 'மன்று' என்று பெயர் வைத்தனர். இன்றைக்கு அந்த மன்று என்ற சொல் மறைந்து 'மந்தை' என்றாகிவிட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் மந்தை, சாவடி என்று சொல்லுவான். மந்தை என்றால் ஏதோ ஒரு காளி கோயில் இருக்கும். எல்லோரும் வேறுபாடற்றுக் கூடுகின்ற இடம். சமுதாய மக்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடுகின்ற இடத்திலே ஒருத்தன் குளிக்காமலோ, தூய்மை இல்லாமலோ போனான் என்றால் அவன் பிரச்சினைக்குரியவன் ஆகிவிடுவான். ஆகவே கோயிலுக்குப் போகவேண்டுமென்றால் கண்டிப்பாகக் குளித்துவிட்டுப் போகவேண்டுமென்று வைத்தார்கள். இது நாளாவட்டத்தில் என்ன ஆகிவிட்டது? ஒரு சொம்பு தண்ணீர் எடுத்துவிட்டு, குளித்துவிட்டுப் போனாலும் போதும் என்று நினைத்தானே தவிர, தூய்மை காரணமாக இது சொல்லப்பட்டது என்பதை

மறந்துவிட்டு, அதை சம்பிரதாயமாக்கிவிட்டான். இந்த நிலையைத்தான் சித்தர்கள் பாடுகிறார்கள்.

**காலைமாலை நீரிலே மூழ்கு,மந்த மூடர்காள்**

நீரிலே மூழ்குவது எதற்கு என்று தெரியாததனாலே அவனை மூடன் என்று திட்டினார். சொன்னாலும் தெரிந்துகொள்ளவில்லை. அவனை மந்த மூடர் என்றார்.

**காலை மாலை நீரிலே கிடந்த தேரை என் பெறும் ?**

ஏனப்பா, நீ இரண்டு வேளை மூழ்கினதற்கு இத்தனை பலன் என்று எதிர்யார்க்கிறாயே, இருபத்துநாலு மணி நேரமும் அந்தத் தேரை நீருக்குள்ளேயே கிடக்கிறது. அதற்கு ஏதாவது பயன் உண்டா?

நாலு வேதங்களையும் விடாமல் ஓதுகிறான். ஓதுகிறவன் பொருள் தெரிந்து ஓதுகிறானா, இல்லை. ஏதோ அது ஒரு கடன், ஒரு தொழில் என்ற முறையிலே.

அதுபோல விபூதி இடுகிறவனும் உடம்பு, தலை கால் என்று விலை குறைவா(க)க் கிடைக்கிறது என்பதற்காகப் பூசித் தள்ளிவிடுகிறான். ஓயாமல் ஏதோ சொல்லிக் கொண்டே இருக்கிறான். கேட்டால் ஆண்டவன் நாமத்தைப் பஜித்துக்கொண்டே இருக்கிறேன் என்கிறான். சொல்லுகிறானே அவனது உதட்டுக்கும், மனத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இருக்கிறதா என்றால், கிடையாது. வெறுமனே சொல்வதற்கு பயன் உண்டென்றால் உலகத்திலே உள்ள டேப்ரெக்கார்டர்கள் எல்லாம் மோட்சம் போயிருக்க வேண்டும். இந்தத் தமிழ் நாட்டுப் பெரியவர்கள் சொன்னார்கள். நாலு வேதத்தை

ஓதினாலும், நீறு பூசினாலும், பிதற்றினாலும் பிரான் இரான் என்று. என்ன செய்ய வேண்டும்?

**உருக்கி நெஞ்சை உள்கலந்து உண்மை கூற வல்லிரேல்**
**சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்து கூடல் ஆகுமே,**

சுருக்கமற்ற சோதி வடிவாக இருக்கிறான் இறைவன். அவன்

**நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே**
**புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்**

என்று நாவுக்கரசர் பிரான் சொன்னாரே, அதையே தான்

**காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது**

என்று ஞானசம்பந்தர் சொல்லுவார்.

சித்தர்களும் நமச்சிவாய என்ற அஞ்செழுத்தைப் பெரிதுபடுத்திச் சொல்லுவார்கள். ஆனால் அஞ்செழுத்தைச் சொல்வதற்கு வழிதுறைகள் சொல்லுவார்கள்.

ஒரு எட்டு குயர் நோட்டை வாங்கி 'ஓம் நமச்சிவாய' என்று ஒரு கோடி தடவை எழுதி விடுகிறான். எழுதுபவன் என்ன செய்கிறான்? ஒவ்வொரு பக்கத்தினுடைய அடியிலும் கோடு போடுகிறான். இதோடே இத்தனை ஆச்சு, இதோடே இத்தனை ஆச்சு என்று. ஆக ஆண்டவன்கிட்டே இவன் வியாபாரம் செய்கிறான். எண்பதாயிரம் எழுதிட்டேன், இப்போ என்ன தர்ரே, ஒரு லட்சம் எழுதிட்டேன். இன்னும் பார்க்காம இருக்கிறாயே. இதை சித்தர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

**காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்**

என்று சொன்னால், பத்துகோடி தடவை எழுதினால் என்ன? ஒரு லட்சம் தடவை எழுதினால் என்ன? அதைத்தான் இங்கே சொல்கிறார்.

**ஆடியா டியகம் கரைந்துஇசை**
**பாடிப்பாடிக் கண்ணீர் மல்கி எங்கும்**
**நாடிநா டிநரசிங்கா வென்று, வாடும்**

என்று ஆழ்வார் பெருமானும் பாடுவார். அகம் கரைந்து நாடி நாடி நரசிங்கா என்று சொல்லணுமே தவிர யாரோ ஒருத்தன் பேரை வச்சுகிட்டு தினம் கூப்பிடுவதனாலே ஒரு பிரயோசனமும் இல்லை. இதைத்தான் வெட்ட வெளிச்சமாகப் பாடுகிறவர்கள் சித்தர்கள்.

**உருக்கி நெஞ்சை உள்கலந்து உண்மைகூற வல்லிரேல்**
**சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்து கூடல் ஆகுமே**

என்று.

இனி வாலைச்சாமி என்ற ஒரு சித்தர்

**தத்துவக் குப்பையைத் தள்ளுங்கடி வேத**
**சாத்திரப் பொத்தலை மூடுங்கடி**
**முத்தி பெற ஞான வஸ்து வரக்கண்டு**
**மூட்டிக் கும்மியடி**

ஆக இது பல சமயங்களிலே வெறும் குப்பையாகி விட்டது. அதன் தத்துவங்களும், பொருளும் மறைந்து விட்ட நிலையிலே, ஏன் இது என்று அறிய முடியாத நிலையிலே வெறும் பாரமாகப் போய்விட்டதனாலே அதை ஒதுக்கிவிடுங்கள் என்று

சொன்னார்கள். அதற்கு மேலே வழிபாட்டு முறையைச் சாடுகிறார் சிவவாக்கியர்.

**கல்லுவெள்ளி செம்பிரும்பு காய்ச்சிடுந்த ராக்களில்**
**வல்லதேவ ரூபபேத மங்கமைத்துப் போற்றிடின்**
**தொல்லையற்றி டப்பெருஞ் சுகந்தருமோ சொல்லுவீர்**

ஸ்படிக லிங்கம் சார், அதிலே பூஜை பண்ணினா மதிப்பு அதிகம். கண்ணாடி லிங்கத்துக்கும், ஸ்படிக லிங்கத்துக்கும் இப்படி வித்யாசம். தங்கம் மதிப்பு ஜாஸ்திதான். ஆக அதை வைத்துப் பூஜை பண்ணினால் அதற்கேற்றபடி பலன் என்று நம்புகிற நிலை வந்துவிட்டது.

ஒரு காலத்தில் என்னுடைய நண்பர் ஒருவர் தங்கலிங்கத்தை வைத்து வழிபட்டுக்கொண்டிருந்த போது மற்றொரு நண்பர் சொன்னார், 'எப்பவாவது உனக்குப் பூஜையிலே மனம் ஈடுபடுமா?'. 'ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?'

'வச்சிருக்க தங்கத்தை யாராவது தூக்கிக் கொண்டு போய்விடுவானே என்கிற நினைவுதானே உனக்கு இருக்கும்' — அப்போது தங்கத்தின் விலை 48 ரூபாய்தான். இருந்தாலும் இந்த நினைவுதானே உனக்கு இருக்கும் என்று. இதை அவருக்கு முன்னாலே வியாக்யான கர்த்தாக்கள் சொன்னார்கள், 'செருப்பை வைத்து திருமால் தொழப் போனாற்போலே' என்று.

புதிசா வாங்கின செருப்பைக் கோயிலுக்கு வெளியே வைத்துவிட்டு ஆண்டவனைக் கும்பிடப் போனா, ஆண்டவன் நினைவா வருகிறது இவனுக்கு. அதை யாராவது தூக்கிக் கொண்டு போய்விடுவார் களோ என்றே நினைப்பான்.

*கல்லு, வெள்ளி, செம்பு, இரும்பு என்று இதனாலே விக்கிரகங்களைப் பண்ணி வைத்துக் கொண்டு*

**வல்லதேவ ரூப பேதம்**

*அவரவர்களுக்கு விருப்பமான வடிவங்கள் அமைத்துப் போற்றிவிட்டால்*

**தொல்லையற்றி டப்பெருஞ் சுகந்தருமோ சொல்லுவீர்**

*இதை வழிபட்டுவிட்டதனாலே, இதற்கு ஏதோ பொங்கல் முதலானவற்றைப் படைத்துவிட்டதனாலே ஒரு நிலையை அடைய முடியும் என்று நினைக்கிறீர் களா?*

**இல்லை இல்லை இல்லை இல்லை ஈசனாணை இல்லையே.**

*என்பார் சித்தர்.*

*மகனே தங்கத்திலும், வெள்ளியிலும் பண்ணி வைத்து வழிபட்டுவிட்டதனாலே ஏதோ கிடைத்து விடும் என்று நினைக்காதே. ஈசன் ஆணை இதனாலே எந்தப் பயனையும் நீ அடைய முடியாது' என்று பேசுவார்.*

*"இப்படிப் பேசுகிறார்களே, இவர்கள் ஏதோ எல்லாவற்றையும் விட்டுவிட்டு துறவியாக ஓடிவிட வேண்டுமென்று – இடைக்காலத்திலே போலித் துறவு வந்ததே – சித்தர்கள் இதைத்தான் வரவேற்கிறார்களோ என்று தயவு செய்து நினைத்துவிட வேண்டாம். எப்படி ர்ளுவப் பேராசான் இல்லறத்தைப் போற்றினாரோ ,தேபோல சித்தர்களும் போற்றியிருக்கிறார்கள்.*

கல்லு, வெள்ளி, செம்பு, இரும்பு என்று இதனாலே விக்கிரகங்களைப் பண்ணி வைத்துக் கொண்டு

**வல்லதேவ ரூப பேதம்**

அவரவர்களுக்கு விருப்பமான வடிவங்கள் அமைத்துப் போற்றிவிட்டால்

**தொல்லையற்றி டப்பெருஞ் சுகந்தருமோ சொல்லுவீர்**

இதை வழிபட்டுவிட்டதனாலே, இதற்கு ஏதோ பொங்கல் முதலானவற்றைப் படைத்துவிட்டதனாலே ஒரு நிலையை அடைய முடியும் என்று நினைக்கிறீர்களா?

**இல்லை இல்லை இல்லை இல்லை ஈசனாணை**
**இல்லையே.**

என்பார் சித்தர்.

மகனே தங்கத்திலும், வெள்ளியிலும் பண்ணி வைத்து வழிபட்டுவிட்டதனாலே ஏதோ கிடைத்து விடும் என்று நினைக்காதே. ஈசன் ஆணை இதனாலே எந்தப் பயனையும் நீ அடைய முடியாது' என்று பேசுவார்.

"இப்படிப் பேசுகிறார்களே, இவர்கள் ஏதோ எல்லாவற்றையும் விட்டுவிட்டு துறவியாக ஓடிவிட வேண்டுமென்று – இடைக்காலத்திலே போலித் துறவு வந்ததே – சித்தர்கள் இதைத்தான் வரவேற்கிறார்களோ என்று தயவு செய்து நினைத்துவிட வேண்டாம். எப்படி ர்ளுவப் பேராசான் இல்லறத்தைப் போற்றினாரோ ,தேபோல சித்தர்களும் போற்றியிருக்கிறார்கள்.

**மாதர்தோள் சேராத தேவர்**
**மாநிலத்தில் இல்லையே**
**மாதர்தோள் புணர்ந்தபோது மனிதர்**
**வாழ் சிறக்கும்**

ஆக இல்லற வாக்கைதான் மிகச் சிறந்தது என்று பேசுவார் சிவவாக்கியர்.

**வருவிருந்தோ டுண்டுடுத்தி வளர்மனை சுகிப்பிரேல்**
**வருவிருந்தோ னீசனாகி வாழ்வளிக்குஞ் சிவாயமே**

என்று பேசுவார்.

'இல்லற வாழ்க்கை நடத்தி, வர்றவங்களுக் கெல்லாம் சாப்பாடு போட்டீன்னா, வந்து சாப்பிட்ட வங்களிலே ஒருவேளை யாராவது ஒருத்தன் ஈசனாகக் கூட இருக்கலாம்.'

இளயான்குடிமாறனார் உணவு அருத்தினார் அல்லவா? அதுபோல வருகிறவர்களுக்கு எல்லாம் உணவு அருத்துவது என்ற ஒரு கொள்கையோடு இருப்போமேயானால், மிக உயர்ந்தவர்கள்கூட வந்து சிக்கிக் கொள்வார். ஆக திருமூலர் சொல்லுவார்.

**திலம் அத்தனை சிவஞானிக்கு ஈந்திடில்**

என்று சொல்லுவார். திலம் – எள்ளு. மூன்று பிறப்புக்கும் இது உதவும் என்பார்.

சரி, எங்கே போய்ச் சிவஞானியைத் தேடிப் பிடிப்பது? எதை எடுத்தாலும் போலி – இப்போ ரூபாய் நோட்டிலே போலி வந்தமாதிரி மனிதர்களிலே போலி. சிவனடியாரை எங்கே தேடிப் பிடிப்பது? அதிலும் சிவஞானியை எங்கே தேடிப் பிடிப்பது?

அதற்குத்தான் சிவவாக்கியர் சொல்கிறார். 'மகனே, நீ போய் சிவஞானியைத் தேடிப் பிடிப்பது என்பது முடியாத காரியம். ஏன்னா உன் அளவுக்குத் தானே நீ போய்த் தேடிப் பிடிக்க முடியும், உன்னைவிடக் கடந்து நிற்பவர்களை நீ எங்கே போய் கண்டுபிடிக்க முடியும்? முடியாது. அப்போ என்ன வழி? ஒரே வழிதான். எல்லோருக்கும் போடு. எல்லோருக்கும் போடுவதிலே அந்த சிவஞானி வந்து சிக்குவான்.

**வருவிருந்தோ னீசனாகி வாழ்வளிக்கும் சிவாயமே**

என்பதாக மிகப் பரந்துபட்ட நோக்கத்தோடு, சமுதாயம் நன்கு வாழவேண்டுமென்று கருதினார்கள் இவர்கள். மிக உயர்ந்த நிலைக்குப் போனாலும் நான் மட்டும் தானே மோட்சம் போக முடியும். அதனால் யாருக்கென்ன பிரயோசனம்?

இராமானுஜர் கோபுரத்தின் மீது ஏறிக் கொண்டு அட்டமந்திரத்தைச் சொன்னார். குரு ஏசினார், 'நரகத்துக்குப் போவே' என்று. 'ஸ்வாமி கவலைப்படவில்லை. இந்தச் சமுதாயம் முழுவதும் வீட்டுப் பேற்றைப் பெறுவதானால், நான் ஒருத்தன் நரகம் போவதற்குத் தயாராக இருக்கிறேன்' என்றார். இதுதான் இந்த நாட்டிலே தோன்றிய பரம கருணையுடைய பெரியவர்களுடைய உள்ளம் இருந்த வாறு. சித்தர்களும் அப்படித்தான். சமுதாயம் வாழ வேண்டும். கடைசி மனுஷன் மோட்சம் போறவரை எனக்கு ஒன்றும் அங்கே வேலையில்லை என்று நினைத்தவர்களே பெரியவர்கள். முன்னமேயே சொன்னோம்.

சித்தர்களுக்கு எங்கேயும் போகவேண்டிய நிலையில்லை. எல்லாவற்றையும் கடந்து நிற்கின்ற அவர்கள், பரம்பொருளின் ஆணைபெற்று வந்து அங்கங்கே வந்து தங்கி பணி புரிகின்றவர்கள். ஆகையினாலே அவர்களுக்கு விருப்பும் இல்லை. வெறுப்பும் இல்லை. வேண்டப்பட்டவர்கள், வேண்டாதவர்கள் எதுவும் கிடையாது. அவர்கள் இதைச் செய்ய வேண்டுமென்ற சட்டதிட்டமும் இல்லை. இதைச் செய்துதான் முன்னேற வேண்டு மென்ற பிரச்சினையும் கிடையாது. ஆகவே எது தேவையோ அதைக் கூசாமல் சொல்லுவார்கள். எப்படி மருத்துவன் அறுவையினாலேதான் அதைப் போக்க முடியும் என்றால் கருணை காட்ட மாட்டான். அறுத்துத் தள்ளிவிடுவான். அறுவை சிகிச்சையினாலே தான் அவனை வாழ வைக்க முடியும் என்றால் பண்புடைய வைத்தியன், 'ஐயோ பாவம்' என்று கருதினான் என்றால் அவன் பண்புடைய மருத்துவன் அல்லன். வருந்தினாலும், அழுதாலும் கவலையில்லை. அதைத்தான் ஆழ்வார் சொல்லுவார்.

**வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்**
**மாளாத காதல் நோயாளன்**

என்று. அதுபோல் சமுதாயத்திலே இருக்கிற துன்பங் களைத் தவறுகளைப் போக்க வேண்டுமானால், இந்தச் சித்தர்கள் பளார் பளார் என்று அடிப்பார்கள். ஆக மென்மையாகச் சொல்கிற வழக்கம் கிடையாது. எப்படியாவது அதைப் போக்க வேண்டு மென்ற ஒரே நோக்கம்தான் அவர்களுக்கு. ஆகவே சொல்கிறார்.

'மகனே சௌக்கியமா இல்லற வாழ்க்கை நடத்து. வருவிருந்துக்கு எல்லாம் சோறுபோடு. வருவிருந்தோன் ஈசனாகி வாழ்வளிக்கும்' என்று பேசுவார்.

இனி பூசை செய்வதற்கும் வழி சொல்லுவார்.

**ஆசைகொண்ட னுதினமும் அன்னியர் பொருளினை**
**மோசஞ்செய்த பகரிக்க முற்றிலும்ம லைபவர்**
**பூசையோடு நேமநிட்டை பூரிக்கச்செய் பாதகர்**
**காசினில் எழுநரகைக் காத்திருப்ப துன்மையே**

"என்னப்பா அங்கே உட்கார்ந்துகிட்டு மறுமறுங்கறே. அடுத்தவனை எப்படி க்ளோஸ் பண்ணலாம்னு கணக்குப் போடறயா? காசினியில் ஏழ் நரகுக்குப் போவதைத்தவிர வேறு வழியில்லை என்று சொல்லுவார்.

'தான் என்ற ஆணவத்தை நீக்கமாட்டார். சண்டாளக் கோபத்தை நீக்கமாட்டார். ஊன்கண்ட சுகபோகம் ஒழிக்கமாட்டார். எப்படி ஐயா வீட்டுப் பேற்றை அடையப் போகிறார்?' என்று சட்டைமுனி பேசுவார்.

இனி ஒருவகையாக எல்லாக் காலத்திலும் இருக்கின்றவர்கள் இந்தச் சித்தர்கள் என்று கண்டோம். சமுதாயத்திற்கு வாழ்வளிப்பதற்காக வந்தவர்கள் என்று கண்டோம். நிர்க்குணமாக இருக்கின்ற இறைப் பொருளினுடைய கட்டளைகளை நிறைவேற்றுவதற் காக அங்கங்கே தோன்றியவர்கள் என்று கண்டோம். இதற்குமேலே இவர்களுடைய ஆற்றலையும்பற்றி ஓரளவு காண வேண்டும்.

சித்தர்கள் எல்லாவிடங்களிலும் இருக்கின் றார்கள். இருக்கின்றார்கள் என்று நிகழ்காலத்திலே

பேசுவதற்குரிய காரணம் உலகத்திற்கு அவர்களுடைய சேவை தேவைப்படுகிறது. ஆகையினாலே அங்கங்கே இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள். பலசமயங் களிலே நமக்கு அது தெரிவதில்லை. அவ்வளவுதான்.

உதாரணமாகப் பழனி, திருப்பதி முதலிய பெரிய க்ஷேத்திரங்களை எடுத்துக் கொள்ளுங்கள். பழனியிலே உள்ள ஆண்டவனது வடிவத்திற்கும் மற்ற இடங்களிலே உள்ள ஆண்டவனுடைய வடிவத்திற்கும் வேறுபாடு உண்டா? நிச்சயமாக இருக்க முடியாது. அப்படியிருக்க ஒரே ஆண்டவன் பழனியிலே ஏன் அவ்வளவு சாந்நித்யத்துடன் விளங்க வேண்டும்? திருப்பதியிலே – அது பெருமாளா, அன்னையா? முருகனா – அந்த ஆராய்ச்சி அப்புறம் இருக்கட்டும். அங்கேயிருக்கிற வடிவு ஏனைய கோவில்களிலே இருக்கிற வடிவு போன்றதுதானே. அந்த வடிவு ஏனைய கோவில்களிலே இருக்கிற வடிவுதான் என்றால் அந்த இடத்திலே ஏன் இவ்வளவு சாந்நித்யம் இருக்க வேண்டும்? சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பழனிக்குப் போகிறவர்கள் ஆயிரம்பேர் என்றால் 999 பேருக்கு 'போகரை'ப் பற்றித் தெரியாது. திருப்பதிக்கு பதினாறாயிரம் பேர் போகிறார்கள் என்றால் ஒரு சிலருக்குக் கூட 'கோரக்கரை'ப்பற்றித் தெரியாது. திருச்செந்தூருக்கு ஆயிரம் பேர் போகிறார்கள் என்றால் 'பஞ்ச சித்தர்களை'ப் பற்றி யாருக்குமே தெரியாது. இந்தத் திருப்பதியில் இருக்கிற வடிவம், பழனியில் இருக்கிற வடிவம், திருச்செந்தூரில் இருக்கிற வடிவம் இவை யாவும் பதினாயிரம் வால்ட் பல்பு என்பதை மறந்துவிடாதீர்கள். இந்த விக்கிரகம்

பதினாயிரம் மெழுகுவர்த்தி வெளிச்சம் தருகின்ற பல்பு. இதற்கு மின்சாரம் சப்ளை பண்றது அங்கே எங்கேயோ மறைவில் இருக்கிறது.

பழனியில் **போகர்** ஆக, திருப்பதியிலே **கோரக்கர்** ஆக, திருச்செந்தூரிலே **பஞ்ச சித்தர்**களாக அங்கங்கே இருக்கிறார்கள். ஏதோ விஷயம் தெரிந்தவர்கள் பழனிக்குப் போய்ப் போகருடைய சமாதியை வழிபட்டு வருகிறார்கள். அதே மாதிரி திருச்செந்தூருக்குப் போனால் பாதாளலிங்கம் என்று சொல்லுவார்கள். யாரேனும் ஒருத்தன் கேட்டான்னா அந்த விருப்பக்காரருக்கு கோவில்காரன் கொண்டு காட்டலாம். எல்லா இடங்களிலும் இந்தச் சித்தர்கள் தங்கிக் கொண்டு, விக்ரகத்தின் மூலமாகவோ அல்லது நடமாடும் மனிதர்கள் மூலமாகவோ தங்களுடைய ஆற்றலை வெளிப்படுத்திக் காட்டுகிறார்கள். இரண்டும் உண்டு. விக்கிரகத்தின் மூலமாக அருள் செய்வதும் உண்டு. மனிதர்கள் மூலமாக அருள் செய்வதும் உண்டு. அப்படி எந்தவிதமான அருள் செய்தாலும், சமுதாயத்திற்கு எது தேவையோ அதனை இவர்கள் செய்கிறார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

இந்தப் பெரியவர்கள் நாயன்மார்கள், ஆழ்வார்கள், ஏசு, புத்தர் முதலானவர்கள் செயற்கரும் செயல்களைச் செய்தார்கள் என்று நாம் சொல்கிறோம். இப்போது சிலபேர் இது முடியுமோ என்று நினைக்கிறார்கள். நினைப்பதிலும் தவறு இல்லை. Angle என்று சொல்கிறோமே – எந்தக் கோணத்தில் நின்று பார்க்கிறோமோ அந்தக் கோணத்தின் அடிப்படையில் தான் விளங்கிக் கொள்ள முடியும்.

ஐந்து வயதுக் குழந்தை ஒரு கிலோகிராம் தூக்குவது என்பது முடியாத காரியம். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இருபது வயது வாலிபனுக்கு அது மிக எளிதான காரியம். இருபது வயது வாலிபன் ஐந்து வயதுக் குழந்தையை, – தூக்க முடியவில்லை என்றாலும் அதை எள்ளி நகையாடுவதும் அறியாமை, இதைக் கூடவா தூக்க முடியவில்லை என்று. ஐந்து வயதுக் குழந்தை ஒரு கிலோ கிராமைத் தூக்குவதைப் பார்த்தோ, இருபது வயது வாலிபன் அந்தக் குழந்தையைத் தூக்குவதைப் பார்த்தோ மாபெரும் செயல் என்று நினைப்பதும் அறியாமை. அதுபோல – செயற்கரிய செய்வார் பெரியர் என்று வள்ளுவப் பேராசான் சொல்லுகிறானே – செயற்கரிய என்று எதுவுமே உலகத்தில் கிடையாது. நம்முடைய மனோ நிலையிலே இது செயற்கரியது. மேலே போகும்போது இது சாதாரணமாகப் போகிறது.

கீழே தரையில் இருந்து பார்த்தால் நாலு சுவர் தெரிகிறது. லைட் ஹவுஸ் மேலே நின்று பார்த்தால் ஊர் முழுவதும் தெரிகிறது. நாற்பதாயிரம் அடிமேலே போகிறபோது செங்கற்பட்டு, திருக்கழுக்குன்றம் வரை தெரிகிறது. அதுபோல் மேலே போகப்போக இது சாதாரண சமாசாரம். ஆக செயற்கரிய செயல் என்றோ, உலகத்தில் நம்பமுடியாத் செயல் என்றோ எதுவும் கிடையாது. அவரவர்கள் நிலையிலே அததனைச் செய்ய முடிகிறது. பொதுவாகச் சித்தர்கள் என்ன செய்ய முடியும் என்று 'பாம்பாட்டி' பாடிக் காட்டுவார்.

**தூணைச் சிறு துரும்பாகத் தோன்றிடச் செய்வோம்**
**துரும்பைப் பெருந் தூணாகத் தோன்றச் செய்குவோம்**
**ஆணைப் பெண்ணும் பெண்ணை ஆணுமாகச்**
**செய்குவோம்**

**எட்டு மலைகளைப் பந்தா எடுத்தெறி குவோம்**
**மூண்டெழும் அக்கினிக்குள் மூழ்கி வருகுவோம்**
**முந்நீருள் இருப்பினும் மூச்ச டக்குவோம்**
**தாண்டிவரும் வன்புலியைத் தாக்கிவிடுவோம்**
**செப்பரிய மூன்றுலகும் செம்பொன் னாக்குவோம்**
**செங்கதிரைத் தண்கதிராய்ச் செய்து விடுவோம்**

*இது பலரும் அறிந்துகொள்ளக்கூடிய ஒன்றுதான். கலிலியோ கடலில் அன்பர்களுடன் படகில் போகும்போது புயல் வந்தது. அன்பர்கள் வருந்தினார்கள். ஏசு பெருமான் புயலைப் பார்த்து STOP என்று சொன்னார். நின்றுபோய்விட்டது என்று விவிலியத்தில் படிக்கிறோம்.*

*இங்கே ஆழ்வார்கள், நாயன்மார்கள் வரலாற்றிலே பார்க்கிறோம். 'கொள்ளம்புதூர் வெள்ளத்தில் புகுந்து போனார்கள்' என்று. இப்போதும் இவையெல்லாம் நடைபெறுகின்றன என்பதை ஓரிருவர் அறிய முடியும்.*

*முன்னே சொன்னபடி சித்தர்கள் பல்வேறு இடங்களிலும் இருக்கிறார்கள் என்றதுபோல சென்னையை அடுத்து 92 கிலோமீட்டர் தூரத்திலிருக்கிற மேல்மருவத்தூர் என்ற இடத்திலே ஒரு சித்தர் – ஒரு சித்தர் என்று சொல்வது தவறு – பல சித்தர்கள் வாழ்கிறார்கள்.*

*இந்த அச்சிறுப்பாக்கம், மருவத்தூர், திருவண்ணாமலை இந்தப் பகுதியிலே நிரம்ப சித்தர்கள் அன்றும் இன்றும் இருந்து வருகிறார்கள் என்று தெரிகிறது. அங்கே ஒருவர் இதனைச் செய்து கொண்டிருக்கிறார் பலரும் காண. அற்புதங்கள் நடைபெறுகின்றன.*

ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு முன்னாலே ஒரு ஐந்து வயதுப் பையன் அங்கப்பிரதட்சிணம் செய்து வரவேண்டுமென்று முடிவு செய்தார். பிற்பகல் பன்னிரண்டேகால் மணிக்கு. சாதாரண மனிதர்களால் கூட காலை வைத்து நடக்க முடியாத உச்சி நேரத்தில் இந்தப் பையன் அங்கப்பிரதட்சிணம் வரவேண்டுமென்றால் நடக்கிற காரியம் இல்லை. நூற்றுக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஏதோ ஒரு துணிச்சலோடே அங்கப்பிரதட்சணம் வா என்று சொன்னார்கள். 'பையன் கீழே விழுந்தான் - உருண்டான் - மணல் - திறந்தவெளி - வெயில் அடிக்குது' எல்லோரும் பார்த்தார்கள். இறுதியாக அங்கப்பிரதட்சணம் முடிந்த பிறகு அந்த சித்தர் பேசுகிறார். 'குழந்தையை வா' என்று சொன்னால் அவனுக்குரிய கடமையைச் செய்து தருவது என் கடமை. வெயிலைக் குளிர்ச்சியாக்குவது சாதாரண சமாசாரம்.

ஆடிப்பூரத்துக்கு முதல்நாள் மழை என்றால் நம்ப முடியாத மழை. முழங்காலளவு தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது. ஆடிப்பூரத்தையொட்டி சிலர் விழாவைக் கொண்டாட வேண்டுமென்று நினைத்தவர்கள் மாபெரும் ஏற்பாடுகளைச் செய்து வைத்துவிட்டு இந்த மழையைக் கண்டு பயப்படு கிறார்கள். ஒன்றுமே நடைபெறாமல் போய்விடுமோ என்கிற வருத்தம் அவர்களுக்கு. 'கவலை வேண்டாம். மழையை இந்த விநாடியே நிறுத்திவிடுகிறேன்' என்றார் அந்தச் சித்தர். பூரம் முடிகின்ற வரையில் மழை இராது என்று சொன்னால் பூரம் முடிகிற வரையில் ஒரு சொட்டு மழை இல்லாமல் செய்ய முடிகிறது. ஆக இயற்கையை மாற்றுவது என்பது சித்தர்களுக்கு மிகச் சாதாரண சமாசாரம்.

காரணம் இயற்கையென்று நீங்கள் எதையோ மனதில் நினைத்துக் கொண்டு அது உங்களுடைய சக்திக்கு அப்பாற்பட்டதென்று நினைக்கிறீர்கள். அவர்கள் அப்படி நினைப்பதில்லை. இயற்கையே அவர்கள், அதுதான் அவர்களுக்கும் நமக்குமுள்ள வித்யாசம். நாம் இயற்கையில் இருந்து நம்மை பிரித்துக் கொண்டோம். அதுதான் உலகத்திலே இருக்கின்ற பிரச்சினை எல்லாம். இந்தச் சித்தர்கள் இயற்கையே தாங்களாக மாறிவிட்டார்கள். ஆகவே அவர்கள் அதை அடக்குவதும், விருப்பம்போல செய்யச் செய்வதும் சாதாரணமான சமாசாரம். இதை விளங்கிக் கொள்வோமேயானால் சித்தர்கள் யார் என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

**செங்கதிரைத் தண்கதிராய்ச் செய்துவிடுவோம்**

என்று பாடுவார் பாம்பாட்டி. மேல் மருவத்தூரில் நடந்தது இது.

**வேதன்செய்த சிருட்டிகள்போல் வேறு செய்குவோம்**
**வேதனையு மெங்கள்கீழே மேவச் செய்குவோம்.**

வேதன் – பிரம்மா.

**நாதனுடன் சமமாக நாங்களும் வாழ்வோம்.**

நாதன் – பரம்பொருள். பரம்பொருள் வேறு, தாங்கள் வேறு என்ற சூழ்நிலை இல்லாதவர்களாதலாலே

**சீறுபுலி யானையாளி சிங்க முதலாய்ச்**
**சிற்றடிக்குக் குற்றேவல் செய்யச் சொல்லுவோம்**

இதற்கும் மேலே கூடுவிட்டுக் கூடு பாயும் வல்லபம்' என்று கூறுவார். பரகாயப் பிரவேசம் என்பது இன்று

நேற்றன்று. மிகப் பல காலமாக இந்த நாட்டிலே இருந்து வருகின்ற ஒன்று.

**அட்டதிக்கும் அண்டவெளி யான விடமும்**
**அடக்கிய குளிகையோ டாடி விரைவாய்**
**வட்டமிட்டு வலம்வரும் வல்ல குருவின்...**
**கற்பகாலம் கடந்தாதி கர்த்தா வோடுங்**
**கடமழி யாதுவாழும் கார ணக்குரு**

என்று சொல்லுவார்கள். கடம் - உடம்பு. ஆக இந்த உடம்பை அப்படியே வைத்துக்கொள்வது - வஜ்ரத் துக்கே பழுது வாய்க்குமாயினும் வல்லுடம்புக்கு ஒரு குறை வாய்த்திடாது.

இதைப் பின்னே வந்தவர்கள் என்ன நினைத்து விட்டார்கள். "ஏதோ பஞ்சபூதத்தினாலான இந்த உடம்பை வச்சுகிறது என்று நினைத்தார்கள். அதிலேதான் வந்தது தவறு.

வள்ளல்பெருமான் 'சாவா மூவாப் பெரு வாழ்வு' என்று சொன்னவுடனே 'ஊரிலே இருக்கிற பிணத்தை எல்லாம் கொண்டுவந்து போட்டு உயிர்ப் பிக்கணும்' என்று நினைத்தார்கள். சித்தர் பெரு மக்களுடைய அடிப்படைத் தத்துவத்தைப் புரிந்து கொள்ளாததனாலே வந்த பிரச்சினை இது.

உடம்பு வேண்டுமானால் இதை விட்டுவிட்டு வேறு ஓர் உடம்பு. அதை விட்டுவிட்டு வேறோர் உடம்பு. ஏனையோர்கள் விஷயத்தில் அவரவர்கள் வினைப்படி உடம்பு கொடுக்கப்படும். சித்தர்களைப் பொறுத்த மட்டிலே அப்படியில்லை. 'பாம்பு வடிவோ, புலி வடிவோ மனித உடம்போ எது வேணுமோ அந்த உடம்பை எடுத்துக்கொள்ள முடியும் அவர்களாலே, கூடுவிட்டுக் கூடு பாய்கிற காரணத்தினால்.

அதை வாங்கிக் கொள்வோமேயானால் சாவா மூவாப் பெருவாழ்வு என்ன என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். அந்த உடம்பு ஏன் எடுக்கிறார்கள்? அன்றைய தேவைக்கு எந்த உடம்பு தேவையோ அந்த உடம்பை மேற்கொள்கிறார்கள். ஒருவருக்கு நலம் செய்ய வேண்டும். அதை இந்த உடம்போடுதான் என்றால் செய்கிறார்கள். அந்த உடம்பு வேண்டா என்றபோது மற்றொரு உடம்பை எடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே குறிப்பிட்ட ஒரு உடம்போடுதான் இருக்க வேண்டுமென்ற பிரச்சினை இல்லவே இல்லை. அதுதான் சித்தர்களுடைய வாழ்க்கையிலே நாம் காணுகின்ற ஒன்று. ஆக பரகாயப் பிரவேசம் செய்கின்ற பேராற்றல் உடையவர்கள். எந்த நேரத்திலும், எந்த உடம்பிலும், எந்த வடிவத்திலும் இருக்கலாம் என்பதை அறிந்து கொள்வோமேயானால் - கண்டின்யுடி என்று சொல்கிறோமே - அவர்களைப் பொறுத்தமட்டில் - இடையீடு இல்லாமல் விடுபாடு இல்லாமல் இருந்து வருகிற வாய்ப்புக் கிடைக்கிறது. ஆக சித்தர்கள் என்றும் உள்ளவர்கள். திருமூலரில் தொடங்கி இன்றைய வரையிலே இருக்கிறார்கள். அவர்கள் தமிழ்நாட்டிற்கு மட்டும் உரியவர்கள் என்று யாரும் நினைந்துவிட வேண்டாம். எல்லா நாட்டிலும் இருக்கின்றார்கள்.

நம்முடைய நாட்டைப் பொறுத்தமட்டிலே இடைக்காலத்திலே இவர்களுடைய பெயர்களிலே பல பாடல்கள் தோன்றின. இடைச்செருகல் முதலான கோளாறுகளும் வந்தன. இவர்களைப் பொறுத்த மட்டிலே பரம்பொருளுக்கு மக்களைக் கொண்டு செலுத்துவதைக் காட்டிலும் சமுதாயத்திலே மக்களை செம்மையான முறையிலே வாழ வைப்பதே மேல் என்று நினைத்தார்கள். அந்த அடிப்படையிலே சாதி

சமயத்தைச் சாடினார்கள். தேவையில்லாத சடங்கு களைச் சாடினார்கள்.

சித்தர்களுடைய கோயில், ஆனதாலே இஸ்லாமியர் பூஜை பண்ணுகிறார். கிறிஸ்துவர் பூஜை பண்ணுகிறார். அரிசனர் பூஜை பண்ணுகிறார். மேல் மருவத்தூர்க் கோயிலிலே. ஆக சித்தர்களுடைய கோயில் என்றால் அங்கே சாதி சமயத்திற்கு இடம் கிடையாது. சமயமே இல்லை என்றால் அங்கே மனித குலம் முழுவதுமே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

செயற்கரிய செயல் என்பது ரொம்ப சர்வ சாதாரணமான சமாசாரம் சித்தர்களைப் பொறுத்த மட்டில். ஆகவே அதையும் செய்கிறார்கள்.

இனி சித்துக்கள் என்று சொல்கிறோமே, **இந்தச் சித்துக்களைத் தேவையில்லாமல் ஆடம்பரத்துக் காகச் செய்வது சித்தர்களுடைய வேலை அன்று.**

எங்கே எப்பொழுது தேவைப்படுகிறதோ அங்கே அப்பொழுது பயன்படுத்துவார்கள். அது மட்டுமல்ல. அதற்கு அதிக மதிப்பு வைக்காதே என்றும் சொல்லுவார்கள். அதுவும் மருவத்தூர் போன்ற இடங்களிலே நேரடியாகக் காண முடியும். ‘சித்துக்களைச் செய்ததனாலே சித்தர்கள் அல்ல. **சித்தி அடைந்ததனாலே சித்தர்கள்** என்று சொல்கிறோம். இவர்களுடைய பாடல்களை ஆழ்ந்து பார்ப்போமே யானால் நம்முடைய சமுதாயத்தை, வாழ்வை, இந்த உலகத்திலே சிறந்த முறையில் அமைத்து மறு உலகத்தையும் பெறக்கூடிய வாய்ப்பை அளிக்கின்றன என்பதை நினைக்கும்போது தமிழர்களுக்கு சித்தர்கள் செய்த பேருபகாரம் என்றும் மறக்க முடியாதது என்பதை அறிய முடிகிறது.

# 3

# கிழக்கும் மேற்கும்

"கிழக்கும் மேற்கும்", "உலகாயதமும் ஆன்மிகமும்" என்பன என்னை வியப்பில் ஆழ்த்தின.

மேற்கு, கிழக்கு என்று பிரிவினை செய்து பேசுவது நியாயமானதா? உண்மையில் மேற்கு, கிழக்கு என்ற பகுதிகள் பிரிவினை செய்யக்கூடிய முறையில் உள்ளனவா? 'மேற்கு, கிழக்கு என்பன இல்லை' என்பதனை நான் சொல்லி, நீங்கள் அறிய வேண்டிய நிலையில் இல்லை. எல்லாவற்றையும்விட வேடிக்கை என்னவென்றால், சென்னைப் பட்டினத்தார் செங்கற் பட்டாரைத் தெற்கத்தியார் என்பார். செங்கற்பட்டார் தென்னார்க்காட்டாரைத் தெற்கத்தியர் என்பார். தென்னார்க்காட்டார் தஞ்சாவூர்க்காரரைத் தெற்கத்தி யார் என்பார். இப்படித் தெற்கு என்பது விரிந்து கொண்டே செல்கிறது. ஆனால் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்பனவெல்லாம் ஒப்புநோக்குச் சொற்களே தவிர, அவை அடிப்படையான பொருள் பொதிந்தனவும் குறிப்பிட்ட பொருளை அல்லது பகுதியை உணர்த்துவனவுமாகிய சொற்களாகா என்பதும் புலப்படும். கவிஞன் பாரதி, 'புத்தம் புதிய கலைகள் மெத்த வளருது மேற்கே' என்று எந்தத்

திசையை நினைத்துப் பேசினான் என்பது ஆய்தற்பாலது. ஒருவேளை நம்மைவிட மேற்கே உள்ளவர்களை நினைந்து பேசினானோ என்று எண்ண வேண்டியுள்ளது. இது பற்றிப் பேசிய, எழுதிய பல ஆசிரியர்கள் கற்பனையால் ஒரு பிரிவினைச் செய்து கொண்டார்கள்.

இரஷ்ய நாட்டவரைக் கீழ்நாட்டவர் என்று மேலைநாட்டவர் கூறுவதனை நீங்கள் அறிவீர்கள். 'கீழை நாட்டவரின் பொதுவுடைமை மனப்பாங்கை நம்மால் ஒரு போதும் புரிந்துகொள்ள முடியவில்லை', ("We can never understand eastern communistic mind") என்று மேலை நாட்டவர் கூறுவர். ஐரோப்பாவோடு சேர்ந்து நிற்கும் இரஷ்யரை நம்மோடு சேர்த்துக் கீழைநாட்டவர் என்றால், மேலைநாட்டவர்தாம் யார்? ஐரோப்பாவின் மேற்குப் பகுதியில் வாழ்பவரும் அமெரிக்கரும் தாம் போலும். திசை கூறி ஒன்றை அறுதியிட்டுக் காட்டவோ வேறுபடுத்திப் பார்க்கவோ இடமில்லை என்பது நன்கு விளங்கும். எனினும், ஒன்றுமட்டும் உறுதி. ஐரோப்பாவின் மேற்குப்பகுதியிலும் அமெரிக்காவிலும் தோன்றி வளர்ந்த நாகரிகத்திற்கும், ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியிலும் ஜப்பான் முடிய உள்ள நாடுகளிலும் தோன்றி வளர்ந்த நாகரிகத்திற்கும் அடிப்படையான வேறுபாடு உண்டு. அந்த அடிப்படையான வேறுபாட்டைத் தத்துவ மேதைகளும், ஏனைய சமயத்துறை நின்றாரும், பண்பாட்டாராய்ச்சியாளரும், மானிடவியல் ஆராய்ச்சி வல்லுநரும் தனித்தனியே தத்தம் நிலையில் ஆய்ந்து கண்டறிந்து, இவைகட்கிடையே வேறுபாடுகள்

உள்ளன என்று கூறியுள்ளார்கள். ஆனால், இவை அனைத்தையும் ஒன்று சேர்த்துப் பார்ப்போமே யானால் ஏதாவது ஒரு புதிய காட்சி கிடைக்குமா என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

மக்கள் அனைவரும் ஆறறிவு படைத்தவர்கள் என்றாலும், அவர்களுள் அடிப்படை வேறுபாடு இல்லை என்றாலும், வாழ்க்கையின் குறிக்கோள் அவர்கள் வாழும் இடத்திற்கு இடம் மாறிவிடுகிறது. வாழ்வினைக் காணும் அடிப்படை நோக்கு முழுவதும் மாறுபட்டிருக்கும் காட்சியைக் கிழக்கிலும் மேற்கிலும் காண முடியும். உங்களிலே சிலர் நினைக்கலாம் - தொழில்துறை முதலானவற்றில் கற்பனைக்கும் எட்டாத அளவிற்கு முன்னேறியுள்ள அந்த நாட்டு மக்கள் நினைவு, செயல் முதலானவற்றிலும் மாறுபட்டு இருப்பதில் வியப்பில்லையே என்று. ஆனால், அது சரியன்று என்றுதான் தோன்றுகிறது. நம் சகோதர நாடான ஜப்பானியர்கள் கீழை நாட்டவராயினும் பொருளாதாரத் துறையில் அமெரிக்காவின் அடுத்த நிலையை எட்ட முயன்றுகொண்டிருக்கிறார்கள் என்றால் வியப்படைய மாட்டீர்கள். பொருளாதார அடிப்படையிலே மட்டுமல்லாமல் தொழிலாக்கப் பொருள்களைப் பற்றிக்கூட இருபத்தைந்து ஆண்டு கட்கு முன்னர், ஜப்பான் நாட்டுப் பொருள் என்றால் அது தரக்குறைவான பொருள் என்று எள்ளி நகையாடி வந்த மேலைநாடுகளில், இன்று ஜப்பான் நாட்டுப் பொருள்கள் நம்பமுடியாத அளவு பாராட்டப் பெறுகின்றன. ஜெர்மனியின் தலைசிறந்த நகரமாகிய ஃபிரான்க்பர்ட்டிற்குச் சென்று எளிதாகக் கையில் எடுத்துச் செல்லும் வானொலிப் பெட்டி வேண்டு மென்றால், அவள் காட்டும் முதல் மூன்றும் ஜப்பான்

நாட்டில் உருவானவை என்பது தெரியவரும். புகைப்படக் கருவி வேண்டுமென்றால் ஜப்பான் நாட்டில் உருவான கேமிராக்களைத்தான் ஜெர்மனி நாட்டின் ஃபிரான்க்பர்ட்டில் காட்டுகிறார்கள். அவ்வளவு தூரம் தொழில் துறையில் ஜப்பானியர் முன்னேறியுள்ளனர். அவ்வளவு முன்னேற்றம் கண்டுள்ள ஜப்பான் நாட்டு உணவு விடுதியில் நான் கண்ட காட்சி என்னை வியப்பில் ஆழ்த்தியது.

இரவு விடுதிகள் மிகுதியாக வளர்ந்துள்ள அந்த நாட்டில் காலை ஆறு மணிக்கு டோக்கியோவில் உள்ள 'ஹில்ட்டன்' உணவு விடுதியில் பணிபுரியும் பணியாளர்கள் கூட்டாக வழிபாடியற்றும் வியப்பைக் கண்டேன். மாதா கோயிலில் வழிபாடு செய்வதுபோல மண்டியிட்டு மூக்கு தரையில் படுமாறு குனிந்து வழிபடுவதனைப் பார்த்தேன். அவர்களைக் கேட்ட போது நாள்தோறும் அவ்வாறு கூட்டாக வழிபாடியற்றும் பழக்கம் உண்டு என்று கூறினார்கள். தொழில் துறையில் முன்னேறி உலகச் சந்தையில் போட்டி போடும் அளவிற்கு முன்னேற்றம் பெற்று விட்டதனால் பழைய வாழ்க்கைப் பாதையிலிருந்து தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றோ, பழமையான தங்கள் வாழ்க்கை முறையை விட்டுவிட வேண்டும் என்றோ தேவை இல்லை என்று காட்டவே இதனைச் சொன்னேன்.

எவ்வளவு முன்னேறியும் பழைய பழக்கங்கள் என்று எவற்றை எண்ணுகின்றனரோ, அவற்றை விட அவர்கள் முனைவதில்லை. இரவு விடுதிகளைப் போற்றி மேற்கொள்ளும் பழக்கத்தில் அமெரிக்கர் களிடம் கூடக் காணமுடியாத அளவு நவ நாகரிகத்தில் மூழும் ஜப்பானியர் பழைமை வாய்ந்த மரபுகளையும்

பழக்கவழக்கங்களையும் விடுவதில்லை. ஜப்பானியர் போன்று தனிமனிதரை உபசரிக்கும் உயர்வான நிலையை உலகில் வேறு எங்கும் காண இயலாது. விருந்தினரை அழைத்துத் தேநீர் அளிப்பதனால் அதனைத் "தேநீர் விழா" (Tea Ceremony) என்று பெயரிடும் அளவு அவர்கள் பழைமையைப் போற்றி வாழ்கின்றார்கள். கொடுப்பதென்னவோ ஒரு கிண்ணத் தேநீர்தான். ஆனால், அந்தத் தேநீர் விழாவில் விருந்தினரை உயரமான ஆசனத்தில் அமரச் செய்து தாங்கள் ஒருபடி தாழ்வாக உள்ள ஆசனத்தில் அமர்ந்து தேநீர் வழங்குவர். விருந்து உபசரிக்கும் அவர், விருந்து உண்பவரைவிடப் பொருள் வளத்தால் பல நூறு மடங்கு உயர்ந்தவராகக்கூட இருப்பார்; என்றாலும், அவர்கள் தனி மனித உபசாரத்தில் எவ்வளவு சிறந்து நிற்கின்றார்கள் என்பதற்காக இதைச் சொல்கின்றேன். புத்த தேவன் காலத்தில் தோன்றிய பழக்கத்தை அவர்கள் இன்றைக்கும் ஏற்றுச் செய்கின்றார்கள்.

இதனை நோக்குகையில், அவர்களது பண்பாட்டில் — நாகரிகத்தில் ஏதோ அடிப்படையான வேறுபாடு இருக்கத்தான் வேண்டும் என்பது தெரியவருகிறது. வாழ்க்கை முறையில் எவ்வெவற்றை வாழ்வின் குறிக்கோள்கள் என ஒரு சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ளதோ அவற்றை மறவாமல் - ஆனால், அதே நேரத்தில் வாழ்வில் முன்னேறுகின்ற அடிப் படையைக் காணுகின்றோம். எங்கிருந்து வந்தது இப் பழக்கம் என்று ஆராய்வோமானால் அது பயனுடைய தாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

புவியியல் அடிப்படையில் மேற்கு, கிழக்கு ஆகிய திசைகள் என்பன இல்லை என்றாலும், மக்களைப் பொறுத்தமட்டில் வேறுபாடு இருக்கத் தான் செய்கிறது. மேற்கிலும், கிழக்கிலும் மட்டுமா வேறுபாடு? நம் நாட்டையே எடுத்துக்கொண்டாலும் தெற்கு, வடக்கு என்ற வேறுபாடு இருக்கிறது. பஞ்சாபியரை வங்காளிகள் ஏற்றுக்கொள்வதில்லை; வங்காளியரைப் பஞ்சாபியர் ஏற்றுக்கொள்வதில்லை. இன்று என்னோடு ஒரு வடநாட்டு நண்பர் இரயிலில் பயணம் செய்தார். அவர் குவெட்டாவைச் சேர்ந்தவர். பாகிஸ்தான் கலவரத்தினால் பம்பாயில் குடியேறி, மோட்டார் உதிரி உறுப்புகள் (spare parts) விற்பனை செய்யும் கடை வைத்திருக்கின்றார். அவர் தம் இனத்திற்குத் தவிர இந்திய நாட்டில் உள்ள பிற அனைத்து இனத்தவர்க்கும் தேசிய இன இயல்பு என்று சில குணங்களைக் கூறினார்; அவை என்னை வியப்பில் ஆழ்த்தின. 'இவர்கள் திருடர்கள்; இவர்கள் வஞ்சகர்கள்; இவர்கள் சாமான் இல்லாமலேயே விற்பனை செய்பவர்கள்' என்று அடுக்கிக்கொண்டே சென்றார். அவர் தன் போக்கில் இவ்வாறு இந்திய இனங்களுள் வேறுபாட்டைக் கண்டார்.

பாலஸ்தீன நாட்டில் யூதர்களும், முகமதியர் களும் ஒரே கோவிலில் ஆளுக்கு ஒரு பக்கத்தில் சென்று வழிபாடு செய்யும் நிலை இருந்து வருகிறது. ஆனால், இந்தப் பகுதியில் வழிபாடு செய்பவர் அந்தப் பகுதியில் வழிபாடு செய்பவர் தாழ்ந்தவர் என்றும், அந்தப் பகுதியில் வழிபாடியற்றுபவர் இந்தப் பகுதியில் வழிபாடு செய்பவர் தாழ்ந்தவர் என்றும் கருதுகின்றனர். ஒரே நாட்டில் இருந்தவர்கள்தாம் என்றாலும் - ஒரே நாட்டில் இன்று வாழ வேண்டிய சூழ்நிலையில் உள்ளவர்கள்தாம் என்றாலும் - இந்த

வேற்றுமை இருந்து வருகிறது. லண்டன் நகரத்தில் லண்டன் விமான நிலையத்தில் நாம் இறங்கியவுடன், "நீங்கள் இந்தியர், எனவே உள்நாட்டவர் வெளியேறும் இந்த வாயிற்படி வழியாகச் செல்லலாம்" என்கின்றனர். ஏழாயிரம் மைலுக்கு அப்பாலிருந்து செல்லும் நமக்கு ஒரு வழி. 22 மைல் தொலைவில் உள்ள பிரெஞ்சு நாட்டிலிருந்து வருபவருக்கு அந்நிய நாட்டார் வெளியேறும் வேறு ஒரு வாயில். ஏனென்றால், அவர் வெளிநாட்டவராம். 7000 மைலுக்கு அப்பாலிருந்து செல்லும் நாம் காமென் வெல்த் உறவாளர்கள். 22 மைல் தொலைவில் உள்ள பிரெஞ்சுக்காரர் இங்கிலாந்து நாட்டவருக்கு வெளிநாட்டாராம். இங்கிலாந்து நாட்டையே எடுத்துக் கொண்டாலும் பழைய அரிஸ்ட்டாட்டில், பிளாட்டோ ஆகியோரின் கொள்கைகளின் அடிப்படையிலே வரும் ரோமன்கத்தோலிக்க மதத்தவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் வேறு. அதிலிருந்து பிரிந்து, மக்கள் மனநிலை மாறுபாட்டிற்கு ஏற்ப மதமானது வளைந்து கொடுத்து மாறுபட வேண்டும் என்ற கொள்கையைக் கொண்ட புராட்டஸ்டண்ட் மதத்தவர் இருக்கிறார்களே, அவர்கள் வேறு.

புத்த தேவன் ஒருவன்தான். அவன் நிருமாணித்த மதமும் ஒன்றுதான். கருணையே உருவாகிய புத்த தேவன் உருவாக்கிய புத்தமதம் மகாயானம், ஹீனயானம் என்று இரண்டாகப் பிரிந்து குடுமிபிடிச் சண்டையில் நிற்கும் நிலையைக் காணலாம். இன்னும் கொஞ்சம் மேற்கே போனால் அமெரிக்க நாட்டில் டெட்ராய்டு பகுதி மக்கள் 'டெக்சாஸ் பகுதி மக்கள் பேசுவது ஆங்கிலமே இல்லை' என்று கூறும் நிலையைக் காணலாம்.

இவ்வாறு எங்கு நோக்கினும் மன வேறுபாடு, இனப் பிரிவினை, ஒரே இனத்துள்ளும் பிற வேறுபாடுகள் என்றிருக்கும் நிலையைக் காணலாம். ஆகவே, சமயத்தால் வேற்றுமை, தூரத்தால் வேற்றுமை, எல்லையால் வேற்றுமை, ஒரே எல்லையில் ஒரே இடத்தில் வாழுகின்றவர்கள் இடையேயும் ஒரே சமயத்தைச் சார்ந்தவர்களிடையேயும் அவர்கள் மேற்கொண்ட சமய அடிப்படைக் கொள்கையில் வேற்றுமை.

ஜெர்மனியைப் பொறுத்தமட்டில் 'ஐடியலிசம்' என்று சொல்கின்றார்கள். லூதரிலிருந்து வந்த கொள்கையைப் பின்பற்றுபவர்கள் தங்களைக் 'குறிக்கோள் கொள்கையாளர்' (ஐடியலிஸ்டு) என்று கூறிக் கொள்வர். தாங்களே மிகுதியான கடவுள் நம்பிக்கையுடையவர்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள். எனினும், இது ஐயத்திற்கிடமானது என்பதற்கு இரண்டு உலக மகா யுத்தங்களே சான்றாயமைவதனைக் காணுகின்றோம். அமெரிக்கர்க்கும் ஆங்கிலேயர்க்கும் அவ்வளவு தூரம் பழமையில் நம்பிக்கை இல்லை என்றும் கூறப்படுகிறது. ஏனென்றால், அவர்கள் புரட்சியின் அடிப்படையில் வந்த சமயத்தைப் பின்பற்றுகிறவர்கள். ஆங்கிலிகன் சர்ச் பழைய நம்பிக்கையை மாற்றியமைத்து அதன் மேலே எழுந்தது என்று சொல்லுவார்கள். ஆனால், மலைநாட்டவர்கள் தங்கட்கு இருக்கும் கடவுள் நம்பிக்கையளவு ஜெர்மானியர்க்கு இல்லையென்று பேசுகின்றார்கள். இவ்வாறு எங்கும் எப்பொழுதும் வேற்றுமை, வேற்றுமை, வேற்றுமை என்று வேற்றுமையே இந்தப் பரந்த உலகெங்கிலும் வளர்வதனைக் காணுகின்றோம். அப்படியானால்

இரண்டுக்குமிடையே ஒற்றுமையே இல்லையா? இருக்கத்தான் செய்கின்றது. அதை மறுப்பதற்கில்லை.

புத்த தேவனுடைய அடிச்சுவட்டைப் பின் பற்றும் ஜப்பான் நாடு இன்று அவனுக்கு நேர் எதிரான முன்னேற்றம் பெற்றிருக்கிறது. புத்த சமயம் என்பது தியானத்தை (contemplation) அடிப்படையாகக் கொண்டது. அவன் கொள்கைப்படி ஒன்றைப் பார்த்து 'இது நல்லது, இது தீயது' என்று பேசுவதுகூடச் சரியில்லை. உலகத்தில் நல்லது என்றோ கெட்டது என்றோ தனியே ஒன்றும் கிடையாது; உயர்ந்தது என்றோ, தாழ்ந்தது என்றோ கிடையாது. உலகப் பொருள்களின் இலக்கணத்தை ஆய்ந்தால் எது நல்லது எது தீயது என்று கூற முடியாது. 'இந்த நாற்காலி சிவப்பாகத்தான் இருக்கும். நாம் ஏன் அது பச்சையாக இல்லையே என்று மனம் வருந்த வேண்டும்? அவ்வாறு வருந்தினால் அது அறியாமையின்பாற்படும். நாற்காலி யின் நிறம் சிவப்புத்தான். ஆகவே, அறிவுடையவன் நாற்காலி பச்சையாக இல்லையே என்று கவலைப்பட மாட்டான். இருப்பதனை அப்படியே ஏற்றுக் கொள்வான். இப்படி இருந்திருக்க வேண்டும் என நினைப்பதே இல்லை. இரண்டையும் ஏற்றுக் கொள்ளும் உயர்ந்த மனோபாவம் கொண்டவர் புத்த தேவர். அத்தகைய மனோபாவம் கொண்ட தேவனின் கோட்பாடுகளைப் பின்பற்றுவதாகச் சொல்லும் ஜப்பானியர் இன்றைக்கு மேலை நாட்டவரின் பழக்க வழக்கங்களில் புகுந்து துளையமாடுகின்றனர். ஆக, வேற்றுமை வேற்றுமை என்று எங்கே பார்த்தாலும் வேற்றுமையையே காண்கிறோமே; இந்த வேற்றுமை

களின் இடையேயும் அடிப்படைக் கலப்பையும், உறவையும் காண்கின்றோம்.

இன்றைக்கு மேலைநாட்டவரைப் பின் பற்றுவதாகச் சொல்லித் திரியும் நம்மிடையே பல சுவையான அனுபவங்களைக் காணலாம். ஓர் இடத்தில் சொற்பொழிவுக்குப் போனேன். அங்கே துண்டுப் பிரசுரம் வழங்கப்பட்டது. அது **என்னைப் பற்றிய பிரசுரம்.** எனக்கும் வழங்கப்பட்டது. 'விஞ்ஞானம் படிக்கப்போய்த் தமிழிலேயே விழுந்து எழுந்த ஞானசம்பந்தமே! பக்திமான் கண்டது பிரசாதம். விஞ்ஞானி கண்டது மின்சாரம். நீ பிரசாதம் வழங்க வந்தாயே தவிர, மின்சாரம் ஆக்கித் தருகிற ஆற்றலை ஏன் தரக்கூடாது" என்று அழகாக எழுதியிருந்தனர். இந்த மாதிரி அடிப்படையே இந்த நாட்டில் வளர்ந்தோங்கக் காண்கின்றோம். மின்சாரம் வழங்கவென்று ஒரு கூட்டத்தார்! பிரசாதம் வழங்க வென்று ஒரு கூட்டத்தார்! மக்கட் கூட்டத்தையே இப்படி இங்கே வேற்றுமைப்படுத்தி விட்டோம்! இவர்கள் இப்படி வேற்றுமைப்படுத்திப் பேசும் இதே நேரத்தில் மின்சாரம் கண்ட நாட்டின் நிலையையும் காண வேண்டும். ஹிப்பிகள் என்பவர்களைச் சென்னையில் அரிதாகக் காணலாம்; பம்பாயில் இன்னும் கொஞ்சம் மிகுதியாகப் பார்க்கலாம்; நேபாளத்தில் நிரம்பப் பார்க்கலாம். கோவா பகுதியில் ஏராளமான ஹிப்பிகளைப் பார்க்கலாம். அவர்கள் இன்பமாக எளிமையாக வாழ விரும்புகின்றனர்.

இவர்களைப்பற்றி எளிதாகப் பேசி, அவ்வளவு எளிதாகத் தள்ளிவிடவும் முடியாது. அவர்களில் பலர் இரண்டு டாக்டர் பட்டங்கள் பெற்றவர்கள். நம்

ஊரில் பொருளாதாரத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர் வரலாற்றில் வேண்டுமானால் டாக்டர் பட்டம் பெற முடியும். ஆனால், அங்கோ கீழைநாட்டுத் தத்துவத்தில் ஒரு டாக்டர் பட்டமும், ஆர்கானிக் கெமிஸ்ட்ரியில் ஒரு டாக்டர் பட்டமும் பெற முடியும். அப்படிப்பட்ட ஒருவர் ஹிப்பியாக எங்கள் இல்லத்திற்கு வந்தார். வசதியான குடும்பத்தில் பிறந்தவர்; கற்றுமிருந்தார். அவர் நாடாகிய அமெரிக்க நாடோ பொருளாதாரத்தில் எவ்வளவோ முன்னேறி யுள்ள நாடு; அணுகுண்டைக் கண்டுபிடித்த நாடு. ஒரு கோளைவிட்டு நிலாவிற்குத் தாவிச் செல்லும் நாடு. இருந்தாலும் மனம்நிறைவு பெறவில்லை. பாரதி பாடினானே, "பல கற்றும் பல கேட்டும் பயன் ஒன்றும் இல்லையடி முத்துமாரியம்மா" என்ற நிலையில் உள்ள இவர்களைப் பார்க்கும்போது எல்.எஸ்.டி. மாத்திரைதான் நினைவுக்கு வருகிறது.* எல்.எஸ்.டி. மாத்திரை போடுகின்றவர்களும் மார்ஃபியா ஊசி போட்டுக் கொள்பவரும் மட்டமான இன்பம் கருதிச் செய்கின்றார்கள் என்று கருத வேண்டா. நூற்றுக்கு ஒருவர் அப்படி இருக்கலாம். ஆனால், நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் வாழ்க்கையில் அமைதி என்ற ஒன்றைக் காணாமையால் அதனை அடைவதற்கு வழி இதுதான் என்று நினைக்கிறார்கள். நாகரிகம் என்ற பெயரில் பலவற்றைக் கண்ட மேலை நாட்டவர் அமைதியை அடைய வழி தெரியாமல் எங்கெல்லாமோ ஓடுகின்றார்கள்.

---

* எல். எஸ். டி. (L. S. D.) என்பது ஒரு மாத்திரை. அதை விழுங்கினால் பல மணி நேரம் இவ்வுலக நினைவில்லாமல் ஒரு கற்பனை உலகில் சஞ்சரிக்க முடியும். ஆனால், அது பேராபத்தை விளைவிக்கக் கூடியது.

மனிதனுடைய அறிவின் எல்லையை வளர்த்துக் கொண்டே செல்ல எண்ணுகின்றார்கள்; அறிவை வளர்க்கின்றனர்; பலப் பல புதுப்புதுப் பொருள்கள் தோன்றுகின்றன. அறிவின் பெருக்கம் மட்டும் வளர்ந்து, மனம் வளராத காரணத்தால் அந்த வளர்ச்சி ஹிரோசிமா*வில் போய் முடிகிறது. அறிவு வளர்ந்து – வளருவதற்கேற்ப மனமும் வளர்ந் திருக்குமேயானால் அது அணுச் சக்தியை அமைதிப் பணிக்கு ஆளாக்கியிருக்கும். உணர்வைப் பற்றிக் கவலைப்படாமல் அறிவை மட்டும் வளர்த்தமையின் அவர்கள் வாழ்வில் ஒரு பெருஞ்சுமையும் அமைதி யின்மையும் காணப்படுகின்றன. எங்காவது, எப்படி யாவது அமைதியைப் பெற மாட்டோமா என்ற மனநிலை, ஏக்கம் அந் நாட்டில் வளர்ந்துவரக் காண்கின்றோம். எனவேதான், இன்று மகரிஷிகளுக்கு அங்கே நல்ல வரவேற்பு. செல்லும் மகரிஷிகளோ நம் நாட்டவர். மனம் வளரவும் அமைதியடையவும் இயமம், நியமம், தியானம் என்ற வழிகளைக் கூறினார்களே, அந்த உண்மையான மகரிஷிகளை இங்கே குறிப்பிடவில்லை. செல்லும் மகரிஷிகட்கே அது தெரிவதில்லை. என்றாலும், அங்கே சென்று மூக்கைப் பிடித்துப் பத்மாசனம் போட்டுவிட்டால் போதும், ஒரு பெரிய மகரிஷி என்ற பெயரைப் பெற்று விடலாம். அந்த அளவிற்கு அவர்களின் ஏக்கம் வளர்ந்துள்ளது; ஆதலின் இங்கிருந்து செல்பவர்களை உயர்வாக எண்ணிப் போற்றுகின்றனர். எலியைப் பிடித்து, பூட்டிய அறையில் விட்டுவிட்டால் எப்படியாவது ஏதாவது ஒரு வழியில் தப்பி ஓட முயலுவதைப் போன்று அவர்களின் வாழ்க்கை

---

* முதல் அணுகுண்டு போடப்பட்ட இடம்

உள்ளது. பொருள் வளம் என்ற கோட்டைக்குள் சிக்கித் தவிக்கின்றனர். விடுதலை பெறும் வேட்கை அதிக மானவுடன் காவி வேட்டி கட்டியவர்களை மகரிஷிகள் என்று எண்ணி அவர்கள் பின்னே ஓடுகின்றனர். அந்த நாடுகளில் அமைதியை நாடி ஓடும் வேட்டை நடைபெறும் அதே நேரத்தில், அதுவும் நம்மை நோக்கி அவர்கள் ஓடிவருவதைக் கண்டும் நம் ஊர்க்காரன் "பக்திமான் கண்டது பிரசாதம்" என்று கேலிக்கூத்து செய்கிறான். ஆம்! இந்தப் பக்திமான் கண்ட பிரசாதத்திற்கு மின்சாரங்கண்ட அந்தப் புத்தி மான் ஓடிவருகிறான். என்றாலும், நம்மூரிலுள்ள பிரமுகர் – பிரசாதம், மின்சாரம் என்ற இரண்டையுமே காணாதவர் – இதனைக் கண்டு நகையாடுகிறார்.

'அங்கு எல்லாம் உள்ளன' என்று நம்மில் பலர் நினைக்கின்றனர். நமக்கு மின்சாரம் என்றுகூடச் சொல்லத் தெரியாமல் மிஞ்சாரம் என்போம். 'மின்சாரம்' என்று சொல்லத் தெரியாமல் 'மிஞ்சாரம்' என்று கூறுகின்ற நம்மூர் விஞ்ஞானி இருக்கிறானே இவன், 'அந்த நாடுகளில் எல்லாம் வளர்ந்திருக் கின்றன, நம்மிடம் எந்த வளர்ச்சியும் இல்லை' என்று கதைக்கிறான். ஆனால், உண்மையிலேயே மின்சாரம் கண்டுபிடித்த அந்நாட்டான் அறிவாற் கண்ட அப் புதுமைகள் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாவற்றையும் தருதற்கு வல்லமையற்றன என்றும், அவை தருகின்ற வற்றிற்கு அப்பாற்பட்டும் வாழ்வில் பெற வேண்டியவை உள்ளன என்றும் ஏங்குகின்றான். அணுவைப் பிளந்து புரோட்டான், எலக்ட்ரான், பாசிட்ரான் எல்லாம் கண்டுபிடித்த அவன், இவற்றை யெல்லாம் கண்டபின்னரும் மனத்தில் அமைதி

பெறவேண்டுமானால் வாழ்வில் துறவு கொள் ைதத் தவிர வேறு வழியில்லை என்ற முடி |க்கு வருகின்றான். எவ்வளவுதான் அணு ஆராய்ச்ιயில் ஈடுபட்டுப் பலவற்றைப் பெற்றாலும் அதற்கு மேல் மனத்தில் அமைதி பெற இயலவில்லையே என்ற கவலை, வருத்தம் அவர்களைச் சூழ்ந்து கிடப்பதனைக் காண்கின்றோம்.

கோடீசுவரருடைய பிள்ளைகள் இரண்டு (ஒரு பையனும் ஒரு பெண்ணும்) ஏழைகள் வாழும் இரண்டு குடிசைக்குத் தீ வைத்து வேடிக்கை பார்க்கும் நிலைமையை அங்கு காணுகிறோம். அப் பிள்ளைகள் நினைத்தால் அழகிய கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தர முடியும். ஏன் அவ்வாறு தீ வைத்தனர், அதற்குரிய மனநிலை என்ன - என்று அறியும் நோக்கத்தோடு 'டைம்' பத்திரிகை நிருபர் "ஏன் தீ வைத்தீர்கள்" என்று கேட்டபோது "எங்கட்குச் சலிப்பாக இருந்தது (We are bored); எனவே, சலிப்புத் தீர்ந்து ஒரு மாறுபாட்டைக் காணத் தீ வைத்தோம்'' என்றனர். அவர்கட்கு வாழ்க்கை பெருஞ் சலிப்பாக உள்ளதாம்! என்னுடைய வீட்டில் இருந்துகொண்டு இதற்கு விளக்கம் காண முயன்றேன். என் மக்கள் மருத்துவத் துறை, விஞ்ஞானத்துறை போன்ற துறைகளில் கற்று வருகின்றனர். அதைதவிர வாழ்வில் வேறு ஒன்றும் இருப்பதாக அவர்கட்குத் தெரிவதில்லை. எனவே, அவர்களிடமும் இந்த போர் (bore) என்ற சொல்லை அடிக்கடி கேட்கின்றேன். இன்று நம் நாட்டிலும் குழந்தைப் பள்ளி முதல் குமரர் கற்கும் பல்கலைக் கழகம் வரை இச் சொல் பயின்ற சொல்லாக இருக்கக் காணலாம். இந்த நிலை மிகவும் தீய அஞ்சத்தக்க நிலை

என்பதனை எல்லோரும் அறிதல் வேண்டும். இன்னும் வளர்ந்தால், இச் சொல் தோன்றும் மனநிலைக்கு அடிப்படையை ஆராயாது விட்டுவிட்டால் எதிர்காலம் குடிசைக்குத் தீயிட்டு மகிழும் மன நிலையைத்தான் கொண்டுவரும்.

வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோள் இல்லாத காரணத்தால் பொருள்தேடுதல் போன்ற சாதாரண சமாசாரங்கள் அவர்களின் வாழ்க்கையின் குறிக் கோள்களாக அமைந்துவிடுகின்றன. அவற்றை அடைந்து விட்டவுடன் வாழ்க்கையே ஒரு பெருந் துளைப்பாகப் போய்ச் சலிப்பு ஏற்பட்டுவிடுகின்றது. ஆகையினால், இந்த நாட்டுக்காரன் "உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்" (குறள்) என்று சொன்னான். ஆனால், மேலைநாடுகளில் வாழ்பவர்கள் பெரும் பான்மையினரின் குறிக்கோள் என்ன? பக்கத்து வீட்டுக்காரனைப்போல, முடிந்தால் அவனைவிட அதிகமாக முன்னேறுவதே வாழ்க்கையின் குறிக்கோள். நேற்றுவரை ஒன்றும் இல்லாதிருந்த பக்கத்து வீட்டுக் காரன் இன்று லட்சாதிபதியாகிவிட்டானே, அவனைப் பார்த்து நீயும் லட்சாதிபதியாகக் கூடாதா. "Look. What are you doing? Why don't you do like him" இதுதான் அவர்கள் நாகரிகம். அவர்களின் குறிக்கோள் லட்சாதிபதியாவதுதான். அந்த நிலையை அடைந்த பிறகு வாழ்வில் பெறக் கூடியது வேறு எதுவுமே இல்லையா என்ற சலிப்பு ஏற்பட்டு விடுகிறது. காரணம் வாழ்வில் குறிக்கோளற்றுப் போய்விட்டதேயாகும். எதனையாவது ஒன்றைப்பற்றி இரவு பகலாக எண்ணி எண்ணி மறுகுகின்ற மனம் அதனைப் பெற்று

விட்டால் அப்புறம் அதனோடு அமைதி அடைந்து விடுவதில்லை; வேறு ஒன்றை நாடுகிறது. மனித மனம் மிகவும் விநோதமானது. இதனை அறிந்து கொள்ளப் பெரிய மனோதத்துவ அறிஞனை நாடிக் கேட்க வேண்டா. நானூறு ஆண்டுகட்கு முன்னர்க் கோவையை அடுத்த பேரூரிலே வாழ்ந்த சாந்தலிங்க சுவாமிகள் இதனை "அரிது பெற்றிடினும் பெற்றதில் விருப்பம் அறப் பெறாதன விரும்பும் உயிர்கள்" என்று கூறி விளக்கியுள்ளார். மிகவும் இடர்ப்பட்டு ஒரு பொருளைப் பெற்றாலும், பெற்ற பிறகு அதன்மேல் ஆசை அடங்கிவிடுகிறது. ஆகவேதான், பொருளா தாரத் துறையில் இவ்வளவு மேலூர்ந்து சென்றுவிட்ட மேலைநாட்டவர்களால் அதில் இன்பம் காண முடியவில்லை. வாழ்வில் நிறைவு பெறக் கீழை நாட்டாரிடம் ஏதாவது பெற இயலுமா என ஏங்கி நம்மை நாடி வருகின்றனர். இங்கே உள்ளவர்கள் 'வானளாவிய வீடுகளைக் கட்டிவிட்டதனால் மட்டும் பயனில்லை' என்பதையும், 'அத்தகைய வீடுகளைக் கட்டுவதற்கு முன்பும் மனிதன் வாழத்தான் செய்தான்' என்பதையும், 'அவை அணுகுண்டினால் அழிக்கப் பட்டாலும் அதற்குப் பின்பும் வாழத்தான் போகிறான்' என்பதையும் அறிந்து, இறுதியாக 'மனித வாழ்க்கையின் குறிக்கோள் இந்த இரண்டிலும் இல்லை, இவற்றிற்கு அப்பாற்பட்டது' என்பதையும் நினைக்கின்றார்கள். இந்த அடிப்படையின் வேறுபாடு மேற்கிலும் கிழக்கிலும் விளங்கக் காண்கின்றோம். இந்த வேறுபாடு ஏதோ புதிதாக வந்தது என்று யாரும் நினைத்துவிட வேண்டா.

மேலைநாட்டாரின் சமய வாழ்க்கை, வாழ்க்கைமுறை, கல்விக்கொள்கை, அடிப்படையான இயல்பு ஆகிய எல்லாமே இந்த வேறுபாட்டின் அடிப்படையாக அமைந்துவிட்டன. மிகப் பழைய காலத்திலேயே பிளாட்டோவும், அரிட்ஸ்டாடிலும் போட்ட விதை அவர்களின் வாழ்க்கையில் இத்தகைய ஒரு வழக்கத்தைக் கொண்டு வந்து விட்டது. அதை எடுத்தாலும் அறிவின் துணைகொண்டு ஆயத் தொடங்கிவிட்டார்கள். ஆனால், கீழை நாடுகளான இந்தியாவில் தோன்றிய இந்து, சமண, பௌத்த சமயங்கள், சீனாவில் தோன்றிய கன்பூசியனிசம், அதற்கு அப்பால் தோன்றிய டோயிசம், அதற்கும் அப்பால் ஜப்பானில் தோன்றிய சிண்ட்டோயிசம் ஆகிய அனைத்தும் ஒரே அடிப்படையைக் கொண் டிலங்குவதனைக் காணலாம். ஜப்பான் எங்கே உள்ளது, நாம் எங்கே உள்ளோம்! இந்தக் காலத்தில் காணப்படுவதுபோல் அக்காலத்துப் போக்குவரவு வசதியில்லை; என்றாலும், இவற்றிற்கிடையே அடிப்படை ஒற்றுமையைக் காண முடிகின்றது. மேலை நாட்டாரைப் பொறுத்தமட்டில் இன்று இயேசு நாதருடைய கிறித்தவ சமயத்தர் அதற்கு முன்பு பல தெய்வ வணக்கமும் உடையவர்களாக இருந்தனர். அக்காலம் தொடங்கி இன்றைய வரையில் அந்நாடு அறிவின் ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டே வளர்ந்துள்ளது. நடு நாடுகளில் பரவியுள்ள முகம்மதிய சமயத்தைக் கூடக் கீழைநாட்டுச் சமயம் என்று சொல்லிவிட முடியும். ஒரு முறையில் பார்க்கப் போனால் இயேசுவும் கீழை நாட்டவரே ஆவார்.

மா சே துங் எவ்வளவு முயன்றும் சீனர்கள் வாழ்விலிருந்து பெயர்த்தெடுக்க முடியாத ஒன்றாய் விளங்குவது அவர்தம் சமயம். புத்தர் கோவில்

களையும், கன்பூசியஸ் கோவில்களையும் இடித்து விட்டால் அவர்களின் சமய நம்பிக்கையை அடியோடு மாற்றி விடலாம் என்று முயன்றார். அதில் அவர் தோற்றுவிட்டதை உணர்ந்து கொள்ள அதிக காலம் ஆகவில்லை. நம்நாட்டில்கூடப் பிள்ளையாரையும், இராமரையும் எடுக்க முனைந்து கையும் வாயும் சலித்து விட்டு விட்டோம். ஆனால், பிள்ளையார் போனாலும், புத்தன் போனாலும் வேறு ஒன்றை அங்கே அமைப்பதால் பெயர் மாறுமே தவிரக் கீழை நாடுகளில் சமய நிலை மாறாது. ஒரு பிள்ளையார் சிலைக்குப் பதிலாக ஞானசம்பந்தன் சிலையை வைப்போம்! அவ்வளவுதான். மனித மனம்பற்றி ஆராய்ந்து கார்லைல் தாம் எழுதிய "வீரரும் வீரர் வழிபாடும்" ("Heroes and Hero Worship") என்ற நூலில் அழகாகக் குறிப்பிடுகின்றார். ஒன்றைப் பெரிது என்று எண்ணி ஓடுகின்ற மனம் அதனை விட்டுவிட்டால் இன்னொன்றைப் பெரிதெனப் பின்தொடரும் என்பதனைத் தெளிவாக விளக்கியுள்ளார். இந்த அடிப்படையான மன இயல்பினை எவ்வாறு மாற்றுவது?

கிறிஸ்தவ சமயத்தின் முன்னரும் பின்னரும் உள்ள தத்துவக் கொள்கைகளே மேற்கு நாடுகள் இன்றைய நிலையை எய்துதற்குத் துணையாயமைந்தன. எதை எடுத்தாலும், அறிவின் துணைகொண்டு ஆராயத் தொடங்கினார்கள். அந் நாட்டுத் தத்துவக் கொள்கையாளரும் அதற்கு ஏற்றபடியே விளங்கினர். ஹேகல், லார்க், ஹியூம் இப்படி வரிசை வரிசையாகச் சொல்லிக் கொண்டே போகலாம். இவர்கள் அனைவரும் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு தங்கள் தத்துவக் கொள்கைகளை வளர்க்கத் தொடங்கினார்கள். விஞ்ஞானத்தில் காணப்படும் பல

சொற்கள் கிரேக்க மொழியிலும், லத்தீனிலும் இருப்பதற்கு அதுவும் ஒரு காரணமாகும். பிளாட்டோ காலத்திலிருந்தே விஞ்ஞான அடிப்படையில் தத்துவத்தை ஆராயத் தலைப்பட்டு விட்டார்கள். இந்த மரபில் தோன்றியதுதான் கிறிஸ்தவ சமயம். அதற்கு ஏற்றபடி, 'கடவுள் என்றால் என்ன, உலகம் என்றால் என்ன, இரண்டுக்கும் என்ன தொடர்பு?' - இப்படிப் பட்ட ஆராய்ச்சியே மிகச் சிறந்தது என்ற கருத்தில், கணித அடிப்படையில் ஆராய்ச்சி செய்தனர். அரிஸ்ட்டாடில் காலத்தில் முன்னவர் கண்ட கணித உண்மை மாறவே உலகைப்பற்றிய கருத்தும் முற்றிலும் மாறுபட்டு விட்டது. பிளாட்டோவில் கணித இயலின் அடிப்படையில் வளர்க்கப்பட்ட சமயமும் மாற்றத்திற் குள்ளாகியது. அப்போதைய கிறிஸ்தவ சமயம் என்றால், ரோமன் கத்தோலிக்க சமயம் ஒன்றே; புராட்டஸ்டண்ட் பிரிவு அப்போது இல்லை. விஞ்ஞானப் புதுமைகள் தோன்றும்போது அதன் அடிப்படையில் வளரும் சமயமும் மாறுகிறது. அதன்படி பிளாட்டோ காலத்துச் சமயமும் மாற்றத்திற்குள்ளாகியது.

அவர்கள் சமயம் கட்டப்பட்டது விஞ்ஞான அடிப்படைமீதாகும். அவர்களுடைய கணித பூர்வமான சில கொள்கைகள் மாறினவுடன் சமயமும் ஆட்டம் கண்டது. அதற்குத் தோமிசம் என்பது பெயர். அந்தத் தோமிசக் கொள்கையார் அரிஸ்ட்டாடிலின் விஞ்ஞானக் கோட்பாடுகள் மீது சமயத்தைக் கட்டத் தொடங்கினார்கள். அது தீர, லாக்கே என்ற தத்துவ ஞானி பேருதவி புரிந்தார். அந்த நாட்டுச் சமயக் கொள்கை வளர்வதற்கு நியூட்டனுடைய உற்ற நண்பராகிய லாக்கே எவ்வளவு பெரிய அற்புதமான காட்சியைக் காணுகிறார்! அவர் காலத்தில்தான் இது

விரிவடைகிறது. அதற்கு முன்பு கடவுள் என்பவர் ஆகாயத்தில் இருப்பவர் என்றும் அவருடைய தம் கால்களைப் பூமியின்மீது தொங்கவிட்டுக் கொண் டிருக்கிறார் என்றும் நினைத்தார்கள். அறிவு பூர்வமாக வாழ்ந்து ஆராயத் தொடங்கினார்கள். மூன்று பொருள்கள் யாரும் இல்லையென்று சொல்ல முடியாதபடி அமைந்துவிடுகின்றன! காணுகின்றவ னாகிய நான், காணப்படும் பொருளாகிய இந்த ஒலிவாங்கி, எங்களிடையே இருக்கும் உறவு. காண்பவனாகிய நான், காட்சியாகிய மீடியம் (medium), காணப்படும் பொருளாகிய ஒலிவாங்கி என்ற மூன்றும் உள்ளன; அப்படியானால் பொருளின் இயல்பு என்ன? இதுபற்றிய விரிவான ஆராய்ச்சி நடைபெற்றது.

இந்த நாட்டில் அத்வைத மதத்தின் தந்தையாக உள்ள ஆதிசங்கரர் இந்த ஆராய்ச்சியை எடுத்துக் கொண்டு பொருள்களை ஆராய்தார். இவை அனைத்தும் மித்தை என்று முடித்துவிட்டார். பொருள் என ஒன்றும் கிடையாது. "எல்லாம் பொய் என்றால் – கண்ணால் பார்க்கிறேன், ஒலியை வாங்குகிறது, வாங்கிப் பெரிதுபடுத்துகிறது! இதை எப்படி நீ மித்தை என்று சொல்லலாம்" என்ற வினாவைச் சிலர் எழுப்பினர். "ஐயா, பழுதையைப் பாம்பு என்று எண்ணுகின்றவனும் இருக்கத்தானே செய்கிறான்? கனவில் ஆடுவதாகவும், ஓடுவதாகவும் நினைக்கும் நீங்கள், படுக்கையில் இருந்தே காலை உதைத்துக் கொள்வதில்லையா? இதற்கும் நீ காணும் இப் பொருளுக்கும் வித்தியாசம் இல்லை. இது மாதிரி ஒரு பொருள் உலகில் கிடையாது. பரந்து விரிந்து காணப்படும் இவ்வுலகம் உன் காட்சியளவே தவிர உண்மையில்லை. இது மரம் என்று பார்ப்போமானால் மரமாக இருக்கிறது, அவ்வளவுதான். இதனையே

ஆத்ம சக்தியாகிய பிரமம் என்று எண்ணினால் மரம் என்ற காட்சி போய்விடுகிறது. அதுவே பிரமம் ஆகிவிடுகிறது''. அதை இந்த நாட்டில் பலரும் ஓரளவுக்கு ஒத்துக் கொண்டார்கள். பெரிய செல்வர் வீட்டுக்குப் போகிறோம். நாய் இருக்கிறது. 'ஓ! நாய்' என்று அஞ்சி அங்கு நின்றுவிட்டோம். கொஞ்ச நேரம் நின்று பார்க்கிறோம். அது குரைக்கவுமில்லை, வாலைக் குழைக்கவுமில்லை. மூச்சு விடுவதாகவும் தெரியவில்லை. பின்னர் முடிவுக்கு வருகிறோம்: ஓ! 'இது கல்லால் செய்யப்பட்டது' என்ற முடிவுக்கு வருகிறோம். முதலிலே பார்த்தபோது கல் அங்கே இல்லை. கல்லென்று தெரிந்த பிறகு நாய் இல்லை. இது நமது நாட்டில் சாதாரணப் பழமொழியாக வழங்கி வருகிறது. "நாயைக் கண்டால் கல்லைக் காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணோம்". திருமூலர் திருமந்திரத்தில் "மரத்தில் மறைந்தது மாமத யானை, மரத்தை மறைத்தது மாமத யானை" என்று கூறுகிறார். கோவிலில் உள்ள யானை வாகனத்தைப் பார்க்கின்ற போது யானையாகத் தெரியவில்லை. யானை என்ற காட்சியைப் பார்க்கும்போது மரம் தெரியவில்லை. இந்த அழகான எளிய உதாரணத்தைச் சொல்லிப் பெரிய உண்மையை விளக்குகின்றார்.

**பரத்தில் மறைந்தது பார் முதல் பூதம்**
**பரத்தை மறைத்தது பார் முதல் பூதம்**

இவ்வளவு விஸ்தாரமாக விரிந்து நிற்கின்ற பொருள் கள், இவைகளின் அடிப்படையில் இருக்கின்ற கடவுட் பொருளை மறைத்துவிட்டன. 'இது மைக், இது பேப்பர், இது மேஜை' என்று தனித்தனியே வேறுபடுத்திச் சொல்கிறேன். இவை அனைத்தின் அடிப்படையில் இருக்கின்ற மூலப் பொருளாகிய

கடவுட் பொருள் மறைந்துவிடுகின்றது; ஞானியி னுடைய பார்வையோ மாறிவிடுகின்றது. 'இது என்ன' என்று கேட்டால் 'பிரமம்' என்பான். அது? அதுவும் பிரமம். எல்லாவற்றையும் பிரமமாகவே காணு கின்றான். எல்லாம் பிரமமாகக் காட்சியளிக்கும்போது வேறுபாடு மறைந்துவிடுகின்றது.

இந்த உண்மையை இந்த நாட்டுக்காரர் எட்டாம் நூற்றாண்டிலேயே விரிவாகப் பேசினார்கள். இந்த உண்மையை நியூட்டன் காலத்தில் லாக்கே என்பவர் ஆராயத் தொடங்கினார். ஆராயத் தொடங்கியவர் காண்பான், காட்சி, காணப்படும் பொருள் என்ற மூன்று பொருளைக் கண்டு, ஓர் அற்புதமான முடிவுக்கு வந்தார். அவர் நாட்டின் வளர்ச்சியே அதில் அடங்கிவிட்டது. இது என்ன? இது மைக்! இதன் நிறம் என்ன? வெண்மை. வெண்மை என்ற ஒன்றே இல்லை. மைக் என்றோ, வெண்மை நிறம் என்ற ஒன்றோ இல்லை என்றார் லாக்கே. 'எப்படி? பார்க்கிறேன், உணர்கிறேன், அனுபவிக்கிறேன் - எப்படி இவற்றை இல்லை என்று சொல்ல முடியும்' என்று கேட்டால், அவர் சொல்வார் "அப்பா, உன் கண்ணாகிய புலன் பட்ட பிறகு அதற்கு இந்த வெண்மை நிறம் தோன்றிற்று. ஒரு நாய் இதனைக் கண்டு இது வெண்மை என்று நினைக்கிறதா, இல்லையே! இதனை மைக் என்று நினைக்கவில்லை. ஆகவே, இதற்கென்று தனியே ஓர் இயல்பு கிடையாது. காண்பவனுடைய மனோ நிலைக்கு ஏற்ப இதற்கு ஒரு வடிவு, நிறம், பண்பு ஆகியன ஏற்படுகின்றன என்றார். சங்கரருடைய கொள்கையோடு இது மிகவும் தொடர் புடையது. **பொருளுக்கு என்று தனி இலக்கணம் இல்லை.** உன் மனத்தில் பட்டவுடன் சில

இலக்கணங்கள் உண்டாகின்றன; அவ்வளவுதான். இந்தக் கொள்கையின் அடிப்படையில் தான் அந்த நாட்டுச் சமயம் வளர்ந்தது.

பிறகு விஞ்ஞான அடிப்படைகள் மாறத் தொடங்கின. மாற்றத்தில் பழமை அடிபட்டவுடன் விஞ்ஞான அடிப்படையில் கட்டப்பட்ட சமயமும் மாறுகிறது. அந்தக் கொள்கைக்கு அசைவு என்றால் சமயத்திற்கும் அசைவுதானே? ஆகவே, பிளாட்டோ காணாத அறிவின் அடிப்படையில் எழுந்த தோமியக் கிறிஸ்தவ சமயம் அரிஸ்டாட்டிலின் அடிப்படை மாறி, பிறகு லாக்கேயின் அடிப்படையும் மாறி இவ்வாறு பெரு மாற்றத்திற்கு உள்ளாகிக் கொண்டே வந்து விட்டது. இன்றைக்கும் அவர்கள் சமயத்தில் உள்ள ஒரு பெரிய பிரச்சினை நாளாவட்டத்தில் காணுகிற விஞ்ஞானப் புதுமைகளோடு சேர்ந்து வைத்து வாழ்வைக் காண வேண்டும் என்பதாகும்.

ஒப்புமைக் கொள்கை கண்டு ஜெனரல் தியரிக்குப் (General Theory of Relativity) பாடுபட்ட ஐன்ஸ்டீன் என்ற அந்தப் பெருமகன் அதனோடு திருப்தி அடையவில்லை. அணு முதல் அண்டம் வரை ஒரே சட்டத்தின் கீழ்க் கொண்டு வர வேண்டும் என்று நினைத்தார். ஐன்ஸ்டீனின் விஞ்ஞானத்துக்கு மட்டு மல்ல, அந்த நாட்டிலிருக்கும் சமயவாதிக்கும் அதே கொள்கைதான். மேலை நாட்டவர் மக்கள் வாழ்க்கை, விஞ்ஞான நுண்மைகள், வாழ்க்கை முன்னேற்றம் பொருளாதாரச் சிறப்புமுறை இத்தனையையும் சேர்த்து ஒரே தத்துவத்தில் அடக்க வேண்டும் என்ற முயற்சி உடையவர்கள். இதனால்தான் அவர்களின் சமயம் நாளுக்கு நாள், நாளுக்கு நாள் மாறிக் கொண்டே வந்தது. ஒரே கிறிஸ்தவ சமயம்தான்

எத்தனை மாறுதலுக்கு ஆளாகியிருக்கிறது! வேறு வேறு நாடுகளுக்கு இடையில் ஏசுவினுடைய சமயம் எத்துணை மாறுதல்களுடன் இருக்கிறது! ஏசுவின் ஒரே போதனையைக் கொண்டு இத்தனை வழிபாடு முறைகள், சமயங்கள் தோன்றக்கூடுமா? விஞ்ஞான அடிப்படையில் தத்துவத்தைக் கட்டியதால் விஞ்ஞானம் ஆட்டம் காணும்போது புதிய தத்துவத்தைக் கற்பிக்கத் தொடங்குகின்றனர். அது சரியா, தவறா என்ற ஆராய்ச்சியில் நான் இறங்கப் போவதில்லை. மேற்கே உள்ள நாகரிகம் வளர்வது இந்த அடிப்படையில்தான் என்ற அளவில் விட்டு விடுகின்றேன்.

இனி, கீழை நாடுகளில் பார்ப்போமேயானால் முற்றிலும் மாறுபட்ட ஓர் அடிப்படையைக் காண முடியும். புத்தர் என்ன சொன்னார்! "இது ஒலிவாங்கி, அதைப்பற்றி ஆராய வேண்டுமா? உனக்கு என்ன கவலை?" என்று கேட்கிறார். 'உனக்கு என்ன தேவை? நீ பேசும் பேச்சைப் பெரிதுபடுத்த வேண்டும். அவ்வளவுதானே? அதற்கு அது உபயோகப்படுகிறது. அவ்வளவுதான்! இருக்கும்போது அதனைப் பயன் படுத்திக்கொள். இது கெட்டுவிட்டால் சரி செய்ய வேண்டுமே என்று கவலைப்படாதே. போனால் போகிறது என்று விட்டுவிடு' என்றார். **கவலையில் தோய்ந்து காலத்தைப் போக்காதே.** இந்த உபதேசம் நுண்மையான கருத்து. இதனைப் புரிந்து கொண்டால் தான் மேற்கும் கிழக்கும் எவ்வாறு மாறுபடுகின்றன என்று புரிந்துகொள்ள முடியும்.

மேலைநாட்டான் கீழ்வருமாறு கருதினான்: "என்னுடைய சமயத்தைப் பரப்ப ஒலிவாங்கி பயன் படுகிறது. என்னுடைய சமயம் அறிவின் அடிப்படை

யில் கட்டப்பட்டது. இந்த ஒலிவாங்கி என்ற பொருளில் கடவுளின் பெருமையை நான் எடுத்துச் சொல்கிறேன். அறிவின் துணைகொண்டு இந்த ஒலி வாங்கியைக் காணுமாறு செய்தவனே கடவுள். ஆதலின் இதனை நான் ஆராய வேண்டும் என்று கருதிக் கருவி ஆராய்ச்சியில் கருத்தைச் செலுத் தினேன்.” இந்த நாட்டுக்காரன் என்ன எண்ணினான் என்றால், “ஒலிவாங்கி வரும் முன்பும் மனிதன் பேசிக் கொண்டுதான் இருந்தான், இல்லாமல் போய் விட்டாலும் மனிதன் பேசத்தான் போகிறான், இடையில் வந்தது இது. எதற்காக இது பற்றிய ஆராய்ச்சியில் இவ்வளவு கருத்தூன்றி நிற்க வேண்டும்” என்பதேயாகும். இது நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்று. எந்தப் பொருளையும் ஏற்கும் பொழுது அதனுடைய இயல்புகளையும் அப்படியே ஏற்றுக்கொண்டால் மனிதனுக்குக் கவலையே வருவதில்லை.

எந்த ஒரு பொருளையும் கீழை நாட்டான் முன்னும் பின்னும் தொடர்பில்லாத ஒன்றாகக் காணவில்லை. மேலைநாட்டுக்காரன் பொருள்களைத் தொடர்பற்றவையாகக் காணுகின்றான். தொடர் பில்லாத ஒன்றாகக் காண்பதால் அவை பற்றிய ஆராய்ச்சி நிகழ்கிறது. இது எப்படி வாழ்க்கைக்குப் பயன்படும்?’ “தண்ணீரில் எப்படி நீர்க்குமிழி தோன்றித் தோன்றி மறைந்துவிடுகிறதோ, அப்படித் தான் முன்னேற்றம் என்ற பெயரினால் குறிக்கப் படுபவை அவற்றைப்பற்றி மிகுதியாகக் கவலைப்படத் தேவையில்லை. இவையெல்லாம் இல்லாத காலத்திலும் மனிதன் வாழத்தான் செய்தான். இவை ஒரு காலத்தில் மறைந்தபோதும் வாழத்தான் போகின்றான். எக் காலத்திலும் உலகம் என்பது வேறு,

நீ வேறு. என்றுமே நீயும் உலகமும் ஒன்றாக ஆகப் போவதில்லை. அமைதியாக இருந்துகொண்டு தியானம் செய்கின்றார்களே (contemplation), அதில் பெறுகின்ற இன்பத்தை வேறு எதிலும் பெற முடியாது." இதுதான் புத்ததேவன் உபதேசத்தின் அடிப்படை; கன்பூசியசின் உபதேசத்தின் அடிப்படை. இரண்டு பேர் மட்டுமே இவ்விதம் எண்ணினர் என்று நினைக்க வேண்டா. பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் டாக்டர் ஐன்ஸ்டீனைப் பத்திரிகையாளர் அணுகி, "உங்கள் வாழ்க்கையில் மிகவும் பெரிதாகக் கருதுவது எதனை?" என்று கேட்டனர். அவர் "மிகவும் அழகான இரவு நேரத்தில் வெட்ட வெளியில் நின்று நிர்மலமான ஆகாயத்தைப் பின்னால் கையைக் கட்டிக்கொண்டு நிமிர்ந்து பார்ப்பதுதான் மிகப் பெரிய இன்பம்" என்றார். மிகப் பெரிதாக அவர் கருதியதும் அதுதான்.

இனி, மற்றொரு விஞ்ஞானி ஆஸ்போர்ன் (Osborne). இவருக்கு ஏதாவது புதியதாகக் கண்டு பிடித்துவிட்டால் மண்டை கனத்தது போலத் தோன்றுமாம். அப்போது வெளியே போவாராம். வானத்தை அண்ணாந்து பார்ப்பாராம். பால்வெளி (Milkyway) அவர்தம் பார்வையில் படுமாம். பால்வெளியைத் தியானம் செய்வாராம். அந்தப் பால் வெளியையும் விழுங்கக்கூடிய பேரண்டங்கள் உண்டு. அதனை எண்ணிப் பார்ப்பாராம். அதில் இந்தப் பால் வெளி சிறிய ஒரு பகுதி என்று தோன்றுமாம். அப் பால் வெளியில் நமது சூரிய மண்டலம் ஒரு சிறிய துகள் என்று நினைப்பாராம். சூரிய மண்டலத்தில் நமது பூமி மிகச் சிறியது என்று எண்ணுவாராம். அப்பூமியில் நமது நாடு மிகச்சிறியது என்று எண்ணுவாராம். அந் நாட்டில் நம் ஊர் மிகவும் சிறியது என்றும், அதிலும்

தமது வீடு மிகவும் சிறியது என்றும், அந்த வீட்டிலும் தான் மிகவும் சிறியன் என்றும் எண்ணுவாராம். "சே! என் அகங்காரம் அழிந்தது; இனி உள்ளே போகலாம்" என்று வீட்டினுள் போய்விடுவாராம். ஆஸ்போனும், ஐன்ஸ்டீனும் விஞ்ஞானிகள்!

இந்த நாட்டில் சிலர், 'பக்திமான் கண்டது பிரசாதம்' என்று கூறுகிறார்களே அவனை நோக்கித்தான் 'மின்சாரம் கண்ட விஞ்ஞானியும்' வருகிறான் என்பதனை நினைவுபடுத்துகின்றேன். ஆகவேதான், இவர்கள் இந்தத் தியான முறையைப் பெரிதும் போற்றினர். பெரிய தொலைநோக்கியோ மைக்கிராஸ்கோப்போ, ஒன்றுமில்லாத காலத்திலேயே உட்கார்ந்த இடத்திலிருந்தே பலப்பல பெரும்பெரும் விஞ்ஞான உண்மைகளைக் கண்டு கூறிவிட்டுப் போயிருந்தார்கள் இந் நாட்டவர்கள். இவர்கள் பேசிவிட்டுப் போன புதுமையிலிருந்தே வெறும் தியானமூலம் எவ்வளவு காரியங்களைச் சாதிக்க முடியும் என்பது தெரியவருகிறது. மேலைநாட்டு விஞ்ஞானிகளும் இதே முறையில்தான் கொள்கைகள் சிலவற்றை வகுத்துக் கொடுக்கிறார்கள்.

நியூட்டன் கண்டுபிடித்த இயக்க விதிகள் மூன்றினையும் சோதனை செய்து கண்டறிந்தார்கள். நியூட்டனோ எனில் அவற்றைக் கொள்கையளவிலே கண்டார். விஞ்ஞானமும் அப்படித்தான். ஆழ்ந்த சிந்தனை அல்லது தியானத்தின் மூலமாகத்தான் விஞ்ஞான வளர்ச்சி ஏற்படுகிறது. விஞ்ஞானி யாகட்டும், ஞானியாகட்டும் மனத்தை ஒருமுகப் படுத்தி ஒருமுகப்படுத்திப் பொருளை ஆராயத் தொடங்கியவுடன் உண்மைகள் பளிச்சிடுகின்றன. காகிதத்தையும், பென்சிலையும் வைத்துக் கொண்டு

தான் புளூட்டோ என்ற கோள் குறிப்பிட்ட ஓர் இடத்தில் மறைந்து உள்ளது என்ற உண்மையை உணர்ந்து கூறினார் விஞ்ஞானியாகிய ஐன்ஸ்டீன். அவர் ஆகாயத்தை அண்ணாந்துகூடப் பார்த்திருக்க மாட்டார். எல்லாவற்றையும் காகிதத்திலேயே எழுதிப் பார்த்தார். ஆகவே மனத்தை ஒருமுகப் படுத்தி அறிவை அதன் வழியில் செலுத்துவதினால் காணக் கூடிய பல புதுமைகளை இன்னுஞ் சிலர் மனத்தைப் பலமுகப்படுத்திக் கருவிகளின் உதவியினால் காணுகின்றார்கள். ஆக, மேனாட்டு விஞ்ஞானிகள் பலரும் கருவிகள்மூலம் காண்பதைப் பெரிதாக எண்ணி நம்பிக்கை வைத்தார்கள். இந்நாட்டு ஞானிகள் தியானத்தில் பெரிதாக நம்பிக்கை வைத்தார்கள். மேலைநாட்டார் விஞ்ஞானப் புதுமை களில் நம்பிக்கை வைத்ததால் அந்த அடிப்படையில் தோன்றிய வாழ்வு முறையும் மாறத் தொடங்கி விட்டது.

ஹியூ டால்ட்டன் உடைக்க முடியாதது என்று தானே "ஆட்டம்" (atom – உடைக்க முடியாதது) என்று பெயர் வைத்தார். 'ஆட்டம்' என்ற அந்த நிலை மாறி 'உடைக்கக் கூடியது' என்ற நிலை வந்து, அந்த அணுவிலிருந்து எலக்ட்ரான், புரோட்டான், பாசிட்ரான், மீசான் முதலிய பல சக்திகள் வெளி வந்து கொண்டே உள்ளன என்றாலும், அறிவின் அடிப் படையிலே செல்லும் அவர்கள் முன்னர் இதனைத் தவறாகக் கருதியதற்காக வெட்கப்படுவதில்லை. அப்படியே ஏற்றுக் கொள்கின்றனர். உண்மை தெரியத் தெரிய பழைய கருத்துக்கள் மாறிக் கொண்டே வருகின்றன. இந்த நாட்டுக்காரர்கள் இந்த விஞ்ஞான அடிப்படையில் வாழ்வும் சமயமும் கட்டப்பட்டால் விஞ்ஞானம் மாறும்பொழுதெல்லாம் இது மாறுகின்ற

நிலைமை ஏற்படும் என்று கருதினார்கள். எனவே, அது வேண்டாம் என்று விட்டு விட்டனர். மனிதனுடைய அறிவை விட்டு அவனுடைய உணர்வு உலகம் என்ற ஒன்று இருக்கின்றதல்லவா, அதற்கு ஒரு பொதுத் தன்மை உண்டு. எந்த இடத்திலும், எந்தக் காலத்திலும் மாறாத பொது இயல்புடையது உணர்வு உலகம். அந்த உணர்வை அடிப்படையாகக் கொண்டுதான் இவர்கள் வாழ்வை வளர்த்துவிட்டார்கள். ஆகையினால்தான் கீழை நாட்டில் தோன்றிய வாழ்வு முழுவதற்கும் அனுபவம் (experience) அடிப்படையாக உள்ளது. "Experience" என்று தத்துவ ஞானிகள் சொல்லும் சொல்லுக்கு அனுபவம் என்பது அவ்வளவு சரியான தமிழாக்கம் ஆகாது. ஆனால், எனக்கு வேறு சொல் தெரியவில்லை. எனவே, இதனைப் பயன்படுத்து கிறேன். சமயம் என்பது அனுபவித்து உணர வேண்டியதே தவிர, அறிவினால் ஆராய்ந்து பார்க்கக் கூடியதன்று. (Religion is something to be experienced) அதைச் சோதனைக் குழாயில் போட்டு குலுக்கிப் பயனில்லை; அனுபவித்துப் பார்க்க வேண்டும்.

இதிலிருந்து மற்றொரு புதுமையையும் நாம் காண முடியும். மேலைநாடுகட்குச் சென்றால் அவர்கள் பிள்ளைகட்கு நம்மைப்பற்றி அறிமுகப் படுத்தும் வேடிக்கையைப் பார்க்கலாம். "நீங்கள் இந்தியாவிற்குச் சென்றால், இரண்டு முக்கியமான செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். அங்கு யாராவது உங்களை விருந்துக்கு அழைத்தால் அதனை உண்மையாக எண்ணிவிடாதீர்கள். இரண்டாவது, நீ எந்தச் சாமானை எடுத்தாலும் சரி, பேரம் பேசி வாங்க அறிந்துகொள்" என்று சொல்லிக் கொடுப்பதனைக் கண்டேன். எவ்வாறு பேரம் பேசுவது என்பதனைச்

செய்முறையாகச் செய்து காட்டியதனையும் கண்டேன். நம்மைப் பற்றிய இந்த இரண்டு எண்ணங்கள் எவ்வாறு அவர்கட்கு ஏற்பட்டன என்று என்னை எண்ணத் தூண்டியது. இந்த இரண்டும் நம் நாட்டில் நிகழ்வது உண்மைதான். ஏன் என்று புரியாமல் அவதிப்பட்டேன். நார்த்ரோப் (Northrope) எழுதிய "கிழக்கும் மேற்கும் (East and West) என்ற நூலைப் படிக்கும்போதுதான் அந்த உண்மை வெளிப்பட்டது. அவர்தாம் இதற்கு விளக்கம் சொன்னார்: "இந்திய நாட்டான் உண்மை (Truth) என்று சொல்லுவதற்கும் மெய்ம்மை (Fact) என்று கூறுவதற்கும் என்றுமுள்ளது (Eternal) என்று பேசுவதற்கும் வேறுபாடு உண்டு. மேனாட்டானாகிய நீ எதனை உண்மை என்று கூறுகிறாயெனில் அன்றாடக் காட்சிகளையும் உண்மை என்கிறாய், எதனை நன்மை (Good) என்று எண்ணுகிறாயோ அதுதான் நன்மை. மிகப்பெரிய உண்மை இது. அதனால் மேனாட்டார் மதமாற்றம் (prosilitisation) செய்கிறார்கள்" என்று நார்த்ரோப் எழுதுகிறார். பிற மதங்களிலிருக்கின்றவர்கள் மோட்சம் போக முடியாது; தம்முடைய மதத்திற்கு வந்தால்தால் அது முடியும் என்பதால், நம்மையெல்லாம் தங்கள் வழிக்கு இழுத்துத் தம் சமயத்தைப் போதிக்கின்றனர்.

இந்த நாட்டுக்காரன் நன்மை என்பது ஓர் ஒப்புச்சொல் (relative term) என்ற முடிவுக்கு வந்து விட்டான். எனக்கு நல்லது என்பது மற்றொருவர்க்கும் நல்லதாக இருத்தல்வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. மிக உயர்ந்தது என்று நான் எண்ணுவதனைப் பிறரும் மிக உயர்ந்ததாகக் கொள்ள வேண்டும் என்ற தேவையே இல்லை. தீர்க்கதரிசிகளை மட்டும் நம்பி

வளர்ந்த சமயங்கள், அதாவது கிறிஸ்தவ சமயமும் இஸ்லாமிய சமயமும் மதமாற்றத்தை நம்புகின்றன. உண்மை என்பதனைத் தாங்கள் கண்டதாகவும், தங்களுடைய தலைவர்களாக இருக்கின்ற தீர்க்கதரிசிகள் உண்மை இதுதான் என்று அறுதியிட்டுக் கூறி விட்டதாகவும், இந்த உண்மையைத் தவிர வேறு ஒன்றும் உண்மையென உலகில் இருக்க முடியாது என்பதாகவும் நம்புகின்ற காரணத்தால் ஒருவன் நல்ல நிலையை அடையவேண்டுமானால் தாங்கள் பின்பற்றுகின்ற சமயத்தை அவனும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறுகின்றனர். பழைய கன்பூசியனிசம், டோயிசம் ஆகியவை இதனை ஒத்துக்கொள்ளவே இல்லை.

உண்மை என்பது பல்வேறு கிளைகளை உடைய ஒரு பொருள். எந்தக் கோணத்தில் நீ நின்று பார்க்கிறாயோ அந்தக் கோணத்திற்கு ஏற்ற ஒளி உனக்குக் கிடைக்கிறது. எதிரில் உள்ள சோதரியார் அணிந்திருப்பது ஒரே வைரக் கம்மல்தான். ஒளி எக் கோணத்தில் பாய்கிறதோ அதற்கேற்றாற்போல் ஒளிவீச்சு ஏற்பட்டு நிறமாலை தோன்றுகிறது. எந்தக் கோணத்தில் நின்று அக்கல்லைக் காணுகின்றோமோ அதற்கேற்றாற்போல் நீலநிறமும், ஆரஞ்சு ஒளியும், சிவப்பு வண்ணமும் தோன்றும். எனவே வைரத்தின் நிறம் நீலம்தான், அல்லது ஆரஞ்சுதான் என்றோ, சிவப்புத்தான் என்றோ கூறிவிட முடியாது. அதுபோல உண்மை என்ற அந்தக் கண்காணாப் பொருள் அவனவன் நிற்கின்ற நிலைமைக்கு ஏற்பக் காட்சி தருகின்றது. 'பிறர் கூறுவது உண்மை இல்லை, நான் கூறும் ஒன்றே உண்மை, எனவே அவரை விட்டு விட்டு

என்னிடம் வா' என்று கூறும் கோட்பாடு கீழை நாட்டிலில்லை. இதனை மேலை நாட்டில்தான் காண முடியும். இந்த அடிப்படையில் வைத்துப் பார்த்தால் தான் இந்நாடுகளில் தோன்றிய சமயங்கள் ஏன் மத மாற்றத்தை ஆதரிக்கவில்லை என்பது தெரியும். எல்லாச் சமயத்தில் இருப்பவர்களும் உண்மையை வெவ்வேறு கோணத்திலிருந்து பார்ப்பதால் ஒருவரை ஒருவர் உயர்த்தியோ இழித்தோ காண வேண்டிய தில்லை.

இந்த ஒப்புத்தன்மையை ஏற்றுக்கொள்ளும் கீழ்நாட்டுச் சமயவாதிகளை மேனாட்டார் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஒரு பாதிரியார் சீனாவுக்குப் போனாராம். பண்புடைய சீனர்கள் சிலரை மத மாற்றம் செய்தாராம். மதம் மாறிய அச் சீனர்கள் கிறிஸ்தவ சமயத்திலே பக்தியுள்ளவர்களாக, நம்பிக்கை யுள்ளவர்களாக ஆனார்களாம். அவர் “பிறருக்காக உன் வாழ்வின் நலங்களைத் தியாகம் பண்ண வேண்டும். இதுதான் கிறிஸ்தவ சமயத்தின் அடிப்படை” என்று சொல்லிக் கொடுத்தாராம். அவர்களும் ஏற்றுக் கொண்டனர். ஆனால், தேவை ஏற்பட்டபொழுது அவர்கள் அதனை மறந்து விட்டார் களாம். எனவே, அந்தப் பாதிரியார் எழுதுகின்றார் “கிழக்கே இருக்கின்ற அத்துணைப்பேரும் யோக்கியதை இல்லாதவர்கள்; நம்பிக்கைக்குத் தகுதியில்லாதவர்கள்; கொள்கை இல்லாதவர்கள். ஆகவே இந்த நாட்டைக் காப்பாற்றவே முடியாது”. இதனைக் கண்ட நார்த்ரோப் அவர்கள் “தவறு அவர்களிடத்திலே இல்லை. பாதிரியாகிய உம்மிடத்திலேதான் தவறு உள்ளது. உங்களுடைய நம்பிக்கையின் அடிப்படை

வேறு'' என்று கூறியதுடன், மேலும் தொடர்ந்து கூறுகிறார். "இன்று மாலை எம் வீட்டிற்குச் சாப்பாட்டிற்கு வாருங்கள்" என்று நான் சொல்லு கின்றேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். "இன்று மாலை" என்ற சொல்லே ஒப்புச்சொல். "சாப்பாடு" என்பதும் "வர வேண்டும்'' என்பதும் ஒப்புச் சொற்களே. நான் அவரை அழைத்த சமயம் நிலவிய சூழ்நிலையில் நான் சொன்ன சொற்கள் அனைத்தும் உண்மையே. அதில் ஐயமே இல்லை! நேரம் ஆக ஆகச் சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. சூழ்நிலை மாறும்போது இந்த அழைப்பே பொருளற்றதாகவும் ஆகிவிடலாம். இந்தக் கருத்தை ஆழ்ந்து பலமுறை எண்ணினால்தான் தெளிவாக இதனை விளங்கிக் கொள்ள முடியும். இது நமக்கு இயல்பாக உள்ள பழக்கம். சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுதல் என்பது சொல்லப்பட்ட பொழுது உள்ள சூழ்நிலை தொடர்ந்து நிலவினால்தான். வெள்ளையர்களிடம் அத்தகைய கருத்து இல்லை. அவர்களைப் பொறுத்த மட்டில் சொல்லிய சொல் சொல்லப்படும்பொழுது இருந்த சூழ்நிலை மாறிவிட்டாலும் காப்பாற்றப்பட வேண்டிய ஒன்று. எனவே, சூழ்நிலை மாற்றத்தால் நாம் கொண்டுள்ள கொள்கை அவர்கட்குப் புதுமையாக உள்ளது. மேலை நாட்டு வாழ்க்கையில் நாமும் தோய்ந்து விட்டோம். நான் மேலே சொன்ன கருத்தைக் கேட்கும்போது நமக்கே இது புதுமையாக இருக்கும்; தவறுபோலத் தோன்றும். மேலை நாட்டவருடன் பழகிப் பழகி இக்கருத்தின் அடிப்படை உண்மை நமக்கு விளங்காமல் போய்விடுகின்றது.

நன்மை என்று ஒன்றைச் சொல்கிறோமே, எது நன்மை? எனக்கு நன்மையாக இருப்பது பிறர் ஒருவருக்கு நன்மையாக இருக்கும் என்று கூற

முடியாது. நண்பர் சளியால் அவதிப்படும்போது, 'சகோதரா! இன்ன இருமல் மருந்து சாப்பிடுங்கள், உடனே சளி தீர்ந்துவிடும்" என்கின்றேன். ஏன்? எனக்கு அதனால் நலன் ஏற்பட்டது என்பதனால் அவருக்கும் நன்மை விளையும் என்ற உறுதி அங்கே உள்ளது. ஆனால், அதே மருந்து அவருக்குத் தீமையும் செய்தல் கூடும். இதுபோல எல்லார்க்கும் நன்மை என்று உலகில் எதுவுமே இல்லை. உடலுக்குமட்டுமன்று; ஆன்மா விற்கும் அவரவர் நிலைமைக்கும் பக்குவத்திற்கும் ஏற்றாற்போல நன்மையும் தீமையும் அமைகின்றன. இதனை நம்பிய காரணத்தால்தான் கீழை நாட்டவர் விக்கிரக வழிபாட்டிலிருந்து தியானம்வரை பல்வேறு படிகளையும், நிலைகளையும் அமைத்தார்ககள். அவரவர் மனப் பக்குவத்திற்கேற்ப இப் பல படிகளும் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கவையாகும்.

உபநிடத ஆசிரியரை அணுகி ஒரு சீடன் "ஐயா! நான் பிரமத்தைக் காண வேண்டுமே" என்று கேட்டான். "அப்படியா வாழ்வில் எது முக்கியம் என்று நீ கூறுகின்றாய்?" என ஆசிரியர் வினவ, "ஐயா! சோறு தான் வாழ்வில் முக்கியம்'' என்றான் சீடன். "போதுமே! அன்னம்தான் பிரமம்'' என்று கூறி அனுப்பினார். சில நாள் சென்றன. சீடன் வந்தான். "ஐயா! உடல் பெருத்ததே தவிர உணர்வு தோன்ற வில்லையே, பிரமத்தைக் கண்டேனில்லையே'' என்றான். "உனக்குச் சோறு முக்கியம் என்றால் அதுவே பிரமம் என்றேன். அதைவிட முக்கியம் எது என்று கருதுகிறாய்" எனப் புதுவினை எழுப்பினார் ஆசிரியர். "ஐயா! சோறுகூட இல்லாமல் இருந்து விடலாம். தண்ணீர் இல்லாமல் இருத்தல் இயலாது" என்றான் சீடன். "சரி, ஜலம் பிரமம்" என்றார் ஆசிரியர். இப்படியே பல முறை மாறி மாறி வந்து

சென்று இறுதியாகச் சீடன் ஆசிரியரிடம் வந்தான். "ஐயா! இவைகளால் என்னால் பிரமத்தைக் காண முடியவில்லையே, வேறு எவ்வாறு பிரமத்தைக் காண்பேன்?" என இரங்கினான். "அப்படியா! பிரமம் எது என்ற உன் வினாவிற்கு 'நேதி' (இது அன்று) என்ற விடையைத்தான் கூற முடியும்" என்றார். நேதி என்ற சொல்லுக்கு இதுவன்று என்பது பொருள். 'இது பிரமமா?' என்ற வினவினால் 'ஆம்' என்ற விடை வரும். வினாவைச் சற்று மாற்றிப் "பிரம்மம் இதுவா?" என்றால் 'இது அன்று' என்ற விடைதான் வரும். இரண்டு வினாக்களும் ஒன்றுபோல இருப்பினும் வேறுபாடுடையன. "இது பிரமமா" என்றபோது எங்கேயும் நிறைந்துள்ள பரம்பொருள் இங்கேயும் இருப்பதனால் "ஆம்" என்ற பதில் கிடைக்கிறது. 'பிரமம் இதுவா?' என்று கேட்கும்போது 'ஆம்' என்று விடை கூறினால் இது மட்டும் பிரமம்; பிற இல்லை என்று ஆகிவிடும். ஆகையால்தான் பிரமம் இதுவா என்ற இரண்டாவது வினாவிற்கு 'இது அல்ல' என்ற விடை பொருத்தமுடையதாய் உள்ளது. இதனை "நேதி" என்று கூறுகின்றனர்.

பிள்ளையார் வைப்பதும், கொழுக்கட்டை படைப்பதும் ஒரு நிலை. பாரதி பாடிய முறையில் "காக்கைச் சிறகினிலே நந்தலாலா, உன்றன் கரிய நிறம் தோன்றுதடா நந்தலாலா; தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா; உன்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா" என்று எங்கும் நிறைந்திருக்கின்ற பரம் பொருளைக் கண்டு உணர்ந்து அனுபவிப்பது மற்றொரு நிலை. அதற்குப் பிரமம் என்றோ சத்தியம் என்றோ இயற்கை என்றோ எப் பெயரையாவது இடுங்கள். அதுபற்றிக் கவலை இல்லை! ஆனால், பாரதி பாடிய பாட்டின் கருப்பொருளாக உள்ள

கருத்து யாதெனில், எல்லாவற்றையும் ஒன்றாகக் கண்டு ஒன்றின் பல்வேறு வடிவங்களாகப் பார்க்கும் மனநிலை – இதுதான் கீழைநாட்டுச் சமயம். இச் சமயக் கொள்கை விஞ்ஞானத்தினை அதனோடு தொடர்பு படுத்தவே இல்லை. அப்படியானால் விஞ்ஞானம் வேண்டாவா?

விஞ்ஞானமும் விஞ்ஞானத்தின் பயன்களும் வேண்டும். மைக் இருந்தால் பேச, பிறர் கேட்க வசதியாக இருக்கும். மைக் வேண்டும். மைக் இல்லை யென்றாலும் பேசத்தான் வேண்டும். மைக் இருந்தால் தான் பேசுவது, பாடுவது என்றால் அது பேச்சுக்கோ பாட்டுக்கோ மதிப்புத் தராத நிலைமை. ஆகவே, இந்த நாட்டுக்காரன் உலகத்தில் அறிவை வளர்த்து அதனால் பெறுகின்ற பயன்கள் அனைத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும், அப் பயன்கள் கிடைக்கவில்லை என்றால் அதற்காக ஏமாந்து ஏங்கி, அதனால் வாழ்வும், வாழ்வின் பயனும் இல்லாமற் போய்விடக் கூடாது என்றும் எண்ணினான். வாழ்க்கை என்பது வாழ்பவன் மனத்தில் இருக்கிறதே தவிர அறிவின் வளர்ச்சியில் இல்லை என்றான். ஆகவே, இவன் வளர்ச்சி, உணர்வின் துணைகொண்டு வளர்வது. அறிவின் பயனால் விளைந்த விளைவு களைப் பயன்படுத்திக் கொண்டு அதே சமயத்தில் உணர்வின் அடிப்படையில் வளர வேண்டும் என்று வாழ்க்கையைப் பற்றி இவன் எண்ணினான். எனவே தான், அறிவின் துணைகொண்டு வளர்ந்த விஞ்ஞான வளர்ச்சி உடைக்க முடியாதது என்ற நம்பிக்கையூட்டி 'ஆட்டம்' என்று பெயரிட்டுப் பின்னர் அதனையே

உடைக்க முடியும் என்ற உண்மையை உணர்த்தி, உடைத்துப் பல பொருள்களைப் பெறும் காட்சியை நல்கியபோதும் உணர்வின் துணைகொண்டு வளர்ந்த கீழைநாட்டுச் சமயம் அசையவில்லை எனக் காண்கிறோம். அறிவின் துணைகொண்டு வளரும் வளர்ச்சி எல்லை உடையது எனக் கண்டு கொண்டுள்ள இன்றைய சூழ்நிலையில் இது சரி என்று நம்மவர் கூறுகின்றனர்.

பொருளாதாரக் கோட்பாடுகள் நாளுக்கு நாள் எவ்வாறு மாறுபடுகின்றன? அவ்வாறானால் நூற்றாண்டுக்கு நூற்றாண்டு எவ்வளவு மாற்றத்திற்கு உள்ளாக வேண்டும்? இவ்வளவு விரைவாக மாறுகின்ற இயல்புடைய அறிவு வளர்ச்சியின் மீது, நம்பிக்கையின் அடிப்படையில் வாழவேண்டிய சமயத்தைக் கட்டினால் அது அசைந்து ஆட்டம் கொடுத்து விடுகிறது. எனவே, இந்த உண்மையை அறிந்த கீழை நாட்டான் புற வாழ்க்கை வளமாக அமைய அறிவின் துணை வேண்டும், அக வாழ்க்கை அமைதியுற வேண்டுமாயின் உணர்வின் அடிப்படையில் அமைந்த சமயத்தின் துணை வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டான். இந்த இரண்டோடும்தான் மனிதன் வாழ்கின்றான். இந்த அடிப்படை இப்படியே வளர வேண்டும் என்பதுதான் கீழை நாட்டு மரபும் குறிக்கோளுமாகும்.

இங்கே நாம் காணுகின்ற விளக்கையும் ஒலி பெருக்கியையும் காணும்போது எடிசனையும், மார்க்கோனியையும் எண்ணிப் பார்த்து நன்றி கூறுகின்றோமா? பென்சிலின் ஊசியை விரும்பிப் போட்டுக் கொள்ளும் யாரும் 'சர் அலெக்சாண்டர்

பிளமிங் வாழ்க' என்று வாழ்த்திவிட்டுப் போட்டுக் கொள்வதில்லையே! நம் புற வாழ்வு வளம்பெற உழைத்துப் பல புதுமைகளை ஈந்த எடிசனோ, மார்க்கோனியோ, பிளமிங்கோ நம் நன்றிக்குரிய பெரியவர்களாக ஆகவில்லை. ஆனால், போட்டிருக் கிற சட்டையைக் கேட்டால் உள்ளே அணிந்துள்ள பனியனையும் சேர்த்துக் கொடு என்று கூறிவிட்டு, அதனுடன் அமையாமல் இடக் கன்னத்தில் அறைந்தால் வலக் கன்னத்தையும் காட்டு என்றார் ஒரு பெரியவர். புத்தனின் சீடனான உபகுப்தன் தெருவில் போய்க்கொண்டிருக்கிறான். உபகுப்தனிடம் அவ்வூர்ப் பெண் ஒருத்திக்கு எல்லையற்ற ஈடுபாடு. அவளோ உடலை விற்று வாழும் இயல்பினள். அவனைக் கண்ட அவள், "உபகுப்தா! இந்தக் கௌதம சாம்ராஜ்யத்தில் கால்வாசி என் காலடியில் உள்ளது. அவ்வளவையும் உன் காலடியில் காணிக்கை ஆக்குகின்றேன். நீ என்னிடம் தங்கிவிடு" என்றாள். உபகுப்தன் சிரித்தான். "தாயே! உன்னிடத்தில் வர வேண்டிய காலம் உள்ளது! அக் காலம் வரும்போது நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுப் போய்விட்டான். விரைவாக வாழும் வாழ்க்கையை உடைய அவளுக்குத் தொழுநோய் பற்றிக் கொண்டதால் யாரும் சீண்டுவாரற்றுப் போய்விட்டாள். உடல் அழுகும் தொழுநோயோடு நகரில் எல்லையில் அவல முற்றுக் கிடக்கிறாள். அவள் உடலழகில் ஈடுபட்டு வருணித்துக் கவிதை பாடிக் காலடியில் வீழ்ந்தவ ரெல்லாம் இன்று அவளைக் காறியுமிழ்ந்து செல்கின்றனர். 'எப்படி இருந்த வாழ்க்கை இப்படி ஆகி விட்டதே' என்று எண்ணி ஏங்கினாள். அப்போது உபகுப்தன் அங்கே வருகின்றான். அவளைத் தூக்கி மடியில் கிடத்தித் தலையை நீவிப் புண்களைக் கழுவி மருந்திடுகிறான்.

கண்களைத் திறந்து பார்த்தாள். "உப குப்தரே! தாங்களா? இந்நிலையிலா என்னிடம் வந்தீர்?" என்று வியந்து கேட்டாள். "தாயே! உன் பழைய நிலைமைக்கும் இப்போதைய நிலைக்கும் என்னைப் பொறுத்தமட்டில் வேறுபாடு கிடையாது" என்று அமைதியாக விடை இறுத்தான் உபகுப்தன். அறிவின் துணை கொண்டு பார்க்கும்போது அவள் முன்னைய வாழ்விற்கும் பின்னைய வாழ்விற்கும் வேறுபாடு உண்டு. உணர்வின் துணை கொண்ட இந்நாட்டுச் சமய அடிப்படையில் காணும்போது இரண்டு வாழ்விற்கும் இடையில் வேறுபாடு காண முடியவில்லை. ஏன்? அன்றிருந்த அவளேதான் இன்றும் இருக்கிறாள். முன்பு நன்கு அமைந்திருந்து இன்று அழுகிப்போன அவளுடைய உடலை அன்றும் இன்றும் சமயவாதி மதிக்க மாட்டான். அழிவில்லாத அவளுடைய ஆத்மாவை அவன் என்றும் காண்கிறான். அவளுடைய உயிருக்குத் துணையாக, கருவியாக நின்ற உடம்பு அன்று காண அழகாய் இருந்தது, இன்று சீழ் வடிகிறது. அவ்வளவுதான் வேற்றுமை! உள்ளே இருக்கும் அவளாகிய ஆன்மா இன்றும் அன்றும் ஒன்றே. அன்றைக்கு அந்த உடம்பு வேறு காரணத்திற்காக உபகுப்தனை நாடிற்று. இன்று அந்த உடம்பை விட்டு விட்டு ஆன்மாவை உபகுப்தன் நாடிச் சென்றான். அன்றைய நாட்டம் அழிகின்ற கருவியாகிய உடம்பின் அடிப்படையில் வேறு காரணத்திற்காக நிகழ்ந்தது. உபகுப்தனோ, அழியாத ஆன்மாவை அன்றும் இன்றும் நாடினான். அதனால் அவள்மீது அவனுக்கு வெறுப்புத் தோன்றவில்லை; இன்றும் நாடுகிறான், அதனால் அவளுக்கு இரங்கிப் பணிவிடை புரிகிறான்.

இதுதான் உணர்வின் அடிப்படையில் தோன்றிய சமயத்தின் இயல்பு. இந்த நாட்டு மக்கள் அவ்வாறு உணர்வின் அடிப்படையில் சமயத்தைக் கட்டினார்கள் என்றால், அதற்குரிய மூல காரணம் - அறிவின் துணைகொண்டு அமைவன மாறும் இயல்பின; வெறுப்புக்கும் வீழ்ச்சிக்கும் ஆளாவன என்பதேயாகும். மாறும் இந்த அடிப்படையில் மக்களின் நிலையான, அமைதியான வாழ்க்கைக்குத் தேவையான சமயத்தைக் கட்ட முடியாது என்ற உண்மையை உணர்ந்த நம்மவர் இவ்வாறு அமைத்தனர்.

அறிவு தேவைதான். ஆனால், அந்த அறிவுக்கு ஓர் எல்லையுண்டு. உணர்வு என்றும் ஒன்றாக இருக்கின்ற காரணத்தால் இந்த உணர்வின் அடிப்படையில் விளக்கப்படுகின்ற ஒன்று என்றும் நிலைபெற்று வாழக்கூடியது. ரைட் சகோதரர்கள் கண்டு பிடித்த விமானங்களில்தான் விரைந்து பறந்து செல்கின்றோம். ஆனால், அவர்களை அந்த ஊர்க்காரர்கள்கூட மறந்துவிட்ட நிலையைக் காண்கிறோம். விஞ்ஞானத்தின் அடிப்படையில் இவ்வாறு நன்மையை அடைந்த இந்த உலகம் அவர்களை மறந்துவிடுகிறது. ஆனால், உலகியல் முறையில் மக்கள் நன்றாக வாழ்வதற்கு, ஏசுநாதரோ, புத்தரோ, நம்மாழ்வாரோ, நாவுக்கரசரோ எந்த வழியையும் சொல்லவில்லை. ஆனாலும், இவர்களை மட்டும் உலகம் மறவாமல் நினைவில் கொள்கிறது. அறிவின் நெறியில் நின்று மக்களின் புற வாழ்க்கை வளம்பெறச் செய்த விஞ்ஞானப் பெரியவர்களை மறந்து விட்டு - சட்டையைக் கேட்டால் பனியனையும்

கொடு என்று கூறிய ஆன்மிகவாதிகளை மட்டும் ஏன் உலகம் போற்றுகிறது! இதன் காரணம் யாது? வாழ்க்கை வளம் என்பதற்குத் தரும்பொருள் வேறுபாட்டினால்தான் இது நிகழ்கின்றது. ஆடையும், அணிகலனும், பொன்னும், பொருளும், போகமும், பிறவும் ஒருவனுக்கு வளர்ந்து விட்டால் அதனை வளமான வாழ்க்கை என்று கூற முடியாது என்று உணர்ந்தனர் கீழை நாட்டார்.

ஒன்றின்மீது ஆசை ஏற்படுகிறதா? அடுத்து அது கிடைக்க வேண்டுமே என்ற கவலை! கிடைத்த பிறகு பயன்பாடு பற்றிய கவலை! இப்படியே கவலை கவலை என்று கவலையை வளர்த்துச் செல்லு கின்றனர். இதுவே துக்கம், துக்க உற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என விரிகிறது என்றான் புத்தன். இதனெதிராக ஆசை தோன்றிய வுடன் அதனைக் களைந்து எதுவும் வேண்டாம் என்று விட்டுவிடு. தொல்லையே இல்லை. மேலும் "விட்டேம் என்பாரை விடாஅள் திருவே" என்று புறநானூறு ஆசிரியர் விளம்புவதுபோல், வேண்டாம் என்று சொல்கிறவர் களிடம் அது வந்து குவியும் இயல் புடையது. "ஒளியை நோக்கி முன்னேறிப் போங்கள், நிழல் தொடர்ந்து வரும். நிழலைப் பிடிக்க எண்ணி நிழலைத் தொடர்ந்து சென்றால் நிழல் ஓடும். நீங்களும் ஓட வேண்டும்' என்று இராமகிருஷ்ணர் அழகாகச் சொன்னார். இதனைத்தான் 'பற்றற்ற நடுவு நிலை' என்று கிழக்கே தோன்றிய சமயங்கள் கூறுகின்றன.

மக்கள் வாழ்வை இரண்டாகப் பகுத்து, அறிவின் துணை கொண்டு வாழ்கின்ற புற உலக வாழ்க்கை வேறு, உணர்வின் துணைகொண்டு வாழ்கின்ற அகவுலக வாழ்க்கை வேறு என்றும் – புற

உலக வாழ்க்கை வளர்ந்தாலும் வளரவில்லை யென்றாலும் அகவுலக வாழ்வில் வளர்ந்து அமைதி காண இயலும் என்றும் ஒரு பேருண்மையைக் கண்டதும் கீழைநாட்டுச் சமயங்களேயாகும். இந்த அகவுலக வாழ்க்கைதான் மனிதனுடைய முழுமை யான ஆளுமையே தவிரப் புறவுலக வாழ்க்கை அன்று என்றும் கூறிற்று. அதற்கு மேலும் சென்று, அகவுலக வாழ்வில் முழு வளர்ச்சியடைந்தால் தான் உலகம் முழுவதனையும் ஒன்றாகக் காண முடியும் எனவும், மக்களைச் சகோதரராகக் கருதுவதோ பிறருடைய வாழ்க்கைக்காகத் தன் வாழ்வைத் தியாகம் செய்வதோ அறிவுலக வாழ்விலே இயலாது எனவும் கூறி, அகவுலக வாழ்வில் வாழ்ந்து பயின்றவர்களால்தான் இவை இயலும் எனவும் உணர்ந்து கூறியுள்ளனர்.

இதன் மறுதலையாக அறிவின் துணை கொண்டு காணப்பட்ட விஞ்ஞானப் புதுமைகளின் மீது தங்கள் சமயக் கோட்டையைக் கட்டிய மேலை நாடுகள் அந்தப் புதுமைகள் மாற மாறத் தம் சமயக் கோட்டைகளில் விரிசல்கள் வரவர சமயக் கருத்துக் களையும் மாற்றிக்கொண்டே சென்றுவிட்டன. அப்படி மாற்றினாலும், அதிலும் ஒரு நன்மை உண்டு - Adventures of Ideas - என்றும் கூறினர். புதிய புதிய கருத்துக்களைக் காண்பதில் ஒரு வேகம் இருந்தது அவர்கட்கு. நமக்கு அது இல்லாமல் போய்விட்டது உண்மைதான். 'புத்தம் புதிய கலைகள் மெத்த வளருது மேற்கே' என்றால், அதற்குக் காரணம் அவர்களுடைய சமயக் கோட்பாட்டிலேயே இந்த அடிப்படை இருக்கிறது. சமயக் கொள்கைகளை மாற்றிக் கொண்டே சென்றுவிட்டனர். நம் நாட்டிலோ வேத காலத்திலிருந்து இன்றுவரை அது பெரு மாற்றங் களைப் பெறவே இல்லை. காயத்திரி மந்திரம்

முதலியவை எத்துணைப் பழமையானவை என்பதை நோக்குக. அவ்வளவு வலுவாக அடிப்படை அமைந்து விட்டது. உங்களுடைய புற வாழ்க்கை எப்படி மாறினாலும் அது பற்றிக் கவலை இல்லை. சமுத்திரத்தின் மேலே அலையடித்தாலும், புயல் அடித்தாலும், அடிப்பகுதி அசையாமல் இருக்கிறதே, அதுபோல அடிப்படை வலுவாகக் கட்டப்பட்டது இந்தக் கீழைநாட்டுச் சமயம். அவர்களைப் பொறுத்த மட்டிலே அறிவின் துணை கொண்டு கட்டப்பட்ட அது புதிய புதிய கருத்துகளை, சோதனைகளை மேற்கொள்ள - வாழ்க்கை முறைகளை மாற்றி அமைத்துக்கொள்ள வாய்ப்பு இருந்தது. இது அவர் களின் சமயத்திலேயே ஊறிவிட்டது. நம் ஊரில் ஒருவன் விரைவாக நடந்தால்கூட அவன் விரைவைச் சுட்டி, 'ஏன் அவசரப்படுகிறாய்' என்பார்கள்? அப்படி அமைதியாக வாழ்ந்து ஒரு பழக்கம் பெற்று விட்டோம். அவர்கள் அவசர அவசரமாக முன்னேறுகிறார்கள். இற்றை நாளில் அந்த அவசரத்தில் ஒரு பகுதி நமக்கும் வேண்டும் என்பது உண்மைதான். நம் அமைதியில் ஒரு பகுதி அவர்கட்கும் வேண்டும். நம் நாட்டினருடைய நடுநிலை ஓர் 50 சதவிகிதமும் அவர்களுடைய அவசர முன்னேற்றம் 50 சதவிகிதமும் சேருமேயானால் ஒரு பி.எஸ்.ஜி. நிறுவனம் கிடைக்கும். நாமம் போட்டுக் கொண்டு இருக்கும் ஒருவர் இவ்வளவு நிறுவனங் களையும் தோற்றுவித்து இயக்கினாரென்றால் கிழக்கையும் மேற்கையும் இணைத்து விட்டார் என்பதுதானே பொருள்? நாமம் போட்டுச் சமயவாழ்க்கை வாழ்தல் என்பது கீழை நாட்டு நாகரிகம்; எஞ்சினியரிங் எண்டர்பிரைசஸ் வைப்பது மேலை நாட்டு நாகரிகம். இவை இரண்டையும் நினைத்து மேற்கும் கிழக்கும் இணையும் இணைப்புப்

பாலமாக வாழ்ந்தார் திவான்பகதூர். நாமம் போடுவது உளத்திற்காக; எஞ்சினியரிங் எண்டர்பிரைசஸ் உடம்புக்காக — இவை இரண்டும் நன்கு நடை பெற்றால் உங்கட்கு முழுமையான வாழ்வு அமைந்துவிடும். அவர்களைப் போல் அறிவை மட்டும் வளர்த்தால் ஹிரோசிமாவும் நாகசாகியும் தான் எஞ்சும். அதை விட்டுவிட்டு மனம் மட்டும் வளர்ந்தால் மரத்தடியில் உட்கார்ந்து 'சாம்ப சதாசிவ' என்று பாடவேண்டியதுதான். ஆகவே, இரண்டும் வேண்டும். அகமும் வேண்டும் — அது அமைதிக்காக. புறமும் வேண்டும் — அது வாழ்க்கை வசதிக்காக. இவை இரண்டையும் சேர்த்துக்கொள்ளக் கூடுமானால் மேற்கையும் கிழக்கையும் சந்திக்க வைக்க முடியும். அப்படியொரு வளர்ச்சி ஏற்பட்டு — அறிவின் துணைகொண்டு வளரும் வளர்ச்சிக்கும் உள்ளத்தின் துணை கொண்டு வளரும் வளர்ச்சிக்கும் இடையே சண்டையோ, பிணக்கோ, மோதலோ இல்லையென்ற பேருண்மையை அறிந்து வாழத் தலைப்பட்டால், பாரதி கூறியபடி இந்த உலகம் தேவர்கள் வாழுகின்ற உலகமாக ஆதல் கூடும்.

**4**

# ஆன்மிகமும் உலகாயதமும்

உலகாயதம் என்பதும் ஆன்மிகம் என்பதும் இன்று நேற்றுத் தோன்றியவை அல்ல. தாயுமானவர் சொல்லுவார் "என்று நீ அன்று நான் உனது அடிமை அல்லனோ" என்று. சிவஞான போதம் பாடிய பெரியவர், "இலது என்றலின் உளது" என்று பேசுகிறார். 'ஒரு பொருள் இல்லை என்று ஒருவன் பேச ஆரம்பித்தாலே, அது இருக்கின்றது' என்பதற்கு அடையாளம் என்று கூறுவார். என்று ஒரு பொருளைப் பற்றி உண்டு, இல்லை என்ற வாதம் தொடங்கிற்றோ, அன்றே இரு சாராரும் அது உண்டு என்பதனை ஏற்றுக் கொண்டவர் என்று தர்க்க ரீதியாகப் பேசுவார் கூறுவர். ஆகவே, இது இன்று நேற்றுத் தோன்றிய தர்க்கவாதம் அன்று. மேலை நாட்டாரைப் பொறுத்தமட்டில் உலகாயதமாகிய மெட்டீரியலிசம் இருக்கிறதே, அதற்கு மெருகு கொடுத்து வரலாற்று உலகாயதம் (historical materialism) என்றும், விஞ்ஞான முறை உலகாயதம் (dialectical materialism) என்றும் இரண்டு வழியாகப் பார்க்கத் தொடங்கினர். ஆனால், இந்த நாட்டுக்காரரைப் பொறுத்தமட்டில் மிகமிகப் பழமையான வேத

காலத்திலிருந்து இதற்கு ஒரு சிறப்பிடம் கொடுத்து வந்துள்ளனர். அந்தத் தனி இடம் கொடுத்ததனாலேயே இந்த நாட்டுக்காரர்களுடைய சிந்தனைப் பரப்புக்கும் ஓர் அளவு தெரிகிறது நமக்கு. இல்லை என்று சொல்பவனுக்கு முதலிடம்; எனவே, உண்டு என்று சொல்பவன் இல்லையென்று சொல்பவனிடமிருந்து தொடங்குகின்றான். ஆகவே, முதல் நிலை எவருக்கு என்றால், இல்லை என்று சொல்கின்ற உலகாயத வாதிக்கு. அவனுடைய வாதம் மிகமிக அழகாக இருக்கும். சுருக்கமாகச் சொல்லவேண்டுமேயானால், என் வாழ்வே எனக்கு விளக்கமாக அமைகிறது.

*1930–32*–ஆம் ஆண்டுகளில் ஒரு கட்சியின் சார்பாகத் தீவிரமாக நின்று படிப்பதும் சிந்திப்பதும் செய்து, டைலக்டிகல் மெட்டீரியலிசம் என்ற ரஷ்ய நாட்டில் தோன்றிய ஒரு நூலையும், லெனினிசம் என்ற நூலையும் தமிழில் ஆக்க முயன்றேன். அப்படி அதில் ஈடுபட்டிருந்த போதுதான் என்னுடைய சிந்தனை விரிவடைய அது பேருதவி புரிந்தது. இதற்கு மறுப்புச் சொல்லக்கூடிய காட்சி ஒன்று இருக்கும் என்று நான் ஏற்றுக்கொள்ளவேயில்லை. இத்தனை ஆண்டுகள் கழித்து, திவான்பகதூர் அரங்கசாமி அவர்கள், என்னுடைய வாழ்க்கையைத் திருப்பிப் பார்க்க வாய்ப்பளித்தார்கள். இந்த இடைப்பட்ட காலத்தில் அதுபற்றிச் சிந்திக்கின்ற வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இப்போது இச் சொற்பொழிவு காரணமாக அவற்றை மீண்டும் நோக்குகையில் எப்படி எப்படியெல்லாம் இருந்திருக்கின்றேன், சிந்தித்திருக்கின்றேன் என்று என்னைப் பற்றியே எண்ணும் நிலைமையைப் பெற்றேன்.

விஞ்ஞான உலகாயதமும் நாமெல்லாம் எண்ணுவது போல அவ்வளவு எளிதானதன்று. இந்த நாட்டில் தோன்றிய பல்வேறு நூல்கள் — தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் சைவ சித்தாந்த நூல்களுள் தலை சிறந்தது என்று கூறப்படுகின்ற சிவஞான சித்தியார் தொடக்கம் வடநாட்டில் தோன்றிய பல நூல்கள் ஈறாக — உலகாயதத்தினை மறுத்துள்ளன. மறுக்கின்றன என்றாலும் அவ்வளவு எளிதாக உலகாயதத்தினை மறுத்துவிடவும் இயலாது என்பது உண்மை. காரணம், அவ்வளவு ஆழமாகச் சென்று பொருள்களைப் பற்றி உலகாயதவாதிகள் ஆராய்ந்துள்ளார்கள். நாம் இரண்டு மூன்று அடிப் படையில் நின்று அதனைக் காண்டல் வேண்டும். தமிழ் நாட்டில் தோன்றிய சித்தியாரில் 'சுபக்கம்' என்ற பகுதி வருகிறது; *பரபக்கம் என்ற பகுதியும் வருகிறது. மேலை நாட்டிலிருந்து வந்துள்ள சில நூல்களைப் பார்த்தால்தான் எந்த அடிப்படையில் இவை தோன்றுகின்றன எனப் பாகுபடுத்தல் இயலும். உலகாயதத்தை வரலாற்று அடிப்படையில் காணப் படுகின்ற உலகாயதம், அறிவின் துணைகொண்டு ஆராய்கின்ற உலகாயதம் என்று இரண்டாகப் பிரித்து விடலாம். இவை இரண்டிற்கும் தொடர்பு உண்டு. ஆனால் இரண்டும் வெவ்வேறு திசை நோக்கிச் செல்கின்றன. அறிவின் துணைகொண்டு ஆராய்கின்ற உலகாயதம் தான் இந்நாட்டு நூல்களில் பரபக்கம் என்ற பகுதியில் மறுக்கப்படும் உலகாயதம் ஆகும்.

அளவைகள் எனப்படுபவை மூன்று. அவற்றில் காட்சி அளவையைத் தவிரப் பிறவற்றை உலகாயத

* பிறர் கோட்பாடுகளை எடுத்துச் சொல்லி மறுப்பது பரபக்கம் எனப்படும்.

வாதிகள் ஏற்றுக்கொள்வதில்லை. காணப்படுகின்ற அடிப்படையில் வைத்துத்தான் எதைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருபவர்கள் ஆதலின் அந்த அடிப்படையில்தான் பேசுகிறார்கள். உலகில் எல்லாப் பொருள்கட்கும் மூல காரணமாய் இருப்பவை அணுக்கள். தமிழில் அணுக்கள் எனக் கூறும்போது ஆங்கிலத்தில் வரும் "ஆட்டம்" (atom) என்ற சொல்லோடு சேர்த்துக் குறிப்பிட வேண்டா. தமிழில் அணுக்கள் என்று கூறுவது எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருக்கின்ற மிகமிகச் சிறிய நுண்ணிய தன்மையைத்தான் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும்.

"ஒத்துறு புணர்ச்சியில் உருக்கள் பலவாம்". இந்த நாட்டவரின் உலகாயதக் கொள்கைப்படி உலகம் அணுக்களின் கூட்டத்தால் பல்வேறு வடிவமாக உள்ளது. இந்த அணுக்கள் ஒன்றோடொன்று சேரும்போது பல்வேறு வடிவங்களைப் பெறுகின்றன. "வைத்துறு கலாதி பல மண்ணினால் வருமா போல்" மண் இருக்கிறது, அதனை எடுத்துக் குடமாகச் செய்கின்றோம், சட்டியாகச் செய்கின்றோம், செப்பாகச் செய்கின்றோம், அழகான வெவ்வேறு பொம்மைகளாகச் செய்கின்றோம். என்றாலும் மூலப் பொருள் மண்தான். இந்த மண், பல்வேறு வடிவத்தைப் பெறுவதுபோல, நுண் பொருளாக இருக்கின்ற அணுக்கள் இருக்கின்றனவே, அவை சேரும்போது சேர்க்கையின் அளவின் பிரகாரம், புல்லாய், பூடாய், புழுவாய், மரமாய், கல்லாய், விளைநிலமாய், மனிதனாய் விளங்குகின்றன என்றனர். இதற்கு மேலும் ஒரு படி செல்கின்றனர். 'புத்தி, குணம், பொறி, புலன்கள் இவையெல்லாம் நுண்மையாகக் காட்சி அளிக்கின்ற இந்த உலகம் இருக்கின்றதே, அதில்

நுண்மைப் பொருள்களாக இருக்கின்றனவே புத்தி (intellect), குணம் (character), நல்ல பொறி புலன்கள் (fine senses) இவை என்ன ஐயா?' என்று வினவினால் "இவையெல்லாம் இதில் வரும், இந்த அணுக்கள் ஒன்றாகச் சேரும்போது அவற்றில் தோன்றும் இயல்புகள், குணங்கள்" என்கிறார்கள்.

களிமண்ணைக் கொண்டு மனிதன் போன்ற உருவம் செய்தால் மனித உரு அதற்கு வந்துவிட்டது. சட்டியாகச் செய்தால் சட்டி உருவம் வந்து விடுகிறது. சட்டிக்கென்று சில குணங்கள், பொம்மைக்கென்று சில குணங்கள். சோற்றைச் சட்டியிலிட்டுப் பிசைந்து உண்ணலாம். பொம்மையிலிருந்துப் பிசையவோ உண்ணவோ இயலாது. பொம்மையும், மண் சட்டியும் மண்தான். சட்டி என்று பண்ணப்படும்போது அதற்குச் சில இயல்புகள், பொம்மை என்று பண்ணப் படும்போது அதற்குச் சில இயல்புகள்; இவை இரண்டின் இயல்புகளும் வடிவுக்கு ஏற்ப வேறுபட்டு விடுகின்றன. அதேபோல நுண்மையான இயல்புக ளாகிய புத்தி முதலானவைகளெல்லாம் இந்த அணுக்கள் மனித வடிவைப் பெறும்போது அவைகட்கு இயல்பாக அமைந்துவிடுகின்றன.

அணுக்கள் மரத்தினுடைய வடிவத்தைப் பெறும்போது அதற்குச் சில இயல்புகள். மேல்நோக்கி வளர்தல், பச்சை நிறமாக இருத்தல், காய்கனி முதலியன தருதல், வேர் கீழ்நோக்கி ஓடுதல், பூமியிலிருந்து சத்தையும் நீரையும் எடுத்தல் போன்ற இயல்புகள் தாமாகவே ஏற்பட்டு விடுகின்றன. இது தாவரத்தின் இயல்பு. 'இதில் என்ன அதிசயம்?' என்று கூறிய அவர்கள், இந்த அளவோடு நிறுத்தவில்லை. "சட்டி இருக்கிறது; அது உடைந்தால் மண் தானே. அது

போல அணுக்களால் ஆன உடம்பும் பிறவும் இறக்கும் காலத்து மீண்டும் அணுக்களாக ஆகிவிடுகின்றன என்றால், காணப்படும் பொருள் ஐம்பூதங்களின் சேர்க்கைதானே? மனிதன் இறக்கையில் அவை ஐம்பூதங்களாகப் பிரிந்து, அது அது தன் மூலப் பொருளோடு சேர்ந்துவிட்டது; அவ்வளவுதான்'' என்பார்கள். மண்ணுக்கு உருக்கொடுத்தபோது சட்டி என்ற பெயர் பெறுதல்போல, ஐம்பூதங்களின் சேர்க்கையில் உண்டாகிய மனித உரு ஞானசம்பந்தம் என்று பெயர் பெறுகிறது. 'சட்டி உடைந்தால் மண்ணோடு மண்ணாதல் போல, மனிதன் இறந்த போது தன்மைகள் பிரிந்துபோய் விடுகின்றன' என்று கூறுகின்றார்கள்.

ஒருவர் எவ்வளவுதான் உயர்ந்தவரானாலும் அவர் இறந்தபோது, 'பெரிய மனிதரை எடுங்கள்' என்றா கூறுகின்றனர். இல்லையே. 'பிணத்தை எடுங்கள்' என்றுதானே கூறுகின்றனர்! இதனைத் திருமூலர் "பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டு" என்று குறிப்பிடுகின்றார். இதுதான் மரபு. அணுக்கள் சேர்ந்து ஒரு வடிவாக வந்த இந்த உடம்பு அதன் வேலை தீர்ந்த பிற்பாடு — கல்யாணத்திற்குக் கடன் வாங்கிய சாமான்களைக் கல்யாணம் முடிந்தவுடன் திருப்பிக் கொடுத்து விடுதல் போல — வேலை முடிந்த உடன் எல்லாம் அணுவாய்ப் போய்விடுகின்றன. ஐம்பூதங்கள் ஒன்றாகி வாழ்ந்து பிரிந்தவுடன் ஐம்பூதங்களின் பல்வேறு அணுக்களாய்ப் பிரிந்து போய்விடுகின்றன என்பார். ஆனால், ஒரு கேள்விக்கு இவர்கள் பதில் சொல்லாமல் விட்டுவிட்டனர். இந்த அணுக்கள் சேர்ந்தன; உருவாக மாறின; உண்மைதான். 'இவை எப்படிச் சேர்ந்தன, ஏன் சேர்ந்தன' என்பதற்குச் சரியான பதில் இல்லை. ஆனால், விகிதாசாரம்

காரணமாகப் பல்வேறு வடிவு பெறுகின்றன என்று மட்டும் சொல்லி விட்டனர். டாக்டர் இராதா கிருஷ்ணன் அவர்களும் "ஏன் சேர்ந்தன என்பதற்கு இவர்கள் விடை காணாமற் போய்விட்டார்களே" என்று வியந்து கேட்கிறார். 'எப்படிச் சேர்ந்தது' என்ற வினாவுக்குத் 'தாமே ஒவ்வோர் அளவில் சேர்ந்தன' என்று கூறிவிடலாம். 'ஏன் சேர்ந்தன' என்பதற்குப் பதிலே இல்லை. முடிவை மட்டும் பேசுகிறான், உலகாயதவாதி; "ஓடும் அவை ஆகிய உறுகாரியம் உலந்தால் ஆதியாம்" என்றான்.

'புதியதாக எப்படியய்யா ஒரு குணம் உண்டாகும்' என்று கேட்டதற்கு "வெற்றிலை பச்சை நிறம், பாக்கு தளிர் நிறம், சுண்ணாம்பு வெண்மை நிறம், இந்த மூன்றும் சேர்ந்தால் சிவப்பாதல் போல அணுக்கள் என்னென்ன விகிதாசாரத்தில் ஒன்றாகச் சேருகின்றனவோ அவைகட்கு ஏற்பக் குணங்களைப் பெற்றன. இதில் என்ன ஆச்சரியம்" என்றான். கன்மம், உரு, இறைவன் என்றெல்லாம் ஆன்மிகவாதிகள் பேசுவனவற்றைக் கேட்டுச் சிரிக்கிறான் உலகாயத வாதி. "காணப்படும் பிரபஞ்சத்தின் அடிப்படை என்ன என்று கேட்டாய். அதற்கு அழகிய விடை கூறியுள்ளேன். இதற்கு மேல் காணப்படாததாகிய உலகை நீயாகக் கற்பனை செய்து கன்மம் என்றும் கடவுள் என்றும் ஏன் பேசுகிறாய்? நீ கூறும் கடவுளின் வடிவம்தான் என்ன?'' என்று உலகாயதவாதி கேட்பான். அதற்கு ஆன்மிகவாதியோ "அவன் அருவானவன்'' என்றான். "ஆண்டவன் அருவ மென்னில் ஆகாயமும் அருவம்தானே? அருவமே இறைவனாகில் அறிவன்று ஆகாயமாகும்" என்று கூறி மறுக்கின்றான் உலகாயதவாதி. 'இல்லை, உருவம் உண்டு' என்றான் சமயவாதி. "உருவமேல் இப் பூதக்

கூட்டத்தில் ஒன்றென்றான்" உலகாயதவாதி. அடுத்துச் சொன்னான் ஆன்மிகவாதி: "இல்லை ஐயா ஆண்டவன் அருவுருவாக விளங்குகின்றான்" என்று. "உருவமும் அருவமும் கலந்தது கடவுள் என்றால் இரண்டும் கலந்து நிற்றல் இயலுமா? அருவமாகிய விண்வெளியில் உருவமாகிய கல்லைத் தூக்கி எறிந்தால் அங்கேயே நிலைத்து நிற்குமா" என்று கேட்கின்றான் உலகாயதவாதி.

எப்பிக்குரியன் ஃபிலாசஃபி (epicurian philosophy) என்பது எகிப்து நாட்டில் புகழ்பெற்று விளங்கிய ஒன்று. நம்முள் பலருக்கு அந்தத் தத்துவத்தின் பெயர் தெரியாது. ஆனால், வாழ்க்கையில் அதனைத்தான் கொண்டு செலுத்துகிறோம். அதாவது "வாழ்வு நிலையற்றது, எனவே, கிடைத்த வசதிகளை எவ்வளவு முடியுமோ அவ்வளவு அனுபவித்துக் கொள்" என்பதுதான் அந்தத் தத்துவம். அதனை விளக்க எகிப்து நாட்டு விருந்தில் உண்ணச் செல்வதற்கு முன்பு ஒரு சிறிய பெட்டியைக் கொடுப்பார்களாம். அதனைத் திறந்து பார்த்தால் அதனுள் இறந்த பிணப் பொம்மை ஒன்று இருக்குமாம். அதற்கு அடியில்,

EAT AND BE MERRY BEFORE
YOU BECOME LIKE THIS

என்று எழுதப்பட்ட காகிதம் இருக்குமாம். அற்புதமான தத்துவம்! நம்மில் பலர் பயிற்சியில் கொண்டாடும் இந்த நிலையை உலகாயதவாதி எடுத்துக் காட்டுகிறான், "இல்லாத பொருளைப் பற்றி எண்ணி எண்ணி ஏனய்யா அவலமுறுகின்றாய்? கண்ணால், காதால், மூக்கால், உடம்பால், வாயால்

பெறுகின்ற சுகங்களே உண்மையான சுகங்கள்." இவை யெல்லாம் அடங்கிவிட்டால் பெறுவது என்ன? இந்த அடிப்படையை ஒருவாறு விளங்கிக் கொண்டால் மேலை நாட்டவர் காட்டும் உலகாயதத்தினை ஒருவாறு புரிந்து கொள்ள முடியும்.

அவர்கள் காட்டுவது இரண்டு வகை உலகாயதமாகும். ஒன்று வரலாற்று முறையில் பேசப்படுகின்ற உலகாயதம். மற்றொன்று விஞ்ஞான முறையில் பேசப்படுகின்ற உலகாயதம். மக்கள் வாழ்கிறார்கள்; பொருள்களை உற்பத்தி செய்கின்றனர்; பணி செய்கின்றனர்; பொருளீட்டுகின்றனர்; வம்ச விருத்தி செய்கின்றனர். இதுதான் வாழ்வு. இந்த உறவு தான் சமுதாய வாழ்வாகிறது. இதில் மனிதன் நின்று விடுவானேயானால் மனிதன் எத்தனையோ ஆயிரம் ஆயிரமாண்டுகள் பின்னால் நிற்க வேண்டும். இந்த உறவு முறைக்கு அடிப்படையில் வேறு ஒன்று வந்து விடுகிறது. மனிதர்களுக்கு இருக்கின்ற உணர்ச்சி. இந்த உணர்ச்சிகளுக்கு அடிப்படையில் இருக்கின்ற ஏதோ ஒன்று, அந்த உணர்ச்சிகள் பிறரிடம் சென்று தாக்குவதனாலே ஏற்படுகின்ற எதிர்ச்செயல்கள் (reaction) - இவற்றைப் பற்றிப் பேச வந்த அவர்கள் "இதுதான் அடிப்படை, இந்த அடிப்படையிலிருந்து எதனையும் பெற்றுவிடலாம்" என்று சொன்னார்கள்".*

ஜடப் பொருள் (matter) — இந்த ஜடப் பொருள்களுக்குச் சில இயல்புகள் உண்டு. வடிவம், உருவம், பல்வேறு வடிவங்களையும் உருவங்களையும் பெறுதல் இவற்றிலெல்லாம் பிரச்சினையே கிடையாது.

---

* The relationship between social being and social conciousness.
As a result of this, definite relations or formed between them which constitute the material life of society as it is Social being.

இதனை அடுத்த நிலைக்குப் போகும்போது இந்த ஜடப் பொருள்களுக்குரிய இயல்புகள் மாறிப் புதிய இயல்புகளை ஏற்கும்போது தொல்லை வருகிறது. நல்லவன், தீயவன், கோபக்காரன், அன்புடையவன் என்று கூறப்படுகிற சில இயல்புகள் உண்டே, இவற்றை யெல்லாம் எதில் கொண்டுபோய் அடக்குவது? நினைக்கும் இயல்பு மனத்திற்கு உண்டு. ஆனால், மனம் என்பது என்ன? இங்கேதான் இரு சாரார்க்கும் மோதல் ஏற்படுகின்றது. அந்த மனமும் ஜடப்பொருள் என்றார்கள் உலகாயதர்கள். அது எப்படி ஜடப் பொருளாக இருக்க முடியும்? பருப்பொருளாக (concrete) இருக்கும் தன்மை மனத்திற்கு ஏற்றப் பட்டால் இந்த வாதத்தைச் சுலபமாக முடித்துக் கூறி விடலாம். ஆனால், இவ்வாறு சொல்லுகின்ற அவர்களே ஜடப்பொருளாக இருக்கும் ஒன்றிற்கு ஏற்றப்படுகின்ற குணங்கள் பருத்தன்மை உடையன வாக உள்ளனவற்றிற்கு ஏற்றப்பட முடியுமே தவிர நுண்மையாக உள்ள பொருள்களுக்கு ஏற்றப்படக் கூடியன அல்ல என்பதைக் காண முடியும்.

இதனை முதலில் கூறியவர் யார் தெரியுமா? பிரகஸ்பதி பகவானே ஆவார். பிரகஸ்பதியோ தேவகுரு. இப்படியொரு குரு கிடைத்திருந்தால் அந்தத் தேவர்கள் அரக்கர்களோடு சண்டை போட்டுக் காலம் கழித்ததில் வியப்பில்லை! ஸ்தல புராணங்கள் அனைத்தும் தேவர்கள் செய்த பாவ விமோசனத்திற் காகப் பூலோகத்தில் வந்து தவம் செய்ததனையே குறிப்பிடும். இதன் அடிப்படை நுணுக்கம் இதுதான். நாம் நினைக்கின்றபடி போக பூமியில் உள்ளவர்கள் எவ்வாற்றானும் உயர்ந்தவர்களல்லர். சூழ்நிலை காரணமாக அவர்கள் அங்கே உள்ளார்கள், நாம் இங்கே இருக்கின்றோமே தவிர வேறு இல்லை. இந்தப்

பிறவியில் நாம் பெற்ற பயனைத் தேவர்கள் கூடப் பெறவில்லை. ஆகவே, தேவர்கள் என்றால் உயர்ந்த வர்கள் என்று எண்ண வேண்டா என்பதற்காகவே இப்படிப்பட்ட கதைகளைக் கட்டினார்கள். தேவர் களின் குருபகவானாகிய வியாழபகவான் தான் இந்தச் சாங்கிய மதத்தினை உண்டாக்கியவன் என்று கூறுகின்றார்கள். அவ்வளவு பழைய காலத்தில் பேசிய அந்தக் கருத்தைச் சமீப காலத்தில் பிறநாட்டு உலகாயதர்கள் பேசுகிறார்கள். நுண்மையான இயல்புகள் எப்படி ஜடப்பொருளுக்கு இயல்பாக இருக்க முடியும்?

சமுதாய மக்கள் வாழ்கின்றார்களே, இவர்க ளெல்லாம் ஜடப்பொருளின் உறுப்புக்களாவர். ஜடப் பொருள் வடிவாக இருக்கவேண்டிய மக்கள் ஒன்று கூடிச் சமுதாயமாக வாழும்போது அறிவுத்துறையில் அரசியல், ஒழுக்கம், பொருளாதாரநிலை, கலைத்துறை தத்துவம் (economical standard, artistical worth, philosophical doctrine) என்ற இவ்வளவும் மக்களுடைய சிந்தனை என்ற ஒன்றின் அடிப்படையிலே தோன்றியவை. இவைகளை எதில் கொண்டுபோய்ச் சேர்ப்பது? ஜடப் பொருளாக இருக்கின்ற ஒன்றிற்கு இவ்வளவு இயல்பு களையும் ஏற்ற முடியுமா? பழங்கால லோகாயத வாதிகள் கொஞ்சம் விழித்துக் கொண்டார்கள். பேப்பர் என்றும், மைக்ரோஃபோன் என்றும், பேனா என்றும், மேஜை என்றும் உள்ள ஜடப் பொருளைப் பற்றி ஆராய்கின்ற பகுதியை மெட்டீரியலிசம் என்று சொன்னார்கள். மனிதனுடைய சிந்தனையின் அடிப்படையில் தோன்றியவைகளை மெட்டீரியலிசம் என்று சொல்லவே இல்லை.

மெட்டீரியலிசம் பேசி, இந்த உலகத்தில் உலவு கின்ற ஒரு சிலருள் தலையாக நிற்பவர் மார்க்ஸ்.

ஜெர்மனிக்காரர்கள் மார்க்ஸ் பற்றிச் சொல்கிறார்கள். ரஷ்யர்கள் சொல்லுகிறார்கள்; கிழக்கு ஜெர்மனிக் காரர்கள் சொல்லுகின்றார்கள்; சீனர்கள் சொல்லு கின்றார்கள். இவர்கள் கூறும் அத்தனையையும் ஒன்றாக்கிப் பார்த்தால், 'இந்த மார்க்ஸ் என்னதான் சொன்னார்' என்று சிந்திக்கவே முடியவில்லை. ஏனென்றால் வெள்ளைத் தாள் வெள்ளையென்று ஓரே கூற்றை எல்லோரும் சொன்னால் நியாயமானது. ரஷ்யாக்காரர் தாளைக் கறுப்பு என்று சொன்னால், சீனாக்காரர்கள் 'நாங்கள்தான் உண்மை நிறம் கண்டோம்; அது கறுப்பு அன்று, மஞ்சள் என்று பேசுவார்கள். இப்படி முரண்படுகின்ற, சொல்லி லேயே எல்லையில்லாத கருத்து வேற்றுமைக்கு இடம் தருகின்ற கோட்பாட்டை மார்க்ஸ்தான் முதன் முதலில் ஆரம்பிக்கின்றார். 'மார்க்ஸ்தான் இதற்குச் செம்மையான ஒரு கட்டளைக்கல் விதித்துக் கொடுத்தவர்' என்று விஞ்ஞான முறை உலகாயதம் பேசுகிறவர்கள் கூறுகின்றார்கள்.

இனி, அவர்கள் பேசுவதனுடைய அடிப் படைக் கருத்தைச் சுருக்கிச் சொல்லிவிடலாம். மக்களுடைய வாழ்க்கையில் சொல்லப்பட்ட இந்தக் கருத்துக் குவியல்கள் இருக்கின்றனவே, இவை யெல்லாம் அவர்கள் வாழ்க்கையின் அடிப்படையில் உண்மையானவையாகத் தோன்றியனவாய் இருப் பினும் அங்கே பண்பு என்று எதுவும் கிடையாது. அந்த ஜடப் பொருள்களுக்கு உள்ள ஓர் இயல்பு, அந்த இயல்பில் இந்தக் குணங்களும் வந்தன. உண்மையான இந்தக் குணங்களும் அந்த ஜடப் பொருள் தன்மையிலேயிருந்து தோன்றின. அதை அப்படியே யோசித்துக்கொண்டேயிருக்க வேண்டியதுதானே தவிர, வேறு எதுவும் கிடையாது.

ஜடப் பொருளைப்பற்றிச் சிந்திக்கின்ற இயல்பு ஒருபுறம் இருக்க, உண்மையான அறிவாவது இருக்கின்றதா என்று கேட்டால் உண்டு என்று பேசினார். எப்படி அவை இருக்கின்றன? அணுக்கள் என்ன செய்கின்றன? அணுக்கள் ஓயாமல் சுற்றித் திரிகின்றன. இந்த இயக்கம் அணுக்களுக்கு இயல்பு. அதற்கு விஞ்ஞானமும் இவர்களுக்கு ஏற்றாற்போல் ஒத்தாசையும் செய்துவிட்டது. ஆகவே, மெட்டீரிய லிசம் பேசுவோர் மெட்டீரியலிசத்திற்குரிய விஞ்ஞானத்தின் சூழ்நிலை கொண்டு இலக்கணம் வகுத்தார்கள். அப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றமடைந்து, 'மேட்டர் (matter) என்று சொல்லுகின்ற ஜடப்பொருள், இயங்கும் இயல் புடையது' என்ற விஞ்ஞானக் கருத்து வந்தவுடனே இவர்களும் சேர்ந்துகொண்டு "ஆமாம் ஆமாம், நாங்கள் சொன்ன மாதிரிதான் விஞ்ஞானமும் கூறுகிறது" என்கின்றனர். 'அந்த ஜடப்பொருளுக்கு இயக்கம் உண்டு என்பதை நாங்களும் ஒத்துக் கொள்கிறோம்; முன்னோக்கிப் போவதுதான் இயக்கம் என்று எண்ணாதே; பின்னோக்கிப் போவதும் பக்கவாட்டில் போவதும் இயக்கம்தான். ஆகவே, மக்கள் கூட்டமாகச் சேரும்பொழுது அவர்களுக்கு முன்னோக்கிச் செல்கின்ற எண்ணங்கள், பிறர் தங்களுடைய பிற்காலத்தில் வரலாற்றைப் பற்றிச் சிந்திக்கின்ற எண்ணங்கள், சமுதாயத்தில் எப்படி யெல்லாம் வாழ வேண்டும் என்று தோன்றுகின்ற எண்ணங்கள் ஆகிய இவையெல்லாம் தோன்றினாலும் இவைகளும் அணுக்களின் இயக்கம்' என்று முடித்தார். மனிதனுடைய சிந்தனையை அணுக்களின் இயக்கத் தோடு முடிச்சுப் போட்டு, 'இதுதான் அது' என்று சொல்கின்ற அளவில் மார்க்ஸ் போய்விட்டார்.

இதில் வருகின்ற இடைஞ்சல் என்னவென்றால், இன்னும் அதைப் பூரணமாக எடுத்துக் கொள்ள முடிவதில்லை. எவ்வளவுதான் டயலெக்டிக் மெட்டீரியலிசம் படித்தாலுங்கூட, எதை எடுத்தாலும் இயல்பு என்றும் — 'இவன் நல்லவனாக இருக்கின்றானே' என்றால் 'நல்லவனாக இருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை, இது அவன் இயல்பு' என்றும் — 'இவன் முழுக் கெட்டவனாக இருக்கின்றானே ராபர்ட் கிளைவ் மாதிரி' என்றால், 'அது அவனுடைய இயல்பு' என்றும் கூறப்படுகிறது. புறநானூற்றில்,

**நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்**
**முறைவழிப் படூஉம் என்பது திறவோர்**
**காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியிற்**
**பெரியோரை வியத்தலும் இலமே**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே (புறம் 192)**

என்று ஒரு பாடல் உண்டு. பெரியோரைப் புகழ்தலும் இல்லை, சிறியோரை இகழ்தல் அதனினும் இல்லை. ஏன் தெரியுமா? நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர் முறைவழிப் படும் என்பதைத் திறவோர் காட்சியில் தெளிந்தனம்! ஓர் ஆற்றில் கட்டையைத் தூக்கிப் போட்டால் என்ன செய்யும்? தண்ணீர் எப்படி ஓடுகிறதோ அப்படிக் கட்டையும் போய்க் கொண்டிருக்கும். கட்டைக்கு என்று சுய இயல்பு கிடையாது. தண்ணீர் எந்த வேகத்தில் எந்தத் திசையை நோக்கிப் போகிறதோ அந்த வேகத்தில் அந்தத் திசையில் அந்தக் கட்டையும் போய்க் கொண்டிருக்கும். அதுபோல இந்த மக்களுடைய உயிர்கள் என்ன என்ன விதிக்கு உட்பட்டு

வந்திருக்கின்றனவோ, அந்தந்த விதிக்கு ஏற்ப மாறுதலுக்கு உட்பட்டு இயங்குகின்றன என்பதே இவர்தம் வாதம்போலும்!

ஆகவே, விளைவை அடியொற்றிச் செய்யும் போது ஒருவன் நல்லது செய்கிறான் என்றோ, கெட்டது செய்கிறான் என்றோ, ஏன் அவனிடம் சண்டைக்குப் போகவேண்டும்? இயல்பு என்று இதைத்தானே உலகாயத வாதிகள் சொல்கிறார்கள்? அணுக்கூட்டங்கள் இயக்கத்தின்பாற் படும்போது அரசியல் எண்ணங்கள் தோன்றுகின்றன, ஆன்மிக எண்ணங்கள் தோன்றுகின்றன, பொருளாதார எண்ணங்கள் தோன்றுகின்றன. இதுதான் அந்த அணுச் சேர்க்கையின் இயல்பாகக் காண்பது. அந்தக் கருத்தை இங்கே அப்படி வைத்துப் பார்ப்போமே யானால், பெரியோர்கள் என்று சொல்லப்படுபவர் கள் யாருமில்லை. 'அவர்களுடைய செயல்கள், எண்ணங்கள் இவை' என்று சொன்னால் 'அவை அவர்களுடைய இயல்பு, ஆகவே அவர்கள் அதைச் செய்கிறார்கள்' என்று கூறிவிடலாம்.

இந்தக் கருத்தைத்தான் லெனினும் பேசினார். டார்வின் எப்படி உயிர்கட்குக் கூர்தல்அறம் பேசினாரோ, அதுபோல மார்க்ஸ் இந்த ஜடப் பொருளினுடைய வளர்ச்சியை வற்புறுத்தினார். வளர்ச்சி என்பது மாறிமாறித் தோன்றுவதால், ஜடப் பொருள்கள் ஒருவகை வளர்ச்சியைப் பெறுகின்றன என்றனர் மார்க்சியவாதிகள். 19-ஆம் நூற்றாண்டில் தொழிலாளர் புரட்சி தோன்றியதென்றால், அதுவும் தேசிய உணர்வின் வளர்ச்சிதான் என்றனர். முதலாளித்துவம் பெருகினதென்றால் அதுவும்

இதன்படிதான். இவை சமுதாய வளர்ச்சியின் இயல்பு என்ற அளவில் கொண்டுபோய் விட்டுவிட்டார்கள்.

பொருளுக்கு இயல்பான பண்போ, வடிவமோ ஒன்றும் கிடையாது. காண்பானுடைய காட்சியின் அளவை ஒட்டி அதற்கு வடிவம் ஏற்படுகிறது. 'இப்படி ஒரு பொருள் இருக்கின்றதே' என்று என் கண்ணாகிய பொறி பார்த்து என் மனத்தில் பதிவு செய்தவுடன் ஒரு வெள்ளை நிறம் என் மனத்தை ஏற்றுக்கொண்டது' என்று லாக்கே என்ற தத்துவஞானி சொன்னான். இதற்கு ஒரு வட்ட வடிவம் உண்டு என்று மனம் ஏற்றுக்கொண்டதாம். இப்படி வளைந்து கொடுக்கின்ற இயல்பும் இந்த வடிவம் உடையது என்றும் என்னுடைய மனம் ஏற்றுக்கொண்டதாம். ஆகவே, காண்பானுடைய மனத்தில்தான் இதற்கு ஒரு வடிவம் உண்டே தவிர, இதற்கென்று ஒன்றும் கிடையாது என்று பேசினான் லாக்கே. அங்கேதான் இந்த நாட்டின் சங்கரருடைய தத்துவம் தொடங்கு கிறது.

இங்கே காணப்படுகின்ற பிரபஞ்சத்திற்கென்று ஒரு வடிவம் கிடையாது. வடிவம் இல்லாத பொருளுக்கு எப்படி வடிவம் இருக்கும் என்று கூறமுடியாமல் தொட்டுப் பார்க்கிறோம் என்று சொன்னால் அது அதனுடைய காட்சியளவாக இருக்கும். அந்த ரோஜாப் பூ இருக்கிறது. ரோஜாப் பூவைப் பார்த்தவுடனே காந்தியைப் போன்றவர்கள், "இந்த அழகான பூவினைக் காப்பாற்றுவதற்குக் கருணை வடிவமான கடவுள் முட்களை வைத்தானே" என்று நினைக்கின்றார். இதன் எதிராகக் "கடவுளே இல்லை; அப்படியே இருந்தாலும் அவன் அறிவற்ற வன். ஏனென்றால் இந்த அழகான பூவைப் பறிக்க

முடியாதபடி முள்ளைக் கொண்டுபோய் வைத்தானே" என்று நினைக்கிறான், மற்றொருவன். பாரதம் பாடிய வில்லிபுத்தூரார் கண்ணபிரான் நினைவில் ஈடு படுகிறார்; 'அளைகமழ் பவளவாயனை' என்று துதிக்கிறார். 'வெண்ணெய் வாசம் வீசுகின்ற அற்புதமான திருவாயினை உடைய பெருமானே' என்கிறார். அதே பாரதத்தில் துரியோதனன் என்பான், அதே கண்ணனைப் பார்க்கிறான். இதே அடை மொழிகளை அவனும் கொடுக்கிறான். ஆனால், கொஞ்சம் மாறுபாடுதான். 'நாற்றம் அடிக்கும் வெண்ணெயைத் தின்ற நாற்ற வாயா!' என்றான். தப்பா அது? திருட்டு வெண்ணெய் சாப்பிடுகிறவன் எங்கே நல்ல வெண்ணெய் எடுக்க முடியும்? "முடையெடுத்த நவநீதம் தொட்டுண்டும், கட்டுண்டும் முன்னாள் நாகக் குடையெடுத்து மழைதடுத்தும் வஞ்சனைக்கோர் கொள்கலமாம் கொடிய பாவி" என்று துரியோதனன் அதே கண்ணனைப் பற்றிப் பேசுகிறான். கண்ணன் ஒருவன்தான். அந்த முழுமுதற் பொருளாகிய அவனே காண்பானுடைய காட்சி யளவில், அவனுடைய பண்பாட்டின் உயர்வாகக் காட்சியளிக்கின்றான். வில்லிபுத்தூராருடைய காட்சி யில் 'அளை கமழ் பவளவாயின'னாகக் காட்சி யளிக்கின்றான். துரியோதனனுடைய காட்சியிலே 'முடையெடுத்த நவநீதம் உண்டு கட்டுண்ட பாவி'யாகக் காட்சியளிக்கின்றான். இதே கருத்தைத் தான் இங்கே கொண்டு வர வேண்டும், வேறு வழி இல்லை. ஒலிவாங்கி (மைக்) என்ற வடிவம் ஒன்றும் இல்லை; ஆனால் காண்பானுடைய காட்சியளவிலே தான் உருவு, வடிவு, பண்பு, நிறம் ஆகிய அத்தனையும் தோன்றுகின்றன என்ற லாக்கேயின் கருத்தை அப்படியே இங்கு வாங்கிக் கொள்கின்றார் லெனின்.

"ஐயா, நீர் பார்க்கின்ற இந்தப் பிரபஞ்சம் இருக்கின்றதே இதற்கென்று ஒரு வடிவு, உரு ஒன்றும் கிடையாது. இது ஒரு ஜடம். அது ஒரு ஜடம். இது பச்சையாக இருக்கிறது, நீலமாக இருக்கிறது, சிவப்பாக இருக்கிறது, மேஜையாய் இருக்கிறது, நாற்காலியாய் இருக்கிறது என்றால், உம்முடைய பொறி புலன்களின் மூலம் உள்ளே சென்று இந்தப் பொருள்கள் உம்முடைய மனத்தில் படிந்து வடிவத்தைக் கொடுக்கின்றன; அவ்வளவுதான். "வட்டம் ஒன்றை வரைந்து விட்டு நான்கு பேரைக் கூப்பிட்டுப் பார்க்கச் சொல்லுங்கள் தெரியும். சும்மா பார்க்கச் சொன்னால் சரியில்லை. 'இந்த வட்டம் சரியாக இருக்கிறதா' என்று கேட்டுவிட வேண்டும். பிறகு பார்க்கச் சொல்ல வேண்டும். 'ஒருவேளை சரியில்லாமல் இருக்கலாம்' என்று நினைத்துப் பார்க்கும்பொழுது, சரி இல்லாமல் இருக்கிற மாதிரியும் தெரியும். **பொறி புலன்கள் வெகு விரைவில் மனிதனை ஏமாற்றிவிடும்** என்பது விஞ்ஞானம் படித்த அத்தனை பேருக்கும் தெரியும். ஆனாலும் இந்தப் பொறி புலன்கள் மேல்தான் நமக்கு நம்பிக்கை அதிகம்.

இனி, அதற்குமேல் ஒருபடி போகின்றார்கள். அதற்கு அப்பாற் பட்டிருக்கின்ற உண்மையான கருத்துக்களைப் பற்றியும் இந்தப் பிரபஞ்சத்திற்கு மூல காரணமாக இருக்கின்ற கடவுளைப் பற்றியும் ஆராய்கின்றபொழுது வரலாற்று முறை உலகாயதவாதிகள் அந்த ஆராய்ச்சியில் ஈடுபடாமல் விட்டு விடுகின்றார்கள்; இருக்கலாம். நாம் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால், விஞ்ஞான முறையில் மெட்டீரியலிசம் பேசுகின்றவர்கள் இருக்கின்றார்களே, அவர்கள் இவற்றை 'இல்லை' என்று மறுக்கின்றார்கள். இப்படியொரு பொருள் இருத்தலுக்கே இடம் இல்லை.

ஏன்? ஜடப்பொருளுக்குரிய இயல்பு என்று சொல்லி விட்டால் நல்லது, கெட்டது, சிந்தனை, உணர்வு, உயர்வு, தாழ்வு எல்லாம் அதன் இயல்பாக ஏற்றி விடலாம். எனவே, கடவுள் முதலிய கற்பனை வேண்டா என்கின்றனர்.

இனி, இந்த அண்டம் முதல் அணுவரை உள்ள பொருள்களினுடைய இயக்கம் இருக்கின்றதே, இந்த இயக்கத்தில் ஒரு பொதுத்தன்மை இருக்கின்றது. ஒரு கோவையும் அழகும் ஒற்றுமைத்தன்மையும் உள்ளன. இதனை வெளியிடத் தகுந்த சொற்கள் இல்லை. நம்முடைய **கருத்தை வெளியிடுவதற்குச் சொல் தகுதியுடைய கருவியே அன்று;** அது சிறந்த தகுதியுடைய கருவியாக இருந்திருக்குமேயானால் இவ்வளவு நூல்கள் இந்த உலகிற்கு வேண்டியதில்லை. சட்டம் எழுதுகிறார்கள். சட்டத்தை அச்சடித்த காகிதங்கள் காய்வதற்குள் எத்தனை விதமான பொருள்களில் அச்சட்டங்கள் நீதி மன்றங்களில் பேசப்படுகின்றன! இத்தனை விதமான பொருள் களையும் இந்தச் சட்டத் துறையில் இருக்கின்றவன் சிந்திக்கிறான் என்றாலும் அறிவின் வளர்ச்சிக்கு ஏற்பச் சொற்களின் பொருள்கள் மாறுபட்டுக் கொண்டு போகின்றதாகவே தெரிகிறது. நாம் நினைக்கின்ற கருத்துகளை அப்படியே வாங்கித் தருகின்ற சக்தி அந்தச் சொற்களுக்குக் கிடையாது. அதிலும் சில சொற்களை நாம் பயன்படுத்தும்போது, நான் ஒரு கருத்தில் கூறுகிறேன்; கேட்கிறவர்களாகிய நீங்கள் ஒரு கருத்தில் அவைகளை வாங்கிக் கொள்கிறீர்கள். நீங்கள் வேறு கருத்தில் வாங்கிக் கொண்டீர்கள் என்று தெரிந்ததற்குப் பிறகு நான் என்ன செய்கிறேன்? **வெவ்வேறு வழிகளில் என் கருத்தைப் புரிய வைக்க முயல்கிறேன். இப்படித்தான் இன்றைய நிலை உள்ளது.**

இன்றுள்ள அனைத்தையும் அவை பருப் பொருளாயினும் சரி, நுண் பொருளாயினும் சரி, கருத்துக்களாயினும் சரி — அத்தனையையும் இயக்கம் (மோஷன்) என்ற வார்த்தையில் அடக்கப் பார்க்கிறார்கள். இந்த விஞ்ஞான உலகாயதர்களுக்கு எதை எடுத்தாலும் இயக்கம், இயல்பு என்று கூறி விட்டால், முடிந்தது.

இனி, அதற்குமேல் உணர்வுக்கும் (consciousness) வருகிறார்கள். அதாவது, ஜடப் பொருள்களினுள் வளர்ந்துள்ளதாகிய நம்முடைய மானிட உடம்பு இருக்கிறதே, உயிர் உடைய உடம்பு — அது மிகவும் உயர்ந்தது. அதாவது புல்லாய், பூடாய், மரமாய், புழுவாய்... எல்லாம் உயிருள்ள பொருள்கள் தாம்; என்றாலும் அவைகளுக்குள்ளேயும் நாம் உயர்ந்திருப்பதாக நமக்கு ஒரு கர்வம். 'நமக்கு மேல் ஒன்றும் கிடையாது; நமக்கு மேல் வளர்ச்சியுடைய பொருள் இருக்கின்றதென்றால், அது நாமாகத்தான் இருக்க வேண்டும்' என்ற அளவில் அகங்காரம் கொண்டிருக்கின்றோம். மனிதனுக்குரிய சிறப்பு இயல்பாகச் சொல்லப்படுகின்றது இந்த உணர்வு. அதையும்கூட ஜடப் பொருளின் ஒருவகை இயக்கத்தால் கிடைப்பது என்று பேசிவிடுகின்றார்கள். தன்னுணர்வின் வெளிப்பாடாக இருக்கின்ற சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் என்று சொல்லுகின்ற - ஐந்து வகையான பொறி உணர்வுக்கும் அடிப்படையாக இருக்கின்ற - ஐந்து பொறிகளினாலே உணரப்படுகின்ற உணர்வுகள், அந்த உணர்வின் அடியிலே தோன்றுகின்ற சிந்தனைகள், அந்தச் சிந்தனையின் வெளிப்பாட்டின் வழியாகத் தோன்றுகின்ற கருத்துக்கள், அந்தக் கருத்துக்கள் தோன்றுவதனாலேயே ஒன்றோடொன்று மோதுகின்ற எண்ண ஓட்டங்கள் — இவை

யனைத்தும் ஜடப் பொருளின் இயல்பாம். எதை எடுத்தாலும் அதுதான் அதன் இயல்பு என்று சொல்லுகின்றவர்களுக்கு எதையுமே விளங்கிக் கொள்ள முடியாத சூழ்நிலை. ஆனால், அதே நேரத்தில் அது அப்படி இல்லை என்று நிரூபித்துக் காட்டக்கூடிய சூழ்நிலையிலே நாமும் இல்லை.

இதுவரையிலே சொல்லப்பட்ட இந்த உலகாயதத்தைத் திருப்பிப் பார்த்து விடலாம். காணப் படுகின்ற இந்தப் பிரபஞ்சம்* என்று சொல்லுகின்ற ஒன்று அணுப் பொருளின் கூட்டம். அணுப்பொருள் என்று சொல்லும்போது நாம் இன்றைக்கு விஞ்ஞானம் காட்டுகின்ற ஆட்டம் (atom) இருக்கிறதே, அது என்று கருதாமல் அதனையும் உளப்படுத்தியிருக்கின்ற அடிப்படைப் பொருள் (basic material) என்று கருதிக் கொள்ள வேண்டும். இந்த அடிப்படையான பொருள்கள் பல்வேறு தன்மையில் பல்வேறு அளவையில் கூடுகின்றன. அப்படிக் கூடும்பொழுது பல்வேறு வடிவுபெற்ற பொருள்களாகப் பரிணமிக் கின்றன. பரிணமிக்கின்ற பொருள்கள் உயிரற்ற ஜடப் பொருள்களாகவும், நீங்கள் நினைக்கின்ற உயிருள்ள பொருள்களாகவும் பரிணமிக்கின்றன. ஜடப் பொருள் களாக இருக்கும்பொழுது அவற்றிற்குச் சில இயல்புகள் உண்டாகின்றன. உதாரணமாக, இந்தத் தரை இருக்கிறது. அதற்கென்று ஒரு வடிவம், உருவம் கொடுக்கப்படும் போது வேறு சில இயல்புகள் தோன்றுகின்றன. உயிருள்ள பொருள்களாக மாறும் பொழுது அதற்கென்று சில இயல்புகளும் வருகின்றன.

---

* வெகு தூரத்தில் இருக்கின்ற அண்டங்கள் என்று சொல்லுகின்றோமே, பிற அண்டங்கள் எல்லாம் சேர்த்துத்தான் பிரபஞ்சம் என்று சொல்லுகின்றோம். அதற்கு மேல் ஏதாவது இருந்தால், அதையும் சேர்த்துக் கொள்ளட்டும்.

இனி, உயிருள்ள பொருள்களாக மாறும் பொழுது அவற்றின் அடிப்படையிலும் ஜடப் பொருள் களுக்கு உள்ள இயல்புகள்தாம் இருக்கின்றன. உண்மை யான கருத்துக்கள், எண்ணங்கள் என்று சொல்லு கின்றீர்களே, அவைகளும் உண்மையானவைகள் அல்ல. இந்த ஜடப் பொருளாகிய மேட்டர் (matter) இருக்கின்றதே, அதற்கு உரிய இயல்புதான். கருத்துக்கள் முதலியவையும் அவை முன்னே காணுகின்ற இயல்புகள், காண முடியாத இயல்புகள் என்ற அளவில் உலகத்தில் எதுவுமே இல்லை. ஜடப் பொருள்களின் கூட்டம், ஜடப் பொருள்களின் இயக்கம், ஜடப் பொருள்களின் இயல்பு என்று உலகாயதார்கள் இவ்வாறு மிக எளிதாக கூறி முடித்து விட்டார்கள். இந்தச் சுலபமான முடிவில் சார்புக் கொள்கையும் (theory of relativity) கொண்டு வந்து சேர்த்துவிட்டு, காலத் தத்துவத்தையும் அதில் ஏற்றிப் பார்த்து அதுவும் அதற்கு இயல்பு என்று சொல்லுகின்ற அளவில் அவர்களுடைய உலகாயதம் வளர்ந்திருக் கின்றது.

இனி, இவையெல்லாம் முதற்சொற்பொழிவில் சொன்னோமே, அந்த மின்சாரம் கண்ட விஞ்ஞானி கள் பேசுவதுபோலும் என்று நம்முடைய நாட்டு அன்பர்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இனி, பக்திமான்கள் — அதாவது பிரசாதம் கண்டவர் கள் — பேசுகின்ற பேச்சை அடுத்தபடியாகப் பார்க்கப் போகிறோம். அது ஆன்மிகம் (spiritualism) எனப் பெறும். ஆன்மா என்று நினைத்தவுடனேயே ஒரு கிளுகிளுப்பும் உணர்ச்சியும் தோன்றுகிறது. ஆன் மிகத்தைப் பற்றிச் சிந்திக்கிறவர்களுக்கு; அல்லாதவர் களைப் பற்றிய பேச்சே இல்லை. இந்த நாட்டில் —

அதாவது கீழை நாட்டில் — தோன்றுகின்ற சமயங்களைப் பற்றிச் சொன்னேனே, அவற்றினுள்ளே இரண்டே இரண்டு முக்கியமான சமயங்களை எடுத்துக் கொள்கிறேன். புத்த சமயம் ஒன்று. நம்முடைய இந்து சமயம் என்று சொல்லப்படுகின்ற ஒன்று. (இந்து சமயம் என்று சொல்லப்படுகின்ற - என்று கூறப்படுகிற அதற்கென்று ஒரு வடிவம் கிடையாது. இதுதான் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. இதனைத் தோற்றுவித்தவர் யாரென்றும் கூற முடியாது.)

இந்து சமயம் என்பதற்கு வேதத்திலிருந்து நேற்று முன்தினம் காலையில் வந்து 'ஓம் சக்தி' பாடிய பாரதி வரை உள்ள அத்தனை பேரும் எத்தனையோ விதமான விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அவைகளெல்லாம் ஓரளவு உண்மையே தவிர, முற்ற முடிந்த உண்மையாகா. புத்த சமயத்தைப் பொறுத்த மட்டில் புத்தர் பல கொள்கைகளை வகுத்தார். அதற்குப் பின்னர் ஹீனயானம், மஹாயானம் எனப் பிளவுபட்டாலும் அடிப்படையில் புத்தருடைய சமயத்தை எடுத்துக்கொண்டோமேயானால் அது ஒரு வரலாறாகும். ஜடப்பொருள்களைப் பற்றி உலகாயத வாதிகள் எப்படி ஆராய்ந்தார்களோ அப்படியே பௌத்தர்களும் ஆராய்ந்தார்கள். அதற்குமேல் புத்தர் போன ஒரு படி என்னவென்றால், ஜடப்பொருளின் இயல்பு வகையில் ஆன்மாவினுடைய இயல்பு இது என்ற அளவிற்கு ஒன்றைச் சொன்னதுதான். ஆன்மாவினுடைய இயல்பு என்று சிலவற்றைக் கூறினாரே தவிர, ஆன்மாவிற்கு மேற்பட்ட பரம் பொருள் என்ற ஒன்று இருக்கின்றதா என்றால், அதற்குப் புத்தன் வாயே திறக்கவில்லை. புத்தனுடைய சீடன் ஆனந்தன், பிம்பிசாரனிடம் போய்ப்

பேசுகிறான். பிம்பிசாரன் கேள்வி கேட்கிறான்: "ஆனந்தா, மறு பிறப்பு ஒன்று உண்டு என்று நம்புகிறாயா?" "குருதேவன் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை" யென்பது ஆனந்தனின் விடை. "சரி கடவுள் உண்டு என்று நம்புகிறாயா?" என்ற வினாவிற்குக் "குருதேவர் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை" என்றே விடை தருகிறான். இப்படி மூன்று கேள்விகளையும் மிக அழகாக மறுத்து விடுகின்றான். அதிலும், இல்லையென்று ஆனந்தன் சொல்லாமல் 'குருதேவர் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை' யென்று சொன்னானே தவிர, இது உண்டு இல்லை என்ற ஆராய்ச்சியில் இறங்கவில்லை. ஆகவே, **பௌத்தர்கள்** ஆன்மாவை ஒத்துக் கொண்டார்கள். ஆன்ம இலக்கணத்தை ஒத்துக் கொண்டார்கள். இந்த ஆன்மா அடையக்கூடிய பயன்களை ஒத்துக்கொண்டார்கள். ஆனால், இந்த **ஆன்மாவிற்குரிய பயன்களைத் தரக்கூடிய கர்த்தா ஆகிய ஆண்டவனை மட்டும் ஒத்துக் கொள்ள வில்லை.** அது அவர்களுடைய ஆன்மிக சமயம். உலகாயதர் களைவிட அதிகமாக ஒருசில படிகளை ஏறிப் போய் விட்டார்கள் என்பது உண்மை.

சென்னைப் பட்டினத்திற்கு வந்தீர்களே யானால், கலங்கரை விளக்கம் (lighthouse) என்று ஒன்று இருக்கும். புதிதாக வருகிறவர்கள் அனைவரும் மேலே ஏறிப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். கிறுகிறுவென்று மேலே ஏறி, ஓடிப் போய்விடுகின்ற பையன்களும் உண்டு. கொஞ்சம் ஏறிப் போனவுடன் இடுப்பையும், முழங்காலையும் பிடித்துக்கொண்டு பாதியிலே உட்கார்ந்து கொண்டு 'லைட் ஹவுஸ் பார்த்தது போதும், அம்மா!' என்று சொல்லிவிட்டு, ஊருக்கு வந்த பிறகு 'ஏம்பா லைட் ஹவுஸ்

பார்த்தாயா' என்று கேட்டால் 'ஆஹா, பார்த்தேனே!' என்பவர்களும் உண்டு. இவர்கள் ஏறினது கால்வாசி தான். ஆனாலும் ஏறாத என்னைவிடக் கொஞ்சம் — பாதித்தூரம் ஏறினவர்கள்! உயர்ந்தவர்கள் தாமே பாதியாவது ஏறிவிட்டார்கள் இல்லையா? எனவே, அதுதான் லைட் ஹவுஸ் என்று கருதினால் தப்பு இல்லை. புத்தனுடைய நிலைமையும் அப்படிப் பட்டதுதான். ஆன்மாவை ஏற்றுக்கொள்ளுகின்ற புத்தன், ஆன்ம இலக்கணங்களை ஏற்றுக் கொண்ட புத்தன், அந்த ஆன்மாவின் இலக்கணங்களை அனுபவிக்க வேண்டுமேயானால், ஒரு கர்த்தா வேண்டும் என்பதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆகவே, ஆன்மிகத் துறையின் முதற்படியில் நிற்கின்றவன் புத்தன். இனி, அதற்கு அடுத்தபடியாக இந்த வடிவமற்ற இந்து சமயம் என்று சொன்னேனே — அது பற்றிக் காண்போம். நிர்த்தாரணம் பண்ணக் கூடிய அளவில் இந்து சமயத்தில் வெகுதூரம் முன்னேறிக்கொண்டு போயிருக்கிறார்கள். மேலை நாட்டுக்காரர்களைப் பொறுத்தமட்டில் — அதுவும் இந்த உலகாயதவாதிகள் இருக்கின்றார்களே அவர்களைப் பொறுத்தமட்டில் — புத்த சமயம் மிகவும் நன்றாகப் பிடிக்கும் அவர்களுக்கு. ஏனென்றால், அவர்கள் படிக்குமேல் ஒருபடிதான் போயிருக்கிறான் புத்தன். எனவே, விரும்புவது இயல்புதானே? உலகாயதத்தில் உழன்று கொண்டிருக்கின்ற மேலை நாட்டார்கள், உலகாயதத்திற்குமேல் ஒருபடி சென்று ஆன்மாவை மட்டும் ஒத்துக் கொள்ளுகின்ற பௌத்தத்தைத் தங்களுடையதாக ஏற்றுக் கொள்ளு கின்றார்கள். இன்றைக்கும் நீங்கள் பார்க்கலாம். மேலை நாட்டவர்க்குப் புத்த சமயத்தில் இருக்கின்ற ஈடுபாடும், ஈர்ப்பும், உணர்வும் மற்றச் சமயங்களில்

இல்லை. நார்த்ரோப் என்ற அறிஞரும் புத்த சமயத்திற்குத்தான் அதிக மரியாதை தருகின்றார். 'அடுத்த உலகம் என்றெல்லாம் பேசுகிறார்களே, இந்த மாதிரியெல்லாம் புத்தனிடத்தில் பேச்சே இல்லை' என்று மிக அற்புதமாய் அச்சமயத்தை நார்த்ரோப் வியந்து பேசுகின்றார்.

மூலையிலே நின்றுகொண்டு வித்தைக்காரன் பேசுகிறான். எதுகை மோனையோடுகூடக் கடகட வென்று பேசுகிறான். அவ்வளவு பேரும் நின்று கேட்கின்றார்கள். ஆனால் என் மாதிரி பேசுகின்ற பொழுது ஒருத்தன்கூடக் கேட்கமாட்டேன் என்கின்றான். ஏன்? அவர்களுடைய எல்லையிலே நின்று அவனால் பேச முடிகின்றது. அந்த அளவை மீறும்பொழுது யாருக்கும் ஈடுபாடு ஏற்படுவதில்லை. அந்த நாட்டுக்காரன் எந்த அளவில் உணருகின் றானோ அந்த அளவில் புத்தன் நின்று பேசுகின்றான். 'மறு உலகம், பிற உலகம் என்றெல்லாம் பேசாத இந்தப் புத்த சமயத்தை ஏற்றுக் கொள்கின்றேன்' என்று பேசுகிறார், 'கிழக்கும் மேற்கும்' என்ற சிறந்த நூலை எழுதிய அறிஞர் நார்த்ரோப்.

இனிப் புத்த சமயத்தின் அடிப்படையில் இருக்கின்றது தியானம். புத்தன் தியானம் (contemplation) என்று சொல்கிறானே அது என்ன என்று கேட்க விழைகிறோம். சர்க்கரை இனிக்கும் என்று சொல்லுகிறார்கள். 'ஏன் சார், இனிப்பு என்றால் என்ன?' என்று கேட்டால், 'அது ஒரு ருசி' என்றுதான் கூற முடியும். நாக்கில் போட்டால்தான் தெரியும். இந்தப் புத்தர் சொன்னாரே அக நோக்கு. இந்த அக நோக்கை அறிவின் துணைகொண்டு அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், மற்றைச் சமயத்தார்

சொல்லுகின்ற பிற உலகம், கடவுள் இவையெல்லா வற்றையும் புத்தர் சொல்லவில்லை. அந்த அளவில் அவர்கள் திருப்தியடைகிறார்கள்.

இனிக் கீழைநாட்டில் தோன்றிய சமயங்கள் அனைத்தும் அதாவது உள்ளத்தில் எழுகின்ற அனுபவத்தைப் (experience) பொறுத்தே அமைகின்றன. Experience என்ற ஆங்கிலச் சொல்லுக்கு எவ்வளவு ஆழமான அழகான பொருளைத் தத்துவ வாதிகள் சொல்லுகின்றார்களோ, அந்த அளவிற்கு அனுபவம் என்ற சொல்லிலும் பொருள் காணவேண்டும். வேறு ஒரு வழியும் தெரியவில்லை. ஆன்மிகம் என்பது அனுபவத்தினால் அனுபவிக்கின்ற ஒன்றாகுமே தவிர, இது இன்னது என்று சொல்லித் தெரியாத ஒன்றாகும் என்று இந்தக் கீழை நாட்டுக்காரன் நினைக்கின்றான் போலும். 'தாய், தன் மணாளனோடு ஆடிய சுகத்தை மகள் கேட்டால், தாய் என்ன சொல்ல முடியும்?' இவ்வாறு வள்ளலார் அனுபவத்தைப் பற்றிக் கூறுகிறார். இதற்கு மிகவும் முன்னரே தொல் காப்பியரின் 'அகம்' என்ற சொல்லுக்கு 'இன்னோர்க்கு இன்ன விதமாய் இன்னதென்று எடுத்துரைக்கப் படாததாய், உள்ளதே அகம்' என்றனர் உரையாசிரியர். உரைக்கப்படாததே தவிர அதனை அனுபவிக்க முடியும். சொல்லினால் சொல்லி விளங்க வைக்க முடியாது. சர்க்கரை இனிக்கும் என்று சொன்னால் விளங்கப் போவதில்லை. அதே போலத்தான் ஆன்மிகம் என்பது அறிவின் துணைகொண்டு ஆராயப்படும் ஒன்றன்று; உணர்வின் துணை கொண்டு அனுபவிக்கப்படுவது.

மிகவும் விரிவாக மாயைபற்றி முப்பது நூல்கள் (volume) எழுதிய சங்கரர் கடைசியில் எங்கே

வந்து முடிக்கிறார் என்று சொன்னால், வியப்பாக இருக்கும். அறிவின் துணைகொண்டு ஓர் அளவுதான் ஆராய முடியும். அதற்குமேல் பொருளை அனுபவிக்க வேண்டுமானால், 'பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம், கோவிந்தம் பஜ மூடமதே' என்று பாடும் உணர்வின் துணையினால்தான் முடியும்.

ஆகவே, நினைத்துப் பார்ப்போமேயானால், இளமையில் — எந்தப் பொருளைப் பார்த்தாலும், அந்தப் பொருளின் இயல்பு என்ன என்று ஆராய்கின்ற வயதில் — அனைவரும் அப்படித்தான் இருப்பர். அதனால் தவறு ஒன்றுமில்லை. ஆனால், ஒருநிலை வரும்பொழுது இந்த ஆராய்ச்சியில் பொழுதைக் கழிப்பதைவிட அனுபவிக்க வேண்டும் என்ற நிலை வருகிறது. அத்தகைய ஒருநிலை எல்லோருடைய வாழ்விலும் வருகிறது. சிலருக்கு இளமையில் இந்நிலை கிட்டலாம். சிலருக்கு முதுமையிலே கிட்டலாம். சிலருக்குப் பல பிறவியிலும் கிட்டாமலும் இருக்கலாம் என்பதை மறந்துவிடாதீர்கள். கீதைக்காரன் கரும யோகம், ஞானயோகம் என்று பல யோகங்களைச் சொல்கிறான். அவற்றைக் கேட்ட காண்டீபன், 'இப்படிப் பல யோகங்களைச் சொல்வதானால், ஒரு மனிதனுடைய பிறப்பு முடியுமுன் இவற்றைக் கடைப் பிடிக்க முடியாதே கண்ணா... என்னுடைய முடிவுதான் என்ன?' என்றான். 'அதைப்பற்றி ஒன்றுமே கவலைப்படாதே. எந்த நிலையில் போய் முடிகின்றாயோ அங்கிருந்து அடுத்த பிறவியில் தொடரலாம்' என்றான் கண்ணன். அதை மனத்தில் வாங்கிக் கொள்வோமேயானால் ஒருநிலை வரும் பொழுது அனுபவத்தைப் பற்றிச் சிந்திக்க முடிகின்றது. அந்த அனுபவத்தைத்தான் புத்தன் பேசுகின்றான். அனுபவமாகிய ஒன்று (மெடிட்டேஷன் என்ற

பெயரிலே சொல்லப்பட்டாலும் எக்ஸ்பீரியன்ஸ் என்ற நிலையில் சொல்லப்பட்டாலும் சரி) எவ்வாறு பிறக்கிறது? பொருளைப் பார்க்கின்ற பொழுதும், அது நம்மோடு உறவாடும்பொழுதும், மோதும்பொழுதும் இரண்டு வகையில் நாம் எதிரொலிக்கின்றோம். நாம் பொருளை அனுபவிக்கின்றோம். இந்த நிலைதான் நாம், பொருள், அனுபவம் என்ற மூன்று அற்ற நிலை.

இன்னும் சிலர் பொருளை அனுபவிக்கின் றார்கள். ஓர் உதாரணம் சொன்னால் விளங்கிக் கொள்ள முடியும். திருவாசகத்தைப் பற்றிப் பாடுகிறார் வள்ளலார். 'மணிவாசகப் பெருமானே, உம்முடைய திருவாசகத்தை நான் பாடுகின்றபொழுது நற்கருப்பஞ் சாற்றினிலே, தேன் கலந்து, பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து ஊன் கலந்து என் உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே' என்று பாடுகின்றார். திருவாசகத்தை என்னுடைய சிறிய வயதிலிருந்தே படித்தேன். ஆனால் ஒருநாள்கூடத் தேனும் பாலும் போலச் சுவைக்கவில்லை. ஆகவே, அடிப்படை எங்கே உளது? திருவாசகத்தைச் சொல்லுகின்றபொழுது **நான்** கலந்து பாடவேண்டும். படிக்கின்ற நான், படிக்கப் படுகின்ற திருவாசகம், படித்தலாகிய செயல் மூன்று இருக்கின்றவரை நான் வேறுதான் திருவாசகம் வேறுதான். நடுவிலே சப்தம்தான் வரும். ஆனால், நான் என்ற பொருள் திருவாசகத்தில் கரைந்துவிடுமே யானால் தேன் கலந்து, பால் கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்தது போன்ற இன்பம் தரும். இதனைத்தான் தியானம் (meditation) என்று சொன்னார்கள். இந்த நாட்டுக்காரன் தியானம் என்று சொல்லும்பொழுது, புறத்தில் செல்லுகின்ற பொறி புலன்களையெல்லாம் அடக்கு, அடக்கு என்றுகூடச் சொல்லுவதில்லை. அடங்கு என்றுதான் சொல்லு

கிறான். ஒரு செயலைச் செய்தால் எதிர்ச்செயல் உண்டு என்று தெரியுமல்லவா? (action has got equal and opposite reaction) ஆகையினாலே அடக்கு என்று கூறாமல் அடங்கு என்று சொல்லுகின்றான்.

இராமகிருஷ்ணருடைய கதையைச் சொன்னால் நன்றாகப் புரிந்துவிடும் என்று நினைக்கிறேன். ஒருவர் தவம் பண்ண வேண்டும் என்று போனார். ஆற்றங்கரையில் உட்கார்ந்தார். தவம் பண்ண வேண்டுமானால் கண்ணை மூட வேண்டும் என்று யாரும் சொல்லவில்லையே! கண்ணைத் திறந்தே உட்கார்ந்திருந்தார். யாரோ ஒருத்தி அந்த வழியில் போனாள். அவளைப் பார்த்துச் சிந்தனை வந்தது. தவம் கலைந்தது. 'சேச்சே... கண்ணைத் திறந்து இருந்ததால் தான் இந்தப் பிரச்சினை' என்று, மறுநாள் கண்ணை மூடிக் கொண்டார். அவள் வழக்கம்போலத் தண்ணீர் எடுக்கப் போனாள். அவள் காலில் போட்டிருந்த மெட்டி கல் கல்லென்று ஒலித்தது. அன்றைக்கும் தவம் காலியாயிற்று. மூன்றாம் நாள் பார்த்தார், 'இந்தப் பொறி புலன்கள் எல்லாம் திறந்திருந்தால்தான் இந்த வம்பு' என்று நினைத்துக் கொஞ்சம் பஞ்சு எடுத்துக் காதையும் அடைத்துக்கொண்டார். கண்ணும் மூடியாயிற்று; காதும் மூடியாயிற்று. ஆனால், இந்த மனம் இருக்கின்றதே அது விநோதமான ஒன்று. காலையில் நாலரை மணிக்கெல்லாம் எழுந்திருக்க வேண்டுமென்றால் அலாரம் (alarm) வைக்க வேண்டியதில்லை. அதுபற்றிச் சிந்தித்துக் கொண்டே படுத்திருந்தால், காலையில் எழுந்து விடலாம். இவருக்கு அந்த நேரம் வந்ததோ என்னவோ தெரியவில்லை. கண்ணும் மூடியிருக்கிறது. காதும் மூடியிருக்கிறது. இருந்தாலும், 'இந்த நேரத்துக்குத்தானே அந்த அம்மை

தண்ணீருக்குப் போவார்' என்று நினைத்தார்; உடனே கண்ணைத் திறந்துவிட்டார்! ஆகவே, பொறி புலன்களை அடக்குவதனால் மட்டும் தியானத்தைச் செய்ய முடிவதில்லை என்பது தெளிவாகிறது.

ஆகையினால் இந்த நாட்டுக்காரராகிய திருமூலர் 'ஐந்தும் அடக்கு அடக்கு என்பார் அறிவிலார்; ஐந்தும் அடக்கும் அமரரும் அங்கு இல்லை' என்றார். இந்த நாட்டுக்காரருடைய ஆன்மிகம் எப்படிப் போகிறது என்று பாருங்கள். பொறி புலன்களின் வலுவை அறிந்த இவர்கள் — பொறி புலன்களை அடக்குவதினாலேயே முழுப் பயனையும் அடைய முடியாது என்பதை உணர்ந்த இவர்கள் — அதை அடக்குவதனால் மோட்சம் போக முடியாது என்று கூறினர். இதனைக் கருதித்தான் வள்ளுவர் "ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே மெய்யுணர்வு இல்லாதவர்க்கு" என்றார். அடக்கினவர் மோட்சம் போவரென்றால் ஹிப்பிக்கள் அனைவரும் செயற்கை முறைகளில் பொறி புலன்களை அடக்கியவர்களே; ஆனால், அதனால் பயனில்லை என்பதை நம்மவர் கூறினர்.

'ஐந்தும் அடக்கு, ஐந்தும் அடக்கு' என்பார் அறிவிலார்' ஐந்தும் அடக்கும் அமரரும் அங்கு இல்லை என்றால், பொறி புலன்கள் அடங்க வேண்டும் என்பதில்லையா? உன்னுடைய உறுதி காரணமாக (will power) அவைகள் தாமே அடங்க வேண்டும். தாமே அடங்குவதென்றால்கூட, இடர்ப் பாடாகத்தான் இருக்கும். எவ்வளவு அற்புதமான இசையைக் கேட்டுக்கொண்டிருந்தாலும்கூட அந்தப் பக்கம் இரண்டு பேர் பேசிக்கொண்டிருந்தார்களே யானால், காதில் விழத்தான் செய்யும். ஆகவே,

இவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், நீ அதை அடக்கவே முடியாது; அவைகளும் தாமே அடங்கா. அப்படியானால், என்ன வழி? இந்த நாட்டுக்காரன் மனத்தையும் எண்ணங்களையும் வேறு திசையில் திருப்பு என்று சொன்னான். மடைமாற்றம் (sublimation) என்பது எளிதில் அனைவருக்கும் முடியாது என்பதால் இந்த நாட்டுக்காரன் மனத்தையும் பொறி புலன்களையும் திசை திருப்பச் சொன்னான். பஞ்சை வைத்தாலும்கூடக் கண்டிப்பாகச் சப்தம் கேட்கும். கேட்பது உறுதி என்றவுடன் நல்லதைக் கேட்டால் பரவாயில்லை என்றான். இந்த அளவிற்குப் போகிறான் புத்தன். 'சத் சங்கம்' என்று கூறினான். அதாவது பலர் கூடிப் 'புத்தஞ் சரணம் கச்சாமி', 'சங்கம் சரணம் கச்சாமி' என்று ஓயாமல் சொல்லிக் கொண்டேயிருப்பது நலம் என்றான்.

இந்த நாட்டுப் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் வேறு; பர்மா, இலங்கை, புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் வேறு. பர்மாவிற்குப் போவீர்களானால், அவர்கள் மூங்கிலால் செய்த ஒரு மணியை வைத்து அடித்துக் கொண்டேயிருப்பார்கள். இது ஏன் எனச் சிறிது நேரம் சிந்தித்துப் பார்த்தால், மனத்தைத் திருப்திப் படுத்துவதற்குத் தானே தவிர வேறொன்றுமில்லை. 'டொன், டொன்' என்ற ஓசையை ஆதாரமாகக் கொண்டு புத்தஞ் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி என்று சொல்லுவார்கள். பொறி புலன்களை அடக்க முடியாதென்பதை அறிந்த இந்த நாட்டுக் காரர்கள் 'திசை திருப்பு' என்று சொல்லி விடுகின்றார்கள். கண்ணால் பார்க்கிறேனென்றால் அதற்கு ஒரு விக்கிரகம் வேண்டுமா என்று அதற்கு மேலே ஒருபடி போகின்றான். விக்கிரக வழிபாடு, எங்குமே வியாபித்திருக்கின்ற ஒன்று. அதைப்பற்றி மிக

அழகாகச் சொல்லுவார்கள். கடவுள் ஒருவன் இருக்கிறானோ இல்லையோ, அதைப்பற்றி ஒன்றும் கவலை வேண்டா. இன்று உன்னுடைய ஆன்மா அமைதி அடையக் கூடுமானால் அதனால் இப்பொழுது ஒரு திருப்தி. என்னுடைய மனைவி 250 மைலுக்கு அப்பால் இருக்கிறாள். உடல் நலமில்லாம லிருக்கலாம். வீட்டில் இருக்கலாம். தூங்கிக் கொண்டிருக்கலாம்; உட்கார்ந்து கொண்டும் இருக்கலாம். மனம் ஏதோ ஒன்றை நினைவில் கொண்டு அமைதி அடைகிறது. இந்த நாட்டில் தூரத்தில் இருப்பவர்கள் எப்படியிருந்தாலும் "ஒன்றும் இருக்காதுங்க, நீங்க ஏன் கவலைப் படுகின்றீர்கள்" என்று அமைதியைத் தருகின்ற பேச்சுமுறை வழக்கில் இருக்கிறது; ஆன்மிகத்திற்கு மட்டும் இல்லை, உலகியலிலும் கூட ஒருவருக்கு ஒருவர் 'கவலைப் படாதீர்கள்; ஒன்றுமே இருக்காது' என்று கூறும் மரபுண்டு. 'எல்லாம் முடிந்தது' என்ற நிலையிலும்கூட இந்த நாட்டில் எத்தகைய தந்தி கொடுப்பார்கள் என்று தெரியுமா? 'டேஞ்ஜர் (danger)' என்றுதான் தந்தி அடிப்பார்கள். இதை ஒரு பயித்தியக்காரத்தனம் என்றுகூட நான் ஒரு காலத்தில் நினைத்ததுண்டு. ஆனால், இன்றோ அதிர்ச்சி கொடுக்கக்கூடாதென்ற நல்ல எண்ணத்தால்தான் மனித மனத் தத்துவத்தை உணர்ந்து அவ்வாறு செய்கிறார்கள் என்பதை அறிகின்றேன்.

மேலை நாட்டுக்காரர் நாகரிகத்தைப் பற்றிப் பேசுகின்றதையும் நம் நாட்டுக்காரர் பேசுகின்றதையும் கவனித்தீர்களானால் ஒன்று நன்றாகத் தெரியும். புத்தனுடைய உபதேசத்தில் கீழே பெறப் பெற்றது ஒரு பகுதியாகும். பிற்காலத்தில் ஏசுநாதரும் இதனைச் சொல்கின்றார். புத்தன் தியானத்தில் நல்லது, கெட்டது

என்ற வேறுபாட்டிற்கு இடமில்லை என்றான். பிறர் படும் துன்பம், துயரம் ஆகியவற்றை இரு நாட்டாரும் பார்க்கும்பொழுது அவனுக்கும் இவனுக்கும் உள்ள வேறுபாடு தெரியும். மேலை நாட்டார்கள், மக்கள் துயரத்தைத் துடைப்பதற்காகத் தீர்க்கதரிசிகள் முயன்றதைப் பற்றிக் கூறுவர். ஆனால், இங்கே பிறருடைய துயரத்தைப் பார்க்கின்றான் புத்தன். கருணையையுடைய புத்தன் அதைப் பெரிதுபடுத்த வில்லை. தன்னாலே முடிந்த அளவுக்கு அந்தத் துயரத்தைப் போக்க முயன்றான் என்பதில் தவறே இல்லை. ஆட்டுக்குட்டிக்குப் பதிலாகப் பலிபீடத்தில் தன் கழுத்தைக் கொடுக்கப் போகிறான். ஆனால், “சகோதரர்களே, நீங்கள் பாவத்திற்கு ஆளாகப் போகிறீர்கள்; அதனால் நரகத்திற்குப் போவீர்கள்” என்று சொல்லவில்லை.

காரணம், எல்லா உயிர்களையும் படைத்தவன் இறைவன், எல்லா உடல்களிலும் உயிர் வடிவமாக இருப்பவன் ஆண்டவனே. நீ நரகத்திற்குப் போவாய் என்று சொல்கின்ற அளவுக்கு அதிகாரம் எவனுக்கும் இல்லை. அதனால்தான் இந்த நாட்டு ஆன்மிகவாதி எவனும் மத மாற்றத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் இந்த உலக வாழ்க்கையே நிலைபேறு இல்லாதது என்றால், இந்த உலகில் நீ நல்லவன் என்றால் அதுவும் நிலைபேறு இல்லாதது தானே! ஆகவே, நிலைபேறு இல்லாததொன்றை எதற்காக விளம்பரப்படுத்த வேண்டும்? வலி இருக்கிறது, வயிற்று வலி. ஏதோ உண்ணக் கூடாததனை உண்டிருக்கலாம். இதை ஒரு பிரமாதமாக விளம்பரப்படுத்திக் கொள்கின்ற சூழ்நிலை தேவையில்லை. இந்த நாட்டுக்காரன் வலி முதலிய துயரத்திலுங்கூட ஒருவகை நடு நிலைமையை

(equanimity) ஏற்றுக் கொள்ளுகின்றான். வலி என்பது நிலைபெற்றதன்று. சுகம், இன்பம் என்பவை எப்படி நிலைபேறு இல்லாதனவோ, அப்படித்தான் துன்பம், துயரம் ஆகியனவும் நிலைபேறு உடையன அல்ல. எனவே, நிலைபேறு இல்லாத வாழ்க்கைக்காக நீ ஒன்றும் சிரமப்பட வேண்டா. அவற்றைப் போகிற போக்கில் ஏற்றுக் கொள்ளலாம் என்று சொன்னார்கள் இந்த நாட்டில் தோன்றிய புத்த சமயக்காரர்கள்.

இந்து சமயத்தை எடுத்துக்கொண்டால், ஒன்றே ஒன்றைத்தான் பார்க்க வேண்டும். ஆன்மிகம் என்று சொன்னவுடன் திருநீறு பூசுதல், உருத்திராட்சம் அணிதல், தேங்காய் உடைத்தல், பிரசாதம் கொண்டு போதல் ஆகியவற்றுடன் குழப்பிவிட வேண்டா. ஆன்மிகத்திற்கும், இவற்றிற்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. இவை ஒன்றுமே இல்லாமலும் ஆன்மிக வாதியாக இருக்க முடியும். கோயிலுக்குப் போகாமல், விபூதியோ நாமமோ போடாமல், உருத்திராட்சமோ, துளசிமணியோ அணியாமல் எந்தவிதத் தடையிலும் கட்டுப்படாமல் சிறந்த ஆன்மிகவாதியாக இருக்க முடியும். இதையும் இந்நாட்டார் ஏற்றுக் கொண்டார்கள். அந்த நாட்டுக்காரர்கள், நீங்கள் என் உபதேசத்தை நம்புவீர்களேயானால், இந்தக் காரியங் கைகூடச் செய்யலாம்; இல்லாவிட்டால் உங்களுக்கு நரகம்தான் சித்திக்கும்' என்றார்கள். இதன் எதிராக இந்த நாட்டுக்காரன் 'நீ என்ன செய்தாலும் கவலையில்லை; உன் மனம் எப்படி இருக்கிறது என்பதே முக்கியம்' என்றனர். இதை மக்களுக்குப் புரியவைப்பதற்காக எவ்வளவு தூரம் போனார்கள் தெரியுமா?

மனிதனுக்கு நிறுவப்பட்டுள்ள கடமைகளைச் செவ்வனே செய்தால்தான் மிக உயர்ந்த நிலையை

அடையலாம் என்று கூறினார்கள். இந்த அடிப்படை எதை உணர்த்துகின்றது? ஆன்மிகம் என்பது சடங்குகள் அன்று என உணர்ந்து, அவற்றின் மேல் உட்கார்ந்திருப்பவன் எவனோ அவன்தான் ஆன்மிக வாதி. இன்றைய நிலையில் பெரிய பெரிய பட்டை யாகப் போட்டுக்கொண்டு, படுத்தால் 'முருகா', நின்றால் 'முருகா', உட்கார்ந்தால் 'முருகா' என்று சொன்னால்தான் அவன் பெரிய பக்திமான், ஆன்மிக வாதி என்று சொல்லுகின்ற அளவு குழப்பம் ஏற்பட்டு விட்டது. உண்மையிலேயே இவற்றிற்கும் ஆன்மிகத் திற்கும் தொடர்பே இல்லை. அப்படியானால் எது ஆன்மிகம்? ஆன்மா என்ற ஒன்றைச் சிந்தித்தால், அதைச் சிந்திக்கத் தொடங்கினாலே அது ஜடம் (matter) என்று நினையாதபடி, அதற்கு அப்பாற்பட்ட ஒன்று என்ற கருத்தையும் ஏற்றுக் கொள்ளுகிறான். அந்த நிலையே ஆன்மிகத்தின் தொடக்கமாகும். ஏற்றுக் கொண்ட ஆன்மிக அனுபவ நிலையை நிரூபிக்க முடியுமா என்றால், நிரூபணம் பண்ண முடியாத ஒன்றாகும் இது.

இந்த உலகாயதவாதி இருக்கின்றானே அவன் தான் நிரூபணம் இயலாது என்பதைக் காட்டினவன். எத்தனைபேர் அணுவையும், எலெக்ட்ரானையும், புரோட்டானையும் கண்ணால் கண்டு வியந்தவர்கள்? ஒருவன் என்னவோ சொல்கிறான், நாம் நம்பு கின்றோம். 'இந்த உலகத்தையெல்லாம் படைத்தவ னாகிய கடவுள் என்ற எவனோ ஒருவன் இருக்கின்றான்' என்று நான்கூடச் சொல்கிறேன்; அதனையும் நீங்கள் நம்பலாமே! ஆகவே, நீங்கள் நம்பும் எல்லாவற்றையும் நிரூபணம் என்ற ஒன்றினால் நிரூபித்துவிட முடியும் என்பது விஞ்ஞானத்திலும் கிடையாது; ஆன்மிகத்திலும் கிடையாது. விஞ்ஞானத்

திலும் நம்பிக்கை பெரும்பணி செய்கிறது. ஆன்மிகத்திலும் அவ்வாறே. இந்த நினைவினால் பெறுகின்ற பயன்கள் இருக்கின்றன. அவற்றை நினைத்துத்தான் இவர்களும் வாழுகின்றார்கள், அவர்களும் வாழுகின்றார்கள்.

ஆன்மா என்ற ஒன்றை ஏற்றுக்கொண்ட பொழுது இந்த ஆன்மா உலகம் முழுவதும் நிலைத்திருக்கின்றது என்பதைக் காண்கின்றார்கள். அந்த எண்ணம் வந்ததோ இல்லையோ, வேறுபாடு, மாற்றம் என்ற எண்ணத்திற்கே இடம் இல்லாமல் போய்விட்டது. இங்கேயும் ஆண்டவன் இருக்கின்றான், அங்கேயும் ஆண்டவன் இருக்கின்றான் என்றால் பகை என்ற இடத்திலேயும் ஆண்டவன்தான் இருக்கின்றான்.

நீங்கள் மெட்டீரியலிசத்தில் இருக்கின்றவர்களுடைய வளர்ச்சியையும், ஆன்மிகத்தில் இருக்கின்றவர்களுடைய வளர்ச்சியையும் இப்பொழுது ஒரு தராசில் வைத்துப் பார்க்கலாம்.

பிறரைத் துன்புறுத்தியோ கொன்றோ தம் கொள்கைக்கு இழுத்தல் அவர்களுக்கு இயல்பு. சமுதாயத்திற்காகத் தனி மனிதனைப் பலியிடுவதில் தவறு இல்லை என்று உலகாயதவாதிகள் நினைக்கின்றார்கள். அது அவர்களுடைய அடிப்படைத் தத்துவம். இந்த நாட்டுக்காரன் அப்படி நினைக்கவில்லை. ஈ, எறும்பிலிருந்து மனிதன்வரை சங்கிலித் தொடர்பாக இருக்கின்ற ஆன்மா ஒன்றே என்று நினைப்பதினாலேயே ஈ, எறும்புகட்குக்கூடத் துன்பம் விளைவிக்கக்கூடாது என்று நினைக்கின்றான். இதன் எதிராக உலகாயதன் அனைத்தையும் ஜடப்பொருள் என்றும், அவற்றின் இயல்புகளே குணங்கள் என்றும் குறிப்பதால் ஒருவன் ஒன்றை நல்லது அல்லது

உயர்ந்தது என்று கருதினால் — அதனை ஏற்றுக் கொள்ளுமாறு மற்றவர்களை வற்புறுத்தலாம்; அதில் தவறில்லை என்று நினைக்கிறான். ஆன்மிகவாதி இக் கருத்தை ஏற்றுக் கொள்வதே இல்லை. உயர்ந்தது என்று சொல்லுவதே தவறு என்பது எதனால் எனில், இன்றைக்கு இதுதான் உயர்ந்தது என்று ஒன்றை நினைத்தால் நாளைக்கு மற்றொன்று உயர்ந்ததாக இருக்க முடியுமல்லவா? இன்றைக்கு நல்லது என்று நீ நினைக்கின்றது நாளைக்கும் நல்லது என்று யார் சொல்லப் போகிறார்கள்? இன்றைய சூழ்நிலையிலே நீ நல்லது செய்யவேண்டுமென்று நினைத்துச் செய்வ தானாலும் அது பிறருடைய துன்பத்திற்கு ஏதுவாகக் கூடாது.

உலகாயத அடிப்படையில் வந்த அந்த நாட்டில் வளர்ந்த ஆன்மிகத்தில், 'நீங்கள் பாவிகள் நீங்கள் அஞ்ஞானிகள், உங்களை உயர்வழிக்குக் கொண்டு செல்ல எந்த வழியையும் பயன்படுத்தலாம்' ான்று கூறுகிறவர்கள் உண்டு. இது நல்லது என்று கூறுகிறவர்கள் உண்டு. நல்லது என்று இன்றைக்கு இந்தச் சூழ்நிலையில் நான் ஒன்றை நினைக்கிறேன், அவ்வளவுதான். ஆனால், இதைச் சொல்லுவதற்குக் கூட உரிமையில்லை என்று நினைக்கின்றேன். காரணம், எனக்கு இந்தச் சூழ்நிலையில் நல்லதாக இருப்பது மற்றொரு சூழ்நிலையில் நல்லதாக இருக்குமா என்பது வினா. என்னுடைய சூழ்நிலையில் இன்றைக்கு ஒன்றை நல்லது என்கின்றேன். உன்னுடைய சூழ்நிலையில் அதே ஒன்று நல்லது என்பதை நாம் எப்படிச் சொல்ல முடியும்? உன்னிடத்திலும் ஆண்டவன் இருக்கின்றான், என்னிடத்திலும் ஆண்டவன் இருக்கின்றான். எல்லா வற்றிலும் உள்ளுறைந்து இருக்கின்ற ஆண்டவனைக்

கண்டுவிட்ட ஒருவன் பிறரைத் திருத்துவதற்குக்கூடத் தனக்கு உரிமையில்லை என்று நினைக்கின்றான். ஒன்றை நியாயம் என்று கண்டது தன்னுடைய அளவில்தானே தவிரப் பிறரும் அதனை நியாயம் என்று எடுத்துக் கொள்ள வேண்டும் என வற்புறுத்து வதற்கு உரிமை இல்லை என்று நினைக்கின்றான். அதேபோல ஒருவனைத் துன்புறுத்துவதற்கும் தனக்கு உரிமையில்லை என்று நினைக்கின்றான். ஒருவன் துன்புறுவானேயானால் அவனுடைய துன்பத்தைப் போக்கத் தன்னாலான முயற்சியைச் செய்யலாமே தவிர, அதனை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமென்று வற்புறுத்துகின்ற அளவுக்கு ஒருவனுக்கு உரிமை இல்லை என்று கூறுகின்ற அளவு இவனுடைய ஆன்மிகம் வளர்ந்து வந்துள்ளது.

காந்திஜியினுடைய வாழ்க்கையிலே இந்த அடிப்படையைப் பார்க்கின்றோம். ஆன்மிகம் என்பதைப் போர்வையாகக் கொள்ளவில்லை அவர். இந்த நாட்டுக்காரன் ஆன்மிகத்தைத் தன் உடம்பில் ஓடுகிற குருதியோடு கலந்ததாக நினைத்தானே தவிர சமயத்தை, அல்லது ஆன்மிகத்தைப் போட்டுக் கொள்கின்ற ஜிப்பாவாகக் கருதவில்லை. ஆகையினால்தான் இவர்கள் சமயம் பற்றிச் சட்ட திட்டம் அதிகம் வகுக்கவே இல்லை. இந்தச் சமயத்தைப் பின்பற்றிய நீ இந்தக் குறிக்கோளை மேற்கொள்ள வேண்டும்; இன்னது உண்ண வேண்டும்; இப்படிக் கோயிலுக்குச் செல்ல வேண்டும், இப்படி இருக்க வேண்டும் என்று சொன்னதே இல்லை. இந்தக் கட்டுப்பாடு விதிப்பதே ஆன்மிகத்திற்கு விரோதம் என்ற அளவிற்கு வந்துவிட்டார்கள் இந்த நாட்டு ஆன்மிக வாதிகள். பிற உயிர்களுக்கு இரக்கம் காட்டுதலே ஆன்மிகம் என்று இவன் கருதினான். அந்த

உலகாயதவாதி இரக்கம் இல்லாத நெஞ்சினனாய் இருப்பதில் தவறு காணவில்லை. இலங்கையில் வாழ்ந்த அரக்கர் அனைவரும் உலகாயதவாதிகள் என்று கம்பன் சொல்கிறான். அந்த உலகாயதவாதிகள் 'இரக்கம் என்ற ஒரு பொருள் இல்லாத நெஞ்சினோர் கள்' என்றும் கம்பன் கூறுகிறான். 'எல்லாம் ஜடம்' என்று கருதினதால் இரக்கம் என்ற பொருளுக்கு மதிப்பே இல்லாது போயிற்று. 'எல்லாம் இறைவன் வாழுகின்ற இடம்' என்று கருதினதால் இரக்கத்திற்கு ஆன்மிகத்தில் இடம் உண்டு.

இனி, அடுத்ததொரு நிலை தியானம். புத்த தேவன் சொல்லியதிலிருந்து இந்து சமயம் சொன்ன வரையில், பிறருக்காக வாழுகின்ற இயல்பு ஆன்மிகத்தில் இருக்கிறதே தவிர உலகாயதத்தில் இல்லை. தான் கொண்ட கொள்கைக்காக, எதனையும், எவனையும் அழிக்கலாம் என்ற முடிவில் உலகாயத வாதிகள் போகிறார்கள். ஆன்மாக்கள் இறைவ னுடைய மறுபதிப்பு என்று நினைக்கின்றதனாலேயே — எல்லா உயிர்களிலேயும் இறைவன் இருக்கின்றான் என்று கருதுவதனாலேயே - பிறர் வாழ வேண்டும் என்பதற்காகத் தன்னைத் தியாகம் செய்கிறான் ஆன்மிகவாதி.

ஒருவன் ஆட்டு மந்தையை ஓட்டிச் செல்கின்றான். புத்தர் 'இவ்வளவு ஆடுகளும் எங்கே போகின்றன' என்று கேட்டார். 'பெரிய யாகம் ஒன்று நடக்கிறது; அதற்காகப் போகின்றன' என்ற விடை கிடைத்தது. 'யாகத்தில் இவற்றை என்ன பண்ணு வார்கள்' என்று கேட்கின்றார் புத்த தேவர். 'இவற்றைப் பலியிட்டு விடுவார்கள்' என்ற விடை கிடைத்தது. 'இது பெருங் கொடுமை, இத்தனை ஆடுகளையும் கொன்று

விடுவதனால் எவ்வளவு உயிர்கள் நாசமாகின்றன!' என்ற இரக்க உணர்வு தோன்ற ஓர் ஆட்டுக் குட்டியைத் தூக்கிக் கொண்டு யாகத்திற்குச் சென்றார். அரச குடும்பத்தில் பிறந்த இவர் ஓர் ஆட்டுக் குட்டிக்காகத் தன் உயிரைத் தியாகம் பண்ணத் துணிகின்றார். ஆன்மிகத்தை உணர்ந்தவன் தன் னுடைய ஆன்மாவிற்கும் ஆட்டுக் குட்டியின் ஆன்மா விற்கும் வேறுபாடு கருதுவதே கிடையாது. உலகாயதன் தான் கொண்ட கொள்கைக்காக உலகத்தில் உள்ள அனைவரையுங்கூட அழிக்கப் பார்ப்பான். இது இன்று நேற்றுத் தோன்றியதன்று, என்றுமே உள்ளது. ஆகவே, காந்திஜி தம்முடைய பெரிய வாழ்க்கையில் 'தியாகம்' என்ற ஒன்றை உயிர்நாடியாகக் கொண்டாரென்றால் அதுதான் ஆன்மிகம். ஆன்மிகவாதி ஒருவனுக்குத்தான் இந்தத் தியாக உணர்வு கிட்டும்.

ஆன்மிகவாதி அறிவின் துணைகொண்டு சமயத்தைக் கட்டவில்லை. ஆன்மிக உணர்வின் துணைகொண்டு கட்டினான். அந்த உணர்வு என்றும் ஒரே மாதிரியாக இருந்ததனால் வேத காலத்திலிருந்து 707 ஜெட் விமானம் பறக்கும் இன்றுவரை அவன் கட்டிய தத்துவத்தின் அடிப்படை மாறவில்லை. அன்றைக்கும் அவனுடைய அடிப்படை இதுதான். இன்றைக்கும் அவனுடைய குறிக்கோள் இதுதான். எவ்வளவுதான் முன்னேறினாலும் உணர்வின் அடிப் படையில் தோன்றும் குறிக்கோள் ஒன்றாகத்தான் இருக்கும். ஆன்மிகவாதி சமுதாயத்தைக் காணுகின்ற காட்சி வேறு, உலகாயவாதி சமுதாயத்தைக் காணு கின்ற காட்சியே வேறு. ஆன்மிகவாதி தனி மனிதனைக் காணுகின்ற காட்சி வேறு; உலகாயதவாதி தனி மனிதனைக் காணுகின்ற காட்சியே வேறு. ஆன்மிகவாதி தனி மனிதனுக்கு ஊறு செய்து

உலகத்தைக் காக்க வேண்டும் என்று கருதுவதில்லை. உலகாயதவாதி தனி மனிதனை அழித்துச் சமுதாயம் முன்னேற வேண்டும் என்று நினைக்கின்றான். ஆன்மிகவாதி தனி மனிதன் ஒருவனுக்கும் துன்பம் வேண்டா என்று நினைக்கின்றான். ஏன்? தனி மனிதனிடத்திலும் இறைவனைக் காணுகின்றான், சமுதாயத்தினிடத்திலும் இறைவனைக் காணு கின்றான், உலகத்திடத்திலும் இறைவனைக் காணுகின்றான். ஆகவே, தனி மனிதனை அழித்து நன்மையைப் பெற வேண்டும் என்று ஆன்மிகவாதி நினைப்பதே இல்லை.

என்றாலும், புரட்சி என்றால் உலகாயத வாதிதான் புரட்சி பண்ணுகின்றான் என்று நினைக்க வேண்டா. மார்க்சும், லெனினும் வருவதற்கு முன்பு பல்லாயிரம் ஆண்டுக் காலத்திற்கு முன்னரே சமய வாதிகள் புரட்சி பண்ணியிருக்கிறார்கள். உலகத்தில் அறிவின் விளக்கம் குறைந்திருந்த காலத்தில் உணர்வின் அடிப்படையில் பேருண்மையைக் கண்ட சமயவாதிகள்தாம் புரட்சி செய்திருக்கின்றார்கள். அந்தப் புரட்சியின் பயன் நீங்கள் நினைப்பது போல அறிவுப் புரட்சியன்று, பிறரைத் திருத்தி உயர்த்தும் புரட்சியேயாகும். அப்படியானால் சமயத்தின் பெயரில் ஏன் இத்தனை பெரிய சண்டைகள், குழப் பங்கள் என்று கேட்கத் தோன்றும். 'உலகத்திலே நடந்த சண்டைகளில் தொண்ணூறு பங்கு சமயச் சண்டை கள்தாமே' என்று கேட்கலாம்.

இதுவரை யான் கூறிவந்தது ஆன்மிகத்தையே தவிர, புற வாதமிடும் சமயத்தைச் சொல்லவில்லை. சமயவாதிகள் வேறு, ஆன்மிக வாதிகள் வேறு. ஆன்மிக வாதி சமயவாதியாகவும் இருக்கலாம். சமய

வாதிகளால் வளர்க்கப்பட்ட சமயம் வேறு; ஆன்மிக வாதிகள் வளர்த்த சமயம் வேறு. அது போலத்தான் இந்த நாட்டுச் சமயத்திலும், புத்த தேவன் சொன்ன அடிப்படைக் கொள்கைகளே இல்லாமல் அதன்மேல் போலிச் சம்பிரதாயம் போன்ற குப்பை மூடி விட்டது. அதுபோலத்தான் இந்து சமயமாகட்டும், மற்ற எந்தச் சமயமாகட்டும், அவைகளின் அடிப்படைக் கொள்கைகள் மிக எளிமையானவை; யாவரும் பின்பற்றக் கூடியவை. 'அறிவே இல்லாத மக்களி லிருந்து பெரிய ஐன்ஸ்டீன்வரை புரிந்து கொள்ளும் முறையில் எவ்வளவு எளிமையாக ஏசுநாதர் உபதேசம் செய்தார்!' என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் மிக அழகாகச் சொன்னார். ஆன்மிகவாதி எல்லா உயிரையும் தன் உயிர்போலக் கருதுவான். பிறருக்குத் துன்பம் செய்யக்கூடாது, பிறர் வாழ்வதற்காகத் தன்னைத் தியாகம் செய்ய வேண்டும், சத்தியவானாக இருத்தல் வேண்டும், சத்தியமான கொள்கையை உடையவனாக இருத்தல் வேண்டும். இது ஆன்மிக வாதியின் எளிய கட்டமைப்பு.

இந்த உண்மையான அடிப்படைக் கொள்கை களின்மேல் சம்பிரதாயங்கள், கோட்பாடுகள், சடங்கு கள் இவற்றையெல்லாம் ஏற்றி ஏற்றி உண்மைச் சமயம் — ஆன்மிகத்தின் அடிப்படையில் உள்ள சமயம் — மறைக்கப்பட்டது. ஆன்மிகத்தின்மேல் தோன்றிய சமயத்தில் சடங்குகளும், சம்பிரதாயங்களும் நாளா வட்டத்தில் ஆன்மிகத்தையும், சமயத்தையும் ஒழித்து விட்டுத் தாம் மட்டுமே எஞ்சின. இந்தச் சடங்குகளையே சமயம் என்று கருதியும் ஆன்மிகம் என்று கருதியும் நம்முடைய இளைஞர்களும், பெரியவர்களும் ஆன்மிகத்தையும் சமயத்தையும்

'பயனற்றன, தீமை பயப்பன' என்று ஒதுக்க முனைகின்றனர்.

ஆன்மிகம் என்பது ஆன்மாவினுடைய அடிப்படையாகத் தோன்றும். ஆன்மா என்பது ஒவ்வோர் உயிரினிடத்திலும் இருப்பது. உயிரன்று ஆன்மா. உயிர் என்பதனை மூச்சுக் காற்றளவிலே நிறுத்தி விட்டார்கள். ஆன்மாவை அதற்கும் அப்பாற் பட்ட ஒரு பொருளாகக் கண்டார்கள் ஆன்மிகர். அந்த ஆன்மாவின் அடிப்படையில் கட்டப்பட்ட ஆன்மிகத் திற்கு இலக்கணம் வகுத்தார்கள். மனிதனுடைய வாழ்வு, குறிக்கோள் உடைய வாழ்வாக அமைய வேண்டுமானால், அது ஆன்மிக வாழ்க்கையில்தான் முடியும் என்று கருதினார்கள். அந்த ஆன்மிகத்தின் அடிப்படையில் குறிக்கோள்களை வைத்தார்கள். மனித வாழ்க்கை உயர்ந்தது என்றால் — கேவலம் விலங்கின் வாழ்க்கையிலிருந்து உயர்ந்தது என்றால் — அது குறிக்கோள் என்பது பிற உயிருக்காகத் தியாகம் செய்கின்ற வாழ்க்கையாக — சத்தியத்தைக் கடைப் பிடிக்கும் வாழ்க்கையாக — அமைய வேண்டும் என்று சொன்னார்கள். இந்த ஆன்மிக வாழ்க்கையை யுடையவர்கள்தாம் உலகில் மிகப் பெரிய காரியங்களைச் செய்திருக்கின்றார்களே தவிர ஏனை யோரால் அவற்றைச் செய்ய முடியாது என்ற பேருண்மையையும் இந்நாட்டார் கூறினார்கள். ஆன்மிக வாழ்க்கையை நம்புகின்றவர்கள் மறந்தும் தவறு செய்ய முடியாது என்று கூறினார்கள். ஆன்மிக வாழ்க்கையையுடையவர்கள் உலகமே பெறுவதாக இருந்தாலும், ஒருவனுக்குத் துயரம் தந்துதான் அப் பரிசிலைப் பெற வேண்டும் என்றால், பெற மாட்டார்கள் என்ற பேருண்மையைக் கூறினார்கள்.

ஆன்மிகவாதிகள் கீழைநாடு, மேலைநாடு ஆகிய எல்லா நாடுகளிலும் உள்ளனர்.

ஆன்மிகத்தின் பேரில் எத்தனையோ குப்பைகள் ஏறி, இன்று ஆன்மிகம் என்ற சொல்லிற்கே பொருள் விளங்காது என்ற நிலைமைக்கு வந்து விட்டது. இந்த நிலை மாறவேண்டுமானால் — உண்மையான ஆன்மிகத்தின் பொருள் விளங்க வேண்டுமானால் — மக்களுடைய வாழ்வு பயனுடையதாக இருக்க வேண்டுமானால் — எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்ற வேண்டுமேயானால், அது உலகாயதர்களால் செய்ய இயலாத காரியம் என்பதையும் ஆன்மிகம் என்ற ஒன்றுதான் மனிதனை மனிதனாக்கும் என்பதையும் அறியல் வேண்டும்.

5

# என்று தோன்றினார்?

மூலப்பரம்பொருள் என்றும், இறைவன் என்றும் சொல்கிறோம். விநாயகன் என்ற சொல்லுக்கு 'வி – நாயகன்' என்பது பொருள் ஆகும். தனக்கு மேல் யாரும் தலைவன் இல்லாதவன் என்று பொருள்படும். விநாயக வழிபாடு இன்றைக்குக் காஷ்மீர் முதல், கன்னியாகுமரி வரையில் பரந்து நிற்கின்ற ஒரு வழிபாடாகும். தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் விநாயக வழிபாடு என்று வந்தது என்று சொல்வதற்கு இல்லை. சங்க காலத்தில் விநாயகர் பற்றிய பேச்சே இல்லை. முருகனைப் பற்றிப் பாடல்கள் வருகின்றன. முருகன் சிவபெருமானுடைய மகன் என்று சங்கப் பாட்டுப் பேசுகிறது. ஆனால் விநாயகனைப் பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை. பின்னர்க் காலாந்தரத்தில் ஏழாம் நூற்றாண்டில் தேவார காலத்தில் விநாயகனைப் பற்றிய பேச்சு வருகிறது. ஆறாம் அல்லது ஏழாம் நூற்றாண்டில் விநாயகர் வழிபாடு தமிழகத்தில் பரவியிருக்க வேண்டும் என்று நினைப்பதில் தவறு இல்லை. இன்று, இந்தியா முழுவதும் எடுத்துக் கொண்டால் மகாராஷ்டிரத்தில் விநாயகருக்குள்ள மதிப்பு வேறு எந்தப் பகுதியிலும் இல்லை. எல்லாவற்றிலும் விநாயக வழிபாடு மிக

முக்கியமாகக் கருதப்படுவது மகாராஷ்டிரத்தில்தான். பின்னர் மிகவும் பிற்காலத்தில் தோன்றிய ஆறு சமயங்கள் என்று சொல்லப்படுகின்ற தொகுப்பில் 'காணாபத்தியம்' என்ற பெயரில் விநாயகனை மூலப்பரம் பொருளாக வைத்து வழிபடுகின்ற ஒரு முறை தோன்றியிருக்கிறது. அதைப் போல 'கௌமாரம்' என்று முருகனை மூலப்பொருளாக வழிபடுகின்ற முறையும் வந்தது. அப்படியே ஆறு தெய்வங்களின் பெயர்களைச் சொல்லி அந்த அடிப்படையில் சமயங்கள் தோன்ற அவற்றை ஆறுவகைச் சமயங்கள் என்றும் சொல்லினர்.

இனி விநாயகனைப் பொறுத்தமட்டில் ஓங்கார வடிவினன் என்ற கருத்து இடைக் காலத்தில் பேசப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மூலமாக உள்ள ஒலியை "ப்ரிமார்டியல் சௌண்ட்" என்று சொல்வார்கள். எல்லா ஒலிகளுக்கும் தாயாக உள்ள ஒலி ஓங்காரம் என்று சொல்வார்கள். 'ஓசை ஒலி யெல்லாம் ஆனாய் நீயே" என்று நாவுக்கரசர் சொல்வார். எனவே ஒலி வடிவாக முதல் தோற்றம் ஏற்பட்ட பொழுது அந்த ஒலி ஓங்கார வடிவைப் பெற்றிருந்தது என்று கருதுகிறார்கள். அந்த ஓங்காரத் திற்கு ஒரு வடிவம் கொடுக்க வேண்டுமேயானால் அது விநாயகப் பெருமானின் உருவமாக அமைகிறது என்று நம்மவர் கருதுகிறார்கள். எனவே மிக மூலமாக, பழமையாக உள்ள ஒன்றைச் சுட்டுவதற்கு ஓங்கார வடிவத்தை விநாயகருக்குத் தந்திருக்கிறார்கள்.

இனி இந்த விநாயக வழிபாடு காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரையில் பரவியிருந்தாலும் அந்தந்த நாட்டு மக்கள், அவர்களின் நாகரிகம், பண்பாடு என்பனவற்றில் எவற்றை முக்கியமாகக் கருதுகிறார்

களோ அவற்றையெல்லாம் விநாயக வழிபாட்டிலே சேர்த்திருப்பதைக் காணுகிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் அருணகிரியார் சொல்வது போல 'அப்பமொடு அவல் பொரி கொழுக்கட்டை' முதலியன இவருக்கு வைத்து, நைவேத்தியமாக வழங்கப்படுவதைக் காணுகிறோம். என்ன காரணத்தினாலே இந்தக் கொழுக்கட்டை அவல் நைவேத்திய மாகப் படைக்கப்படுகின்றன என்று சொல்லுகின்ற முறையிலே இல்லை. ஏதோ ஒரு காலத்தில் இது அவனுக்குரிய பொருளாகத் தமிழர்களாலே கருதப் பட்டு அதுவே பரம்பரையாக வந்திருக்கிறது என்று அறிகின்றோம்.

இனி, விக்னம் என்று சொல்லப்படுகின்ற இடையூறு என்பது மனித வாழ்க்கையில் எல்லோருடைய வாழ்க்கையிலும் ஏதோ ஒரு காலத்தில் அல்லது பல காலங்களில் குறுக்கிடத்தான் செய்யும். விக்னம் அல்லது இடையூறு இல்லாத ஒரு மனிதன் வாழ்ந்தான் என்றால் அது நம்பமுடியாத ஒரு காரியம். எனவே இடையூறு வரும்போது என்ன செய்வது? இடையூற்றைப் போக்குவதற்கு மனிதன் முயல் கின்றான். ஆனால் முயற்சியினாலே எல்லா இடையூறு களையும் போக்கிவிட முடியும் என்று ஒரு காலத்திலும் நினைக்க முடியாது. சாதாரண இடையூறுகளைக் கூடப் பல சமயங்களில் நம்மாலே போக்கிட முடியாது. அப்படிப்பட்ட நிலையிலே நாம் என்ன செய்கின்றோம்? சாதாரணமாக நம்மோடு உடன் இருக்கின்றவர்கள், பெரியவர்கள், வலுவுடையவர்கள், அதிகாரத்தில் இருப்பவர்கள் என்பவர்களுடைய உதவியை நாடி நம்முடைய இடையூறுகளைப் போக்கிக் கொள்கின்றோம். இனி நம் இனத்தவர் களுடைய இடையூறுகளைப் போக்க வேண்டுமே

யான்ால் நம்மைவிடப் பலம் பொருந்தியவர்களுடைய உதவியை நாடுகின்றோம். மனித சமுதாயம் முழுவதும் எவ்வளவு உயர்ந்தவர்களாக இருந்தாலும் அவர் களுக்கு இடையூறு வரும்போது யாரைச் சென்று அணுக முடியும்? அப்படிப்பட்ட நிலையில்தான் விநாயகப் பெருமானை நாம் நினைக்கின்றோம். எத்தகைய இடையூறு ஆயினும் உலகியல் கடந்த இடையூறாக இருந்தாலும் சரி, தெய்வக் கோளாறாக இருந்தாலும் சரி, அந்த இடையூற்றைப் போக்குவதற்கு விநாயகப் பெருமானைத் துணையாக அழைக் கின்றோம். ஒரு காரியத்தைத் தொடங்குகின்றோம் என்றால் அது செம்மையாக முடிய வேண்டும். இடையூறு இல்லாமல் முடிய வேண்டும் என்பதற்காக முதன் முதலாக விநாயகப் பெருமானை வணங்குகின்றோம். 'ஐயா உம்முடைய துணையோடு உம்முடைய அருளைக் கொண்டு இந்த முயற்சியில் நான் ஈடுபடுகின்றேன். உன்னுடைய திருவருள் முன்னே நின்று எவ்விதமான விக்னமோ அல்லது இடையூறோ இல்லாமல் இந்தப் பணி முடியுமாறு உதவ வேண்டும்' என்ற கருத்திலேதான் தொடக்கத் திலேயே விநாயகரை வழிபட்டு நம்முடைய செயல் களைத் தொடங்குகின்றோம்.

இந்தப் பழக்கம் என்று வந்தது என்று தெரியாது. ஆனால் இன்று வலுவாக அமைந் திருப்பதைக் காண்கின்றோம். சங்கப்பாட்டு இடைக் காலத்திலே 9, 10 ஆம் நூற்றாண்டு வரையிலே வந்த நூல்கள் என்பவற்றில் விநாயக வணக்கம் சொல்வ தாகக் காணப்படவில்லை. அதற்குப் பிறகு வந்த நூல்கள் எல்லாம் விநாயக வழிபாட்டோடுதான் தொடங்குகின்றன. கந்தபுராணம் பாடவந்த பெருமகனார் 'திகட சக்கரச் செம்முகம்' என்று

தொடங்குகிறார். இந்த விநாயக வழிபாடு தமிழகத்திலே வலுவாக வேரூன்றி விட்டது. மிகச் சிறந்த கொள்கை, கருத்து என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விநாயகப் பெருமான் வழிபாடுகள் தோன்றினாலும், இது பற்றிய கதைகள் நிரம்ப தோன்றியிருக்கின்றன என்பதும் உண்மை. பௌராணிகர்கள் கிராமங்களிலேயிருந்து மக்களைக் கவருவதற்காக எத்தனையோ கதைகளைப் பேசியிருக்கிறார்கள். அந்தக் கதைகளில் பல அவர்களுடைய கற்பனைகளில் தோன்றியவை ஆகும். இப்படிப் பல்வேறு கதைகள் இருந்தாலும் இக் கதைகள் அனைத்தும் சில உயர்ந்த தத்துவத்தைக் குறிப்பனவாக இருக்கும். சில மிக மட்டமானவையாக இருக்கும். இம்முறையிலே விநாயகப் பெருமானுடைய தோற்றத்தைப் பற்றிய கதைகள் பல எழுந்தன. பொருளாக, மணிகள் கோத்த மாலையில் நடுவே நூல் இருப்பது போல் இருக்கின்ற ஒரு கருத்து. உயிர்கள் எப்போது துன்பத்தை அனுபவிக்கின்றனவோ உயிர்களுடைய வாழ்க்கைக்கு எப்போது இடையூறு ஏற்படுகின்றதோ, அப்பொழுது அதைப் போக்குவதற்கு விநாயகப் பெருமானுடைய திருவருளை நாடினால் நிச்சயமாக அந்த இன்னல்கள் இடையூறுகள் நீக்கப்படும் என்பதுதான், இக்கருத்து எல்லாக் கதைகளிலும் நடுவே இருப்பதைக் காண்கின்றோம். இனி விநாயகப் பெருமான் ஒரு கொம்பை ஒடித்திருப்பதைக் காண்போம். அதற்காக ஒரு கதை தோன்றிற்று. மகாபாரதத்தை வியாசர் சொல்ல மாமேரு மலையில் எழுதுவதற்காக எழுத்தாணியாக விநாயகர் தம்முடைய தந்தங்களில் ஒன்றை ஒடித்துப் பயன்படுத்தினார் என்பது அது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது இந்த நாட்டிலே விநாயக வழிபாடு, 'தனக்கென்று ஒரு தலைவன்

இல்லாதவன்' என்ற பரம்பொருளின் வழிபாடு, மக்களுடைய வளர்ச்சிக்கு இடையூறுகள் எங்கே எப்போது எந்த வடிவில் தோன்றினாலும் அவ்வ அனைத்தையும் போக்குவதற்கு விநாயகப் பெருமானுடைய உதவியை நாட வேண்டும் என்ற கருத்தை நம்மவர்கள் வலுவாகக் கொண்டிருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது.

## 6

# மகா மந்திரம்

*இன்றைக்கு 163 ஆண்டுகளுக்கு முன்னர் இத்தமிழகம் செய்த தவப்பயனாக ஒரு மாபெரும் சித்தர் இந்நாட்டில் தோன்றினார்.*

வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட
மரபினில் யான் ஒருவன் அல்லனோ

*என்று பிற்காலத்தில் அவரே தன்னைப்பற்றிச் சொல்லிக் கொள்ளுகிறார் என்றால், ஏதோ புதிதாக இந்த நாட்டிலே திடீரென்று முளைத்தவர் என்று யாரும் தயவு செய்து நினைத்துவிடக் கூடாது. வாலாயமாகப் பழகி வருகிற இந்த நாட்டில் ஒரு மாபெரும் மரபில் தோன்றிய பெரியவர் அருட்பிரகாச வள்ளலார் என்று அன்போடு அழைக்கப்படுகின்ற இராமலிங்க வள்ளலார்.*

*சங்க காலத்திலே தோன்றி இவருடைய காலம் வரையில் இருந்த பெரியவர்களைப் பார்ப்போமே யானால் ஒரு ஏகாக்ரக சித்தத்தோடு ஒரு குறிக் கோளை நோக்கிச் செல்லுகின்ற சித்தர் பரம்பரையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றியவர் இவர் என்பதை அறிய முடிகின்றது.*

*மிகப் பழையதாகிய திருமுருகாற்றுப்படை ஒளியை மிகப் பெரியதாக*

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு

*என்று பேசும்.*

*ஏழாம் நூற்றாண்டிலே தோன்றிய திருநாவுக்கரசர்*

சொற்றுணை வேதியன் சோதி வானவன்

*என்று சொல்லுவார்.*

*அவரை அடுத்து வந்த மாணிக்கவாசகர்*

சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே

*என்று பேசுவார். அதனையும் அடுத்து வந்த திருவிசைப்பாக்காரர்*

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே

*என்று பேசுவார்.*

*அவரையும் அடுத்து, கிட்டத்தட்ட நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் வந்த தாயுமானவப் பெருந் தகையாகிய சித்தர்*

அங்கிங் கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தி ஆகி, அருளொடு நிறைந்த தெது ?

*என்று சொல்லுவார் என்றால் சங்ககாலம் தொடங்கி இதுவரையிலே இறைப்பொருளை நாடிச் சென்ற பெரியோர்கள் அனைவரும் ஒளியாகவே இறைப் பொருளைப் பேசுகின்றதைக் காணுகின்றோம். அதே மரபில் வந்தவர் ஆதலால் வள்ளற்பெருமான் 'அருட்பெருஞ்சோதி' என்ற அற்புதமான தொடரை இறைவனுக்குச் சூட்டி மகிழ்கின்றார்.*

இதில் ஒரு சிறப்பு என்னவென்றால் இது வரையில் பேசுகின்றவர்கள் 'ஒளி' என்றுதான் சொல்லிக் கொண்டு வந்தார்கள். முதன் முதலாக 'எங்கும் ப்ரகாசமாய் அருளொடு நிறைந்தது' என்பதாக அருளை அந்த ஒளிக்கு அடையாகச் சேர்த்த பெருமை தாயுமானவப் பெருந்தகையைச் சேர்ந்ததாகும். அதனை அடியொற்றி வந்தவராகிய வள்ளற்பெருமான் 'அருட்பெருஞ்சோதி' என்ற ஒரு அற்புதமான சொற்றொடரைத் தருகின்றார். அருளொடு நிறைந்திருக்கிற பெரும் சோதி வடிவானவன் பரம்பொருள் என்ற கருத்தைப் பேசிய பெருமை அவருக்குரியதாகும்.

சித்தர்களுக்குத் தனியான சில சிறப்புகள் உண்டு. ஏனையோரைப் போல கல்வி முதலியவற்றை வரன்முறையாகக் கற்று பாடல்கள் எழுதியது இல்லை. எந்தப் பிறப்பிலேயோ செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து முடித்துவிட்டு இறுதியாக இந்தப் பிறப்பிலே எல்லாவகையான சித்திகளும் கைவரப் பெற்ற சித்தர்களாகத் தோன்றி மலர்கின்றார்கள். எனவே ஏனையோரைப் போல கல்வி முதலியவற்றை வரன்முறையாகக் கற்கவேண்டிய தேவை இவர்களைப் பொறுத்தமட்டில் இருக்கவில்லை. ஆனால் வரன் முறையான கல்வி இல்லையே தவிர

கற்பனவும் இனி அமையும்

என்று சொல்லுகின்ற முறையிலே எந்த அளவுக்கு எந்தத் துறையில் அறிவு செல்லக்கூடுமோ அந்த அளவுக்கு அந்தந்தத் துறையில் அறிவு செல்லக் கூடிய பேராற்றல் படைத்த பெருமக்கள் ஆவார்கள் இவர்கள்.

இந்த நாட்டைப் பொறுத்த மட்டிலே வள்ளல் பெருமான் 19-ஆம் நூற்றாண்டிலே தோன்றினார் என்றால், திருஞானசம்பந்தர், நம்மாழ்வார் முதலியவர்கள் 7-ஆம் நூற்றாண்டிலும், இராம கிருஷ்ணர் முதலானவர்கள் வடநாட்டைப் பொறுத்த மட்டிலே, நூறு, நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னரும், இன்னும் பழைய அடிப்படையில் செல்வோமேயானால் ஏசு, குமரகுருபரர் ஆகியவர்களும் வரன்முறையாகக் கல்வி பயிலாது வந்த பெரியவர்கள் ஆவார்கள். ஏனையோரைப் போல கல்வி பெறாமலேயே கல்வியினால் பெற வேண்டிய அத்துணைச் சிறப்புகளைப் பெறுகின்ற சிறப்பு இவர்களைப் பொறுத்ததாகும். அத்தகைய மரபிலே வந்தவராகிய வள்ளல்பெருமான் இப்போது தொடக்கத்திலே அதாவது இளம்பிராயத்திலேயே,

தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்

கந்தவேளைப்பற்றிப் பாடுகின்றார். பின்னே அவரது வாழ்க்கை எப்படி மலரப்போகிறது என்பதை அரும்பு ஆக இருக்கின்ற அந்தப் பருவத்திலேயே, அந்தப் பாடலின் மூலம் காட்டுகின்றார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வள்ளல் பெருமான் தோன்றுகின்ற காலத்திலே இந்தத் தமிழ்ச் சமுதாயம் எப்படி இருந்தது என்பதையும் ஒரு பாடலில் சொல்லுகின்றார்.

பரம்ஏது, வினைசெயும் பயன்ஏது
பதிஏது, பசுஏது, பாசம் ஏது,
பத்திஏது அடைகின்ற முத்திஏது
அருளேது பாவபுண்ணியங்களேது

என்று, வாயில் வந்ததை எல்லாம் பேசிக் கொண்டு, அதையே வாழ்க்கை என்று 'சுகமே கைகண்ட பலன்'

*என்று நினைக்கின்ற மனித சாதி நிறைந்திருந்தது. அப்படிப்பட்ட சமுதாயத்திலே தோன்றுகின்ற அந்த இளம் குருத்து என்ன நினைக்கின்றது? வாழ்க்கை கேவலம் இந்த முறையிலே செலுத்தப்பட வேண்டிய ஒன்று அன்று என்று நினைக்கின்றது. அதனுடைய பயனாக ஒருசிலவற்றை ஒதுக்கி, ஒருசிலவற்றை ஏற்றுக் கொண்டு ஒரு குறிக்கோளுடன் செல்ல வேண்டியது தான் வாழ்க்கையின் அடிப்படை என்பது உணர்ந்து அதனையும் பேசுகின்றார்.*

*ஒதுக்கப்பட வேண்டியவற்றை முதலில் சொல்லுகின்றார்.*

காமஉட் பகைவனும் கோபவெங் கொடியனும்
கனலோப முழு மூடனும்
கடுமோக வீணனும் கொடுமதம் எனுந் துட்ட
கண்கெட்ட ஆங்காரியும்
ஏமம் அறு மாச்சரிய விழலனும் கொலையென்
றியம்புபா தகனுமாம்இவ்—
எழுவரும் இவர்க்குற்ற உறவான பேர்களும்
எனைப் பற்றிடாமல் அருள்வாய்

*இதிலே சிறப்பு என்னவென்றால் ஒரு மனிதன் முன்னேற வேண்டுமானால் முதலில் தன் மனத்தை தூய்மையுடையதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். மனத்திலே குடியிருக்கின்ற இந்தக் கொடியவர்கள் அனைவரையும் ஒதுக்கினாலொழிய நன்மை உள்ளே புக இடமில்லை. பட்டினத்துப்பிள்ளை அற்புதமாகப் பாடுவார்.*

> 'ஐந்து பொறிகளாகிய யானைகளைக் கட்டி, அந்த யானைகள் அசிங்கப்படுத்திய என் மனத்தை இப்பொழுது தூய்மைப் படுத்தி, அப்பாழ் அறையை உனக்குப் பள்ளியறை ஆக்கினேன். இறைவனே வந்து தங்குவாயாக'

என்று பேசுகின்றார். அந்த மரபிலே வந்தவர் ஆகையால் வள்ளல் பெருமானும் 'இந்தப் பகைவர்கள் பற்றிடாமல் வந்து அருள்வாய்' என்று பேசுகின்றார். இத்துணைபேரையும் ஒருசேர நின்று தானாகவே வெல்வது என்பது இயலாத காரியம். இந்தக் கருத்தும் நம்முடைய நாட்டைப் பொறுத்த மட்டில் பலர் அருளிய கருத்துத்தான்.

'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்று பாடுவதுபோல இப்போது இறைவனைப் பார்த்து, இக் கொடியவர்கள் என்னிடம் வாராமல் அருள்புரிய வேண்டும் என்று கேட்கின்றார்.

அப்படியானால் எதிர்மறை என்று சொல் கிறோமே **நெகேஷன்** இவை எல்லாம் கூடாது என்று சொல்லிவிட்டுப் போனால் அது சிறப்புடையது ஆகாது. எனவே இந்தக் கொடியவர்களை எல்லாம் வெளியேற்றிவிட்டு, உள்ளே வரக்கூடியவர்கள் யார் யார் என்றும் பேசுகின்றார்.

நிலைஉறும் நிராசையாம் உயர்குலப் பெண்டிரொடு
நிகழ்சாந்த மாம்புதல்வனும்
நெறிபெறும் உதாரகுணம் என்னும்நற் பொருளும்
மருள்நீக்கும் அறிவாம் துணைவனும்

மலைவறு நிராங்கார நண்பனும் சுத்தமுறு
மனம் என்னும் நல்ஏவலும்
வருசகல கேவலம்இ லாதஇட மும்பெற்று
வாழ்கின்ற வாழ்வருளுவாய்

எனவே ஒருசிலவற்றை உள்ளத்தைவிட்டு வெளியே எடுக்க வேண்டுமென்று பேசிய பெருமானார், இப்போது என்னென்ன, எவரெவர்களெல்லாம் உள்ளே வரவேண்டுமென்று நினைக்கின்றார்.

இந்த நற்பண்புகள் வந்து குடியேறிய மனத்திலே கொடிய எண்ணங்கள் நசிகின்றன. அதாவது ஆண்டவனை அடையவேண்டுமென்ற தாகம், மிக விரைவாக, வலுவாக வளர்கின்றது. அப்படி வளர்கின்ற காலத்திலே எப்போதும் இறைவனைக் காணவேண்டுமென்ற துடிப்பிலே ஒரு அற்புதமான பாடல் வருகின்றது.

பண்ஏறும் மொழி அடியர் பரவி வாழ்த்தும்
பாதமலர் அழகினை இப்பாவி பார்க்கில்
கண்ஏறு படும்என்றோ கனவி லேனும்
காட்டென்றால் காட்டு கிலாய் கருணைஈதோ

என்று நொந்து பாடுகின்றார். "பெருமானே, உன்னுடைய திருவடிகளைக் கனவிலேயாவது பார்க்க வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். ஆனால் என்னுடைய துரதிருஷ்டம் என் கண் பார்த்தால் அந்தத் திருவடிக்கு கண்ணேறு பட்டுவிடும் என்ற எண்ணத்தினாலா திருவடிமலர்களைக் காட்ட மாட்டேன் என்று சொல்லுகிறாய்" என்று நினைந்து வருந்துகிற வருத்தத்தை, அந்த இளம்பிராயத்திலேயே அவர் மனம் எந்த வழியிலே செல்கிறது, என்பதை நாம் அறிய முடிகிறது.

இனி மற்றொரு சிறப்பையும் திருவருட்பாவை ஒருமுறை கற்றவர்களும் அறிய முடியும். ஆறு திருமுறைகளாக அப்பெருமகனாருடைய பாடல்கள் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. முதலாம் திருமுறையில் இருந்து ஆறாம் திருமுறை வரையில் உள்ள பாடல்கள் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளிலே அப்பெருமகனார் செய்த பாடல்களாகும். இதில் தனிச் சிறப்பு என்ன வென்றால் இந்த ஆறு திருமுறைகளையும் வரன்

முறையாகக் கற்றாலே அவருடைய மன வளர்ச்சியை நாம் அறிந்துகொள்ள முடியும்.

இலக்கியத் திறனாய்வாளர்கள் மேலை நாட்டைப் பொறுத்தமட்டில் சொல்லுவார்கள். வேர்ட்ஸ்வொர்த் என்ற ஆங்கிலக் கவிஞன் ப்ரிலேவ் என்ற பகுதியை எழுதியிருக்கிறான். அந்தக் கவிஞனுடைய வளர்ச்சியை அந்த ஒரு பகுதியில் முழுமையாகக் காணமுடிகிறது என்று சொல்லு வார்கள்.

அதுபோல அருட்பிரகாச வள்ளலார் என்று சொல்லப்படுகின்ற இராமலிங்க சுவாமிகளுடைய வளர்ச்சியை, தொடக்கத்திலிருந்து இறுதிவரை அறிய வேண்டுமானால், வரலாற்றைப் பாராமலே கூட, முதலாந் திருமுறையிலிருந்து ஆறாம் திருமுறை வரை பார்ப்போமேயானால் அந்த வளர்ச்சியை நன்றாக அறிந்துகொள்ள முடியும்.

முதல் திருமுறையைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். 'பண்ணேறும் மொழி அடியார் பரவி வாழ்த்தும் பாதமலர் அழகினை' பார்க்க வேண்டுமென்று அவர் மனம் விரும்புகிறது.

மனித மனத்திற்குள்ள தனிச் சிறப்பு என்ன வென்றால், எவ்வளவு தீவிரமாக ஒன்றைப் பற்றிச் சிந்தித்தாலும், விரைவிலே அதை விட்டு விட்டு மற்றொன்றிலே தாவுகின்ற தன்மைதான் இதன் இயல்பு. 'மனமெனுமோர் பேய்க் குரங்கே நீதான்' என்று சொல்லுவார்.

எனவே குரங்குத் தன்மை படைத்த மனம் இருக்கிறதே, அது எப்பேர்ப்பட்ட பெரியவர்களையும் சுழற்றிவிட்டு விடுகின்ற பேராற்றல் உடையது. அந்த அடிப்படையில் ஒவ்வொருவரும் அன்றாட வாழ்க்கை

யில் பார்க்கின்றோம். நல்ல காரியத்தைச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறவர்கள் கூட 'இன்று இல்லாவிட்டால் நாளை செய்து கொள்ளலாம். இப்போது அதற்கு என்ன அவசரம்?' என்று நினைந்து நாளைத் தள்ளிப்போட்டுக் கொண்டே போவதைத் தான் காணுகின்றோம். வள்ளல் பெருமான் தம் குருவாக ஏற்றுக்கொண்ட திருஞானசம்பந்தப் பெருமான் சொல்லுவார்,

இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்

என்று. இன்றைவிட நாளை நல்லது என்று நினைக்கின்ற இந்த மனோ நிலையை ஒதுக்கி, உடனடியாக குறிக்கோளை நோக்கிச் செல்லுக என அப்பெருமான் கட்டளையிட்டதை இங்கே வள்ளல் பெருமானும் பாடுகின்றார்.

நாளைஏகியே வணங்குதும் என
நாளைக் கழிக்கின் றோம்

என்று. மனித மனத்தைப் பார்த்துப் பேசுகின்றார். 'நாளைக்குப் போகலாம், நாளைக்குப் போகலாம் என நினைத்து, நினைத்து நாளைக் கழிக்கின்றாய் ஏழை நெஞ்சமே, இப்போது உன்னோடு வாழ வேண்டியிருக்கிறதே' என்கிற நிலையில் அந்தப் பாடல் அமைந்திருப்பதைக் காணுகின்றோம்.

இனி இப்பெருமகனாரின் வாழ்க்கையை, இந் நாட்டிலே இவருக்கு முன்னர் வாழ்ந்த மூவர் முதலிகளாகிய தேவார ஆசிரியன்மார்களும், திருவாசகம் செய்த மாணிக்கவாசகரும் பெரும் அளவில் பாதித்திருக்கின்றார்கள் என்பதை திருமுறைகளைப் பார்க்கின்றவர்கள் அறிந்து கொள்ள முடியும்.

முதல் திருமுறையிலிருந்து ஐந்தாம் திருமுறை முடிய மூவர் முதலிகளாகிய திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியவருடைய செல்வாக்கும் இவர்களைவிட அதிகமாக மணி வாசகப் பெருமானுடைய செல்வாக்கும் எந்த அளவிலே அவரைத் திருத்தி அமைத்திருக்கிறது என்பதைப் பார்க்க முடியும்.

சுந்தரர் தேவாரத்தில் ஒன்று சொல்லுவார். "பெருமானே இதற்கு முன்னர் வாழ்ந்தவர்களுடைய வரலாற்றைப் பார்த்தேன். மார்க்கண்டனுக்காக நீ மாபெரும் காரியத்தைச் செய்தாய்.

அந்த ணாளன்உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வினாய்க் கின்றுன் வண்மைகண் டடியேன்
எந்தை நீஎனை நமன்தமர் நலியின்
இவன்மற் றென்னடி யான்என விலக்கும்
சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே

என்று சொல்லுவார். இந்தப் பாடலிலே வள்ளல் பெருமான் மிகமிக ஈடுபட்டிருக்கிறார் என நினைக்க வேண்டியிருக்கிறது. அந்தப் பாடலிலே ஈடுபட்டதோடு மட்டுமல்லாமல் திருக்கச்சூர் ஆலத்தூர் என்ற இடத்திலே சுந்தரர் பசியால் வாடுகின்ற நேரத்தில் இறைவன் பிச்சையெடுத்துக் கொண்டுவந்து அவருக்கு உணவருத்தினான் என்று சுந்தரர் வரலாறு பேசுகின்றது. அந்த வரலாற்றிலே ஈடுபட்ட வள்ளல் பெருமான் இங்கே பாடுகிறார்.

அண்மை யாகும்சுந் தரர்க் கன்று கச்சூர்
ஆலக் கோயிலில் சோறிரந் தளித்த

வண்மை கேட்டிங்கு வந்தடைந் தேற்றால்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்

*ஐயா! பெருமானே! சுந்தரருக்கு அன்று கச்சூர் ஆலத்தே - உலகம் முழுவதையும் படைத்தவனாகிய நீ, வீடுதோறும் சென்று பிச்சை எடுத்துக் கொண்டு வந்து உணவு தந்தாய். அடியார் குறை அன்று தீர்த்ததினாலே எனக்கும் செய்வாய் என்று அறிந்த காரணத்தினால் உன்திருவடி வந்தடைந்தேன்.*

வாய்திறந் தொரு வார்த்தையும் சொல்லீர்

*பெருமானே இவ்வளவு வருந்திக் கேட்கின்றவனாகிய எனக்கு அன்போடு ஆதரவு தருகின்ற வகையிலே ஒரு வார்த்தையாவது சொல்லக் கூடாதா?' என்று வருந்துகிறார்.*

*ஒரு வார்த்தையாவது சொல்லக் கூடாதா என்ற இந்த எண்ணம் கூட, காரைக்கால் அம்மை யாருடைய பாடலில் இருந்து வள்ளல் பெருமானார் பெறுகின்றார் என நினைக்க வேண்டியிருக்கிறது. வள்ளல் பெருமானுக்கு ஏறக்குறைய 1300 ஆண்டு களுக்கு முன்னர் வாழ்ந்த காரைக்கால் அம்மையார் பேசுகிறார்.*

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறி பணியா ரேனும்

*'இந்த வழியில் போ' என்று ஒரு வார்த்தைகூடச் சொல்லத் தயங்குகிறாரே' - என்ற அதை அப்படியே வள்ளல் பெருமானின் நினைவில் வர இங்கே பேசுகிறார்.*

வண்மை கேட்டிங்கு வந்தடைந் தேற்றால்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்

என்று சொல்லி வருந்துகின்ற இயல்பைக் காண முடிகின்றது.

இதனுடைய அடுத்த பரிணாமமாக நாம் காணுகின்றது - வள்ளல் பெருமான் விக்கிரக வழிபாட்டிலே பெரிதும் ஈடுபட்டார் என்பதை அறிய முடிகிறது. ஏன் இதனை இவ்வளவு வலியுறுத்திப் பேசுகிறேன் என்றால் இந்த விக்கிரக வழிபாட்டில் இவ்வளவு வலுவாக இருந்த அவர் - அவரது வளர்ச்சி முதிர முதிர ஆறாம் திருமுறை பேசுகின்ற காலத்திலே எல்லாவற்றையும் உதறி அடுத்துச் செல்லுகின்ற பெருவளர்ச்சியைக் காண முடிகின்றது. அங்கேதான் தம்முடைய முத்திநெறி வாழ்க்கையைச் சொல்லிச் சென்றார்.

இங்கே 'திங்கள் விளங்கும்' என்பதாக சிவனுடைய வடிவத்தை உறுப்பு உறுப்பாக அமைத்துப் பாடுகின்ற பாடல்களைக் காண முடிகின்றது என்றால் இந்த விக்கிரக இறைவழிபாடு ஒருவருடைய வளர்ச்சிக்கு தொடக்கத்தில் துணையாக இருக்கிறது என்பதை இந்த நாட்டவர்கள் நம்பினார்கள். மாபெரும் வேதாந்தம் பேசிய விவேகானந்தரும் கூட விக்கிரக வழிபாடு தேவை என்பதைத்தான் சொன்னார். அதுவும் தொடக்கத்திலே மனம் சென்று குவிவதற்கு விக்ரக வழிபாடு தேவை என்பதை வள்ளல் பெருமானுடைய வாழ்க்கையிலேயே நாம் காண முடிகின்றது.

•

இனி விக்கிரகத்தைப் பற்றி விரிவாகப் பேசிய அந்தப் பெருமகனார் சைவ சமயத்தில் ஈடுபட்டு, அதற்குரிய குறிகள், அடையாளங்கள் ஆகியவற்றிலும் ஈடுபட்டிருக்கிறார்.

கடவுள் நீறு இடாக் கடையரைக் கண்காள்
கனவிலேனும் நீர் காணுதல் ஒழிக

என்று பேசுகின்றார். இறைவனுக்குரியதாகிய திரு நீற்றினை இடாதவர்களை மறந்தும்கூட கண்விழித்துப் பார்க்காதே என்று பேசுகின்றார்.

அடவுள் மாசுதீர்த் தருள்திரு நீற்றை
அணியும் தொண்டரை அன்புடன் காண்க

'யாரையாவது காண வேண்டுமேயானால், அவர்கள் திருநீறு அணிந்தவர்களாக இருத்தல் வேண்டும். திரு நீறு அணியாதவர்களைக் காணவே கூடாது' என்று பேசுகின்ற ஒரு வளர்ச்சியைக் காணுகிறோம் என்றால் விக்கிரக வழிபாடு, சைவ சமயம், சைவ சமயத்தின் அடிப்படையில் இருக்கின்ற திருநீறு முதலானவற்றுக்கு எல்லையில்லாத மதிப்புத் தருகின்ற வளர்ச்சியைக் காணுகின்றோம்.

இந்த வளர்ச்சி எங்கே கொண்டு போய் விடுகிறது வள்ளல் பெருமானை என்றால் ஒரு பூரணத் தொண்டராக, அடியாராக அவரைக் கொண்டு செலுத்துகின்றது. இந்த நாட்டைப் பொறுத்தவரையில் பெரியபுராணம் கற்றவர்கள் அனைவரும் அறிவர், தொண்டர்களுக்கும், அடியார்களுக்கும் ஒரு பொது இலக்கணம் வகுக்கப்பட்டிருந்தது இந்த நாட்டிலே.

தொண்டர்கள் என்று சொன்னவுடனே ஏதோ இந்த உலகத்தையும் குடும்பம் முதலானவற்றை யும் துறந்து காட்டிற்குச் சென்று கனசடையிட்டு வாழவேண்டுமென்று தமிழர்கள் ஒருக்காலும் விரும்பியதில்லை. அதிலும் சைவ சமயத்தைப் பொறுத்த மட்டில் இத்தகைய துறவை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேயில்லை. இங்கே இருந்துகொண்டு

தங்கள் கடமைகளைச் செய்துகொண்டு, அதே நேரத்தில் பற்றற்ற வாழ்க்கை வாழ்பவர்களாக இருப்ப வர்களையே தொண்டர்கள் என்று கருதினார்கள்.

தொண்டர்களுக்கு இலக்கணம் சொல்ல ஒரே ஒருவர்தான் தோன்றினார் இந்த நாட்டிலே. அவர் சேக்கிழார். அவர் சொன்னார்,

ஆரங் கண்டிகை ஆடையும் கந்தையே

அவர்கள் அணிந்திருக்கிற ஒரே ஒரு ஆபரணம் ருத்திராக்கம். அவர்கள் அணிந்திருக்கிற ஒரே ஆடை கந்தலாடை.

ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்

ஓடும் செம்பொன்னும் அவர்களைப் பொறுத்த மட்டில் ஒன்றாகவே காட்சி அளிக்கின்றன. அதைவிட ஒருபடி மேலே சென்று சொல்லுகிறார்.

கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

'ஆண்டவனே, இந்த இடம் இருந்து, இந்த உலகத்திலே இருந்து அன்றாடம் உன்னை வழிபடுவதைத் தவிர மோட்சமே கிடைப்பதானாலும் வேண்டா' என்று பேசுகின்ற வீரம் படைத்தவர்கள் என்று பேசுகிறார் சேக்கிழார்.

அந்தப் பெரிய புராணத்திலும், சேக்கிழா ரிடத்திலும் எல்லையில்லாது ஈடுபட்டவராகிய வள்ளல்பெருமான் அப்படியே அந்தக் கருத்தை வாங்கிக் கொள்கிறார்.

அணிகொள் கோவணக் கந்தையே நமக்கிங்
கடுத்த ஆடை

அடுத்த என்றால் பொருத்தமான என்பது பொருள். இதில் சிறப்பு என்னவென்றால் 19-ஆம் நூற்றாண்டில் இந்தத் தமிழகத்தைப் பொறுத்த மட்டிலே உடைக்குச் சிறிது மதிப்புக் கொடுக்கப்பட்ட காலங்கூட ஆகும். ஆடையில்லாதவர்கள் அரைமனிதர்களாகக் கருதப் பட்ட காலத்திலே சென்னையில் இருந்து இவற்றை யெல்லாம் கண்ட வள்ளல்பெருமான் - இப்படி மன வளர்ச்சி கொள்ளுகின்ற காலத்திலே,

அணிகொள் கோவணக் கந்தையே நமக்கு அடுத்த ஆடை

என உலகத்திற்குச் சொல்வதற்குப் பதிலாக தன் மனத்தையே நோக்கிப் பேசுகிறார். அதற்கு இன்னும் ஒருபடி மேலே சென்று,

> கணிகொள் மாமணிக் கலன்கள் மேலே சென்று
> கண்ணுள் மாமணிக் கண்டிகை கண்டாய்

மாமணிக்கலன்களை - வைரம் முதலான கற்களி னாலே செய்யப்பட்ட ஆபரணங்களைப் பூண வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். ஆனால் இவரைப் பொறுத்த மட்டிலே மாமணிக் கலன்கள் எவை தெரியுமா?

> கடவுள் கண்ணுள் மாமணிக் கண்டிகை

நம்முடைய இறைவனுடைய கண்டிகை எனச் சொல்லப்படுகிற ருத்திராட்சம் ஒன்றுதான், அற்புத மான ஆபரணமாகும் என்று பேசுகின்ற முறையிலே இந்த வளர்ச்சியின் அடுத்தபடியை நாம் காண முடிகின்றது. விக்கிரகத்தின் வழிபாட்டில் ஈடுபட்டார். திருநீற்றில் ஈடுபட்டார். ருத்திராக்கத்தில் ஈடுபட்டார்.

இது ஏதோ வாழ்க்கையிலே காலையிலோ, மாலையிலோ சிந்திக்கப்பட வேண்டிய ஒன்று என்ற

நிலைமாறி 24 மணிநேரமும் இந்த நினைவாக இருக்கும் போது அவரையும் அறியாமல் அந்தத் துறவு அவருள்ளே புகுகின்றது. இந்தத் துறவு மனப்பான்மை தான் வள்ளல் பெருமானை மாபெரும் சித்தராக மாற்றுவதற்குக் காரணமாக இருக்கின்றது என் பதனைப் பின்னே பார்க்கின்றோம்.

இனி இதுவரையிலே உருவவழிபாடு, அதற் குரிய சின்னங்களைப் பற்றிப் பெரிதாகப் பாடிய வள்ளல்பெருமான் 'நெஞ்சறிவுறுத்தல்' என்ற பகுதி யிலே மற்றொருபடி மேலே செல்லுகிறார். அங்கே விக்கிரகம், அதற்குரிய அடையாளம், அதற்குரிய குறியீடுகள், அதனை வழிபட வேண்டிய முறை என்பனவற்றை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துவிட்டு, இறைப்பொருளை தத்துவ ரீதியாக சிந்திக்கின்ற இயல்பைக் காணுகின்றோம்.

அதுவாய் அவளாய் அவனாய் அவையும்
கதுவாது நின்ற கணிப்பாய்

என வள்ளல்பெருமான் பேசுகின்ற பேச்சு சிவஞான போதத்தை நினைவுறுத்துகின்றது.

உலகத்தில் எத்தனையோ சமயங்கள் தோன்றி இறைப்பொருளுக்கு இலக்கணம் சொல்ல வந்தன. ஆண்டவனைத் தந்தை என்று சொல்லும்போது பெண்மையிலிருந்து விடுபட்டவனாகிவிடுகிறான். தாய் என்று சொல்லும்போது ஆண்மையிலிருந்து விடுபட்டவனாகிவிடுகிறான். இந்த அடிப்படையை யெல்லாம் மனத்திலே கொண்ட தமிழர்கள் அற்புதமாகப் பாடினார்கள்.

**அவன் அவள் அது**

என்று சிவஞான போதம் தொடங்குகிறதே, அதிலே ஈடுபட்ட காரணத்தினாலே வள்ளல்பெருமான்,

> அதுவாய் அவளாய் அவனாய் அவையும்
> கதுவாது நின்ற கணிப்பாய்

என்று பேசிக்கொண்டு போகிறார்.

இனி அந்த நெஞ்சறிவுறுத்தல் வளர வளர, இவருடைய வளர்ச்சியையும் அதிலே காண முடிகிறது.

> மற்றிருந்த வானவரும் வாய்ந்தசைக்கா வண்ணமொரு
> சிற்றுரும்பை நாட்டிநின்ற சித்தனெவன்

ஒரு துரும்பை எடுத்துப்போட்டு, இதுதான் மூலப் பொருள் என்று உபதேசத்தைச் செய்கின்ற சித்தன் எவன் என்று குருவணக்கமாக சிலவற்றைப் பேசிக் கொண்டு செல்கிறார். அந்த 'நெஞ்சறிவுறுத்தல்' என்ற பகுதி முழுவதும் அவருடைய நெஞ்சே அவரை வளர்ச்சிக்குக் கொண்டு செலுத்துகிறது என்பதை அறிவதற்குப் பேருதவியாக இருக்கிறது.

> நாம்தேடா முன்னம் நமைத்தேடிப் பின்புதனை
> நாம்தேடச் செய்கின்ற நற்றாய்காண்

என்கிறார். இறைவனையே குருவாகக் கொள்கின்ற இயல்பு இந்த நாட்டுக்கு மிகமிகப் பழமையான பழக்கமாகும். அந்த குருவுக்கு இலக்கணம் பேசுகிறார் இங்கே. நாம் தேடா முன்னம் நமைத்தேடி வருகின்றானாம்.

பொதுவாக உலகத்திலே நாமாக ஒரு பொருளைத் தேடிச் சென்றால் அது நம்முடைய மனத்தளவிலே தான் நிற்கும். நம்முடைய மனம், கற்பனை, அறிவு என்பன எந்த அளவுக்கு விரிந்திருக் கின்றனவோ அந்த அளவுக்கேற்ற பொருளைத்தான்

நாம் காண முடியுமே தவிர இதனைக் கடந்து நிற்கின்ற பொருளை நம்முடைய மனம் காணுதல் இயலாது. எனவேதான் விக்கிரக வழிபாட்டை முதலில் வைத்தார்கள். இந்த அடிப்படையில் சொல்ல வேண்டு மானால் குரு நம்மைத் தேடி வரவேண்டுமே தவிர நாம் குருவைத் தேடிச் செல்வது என்பது ஏலாத காரியம். ஏனென்றால் நம்முடைய அறிவுக்கு அப்பாற் பட்ட ஒரு எல்லையில் இருக்கின்ற குருவை நாம் கண்டுகொள்வதும் இயலாத காரியம். கண்டால் அதனை ஏற்றுக்கொள்வதும் இயலாத காரியம். எனவே நாம் குருவைத் தேடிச் செல்வதைவிட குரு நம்மைத் தேடி வருகிறான் என்கிற அற்புத வளர்ச்சியை வள்ளல்பெருமான் இங்கே சுட்டுகிறார்.

அப்படி குரு நம்மைத் தேடி வரும்போது பார்த்த மாத்திரத்திலேயே, நம்முடைய பக்குவத்தை அறிந்து, நமக்கு எது தேவையோ அதனைச் செய்கிறான். நாம் குருவைத் தேடிச் செல்லும்போது நம்மைப் பற்றி நாம் ஏதேதோ நினைத்துக் கொண் டிருக்கிறோம். ஆனால் நம்முடைய பக்குவம் என்ன, தரம் என்ன என்பதை நாம் அறிய முடியாது. எனவே அதற்கேற்ற குருவைத்தான் நாடிச் செல்ல முடிகின்றது. அதற்குப் பதிலாக குரு நம்மைத் தேடி வரும்போது நம்முடைய தகுதி, பரிபக்குவம் ஆகியவற்றை ஒருகணம் பார்த்தமாத்திரத்திலே முடிவு செய்து விடுகிறார். ஆகையால் அவன் நமக்கு வேண்டிய வற்றைச் செய்கிறான் என்ற கருத்தைப் பேசுகின்றார். 'நாம் தேடா முன்னம் நமைத் தேடி வருகின்றான். பின்பு என்ன செய்கிறான்?

பின்புதனை
நாம் தேடச் செய்கின்ற நற்றாய் காண்

நாம் காண முடியுமே தவிர இதனைக் கடந்து நிற்கின்ற பொருளை நம்முடைய மனம் காணுதல் இயலாது. எனவேதான் விக்கிரக வழிபாட்டை முதலில் வைத்தார்கள். இந்த அடிப்படையில் சொல்ல வேண்டு மானால் குரு நம்மைத் தேடி வரவேண்டுமே தவிர நாம் குருவைத் தேடிச் செல்வது என்பது ஏலாத காரியம். ஏனென்றால் நம்முடைய அறிவுக்கு அப்பாற் பட்ட ஒரு எல்லையில் இருக்கின்ற குருவை நாம் கண்டுகொள்வதும் இயலாத காரியம். கண்டால் அதனை ஏற்றுக்கொள்வதும் இயலாத காரியம். எனவே நாம் குருவைத் தேடிச் செல்வதைவிட குரு நம்மைத் தேடி வருகிறான் என்கிற அற்புத வளர்ச்சியை வள்ளல்பெருமான் இங்கே சுட்டுகிறார்.

அப்படி குரு நம்மைத் தேடி வரும்போது பார்த்த மாத்திரத்திலேயே, நம்முடைய பக்குவத்தை அறிந்து, நமக்கு எது தேவையோ அதனைச் செய்கிறான். நாம் குருவைத் தேடிச் செல்லும்போது நம்மைப் பற்றி நாம் ஏதேதோ நினைத்துக் கொண் டிருக்கிறோம். ஆனால் நம்முடைய பக்குவம் என்ன, தரம் என்ன என்பதை நாம் அறிய முடியாது. எனவே அதற்கேற்ற குருவைத்தான் நாடிச் செல்ல முடிகின்றது. அதற்குப் பதிலாக குரு நம்மைத் தேடி வரும்போது நம்முடைய தகுதி, பரிபக்குவம் ஆகியவற்றை ஒருகணம் பார்த்தமாத்திரத்திலே முடிவு செய்து விடுகிறார். ஆகையால் அவன் நமக்கு வேண்டிய வற்றைச் செய்கிறான் என்ற கருத்தைப் பேசுகின்றார். 'நாம் தேடா முன்னம் நமைத் தேடி வருகின்றான். பின்பு என்ன செய்கிறான்?

பின்புதனை
நாம் தேடச் செய்கின்ற நற்றாய் காண்

அவன் வந்து உபதேசம் செய்து, பின்பு தன்னையே நாம் தேடுமாறு செய்கிறான். எப்படியும் தன்னையே நாம் தேடுமாறு செய்கிறானே, இந்தக் காரியத்தை நாம் முன்னமே செய்தால் என்ன? அது நடைபெறாத காரியம்.

அவன் வழிகாட்டிய பிறகு அந்த வழியிலே சென்று அவனை அடைய முடியுமே தவிர, நாமாகத் தேடிச் சென்றால் அது பெரும்பாலும் நற்பயனை விளைவித்தது இல்லை.

> காலம் அறிந்தே கனிவோடு

இந்த இரண்டு சொற்களும் மிகமிக முக்கியமானவை.

காலம் அறிதல் என்பதனை உலக இயலுக்கே வள்ளுவப் பேராசான் பெருமையாகச் சொல்லுவான். காலம் அறிதல் வேண்டும். இடம் அறிதல் வேண்டும். கேவலம் இந்த உலக இயலுக்கே காலமும், இடனும் அறிய வேண்டுமானால் ஆன்மிக வளர்ச்சியைத் தேடிச் செல்கிறவர்களுக்கு காலமும், இடனும் அறிந்து உபதேசம் செய்தாலொழிய அது பயன்படுவதில்லை. ஆகவே நெஞ்சறிவுறுத்தலில் அற்புதமாக இந்தக் கருத்தைப் பேசுவார்.

> காலம் அறிந்தே கனிவோடு நல்லருள்பால்
> ஞாலம் மிசை அளிக்கும் நற்றாய்காண்

காலம் அறிதல் முக்கியம். அதைவிட முக்கியம் குருவாக வருகிறவனுக்கு நம்முடைய குறைபாடுகளை எல்லாம் ஏற்றுக்கொண்டு, போனால் போகிறான் என்ற கனிவோடு அருள் செய்ய வேண்டிய மனோ நிலை இருக்க வேண்டும். அவனுடைய நிலையை ஒப்பு நோக்க நாம் எங்கோ அதலபாதாளத்தில் இருக்கிறோம். அப்படியானால் நம்மைத் தேடி வந்த

அவன் நமக்கு அருள் செய்ய வேண்டுமானால் எந்த அடிப்படையில் செய்கிறான்? நம்முடைய தகுதி நோக்கியா? நிச்சயமாக இல்லை. தகுதி இல்லா விட்டாலும் செய்கின்றானே ஏன் என்றால் 'கனிவோடு' என்று சொல்லுவார். அருள் காரணமாக பாவம் பிழைத்துப் போகட்டும் என்ற வள்ளன்மை காரணமாக அவன் இந்த அருளைச் செய்கின்றான் என்று அற்புதமாக ஒரு மாபெரும் உண்மையை விளக்கிச் செல்கிறார். குருவாக வந்தவன் அருளைச் செய்கின்ற இடம் - அதிலும் ஒரு பேருண்மை புலப்படுகிறது அவருக்கு. வந்தவன் சொன்னானாம்,

அற்றவருக் கற்ற சிவன்

வள்ளுவப் பேராசான் சொன்னானே, எல்லாவற்றை யும் விட்டுவிட்டு அவனுடைய திருவடியைப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று.

பற்றுக பற்றற்றான் பற்றினை

ஏன் பற்ற வேண்டும்? 'பற்றுவிடற்கு' என்றாலே அந்த அற்புதத்தை காலத்திற்கு ஏற்ற அளவிலே ஓரளவு மாற்றி,

அற்றவருக்கு அற்ற சிவனாம் எனும் பொன்மொழியை

என்று தன்னுடைய நெஞ்சையே பார்த்து, 'குருவாக வந்து இவ்வளவு பெரிய அற்புதத்தை அருளிச் செய்தானே நீ மறந்துவிட்டாயா என்று சொல்வதைப் போல வள்ளல்பெருமான் பேசுவதைக் காண் கின்றோம்.

இப்படி நெஞ்சறிவுறுத்தலில் தொடங்கியது மகாதேவ மாலையிலும் அது விரிந்து செல்கிறது.

முதலில் விக்கிரக வழிபாட்டிலே ஈடுபட்டு இறைவனை உறுப்பு உறுப்பாக வருணித்து,

> திருத்தணிகை மலை வாரேனோ, சாமி உன் அழகைப்
> பாரேனோ

என்றெல்லாம் பாடியவர் அவற்றையெல்லாம் ஒதுக்கி விட்டு தத்துவ உலகத்திலே புகுகின்றார்.

> உலகநிலை முழுதாகி ஆங்காங்குள்ள உயிர் ஆகி

என்று வரிசையாக இலக்கணம் சொல்லிக் கொண்டே போகிறார். அதைப் பார்ப்போமேயானால் அந்த வளர்ச்சியில் ஏறத்தாழ நடுப் பகுதிக்கு வள்ளல் பெருமான் வந்துவிட்டார் என்பதை நாம் அறிய முடிகின்றது. தத்துவரீதியாக இறைவனைப்பற்றி மகாதேவ மாலையிலும், நெஞ்சறிவுறுத்தலிலும் இவ்வளவு விரிவாகப் பேசிய பிறகு மனித மனத்திற்கு ஒரு சிறு வளர்ச்சி ஏற்படத்தான் செய்யும்.

இவ்வளவு அரிய பொருள் இறப்ப இழிந்த நமக்கு நமக்கு அருள் செய்ததே என்றால் அதில் வியப்பு ஒன்றுமில்லை. பெரியவர்களாகிய இவர்கள், தம் பாடல்களில் மட்டுமல்ல, வாழ்க்கையிலும் நமக்குப் பயன்படும் முறையில் வாழ்ந்து காட்டியவர்கள். ஆகையால் நம்மைப் போன்ற சாதாரணமானவர்களுக்கு வருகின்ற ஐயங்களை தாங்களும் ஏறிட்டுக் கொண்டு அற்புதமாக அமைதி பாடுவார்கள்.

மனித மனம் இவ்வளவு உயர்ந்த பொருள் நமக்குக் கிட்டக் கூடியதா என்று ஐயுற்றுத் தளர்கின்ற நேரத்தில் கவலையே வேண்டா. எவ்வளவு தவறுகள் இழைத்திருந்தாலும் சரி, குன்றே அனைய குற்றங்கள் செய்திருந்தாலும் அவன் அருள்வான் என்று பாடுவார்கள் மணிவாசகப் பெருந்தகை. ஆகவே மலை

*போன்ற குற்றங்களைச் செய்தாலும் தவறில்லை. ஆனால்,*

வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே

*என்று சொல்லுவார். பெருமானே 'என்னைவிடுதி கண்டாய்' என்று இறைஞ்சுவார்.*

*ஆகவே மாணிக்கவாசகரது திருவாசகத்தில் எல்லையில்லாது ஈடுபட்டவராகிய வள்ளல் பெருமான் அந்தக் கருத்துக்களை அப்படியே இங்கே வாங்கிப் பேசுகிறார்.*

பொறுத்தாலும் நான் செயும் குற்றங்கள் யாவும்
பொறாதெனைநீ
ஒறுத்தாலும் நன்றினிக் கைவிட்டிடேல்

*ஏன்? எனக்கு வேண்டியவன் நீ. நீ என்னை வெறுத்தாலும், எனக்கு வேறிடம் இல்லை. நான் எவ்வளவுபெரிய குற்றங்கள் செய்தாலும் அந்தக் குற்றங்களைப் பொறுக்கமாட்டாது ஒறுத்தாலும் எனக்கு வேறு வழியே இல்லை ஐயா உன்னை விட்டால்.*

என்னுடையவன்நீ
வெறுத்தாலும் வேறிலை வேறோர் இடத்தை விரும்பி என்னை
அறுத்தாலும் சென்றிடமாட்டேன் எனக்குன் அருளிடமே

*என்று சொல்லி, குற்றங்களைப் பொறுத்து அருள் புரியக்கூடிய பேராற்றல் படைத்தவன் இறைவன் என்ற பேருண்மையை எடுத்து விளக்கும்போது அவருடைய வளர்ச்சியையும் நாம் அதிலே காண முடிகின்றது.*

*அப்படியானால் இயல்பாக ஒரு ஐயம் தோன்றும். உயிர்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. இறைவன் இருக்கிறான். அப்படி இருக்க இந்த இறைவனுக்கும் உயிர்களுக்கும் என்ன தொடர்பு?*

எவ்வளவு குற்றங்களை இந்த உயிர்கள் இழைத்தாலும், அத்தனையையும் பொறுத்துக் கொண்டு அருள் செய்ய வேண்டுமென்ற இன்றியமையாமை என்ன?' என்ற ஒரு வினாத் தோன்றுமல்லவா?

அதற்கு சைவசித்தாந்தம் மிக அழகான ஒரு விடையைத் தருகிறது. அதை அப்படியே வள்ளல் பெருமான் வாங்கிப் பேசுகிறார். சிவஞான போதத்தின் 8 ஆம் சூத்திரம்,

ஐம்புல வேடரின்

என்று பேசும். இந்த ஆன்மா இறைவனோடு தொடர் புடையது. அதனால் என்றைக்கும் இறைவன் கைவிட மாட்டான். ஆனால் ஆன்மா இப்போது பொறிபுலன் கள் என்று சொல்லப்படுகிற ஐந்து வேடர்கள் கையிலேபட்டு, தான் அரசகுமாரன் என்பதைக் கூட மறந்துவிட்டு இந்த வேடர்களின் நடுவே வாழ்ந்து கொண்டிருக்கிறது.

ஆண்டவனைப் பொறுத்தமட்டிலும், உயிர் கள் தம்முடைய முதல் இடம் எது என்பதை மறந்துவிட்டு வேடர்களை கையிலே அகப்பட்டு வளர்ந்தாலும் மூலவனாக இருக்கின்ற இறைவன் அவர்களை விட்டுவிடுவதில்லை. அன்னியன், இன்னியன் தனக்கும் உயிர்களுக்கும் வேறுபாடில்லை என்ற காரணத்தினால் குருவாக வந்து தவற்றினைத் திருத்தி ஏற்றுக் கொள்கிறான் என்ற அற்புதமான சிவஞானபோதக் கருத்தை வள்ளல்பெருமான் தமக்கே உரிய முறையில் மிக விரிவாகப் பாடுகிறார்.

கூர்கொண்ட வாள்கொண்டு கொலைகொண்ட வேட்டுவக்
குடிகொண்ட சேரிநடுவில்
குவைகொண்ட ஒரு செல்வன் அருமைகொண் டீன்றிடு
குலங்கொண்ட சிறுவன் ஒருவன்

என்ற பாடலில் மறவர் குடியில் வந்து என்னை ஆட் கொண்டாய் என்று பேசுவது சிவஞான போத சூத்திரத்திற்கு அப்படியே விரிவுரை செய்தது போல கிடக்கக் காண்கிறது.

அப்படியானால் இறைவனுக்கும் நமக்கும் உள்ள தொடர்பை ஓரளவு விளக்கியாயிற்று. அவன் கருணைக் கடல். ஆதலாலே நிச்சயமாக வந்து அருள் புரிந்து நம்மை மீட்டுக் கரையேற்றுவான் என்ற உறுதியும் பெற்றாயிற்று. அப்படியானால் இந்த உறுதிப் பாட்டிலே திளைக்கின்றபோது மனித மனத்திற்குள்ள மற்றொரு இயல்பு அங்கே குறுக்கிடுகிறது. 'சமயத்தில் ஒருவேளை கைவிட்டுவிட்டால்' என்ற எண்ணம் மனித மனத்திற்கு இயல்பாக உண்டு.

சாதாரணமாக உலகியல் முறையில் பார்க்கின் றோம். குறிப்பிட்ட இடத்திற்குப் போகின்ற புகை வண்டியெனத் தெரிந்து, அதற்குரிய பயணச் சீட்டு வாங்கி, அதிலே ஏறிக்கொண்ட பிறகு கூட பக்கத்திலே இருக்கிற நாலுபேரைப் பார்த்து, 'ஐயா இது இன்ன ஊருக்குத்தானே போகும்? இன்ன ஊருக்குத்தானே போகும்?' என்று கேட்பதை நம் அன்றாட வாழ்க்கை யில் காணுகிறோம் என்றால், எந்த ஒன்றிலும் உறுதிப் பாடு இல்லாத காரணத்தினாலே இத்தகைய ஐயங்கள் வரத்தான் செய்கின்றன. ஆகவே அப்படி வரும்போது என்ன செய்வது?

இறைவனுடைய கருணை நம்மாட்டு இருக்கிறதா, இல்லையா என்ற ஐயம் வந்துவிடுகிறது. அப்போது இறைவனையே பார்த்து 'இதோ பாரய்யா, உன்னுடைய கருணை என்னிடத்தில் பாயாவிட்டால் குற்றம் என்பேரில் இல்லை. உன்பேரில்தான் என்று சொல்வதுபோல வஞ்சகப் புகழ்ச்சியாகப் பாடுகின்ற

மரபு இந்த நாட்டிலே இருந்து வருவதைப் பழங்காலம் முதல் காணுகின்றோம்.

திருநாவுக்கரசர்பெருமான் சொல்லுவார்.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும்

என்று பேசுவார். அனுபவம் மிகுந்த பெரியவராகிய அவர் தன்னுடைய குறைபாட்டை நன்கு அறிந்திருந்த காரணத்தினாலே தன்னுடைய மனத்திலே இறைவ னுடைய திருவடி தங்கியிருக்க வேண்டிய பொறுப்பு இறைவனுடையது என்று பேசுகிறார். 'அந்தத் திருவடியை எப்போதும் மனத்தில் தரித்திருக்க வேண்டுமென்றால்' பொறுப்பு இவருடையதாகிவிடும். அதற்காக அந்தப் பெரியவர் பேசுகிறார். 'உன் திருவடி என் மனத்தே வழுவாதிருக்க வேண்டும், அப்படி இருக்கும்படியான காரியத்தை நீ செய்தல் வேண்டும் என்று பேசுகிறாரே – அந்தக் கருத்து வரிசையாகத் தொடர்ந்து வருவதைக் காணுகின்றோம்.

கடையவனேனைக் கருணையினால் கலந்து ஆண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்

என்று பேசுவார் மணிவாசகப் பெருந்தகை. ஆகவே என்னை விட்டுவிடாதே என்று பேசுகின்ற கருத்து மனிதனுடைய மனத்தின் குறைபாட்டை நினைந்து சொல்வதாகும். இங்கே வள்ளல்பெருமான் பேசுவார், எனக்கு உன் அருளிடமேயாதலால், நன்றினிக் கைவிட்டிடேல் என.

இந்த உலகத்தில் உள்ளவர்கள் என்னைப் பார்த்துச் சிரிப்பார்கள் ஐயா. ஏதோ திருவருள் பெற்று விட்டேன் என்று பீற்றிக் கொண்டாயே, எங்கே அந்தத் திருவருள் என்று சிரிப்பார்களே. அப்படியானால்

பிறர் சிரிப்பதைப்பற்றி அவர்கள் கவலைப்படுகிறார்கள் என்பது கருத்தன்று. அதைவிட ஆழமான பொருளும் அங்கே இருக்கிறது.

'பகவானே உன்னுடைய திருவருளை நான் பெற்று, மக்களால் புரிந்துகொள்ள முடியாமல், நான் பெற்றது தீது என்று அவர்கள் பேசுவார்களேயானால் இழுக்கு எனக்கன்று. உனக்காகும். ஏன்? 'திருவருளைக் கொடுத்து அதைப் பெற முடியாமல் செய்து விட்டாய் என்று உன்னுடைய பெருமைக்குக் குறைபேசும் உலகம். ஆகவே 'தயவு செய்து விட்டுவிடாதே' என்று பேசுவார்.

இப்படிப் பேசுவதற்கு அடிப்படை என்ன? ஏன் இப்படிப் பேசவேண்டும் இறைவன் நேரே இவருக்குக் காட்சி தந்தான் என்ற பெருமையைப் பின்னே பேசுகிறார். ஒருமுறை அந்தக் காட்சியைப் பார்த்துவிட்ட காரணத்தினாலே, திருப்பியும் அவர்கள் அது தங்களைவிட்டு நீங்காமல் இருக்க வேண்டுமென்று நினைக்கின்ற நினைப்பு நியாயமானதேயாகும்.

இவர் குருவாகக் கொண்ட மணிவாசகப் பெருமான் பேசுவார்.

> கணக்கில்லாத் திருக்கோலம் நீ வந்து
> காட்டினாய் கழுக்குன்றிலே

என்று சொல்லுவார். ஆகவே எல்லையில்லாததாகிய நாம ரூபமற்ற பொருள், நாம ரூபமுடைய எல்லாப் பொருளுமாக அமைந்திருக்கின்றது. அந்தப் பொருள்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகளாகக் கூட இருக்கின்றன. என்றாலும் முரண்பட்ட பொருள்களினிடையே அந்த இறைவன் இருக்கின்றான் என்று மணிவாசகப்பெருமான் சொல்லியதைக் கம்பநாடனும் பேசக் காண்கின்றோம். அவன்

*சொல்லுவான் 'இராமா, உன்னுடைய திருவடி இங்கே காணப் பெறுகின்றது.*

ஒன்றினோடு ஒன்று ஒவ்வா பூதங்கள் தொறும் உறைந்தால்
அவை உன்னைப் பொறுக்குமோ

*இப்படி முரண்பாட்டினிடையே முழு முதலைக் காணுகின்ற இயல்பு இந்தத் தமிழர்களைப் பொறுத்த மட்டில் மிக நீண்டகாலமாக இருந்து வருகிறது. ஆதலால் அந்த முரண்பாட்டைச் சொல்லியே இங்கு 'கணக்கில்லாக் கோலம் நீ காட்டினாய்' என்று மணிவாசகப்பெருமான் பேசுவதை வள்ளல்பெருமான் இங்கே எதிரொலிக்கின்றார்.*

சொல்நிறைந்த பொருளும்அதன் இலக்கியமும் ஆகித்
துரியநடு விருந்தஅடித் துணைவருந்த நடந்து
கொன்னிறைந்த இரவினிடை எழுந்தருளிக் கதவம்
கொழுங்காப்பை அவிழ்வித்துக் கொடியேனை அழைத்து
என்னிறைந்த ஒருபொருள்என் கையில்அளித் தருளி
என்மகனே வாழ்கஎன எழில்திருவாய் மலர்ந்தாய்
தன்னிறைந்த நின்கருணைத் தன்மையைஎன் புகல்வேன்
தனிமன்றில் ஆனந்தத் தாண்டவஞ்செய் அரசே

*என மிக நுணுக்கமான கருத்தை மிக அற்புதமாகப் பாடுகிறார் வள்ளல்பெருமான் இங்கே.*

*இறைவன் திருவருள் இருக்கிறதே, அது நாம் தேடிச் சென்று அடைகின்ற ஒன்று அன்று. எவ்வளவு சிறந்த முறையிலே நம்முடைய முயற்சி நடை பெற்றாலும் மனித முயற்சியினாலே திருவருளைப் பெறுவது என்பது இயலாத காரியம். இதனாலேதான் மணிவாசகப் பெருமான்,*

அவனருளாலே அவன்தாள் வணங்கி

என்றார். அவனுடைய திருவடியை வணங்குதலாகிய காரியத்தைச் செய்வதற்குக் கூட அவனுடைய திருவருள் வேண்டுமென்ற பேருண்மையை அறிந்தவர் கள் இந்த நாட்டவர்கள். ஆதலால் இங்கே வள்ளல் பெருமான் அந்தப் பெரிய கருத்தை மிக அழகாகச் சொல்கிறார்.

'இரவு நேரத்திலே நான் இருக்கும் இடத்தைத் தேடி வந்து கதவைத் தட்டி, 'என் மகனே இந்தா என்று நீ தந்தாயே ஐயா' என்னுடைய தகுதியை நோக்கியா தந்தாய்? இல்லை. உன்னுடைய கருணைத் தன்மையை என் புகல்வேன்? எல்லையில்லாத கருணாமூர்த்தி நீ ஆகையாலே நீ என்மாட்டுக் கொண்ட பெருங் கருணையினாலே உன் அருளை வெளிப்படையாகக் கொண்டு எனக்கு உன்னைக் காட்டினாய் என்ற கருத்தைப் பேசுகின்றாரே – இந்தக் கருத்தும் இந்த நாட்டிலே மரபுபற்றி வருகின்ற கருத்தாகும்.

எங்கே என்னை இருந்திடந் தேடிக்கொண்டு
அங்கே வந்தடை யாளம் அருளினார்...

என்று சொல்லுவார் திருநாவுக்கரசர். ஆகவே வரிசையாக வருகின்ற இந்த மரபு பற்றிய உண்மையே வள்ளல்பெருமானாலே பெரிதாகப் பேசப்படுகின்றது.

இறைவன் திருவருள் எளிதாகக் கிடைத்து விட்டால் அதிலேயும் ஓர் அல்லல் ஏற்படுவதுண்டு. மனிதன் முயன்று பெற்றால் ஓரளவு அதைக் காத்துக் கொள்ள வேண்டுமென்ற முயற்சியிலே ஈடுபடுவான். அப்படியில்லாமல் எளிதாக ஒரு பொருள் கையிலே கிடைத்துவிடுமானால் அதைப் போற்றிப் பாது காக்கின்ற தன்மை மனிதனிடம் இல்லாமல் போய் விடும். இந்த அடிப்படைத் தத்துவம் மனித மனத்திற்கு இயல்பாக அமைந்திருக்கிற காரணத்தினாலே இந்தப்

பெரியவர்கள் தங்களுடைய வாழ்க்கையிலே ஏறிட்டுக் கொண்டு சொல்கிறார்கள்.

'பெருமானே, நீ கருணைபாலித்தாய். ஆனால் நான் அதனுடைய அருமைப்பாட்டை அறியாமல், அதனுடைய சிறப்பை அறியாமல், அதனுடைய பெருமையை அறியாமல் கைநழுவ விட்டுவிட்டேன் என்று வருந்துகின்ற வருத்தத்தை மணிவாசகப் பெருமான் பேசுவார். சின்னக் குழந்தையினுடைய (மழலை) கையிலே பொற்கிண்ணத்தைக் கொடுத்தால் பொற்கிண்ணத்தின் சிறப்பை அறியாத அந்தக் குழந்தை அந்தக் கிண்ணத்திலே மண்ணை மண்ணை வாரும். கல்லிலே அதைப் போட்டுத் தட்டி ஒலி கேட்க முயலும் முயற்சியில் இன்பத்தை அடையுமே தவிர பொற்கிண்ணத்தினுடைய மதிப்பை அது அறியப் போவதில்லை. அதுபோல - மழலைக்கை கிண்ணம் போல உன்னை அருமைப்பாடுடையவன், கிடைத்தற் கரியுவன் என்று நினைக்காமல் எளிமையாகக் கருதி விட்டேன் என்று பேசுகிறார். அந்தக் கருத்து மிகமிக ஆழமானது. மனித மனத்தின் குறைபாட்டை நன்கு அறிந்து பேசப்படுவது. ஆதலால் அதனையே வள்ளல் பெருமான் இங்கே பேசுகிறார்.

அருளுடையாய் அடியேன்நான் அருளருமை அறியேன்

நீ இரவிலே வந்து, கதவைத் தட்டி 'மகனே இந்தா பிடி' என்று கொடுத்தாயே, அதனுடைய அருமைப் பாட்டை அறியேன்.

அறியாதே மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
மருளுடையேன் தனைஅழைத்துத் திரும்பவும்என் கரத்தே
மகிழ்ந்தளித்த பெருங்கருணை

'நான் வேண்டா என்று கூறினேன். ஐயா என்ன கொடுமை இது? ஐயா நீ யார்? உன் திருவருள்

*எத்தகையது? அதை நீயாகத் தேடிக் கொண்டு வந்து, கதவைத் தட்டிக் கொடுத்தபோதும் அதனுடைய அருமைப்பாட்டை அறியாமல் வேண்டா என்று சொல்லிவிட்டேன். வேறு யாராக இருந்தாலும், வலிய வந்து கொடுத்து நான் அதனை ஏற்றுக் கொள்ளாத போது என்மாட்டுச் சினங்கொண்டு போயிருப்பார்கள். ஆனால்,*

அருளுடையாய்

*அருளே வடிவமாக இருக்கின்ற பெருமானே, நீ 'வேண்டா' என்று நான் ஒதுக்கிய பிழைகளை எல்லாம் பொறுத்துக்கொண்டு,*

மருளுடையேன் தனைஅழைத்துத் திரும்பவும்என் கரத்தே
மகிழ்ந்தளித்த பெருங்கருணை வண்ணம்

*என்று பேசும்போது எவ்வளவு பெரிய தத்துவத்தைப் போகின்ற போக்கிலே இந்தச் சித்தர் பேசுகின்றார் என்பதை அறிய முடிகின்றது.*

*முதல் திருமுறையிலிருந்து ஆறாந் திருமுறை வரை வளர்கின்ற வளர்ச்சியை ஒரு பிறப்பிலே பெற்றவர்தாம். என்றாலும் தமக்கு முன்னர் வாழ்ந்த பெரியோர்களுடைய வாழ்க்கை தங்களுக்குப் பெரிய துணையாக - கலங்கரை விளக்காக - வழிகாட்டியாக அமைந்திருப் பதை இவர்கள் மறுப்பதே இல்லை.*

*ஓதாது உணர்ந்தவரும், அம்மையின் ஞானப் பாலை உண்டவருமாகிய திருஞானசம்பந்தப் பெருமானைக் குருவாக ஏற்றுக்கொண்டு பேசுகிறார்.*

உயிர்அனு பவம்உற் றிடில் அதனிடத்தே
ஓங்கருள் அனுபவம் உறும்அச்
செயிரில்நல் அனுப வத்திலே சுத்த
சிவஅனு பவம்உறும் என்றாய்.

ஞானசம்பந்தப்பெருமான் தனக்கு உபதேசித்த தாக, வள்ளல் பெருமான் பேசுவது உயிர் அனுபவம் உற்றிடுமானால், அதனிடத்தே அருள் அனுபவம் உறும். குற்றமற்ற அந்த அனுபவத்திலே சுத்த சிவ அனுபவம் பயிலும் என்று சொல்லுகின்ற முறையிலே, இந்த உபதேசம் செய்வதற்குரிய தகுதியும் அவர் மாட்டு உண்டு என்று சொல்வதுபோல மிக அற்புதமாக ஞானசம்பந்தருடைய வாய் மொழியில் இந்தக் கருத்தைப் பேசுகின்றார். அந்தப் பகுதியோடு ஐந்தாம் திருமுறை முடிந்துவிடுகிறது.

வள்ளல் பெருமானுடைய வாழ்க்கையிலே முதல் திருமுறையில் தொடங்கி ஐந்தாம் திருமுறை முடிய அவர் வளர்ந்துகொண்டிருந்த வளர்ச்சியைக் கண்டு கொண்டிருந்தோம். விக்கிரக வழிபாட்டிலே, உருவ வழிபாட்டிலே உருவ வழிபாட்டுக்குரிய சில கொள்கைகளிலே, அதற்குரிய சில அடையாளங் களிலே ஈடுபட்டுத் தொடங்கிய அந்த வாழ்க்கை இப்போது மெள்ள முதிர்ந்து வந்து உயிர் அனுபவம், இறை அனுபவம் இரண்டையும் பெறுகின்ற நிலைக்கு வந்துவிட்டதை ஐந்தாம் திருமுறை முடித்துக் காட்டு கின்றது. இதற்கு பிறகு வள்ளல்பெருமானுடைய வாழ்க்கையை முழுவதுமாகக் காட்டுகின்றது ஆறாம் திருமுறை. அது தொடங்குகின்ற நேரத்திலேயே

மன்புருவ நடுமுதலா மனம்புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வார் எல்லாரும் ஏமாக்க
அன்புருவம் பெற்றதன்பின் அருளுவம் அடைந்துபின்னர்
இன்புருவம் ஆயினைநீ எழில்வாத வூர்இறையே

என்று ஐந்தாம் திருமுறையை முடிக்கும்போது மணி வாசகப்பெருமானைப் பார்த்துப் பேசுகின்றார். 'ஐயா வாழ்க்கையில் ஒருவன் எளிதாகக் கைக்கொண்டு

முன்னேறுவதற்குரிய வழியை நீ அல்லவா வகுத்துத் தந்தாய்.

நெடுங்காலம், என்புருவாய்த் தவஞ்செய்வார் எல்லாரும் ஏமாக்க நீ என்று பேசப்படுகின்ற புருவத்தின் மத்தியிலே, சிந்தையைச் செலுத்தி, ஏகாக்ர சித்தர்களாக தவம் செய்கின்றவர்கள் எல்லாம் நெடுங்காலம் காத்திருக்க

அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்துபின்னர்
இன்புருவம் ஆயினைநீ

அன்பே வடிவாக ஆனாய். அதன் பயனாக அருளே வடிவாக் மாறினாய் என்றால், இறைவனை அடைவதற்கு மிக எளிதான வழி அன்பு வழி என்பதை இங்கே விரிவாக எடுத்துக் காட்டுகின்றார்.

இவருக்கு முன்னர்த் தோன்றிய சித்தராகிய திருமூலர்

அன்பும் சிவமும் இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

என்று சொன்னாரே அதை அடியொற்றி வந்து, கண்ணப்பருடைய வரலாற்றிலே ஈடுபட்ட மாணிக்க வாசகர் அன்பின் முழுவடிவாக ஆன கண்ணப்பரை நினைந்து பேசுவார். அடுத்து அந்தக் கண்ணப்ப ருடைய வாழ்க்கையை எடுத்துப் பேசுகின்ற சேக்கிழார்

தன்பரிசும் வினைஇரண்டும் சாருமல மூன்றும்அற
அன்புபிழம் பாய்த்திரிவார் அவர்கருத்தின் அளவினரோ?

என்று சொல்லுவார். ஆகவே மனிதனுக்குரிய வாலீசன் என்று சொல்வார்களே, தன்பரிசு, வினை இரண்டு - அதாவது நல்வினை, தீவினை, ஆணவம்,

மாயை, கன்மம் அனைத்தும் நீங்க என்ன இருந்தது என்றால் சர்க்கரையிலே மிளகாய் மிட்டாய் பண்ணினாலும் அது இனிப்பாகவே இருப்பதுபோல 'அன்பே முழுவடிவமாக' ஆகிவிட்டார் கண்ணப்பர் என்று சொல்லுகிறாரே, அந்த இலக்கணத்தை வாங்கி

அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்துபின்னர்
இன்புருவம் ஆயினைநீ

என்று சொல்லி ஐந்தாம் திருமுறையை முடிக்கிறார். அடுத்து அவர் ஆறாந் திருமுறையில் நுழைகின்ற காலத்தில் வள்ளல்பெருமான் இதுவரையில் இருந்த ராமலிங்க வள்ளலாராக இல்லாமல் திருஅருட் பிரகாச வள்ளலாராக மாறுகின்ற பெரும் பேற்றைக் காணுகின்றோம். ஆறாம் திருமுறையைத் தொடங்கும் போதே

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபேர் ஒளியே

என்று பேசும்போது இதுவரையிலே பெரிய தத்துவங் களை எல்லாம் பேசிவந்த அவர், யோகம், தியானம் முதலானவற்றையெல்லாம் பேசிவந்த அவர் அவை அனைத்தையும்விட்டுவிட்டு ஒரேயடியாக அன்பு மார்க்கத்தைக் கடைப்பிடிக்கிறார் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

இந்தத் திருப்பம் அவருடைய வாழ்க்கையிலே வந்த மிகப்பெரிய திருப்பமாகும். பின்பு சுத்த சமரச

சன்மார்க்க சங்கம் வைப்பதற்கும் உலகத்திலுள்ள எல்லோரையும் ஒன்று திரட்டி ஒரு பொதுத் தன்மையோடு சமய வழிபாட்டை நிறுவ வேண்டுமென்ற அவருடைய எண்ணத்திற்கும் விதையாக அமைந்தது இந்தக் கருத்துத்தான்.

அன்பு ஒன்றுதான் இறைவனை அடைவதற் குரிய வழி. அன்பே வடிவாக இருக்கிறான் இறைவன் என்பதை எந்த வினாடி உணர்ந்தாரோ அதிலிருந்து அவருடைய வாழ்க்கை முறை முற்றிலும் மாறி விட்டதைக் காணுகின்றோம். அதனைத்தான்

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே

'நிர்க்குண, நிராமய, நிராலய' என்று சொல்லிக் கொண்டிருந்தது போக அன்பெனும் பிடிக்குள் அகப்படுகின்ற மலையாகக் காணுகின்ற காட்சி அன்பு எனும் குடிலுக்குள் புகுகின்ற சாதாரண இறைவனாகக் காணுகின்ற காட்சி, அன்பெனும் வலைக்குள் படுகின்ற பரம்பொருளாகக் கூறுகின்ற காட்சி, அன்பெனும் கரத்துள் அம்ருதமாகக் காணுகின்ற காட்சி – இந்த நிலை வந்த பிறகு அவருடைய வாழ்க்கை முற்றுமாக மாறிவிடுகிறது.

இனி இந்த அன்பின் அடிப்படையில் நின்று உலகத்தைக் காணுகின்றார் வள்ளல்பெருமான்.

முதலில் திருநீறு இடாதவர்களைக் காணக் கூடாது என்று பேசியவர், உருவ வழிபாட்டிலே சிவ பெருமானையும், முருகப்பெருமானையும் விரிவாகப் பேசியவர், அந்த நிலையில் இருந்து மாறி, இப்போது அன்பு என்ற கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார்க்கும்போது எத்தகைய வேறுபாட்டையும் அவரால் காண முடியவில்லை. இன்னும் சொல்லப் போனால் இறைவனை வழிபடுகின்ற அனைவருமே

ஓரினத்தார் என்ற ஒருமைப்பாட்டை - சின்தஸிஸ் காண்பவராகத் தொடங்கிவிடுகிறார்.

இதற்கு முன்னே சைவசித்தாந்த அடிப்படையிலே இறைவனைப்பற்றிப் பேசிய வள்ளலார், இப்போது முழுவதுமாக மாறி அன்பு, அன்பு, அன்பு என்று பேசும்போது வேறுபாட்டிற்கு அங்கு இடமே இல்லாமல் போய்விடுகிறது.

உலகத்திலுள்ள சமயங்களை எல்லாம் எடுத்து ஆராய்கின்றார். எந்தச் சமயமாக இருந்தாலும் அந்தச் சமயத்தில் - நம்புகின்ற கடவுள் பொருளுக்கு ஒரு நாமம், ஒருருவம், ஒன்றுமில்லாப் பொருளாயினும் ஆயிரம் பெயர்கள் இட்டிருப்பார்கள். அந்தப் பெயர்கள் ஒன்றுக்கொன்று மாறுபடலாம். என்றாலும் எந்தச் சமயவாதியாக இருந்தாலும் ஒன்றுமட்டும் உறுதி. 'ஒளி' என்ற ஒன்று மாறுபடப்போவதில்லை. எந்தச் சமயவாதியும் தன்னாலே கருதப்பட்ட பரம்பொருள் ஒளிவடிவானவன் என்று சொல்லித் தான் தீருவான். எங்களது கடவுள் இருட்டு வடிவானவன் எனச் சொல்லத் துணியமாட்டார்கள். எனவே உலகத்திலுள்ள சமயங்களை எல்லாம் எடுத்து ஆராய்ந்தவராகிய வள்ளல்பெருமான் இந்த 'ஒளி' என்ற கருத்தை வாங்கிக் கொள்ளுகின்றார்.

இதற்கடுத்தபடியாக ஒளிவடிவாக இருக்கிற இந்த ஆண்டவன் 'பண்பாடு' என்று அவனுக்குரிய குணம் ஒன்று இருக்குமானால் அது எதுவாக இருக்க முடியும் என்றால் அருள் அல்லது கருணையாகத்தான் இருக்க முடியும்.

ஏக தெய்வ வணக்கம் பேசுகின்ற இஸ்லாமியர் கள் கூட 'பரம கருணை உடையவன்' என்றுதான் இறைவனைச் சொல்லுவார்கள். ஆகவே **'கருணை,**

**ஒளி'** என்ற இரண்டும் உலகிலுள்ள எல்லாச் சமய வாதிகளுக்கும் பொது என்பதை வள்ளல்பெருமான் உணருகின்றார்.

அதுமட்டுமல்ல. கடவுள் கொள்கை பற்றிப் பேசாமல் இருந்த பௌத்த, ஜைனம் கூட **'ஒளி'** என்பதையும், **'கருணை'** என்பதையும் விட்டுவிடுவதே இல்லை. புத்தனைப் பற்றிப் பேசும்போதெல்லாம் 'பிறர்க்கென முயலும் பெரியோன்', என்றும் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' என்றும் 'கருணையே வடிவானவன்' என்றேதான் பேசுகின்றன பௌத்த நூல்கள்.

எனவே, 'கருணை, ஒளி' இரண்டையும் வாங்குவதன் மூலமாக 'க்ரேடெஸ்ட் காமன் பாக்டர்' என்று சொல்லுகிறோமே அதுபோல உலகத்திலுள்ள சமயங்களை எல்லாம் பிழிவோமேயானால், இரண்டு கருத்துகள் மிஞ்சுகின்றன. ஒன்று இறைவன் ஒளி வடிவானவன்; இரண்டாவது அவன் கருணை வடிவானவன். இந்த இரண்டையும் எடுத்துக்கொண்ட வள்ளல் பெருமான் ஒரு சூத்திரம் போல அமைக்கின்றார்.

அருட்பெருஞ் சோதி அருட்பெருஞ் சோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ் சோதி

என்ற **மகாமந்திரம்** போல் இருக்கிற இந்தத் தொடரை வேண்டா என்று கூறுவார் எவருமே இரார்.

'சமயம் வேண்டா என்று சொல்கிறவர்கள் கூட 'அருட்பெருஞ் சோதி தனிப்பெருங் கருணை' என்று சொல்லப்படுகிறபோது அதனை எதிர்த்துப் பேச நாவெழாமல் நின்றுவிடுவார்கள்.

எனவே உலகத்திலுள்ள சமயங்களை எல்லாம் ஒன்றுதிரட்டி, அவற்றை ஒருங்கிணைந்த சமயமாகச் செய்ய வேண்டுமென்ற கருத்திலே பேசிய வள்ளல் பெருமான்.

அருட்பெருஞ் சோதி அருட்பெருஞ் சோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ் சோதி

என்று பேசுவதைக் காணுகின்றோம். 6ஆம் திருமுறை முழுவதும் அதன் விரிவாகவே இருக்கக் காணு கின்றோம்.

அதுமட்டுமல்ல. அந்த மாதிரி நிலையிலே ஒரு பிரச்சினை தோன்றத்தான் செய்கிறது. இப்படி ஒரு பிறப்பிலேயே விக்கிரக வழிபாட்டில் ஆரம்பித்து, அருட்பெருஞ் சோதி என்ற நிலைக்கு ஒருவர் வளருவாரேயானால் அவர் வாழுகின்ற காலத்திலே உள்ள சமுதாயம் நிச்சயமாக அவரைப் புரிந்து கொள்ள முடியாது. புரிந்துகொள்ள முடியாமையி னாலேதான் அருட்பா - மருட்பா போராட்டங்கள் தோன்றின. அந்தக் கருத்தை அடியொற்றி வள்ளல் பெருமானே பாடுகிறார், ஆறாந் திருமுறையில்.

பெருகியபேர் அருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகை என் கணவர்

தோழியிடத்தில் பேசுவதுபோல அமைந்திருக்கிறது இந்தப் பாடல். தோழீ, என்னுடைய கணவர் என்னைப் பொறுத்தமட்டில் அவர் அம்பலத்தே நடிக்கும் இயல்புடையவர். ஆனால் அவர் பெயர் என்ன என்று கேட்கிறாயா?

அருகர் புத்தர் ஆதிஎன்பேன் அயன்என்பேன் நாரா
யணன்என்பேன் அரன்என்பேன் ஆதிசிவன்என்பேன்

என இப்படி அருகர், புத்தர் முதலான பேர்களும் அவனுக்குண்டு என்று பேசும்போதுதான் அவர் உலகமனைத்தையும் ஒன்றாகக் காணுகின்ற பரந்துபட்ட நிலையைக் காண முடிகின்றது.

இனி அதற்கடுத்த பாட்டிலே ஒரு வினாவை அவரே எழுப்பிக் கொள்கிறார்.

சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ என்றாய்

அருகர், புத்தர் என்ற பெயர்கள் எல்லாம் புறச் சமயத்தார்கள் பேர் அல்லவா? அவை எல்லாம் உன் கணவர் பேர் என்று சொல்லுவது பொருத்தமா என்ற தோழி கேட்கின்றாள் என்று சொல்லி

பிறசமயத் தார்பெயரும் அவர்பெயரே கண்டாய்

என்கிறார்.

'பிறசமயத்தார்' என்று சொல்லும்போது பௌத்தம், சமணம் போன்ற பழைய சமயங்கள் மட்டுமல்ல. பிற்காலத்தில் தோன்றிய இஸ்லாம், கிறிஸ்துவம் ஆகிய சமயங்களையும் ஒன்றாக ஆக்கிக் கொண்டு

பித்தர்என்றே பெயர்படைத்தார்க்கு எப்பெயர்ஒவ் வாதோ

'என்னுடைய கணவனைப் பித்தர் என்று நாங்கள் சொல்கிறோம் என்றால் எந்தப் பெயரைச் சொன்னால் என்ன என்று சொல்லி, உலகம் முழுவதையும் ஒன்றாகக் காணுகின்ற பெருங் காட்சியைக் காணுகின்றோம்.

தொல்காப்பியர் தொடங்கினாரே 'ஓரறிவு உடைய உயிரே' என்பதில் தொடங்கி, உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் தொடர்புடையன என்ற அந்தக் கருத்தை வள்ளல்பெருமான் தம் ஆறாம் திருமுறையில்

*வைத்து எல்லா உயிர்களும் ஒன்று என்றால் வேற்றுச் சமயம் என்று நினைப்பதற்கோ, வேற்று மனிதர்கள் என்று நினைப்பதற்கோ, வேற்று உயிர்கள் என்று நினைப்பதற்கோ எதுவும் இல்லாத காரணத்தினாலே, அன்பினாலே அனைத்தையும் தழுவி எல்லா உயிர்களும் வீடு பேற்றினை அடைய விரும்புகின்றன என்றால் அந்த உயிர்கள் அனைத்தும் சிந்திக்க வேண்டியது ஒன்றே ஒன்று. அனைவரும் ஒன்று என்று கூடிச் சிந்திக்கின்றபோது பொதுத்தன்மையாக இருக்கிற* **மகாமந்திரம்**

அருட்பெருஞ் சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்சோதி

*என்று கூறுகின்றார் என்று காண்போமேயானால், இன்றைக்கு 163 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய ஒரு பெருமகனார் இந்த நாடும் உலகமும் உய்வதற்குக் கண்ட பெருவழியே - நாம் சிந்திக்கின்ற பெரு வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றோம் என்பதை அறிய முடிகின்றது.*

கங்கை

பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794